
திரவியவனத்தில்
திருக்குறள்
மகாநாடு -03
Tharsha
தமிழறிஞர் கே. வி. குணசேகரம்

## என்னுரை

**தி**ரவிய வனத்தில் திருக்குறள் மகாநாடு பாகம் மூன்றை இன்று வெளியிடுகிறேன். ஒரு குறளுக்கு பத்துக் கதைகள் எழுதவேண்டும் என்ற எண்ணத்துடன் ஆரம்பித்தேன். முக்கால் பங்கை எழுதிமுடித்துவிட்டேன். மிகுதியையும் எழுதி முடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனது கதைகளை யாராவது விமர்சிக்கமாட்டார்களா என்ற விருப்பம் மனதில் உண்டு. யாழ்ப்பாணத்தவர் விமர்சிக்காவிட்டாலும் தமிழக அன்பர்கள் விமர்சிக்கலாம். அவர்களும் விமர்சிக்கவில்லை.

**வி**மர்சிப்பது பெரும் புகழும் பெற அல்ல. எழுதியவற்றில் ஏதாவது பிழைகள் இருந்தால் அதைத் திருத்துவதற்காகும். நாவலர் நிறுவிய பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று அதே பாடசாலையில் பதினைந்து வருடங்கள் அதிபராகப் பணிபுரிந்து, நாவலர் பிறந்த மண்ணாண நல்லூர்க் கோட்டத்தின் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய பெருமை எனக்கு உண்டு. கோப்பாய் நாவலர் வித்தியாலயம் இலங்கையிலேயே ஒரு சிறந்த ஆரம்பப் பாடசாலை. நல்லூர்க் கல்விக் கோட்டம் இலங்கையிலே முதற்தரமான கோட்டம். இரண்டு இடங்களிலும் பணியாற்றியதைப் பெருமையாக நினைக்கிறேன். நாவலர் வித்தியாலயத்திற்கு எந்தக் குறையும் இல்லை. ஆனால் எனக்கு ஒரு மனக்குறை உண்டு.

**1**50 வருடங்களாகப் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. அயல் பாடசாலை மைதானத்தில் தான் விளையாட்டுப் போட்டியை வைப்போம். பாடசாலையில் இருந்த குறைகளைப் போக்கிய நான் ஒரு விளையாட்டு மைதானத்தை விலைக்கு வாங்கினேன். அதற்காகப் பெற்றோரிடம் நான் பணம் பெறவில்லை. எனக்குப் பதவி உயர்வுடன் இடமாற்றம் வந்தபோது 15 வருடங்களாக என்னோடு மிகமிக நம்பிக்கைக்கு உரியவராக நாடகமாடிய ஒருவரிடம் பாடசாலைப் பொறுப்பை ஒப்படைத்தேன். ஆனால் அவர் எனது பெயரை விளையாட்டு மைதானத்திற்குச் சூட்டவில்லை. அரசாங்கப் பாடசாலைகளுக்கும் சாதி பார்க்கின்றனர். ஆனால் தமது முன்னேற்றத்திற்கான செயல்களில் சாதிப்பாரில்லை. தமது முன்னேற்றத்திற்காகச் சாதி பாராது எதையும் செய்வார்கள். அப்போது சாதியில்லை. சுயநலம் தான் மேலோங்கி நிற்கும். எல்லா உதவிகளையும் செய்தமையால் தான் பாடசாலையின் பொறுப்பைக் கொடுத்தேன். அவரது தீயநோக்கத்தை நான் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் அந்த விடயம் எனது லட்சக்கணக்கான வாசகர்களுக்குத் தெரியும். அதுவே போதும். எனது ஒவ்வொரு நூல்களிலும் இதை எழுதுவேன். ரோசம் உள்ளவர்களுக்குத்தான் மனம் வலிக்கும். அடுத்துத் திரவிய வனத்தில் திருக்குறள் மகாநாடு பாகம் நான்குடன் சந்திப்போம். இந்நூலை மிக கவனத்துடன் கணணிமயப்படுத்தி உதவிய யோகநாதன் தர்ஜினி அவர்களுக்கு எனது நன்றியை தெரித்துக்கொள்கிறேன்.

அன்புடன்
கே.வி. குணசேகரம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

## 01

**தி**ரவியவனத்தில் மூன்றாவது திருக்குறள் மகாநாடு அன்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமானது. வழமையைவிட ஏராளமான பார்வையாளர்கள் வருவார்கள் என்று நினைத்து விழாவின் தலைவரும், விழாக்குழுவினரும் போதியளவு ஆசனங்களை அடுக்கி வைத்திருந்தனர். மண்டபம் பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. பிற வனங்களில் உள்ள தொலைத்தொடர்பு சாதனங்களின் இயக்குனர்கள் மகாநாட்டை ஒளிபரப்புச் செய்வதற்காக வந்திருந்தனர். மங்கல இசை முழங்க விருந்தினர்கள் விழா மண்டபத்துள் நுழைந்ததும் திரவியவனவாசிகள் பூ மழை பொழிந்து அவர்களை வரவேற்றனர். ஆடல் மகளிர் தாளம் தப்பாது கைகளில் பூமாலைகளுடன் வந்து விருந்தினர்களுக்கு மாலை அணிவித்தனர். விருந்தினர்கள் மங்கல விளக்கை ஏற்றி மகாநாட்டை ஆரம்பித்து வைத்தனர். மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து சபையோர்களை வணங்கினார்.

“**ச**பையோர்களே, நீண்ட நாளின் பின் மூன்றாவது மகாநாடு இன்று ஆரம்பமாகிறது. பல்வேறு வனங்களில் உள்ள ஆர்வலர்கள் அடிக்கடி எம்முடன் தொடர்பு கொண்டு எப்போது அடுத்த மகாநாடு தொடங்கும் என்று கேட்டுக் கொண்டே இருந்தனர். குறளைப் புது புது வடிவங்களில் தமிழறிஞர் அறிமுகப்படுத்தி வருகிறார். குறள் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபோதும் அதற்கு உரையை மட்டும்தான் இதுவரை வாழ்ந்தோர் எழுதினர். இலக்கிய வடிவங்கள் அனைத்திற்கும் குறள்பொருந்தும். அதை எந்த வடிவில், எந்த மொழியில் கொடுத்தாலும் அதன் தத்துவத்தை யாராலும் மாற்றமுடியாது. குறள் உலகிற்குக் கிடைத்த ஒரு பெருங்கொடை, அதை எம்மவர் புரிந்து கொள்ளவில்லை. பிறமொழி பேசுவோர் அதன் உண்மைத்தன்மையை உணர்ந்து போற்றுகின்றனர். இது தமிழுக்குக் கிடைத்த பெரும் மகிமையாகும்.

“**ம**காநாட்டை ஐந்து தினங்களுக்கு நடத்தத் தீர்மானித்துள்ளோம். இம் மகாநாட்டிற்கு முகநூல் வாயிலாகத் தான் அழைப்பு விடுத்தோம். பிற வனங்களைச் சேர்ந்த பல பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சி நிறுவனங்களும் வந்துள்ளனர். எமது வனத்தில் இருந்து எந்த நிறுவனமும் வரவில்லை. நடந்து முடிந்த இரண்டு மகாநாடுகளையும் மகாநாட்டிற்கு வந்திருந்த பார்வையாளர்கள் தமது கைத்தொலைபேசிகள் மூலம் பிறவனங்களுக்கு ஒலிபரப்புச் செய்தனர். அந்தளவிற்கு தொலைத்தொடர்புகள் இலகுவாக்கப்பட்டுள்ளன.

“**இ**ன்றைய மகாநாட்டிற்குப் பிரதம விருந்தினராகச் செல்வரத்தினம் என்ற முதிய காளையை அழைத்திருக்கிறோம். அவர் கல்விப் பணிப்பாளராக அரிய சேவையாற்றி ஓய்வு பெற்றவர். சிறந்த நீதிமான். மனைவி, இனத்தவர்கள், நண்பர்களின் சிபாரிசுப் படி நியமனங்களையும், இடமாற்றங்களையும் வழங்காதவர். இலஞ்சம் வாங்காதவர், ஒழுக்கமான உத்தமர். அதனால் தான் அவரை அழைத்துள்ளோம். தற்போது விழாக்களுக்குப் பிரதம விருந்தினராக அழைப்பவர்களின் குணநலன்களை ஆராயாது, அவர்களிடமிருந்து எவற்றையெல்லாம் பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தே அழைக்கின்றனர். இந்த நிலை முற்றாக மாறவேண்டும். சிலர் பணம் கொடுத்து விழாக்களை ஏற்பாடு செய்கின்றனர். இந்தநிலையும் மாற வேண்டும். இன்று தமிழறிஞர் மகாநாட்டிற்கான ஆரம்ப உரையை நிகழ்த்துவார். அவரைப் பற்றி உலகே அறியும். அவருக்குப் புகழ்வது, புகழ்ந்து விருதுகளை, பாராட்டுக்களைப் பெறுவது அறவே பிடிக்காது. அதனால் அவரை உரையாற்ற வருமாறு அழைக்கிறேன்’’.

**ச**பையோர் கரகோசம் செய்து தமிழறிஞரை வரவேற்றனர். அவர்களது மகிழ்ச்சியாரவாரம் அடங்கச் சிறிது நேரம் சென்றது. தமிழறிஞர் சபையோரைக் கரங்குவித்து வணங்கினார். பின், “வணக்கம், உங்களைப் போன்ற ரசிகர்களைப் பெற்ற நான் பெரும் பாக்கியசாலி, இன்று நாம் பெரும் பொதுநலத் தொண்டரான செல்வரத்தினம் அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்தமைக்குக் காரணம் உண்டு. வள்ளுவன் ஒற்றாடல் என்ற அதிகாரத்தில் அரசர்கள் ஒற்றர்களை எவ்வாறு நியமிக்க வேண்டும் என்றும், அரசர்கள் அவர்களோடு எவ்வாறு உறவாட வேண்டும் என்றும் குறிப்பிட்டது தற்போதய அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் பொருந்தும்’’. என்று கூறிவிட்டு முதலாவது குறளைப் பாடினார், “ஒற்றும் உரை சார்ந்த நூலும் இவை இரண்டும் தொற்றுஎன்க மன்னவன் கண்”, சபையோர்களே, ஒற்றர்களும் நீதிநூல்களும் அரசர்களுக்குத் தமது இரு கண்களைப் போன்றனவாகும். ஒவ்வொரு திணைக்களகங்களின் தலைவர்களும் அத்திணைக்களத்திற்கு அரசர்கள் ஏனென்றால் அத்திணைக்களத்தை முன்னேற்ற அவர்கள் அயராது உழைக்கின்றனர். அவர்களே இடமாற்றம், பதவி உயர்வு, சம்பள உயர்வு, தண்டனைகள் என்பவற்றை வழங்குகின்றனர். அரசர்களும் தமது ஆட்சியில் இவற்றைத்தானே செய்தனர். செல்வரத்தினம் ஐயா கல்விப் பணிப்பாளர். அவர் நீதி நூல்கள் அனைத்தையும் விளங்கிப் படித்தவர். நல்ல நூல்களைக் கற்றவர்கள் அந்த நூல் கூறியவாறு வாழவேண்டும் என்று நினைத்து வாழ்பவர்.

“**அ**வர் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியபோது அவரது நிர்வாகத்தின் கீழ் சுமார் ஆயிரம் பாடசாலைகள் இயங்கின. இலட்சக்கணக்கான ஆசிரியர்கள் கற்பித்தனர். பல ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றினர். அவர் எல்லோருடனும் கலகலப்பாகச் சிரித்துப் பேசுவார். ஒருவர்

தனக்குள்ள பிரச்சினையைத் தெளிவாகக் கூறினால் அமைதியாகக் கேட்பார். பின்பு, ''ஒரு வாரம் கழிய வாருங்கள்'' என்பார். அந்த ஒருவார காலத்துள் பிரச்சினையைக் கூறிய நபரது சகல விடயங்களையும் தனது நம்பிக்கைக்குரியவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வார். அதைத் தெரிந்தவர்கள் அவருடன் மிகவும் அவதானமாகவே தமக்குள்ள பிரச்சினைகளைக் கூறுவர்''.

**அ**வர் எல்லோரோடும் சகசமாகப் பழகுவதால் அவரது நண்பர்கள் யார்? அவருக்கு இரகசியமாக உண்மையான தகவல்களை வழங்குபவர்கள் யார் என்று யாருக்கும் தெரியாது. அதனால் யாரைக் கொண்டு அவரோடு கதைப்பது என்று தெரியாது பலர் தடுமாறுவர். அவரது ''இனத்தவர்கள் யாரும் யாருக்காவது சிபாரிசு செய்யமாட்டார்கள். ஒருமுறை அவரது மனைவியுடன் கற்ற கல்பனா என்ற மான், அவரது மனைவியுடன் பெருநட்புக் கொண்டவள். இருவரும் எந்தவிடயத்திலும் ஒன்றாகவே செயற்படுவர். திருமணமான பின்பும் இருவரும் நண்பிகளாகவே இருந்தனர். அதனால் கல்பனா செல்வரத்தினத்தின் வீட்டுக்குச் செல்வாள். செல்வரத்தினமும் அவளுடன் மகிழ்வுடன் உரையாடுவார்''.

**''க**ல்பனாவின் கணவன் ஆசிரியர். அவர் கற்பிக்கும் பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்றுவிட்டார். அப்பதவிக்கு அதிபர் தரமுள்ளவர் விண்ணப்பித்திருந்தனர். அதற்கு அதிபர் தரம் இல்லாத கல்பனாவின் கணவனான மணிமாறனும் விண்ணப்பித்திருந்தான். கல்பனா செல்வரத்தினத்துடனும் அவரது மனைவியுடனும் நட்பாக இருந்தமையால் தனது கணவனுக்கு அப் பாடசாலையின் அதிபர் பதவி கிடைக்கும் என்று நம்பி அதைப் பலரிடம் சொல்லித்திரிந்தாள். ஒருநாள் கல்பனா செல்வரத்தினத்தின் மனைவியான சகுந்தலாவிடம் வந்து தனது கணவனுக்கு அப் பதவியை வழங்குமாறு கேட்டுவிட்டுச் சென்றாள்''.

**ச**குந்தலா கல்பனாவின் விருப்பத்தை செல்வரத்தினத்திடம் கூறிய போது அவர் சொன்னார் எனக்கு யாரினதும் சிபாரிசு பிடிக்காது என் முன்னோர் பல அறநெறி நூல்களை எழுதி உள்ளனர் அவற்றையெல்லாம் நான் படித்துள்ளேன் அவை கூறியவாறு தான் நான் வாழ்ந்து வருகிறேன் அதிபர் தரம் இல்லாத எவருக்கும் அதிபர் பதவியை வழங்கமாட்டேன். முன்பு பணியாற்றிய கல்விப் பணிப்பாளர்கள் முதலாம் தர பாடசாலைக்கு கூட தரமில்லாதவர்களைத்தான் நியமித்தனர் அதனால் தான் கல்வியில் முதல் நிலையில் இருந்த எமது வனம் தற்போது கடைசி நிலைக்கு வந்தது.

**மு**ன்பு கடமையாற்றியவர்களை பற்றி மக்கள் எவ்வளவு கேவலமாக பேசுகிறார்கள் தெரியுமா. மனைவிக்கு சேலை வாங்கிக் கொடுத்தால் பதவி பெறலாம், இடமாற்றம் பெறலாம் லஞ்சம் கொடுத்தால் எதையும் பெறலாம் என்ற நிலை எனக்கு ஏற்படக்கூடாது நான் உண்மையான தகவல்களைப் பெற பலரை நியமித்துள்ளேன். அவர்கள் கூறுவதையும் நம்பாது அவர்களை கண்காணிக்கவும் சிலரை நியமித்துள்ளேன். முன்பு நாட்டை ஆண்ட மன்னர்கள் நீதி நூல்களையும் ஒற்றர்களையும் தன் இரு கண்களாக கருதினர். அதையே நானும் கைக் கொண்டு வருகிறேன் என்றவர். அவ்வாறு வாழ்ந்த ஒருவரை பிரதம விருந்தினராக அழைத்துள்ளோம்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

"**த**மிழறிஞர் இரண்டாவது குறலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் கூறினார். "எல்லாருக்கும் எல்லாம் நிகழ்பவை. எஞ்ஞான்றும் வில்லறிதல் வேந்தன் தொழில்" சபையோர்களே செல்வரத்தினம் சொன்னார் ஓர் அரசன் தனது நாட்டில் நிகழ்கின்ற எல்லா நிகழ்வுகளையும் ஒற்றர்கள் மூலம் அறிந்து அதற்கேற்றவாறு நடந்து கொள்வான் நான் கல்விக்கு அரசன். எனது நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் நடைபெறுபவற்றை என்னால் உடனே அறிந்து கொள்ள முடியாது. அதனால் முன்னைய அரசர்கள் தத்தமது நாடுகளில் நடைபெறுவதை ஒற்றர்கள் மூலம் அறிந்து கொள்வது போல நானும் பல ஒற்றர்களை நியமித்துள்ளேன். ஒற்றர்களைப் பற்றி தெரிந்து கொள்ளவும் பலரை நியமித்துள்ளேன் அதன்படி தான் செயலாற்றுவேன் உயர் அதிகாரியாக உள்ளவர் சாதி, சமயம், இனசனம் நண்பர்கள் அறிந்தவர்கள் என்று செயலாற்ற கூடாது.

**நீ** எனது மனைவி உனக்குத் தேவையானவற்றை கேள். அதை செய்வது எனது கடமை அதுபோல கடமையை நீதியாக செய்வதும் எனது கடமை அதில் தயவு செய்து தலையிடாதே என்றவர். அதனால் கல்பனா அவர்களை வெறுத்தொதுக்கி விட்டு குறை சொல்லித் திரிகிறாள் என்று கூறி தனது உரையை நிறைவு செய்கிறார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் மூன்றாவது குறளை பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானார் "ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் கொற்றம் கொளக் கிடந்தது இல்", "சபையோர்களே, திறமை மிக்க ஒற்றர்கள் கூறுவதை நன்கு ஆராய்ந்து அதற்கேற்றவாறு அரசன் செயற்படாது விட்டால் அவன் எச்செயலிலும் வெற்றி பெற முடியாது. வீண்பழி தான் வரும் இது அரசரின் நிலை. இது போன்றதுதான் திணைக்களின் தலைவர்களினும் நிலை செல்வரத்தினம் மனைவிக்குச் சொன்னார், "நான் உனக்கு எந்த குறையும் விட்டதில்லை.

அதுபோலவே நீயும் எனக்கு எந்த குறையும் விட்டதில்லை. எனது மனதை புரிந்து எனது மனம் கோணாத படி வாழ்கிறாய் கடமை என்பது கடவுளுக்கு கணக்குக் கொடுக்க வேண்டியது ஒரு விடயத்தில் நாம் தவறு செய்தால் பல விடயங்கள் பாதிக்கப்படும். முன்பு பணியாற்றியோர் தகுதி இல்லாதவர்களுக்கு பதவிகளை கொடுத்தமையால் கல்வி கெட்டழிந்தது. அதனால் அவர்களது உறவினர்களும் பாதிக்கப்பட்டனர். சிவஞானம் என்றொரு கல்வி பணிப்பாளர் தான் இதற்கெல்லாம் காரணகர்த்தா. அவரும் அவரது மனைவியும் கீழ்த்தரமாக நடந்தமையால் அவர்களைக் கண்டதும் மக்கள் திட்டுகின்றனர். ஒற்றர்களை நியமிக்கும் போது மிக மிக கவனமாக நியமிக்க வேண்டும். பக்கம் சாரக்கூடாது, லஞ்சம் வாங்கக்கூடாது, இனசனம் என்று பார்க்கக் கூடாது அவ்வாறு பார்த்தால் அரசன் நாட்டை இழப்பான். அதிகாரிகள் பழிக்கிடமாவார்கள். சென்ற வாரம் ஒரு திருமுறை விழாவுக்கு சென்றிருந்தேன் வந்தவர்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை முன்பு பணியாற்றிய கல்வி பணிப்பாளரின் மனைவியை கண்டு விட்டு அவர்களின் ஊழல் பட்டியலை விலாவாரியாகச் சொல்லித் திட்டினர்.

“**அ**ந்த நிலை எமக்கு வர வேண்டுமா? தகுதி இல்லாத ஒருவருக்கு நட்பு காரணமாக அப்பதவியை வழங்கினால் அது போல பலருக்கு வழங்க வேண்டி வரும் அதனால் தகுதி உடையோர் பாதிக்கப்படுவர் பலரும் சொல்வதைக் கேட்டு நீதியாக ஆராய்ந்து பதவியை வழங்குவேன். தயவுசெய்து எனது கடமை விடயத்தில் தலையிடாதே என்றவர்” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும் கதையையும் கூறினார். “வினை செய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்று ஆங்கு அனைவரையும் ஆராய்வது ஒற்று”. ‘சபையோர்களே, ஒரு அரசன் ஆனவன் தனது ஒற்றர்கள் மூலம் தொழில் செய்கின்ற அனைவரையும், சுற்றத்தவர்களையும், பகைவர்கள், நண்பர்கள் என வேறுபாடு காட்டாது நடுநிலை நின்று ஆராய வேண்டும். அதுபோலவே உயர் அதிகாரிகளும் மிகவும் நம்பிக்கை உள்ளவர்கள் மூலம் அனைவரையும் ஆராய வேண்டும் என்று செல்வரத்தினம் கூறி அதன்படி நடப்பார். அவர் தனது மனைவிக்கு சொன்னார், “உனது நண்பி நல்லவள் ஒழுக்கமானவள் ஆனால் அவளது கணவன் ஒழுக்கமானவன் அல்ல. அவன் மதுவை குடிப்பவன், உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பணம் வாங்கிக் கொண்டே கற்பிப்பவன், கற்பிக்கும் போது குடிப்பவன், அவன் மாணவர்களுடன் சேர்ந்து குடிப்பவன் ஆசிரியர்களைப் பார்த்து தான் மாணவர்கள் பழகுவார்கள். இவன் குடிப்பதால் சில மாணவர்கள் குடிக்கின்றனர். எனது நம்பிக்கைகுரியபலர் இவனை இடமாற்றம் செய்யச் சொல்கின்றனர். இடமாற்றம் செய்தால் அவன் அங்கு சென்றும் அதை தானே செய்வான் அதனால் அவனை பணி நீக்கம் செய்தல் வேண்டும்”.

**அ**தைக்கேட்ட அவரின் மனைவி சொன்னாள், "ஐயையோ, மூன்று மாதங்களுக்கு முன் எனது மைத்துணர் அதிபருடன் முரண்பட்டார் என்பதற்காக அவரை ஐம்பது மைல்களுக்குகப்பாலுள்ள ஒரு பாடசாலைக்கு மாற்றினீர்கள். அதனால் பெரும் பிரச்சினைகள் வந்தன. இப்போது கல்பனாவின் கணவன் விடயத்தில் அவனைப் பணிநீக்கம் செய்தால் பெரும் பிரச்சினைகள் வரும்" என்றபோது செல்வரத்தினம் சொன்னார், "அதிகாரிகள் அரசர்களைப் போலப் பணியாற்ற வேண்டும். எனக்கு நம்பிக்கை உடையவர்கள் ஒருவரைப் பற்றி ஆராய்ந்து சொன்னால், அதைத் தீர விசாரித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது எனது கடமை" என்றவர் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்".

**த**மிழறிஞர் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "கடாசு உருவொடு கண் அஞ்சாது யாண்டும் உகாஅமை வல்லதே ஒற்று", சபையோர்களே, அரசர்கள் நியமிக்கும் ஒற்றர்கள் யாரும் பயப்படாத உருவத்தோடும், அச்சமற்ற தன்மையோடும், எந்தவிதமான சூழ்நிலையிலும் இரகசியத்தை வெளிப்படுத்தாமல் இருக்கும் உறுதியான மனத்தோடும் இருப்பர். அவர்களால் தான் அரசர்க்கு உதவ முடியும் என்று எம் முன்னோர் நம்பினர். அறநூல்களை எல்லாம் படித்த செல்வரத்தினம் தனது மனைவிக்குச் சொன்னார், "நான் எல்லோருடனும் மகிழ்வுடன் கதைப்பதற்குக் காரணம் யார் எனது நம்பிக்கைக்குரியவர், அன்புக்குப் பாத்திரமானவர், நண்பர், இனத்தவர், வேண்டியவர் என்று யாரும் புரிந்து கொள்ளாமைக்குத் தான். அதனால் இரகசியமாக எனக்கு யார் தகவல்களைத் தருகிறார்கள் என்று எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். அதனால் அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவே நடந்து கொள்வர்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினார், "துறத்தார் படிவத்தார் ஆகி இறந்து ஆராய்ந்து என்செயினும் சோர்விலது ஒற்று", "சபையோர்களே, ஒற்றன் என்பவன் பற்றற்ற நிலையில் தருணங்களுக்கேற்றவாறு தனது மனதை மாற்றி செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் சென்று தான் ஏற்றுக் கொண்ட செயலை மறைமுகமாக ஆய்வு செய்து எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அதைப் பொறுத்துத் தான் இன்னார் என்பதைக் காட்டிக் கொள்ளக் கூடாது. அப்படியானவன் தான் சிறந்த ஒற்றனாவான். இது அரசர்காலத்து நடைமுறை. அரசர்களுக்கு எதிரிகள் பலர். அதனால் எதிரிகளின் செயலை ஆராயும் ஒற்றன் பல்வேறு வேடங்களில் செல்வான். சில அரசர்களுக்குச் சோதிடத்தில் விருப்பம், சில அரசர்களுக்கு யாகம் செய்வதில் விருப்பம்.

இவர்களைப் பற்றி ஆராய நினைக்கும் ஒற்றன் சோதிடராக அல்லது பிராமண வடிவத்துடன் அல்லது தவவேடத்துடன் சென்று ஆராய்வான்”.

“**க**ல்பனாவின் கணவனான மணிமாறனின் அடாவடித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தது. அதற்கு முடிவுகட்ட எண்ணிய செல்வரத்தினம் தனது நம்பிக்கைக்குரியவனான அப்பாடசாலையின் கூலித்தொழிலாளியிடம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார். அவன் தான் பொருத்தமான வேடமிட்டுச் சென்று மணிமாறனின் நடவடிக்கைகளை ஆராய்வதாகச் சொன்னான். அவன் குடிப்பதில்லை, மாமிசம் உண்பதில்லை, மணிமாறன் நன்றாகக் குடிப்பான், மாமிசங்களை உண்பான். அந்தக் கூலித்தொழிலாளி நன்றாகக் குடித்துவிட்டு மாணவர்களுடன் பிரச்சினைப்படுவதாகக் கூறி அவனைத் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்தார் செல்வரத்தினம்”.

“**அ**தனால், அக் கூலித்தொழிலாளி மணிமாறனிடம் வந்து, “ஐயா, செல்வரத்தினத்தால் பலர் தண்டிக்கப்பட்டு பெருந்துன்பப்படுகின்றனர். அவரை எதிர்க்க எல்லோரும் பயப்படுகின்றனர். என்னிடம் நேர்மை இருக்கு. மனவுறுதி இருக்கு, எனது ஐந்து சகோதரர்கள் வெளிநாட்டில் நல்ல வேலைகளில் இருக்கின்றார்கள். அவர்கள் எனக்குத் தாராளமாகப் பணம் அனுப்புகின்றனர். என்னை அங்கு வரும்படி கூறுகின்றனர். நான் எமது நிலபுலண்களைப் பாதுகாக்கவும், எம்மை பெற்றோரைக் காக்கவுமே இங்கு வாழ்கிறேன். அதனால் நான் துணிந்துவிட்டேன். உங்களுக்கு அவர் எவ்வளவு பெரிய துன்பங்களைச் செய்தவர். நண்பர் என்று பாராது வேலைநீக்கமும் செய்துள்ளார். இனியும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. நீங்கள் உதவி செய்தால் நானும் எனது நண்பர்களும் அவரைப் பழிவாங்குவோம்” என்றான்”.

“**அ**தை மணிமாறன் முழுமையாக நம்பிவிட்டான். அன்று இரவு இருவரும் மது அருந்தச் சென்றனர். மணிமாறன் மிகுந்த மகிழ்வுடன் இருந்தமையால் மதுவை நிறையக் குடித்தான். அக் கூலித்தொழிலாளி தானும் நன்றாகக் குடித்தது போலப் பாசாங்கு செய்து மணிமாறன் கூறியவற்றையெல்லாம் கைத்தொலைபேசியில் பதிவு செய்தான். விசாரணையின் போது மணிமாறன் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டது” என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் ஏழவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை ஐயப்பாடு

இல்லதே ஒற்று", "சபையோர்களே, வாழ்க்கையின் ஒவ்வொரு தத்துவங்களையும் மிகவும் விரிவாகச் சொல்வது குறள். அது சொல்லாது விட்டது ஏதுவும் இல்லை. மணிமாறன் கற்பிக்கும் பாடசாலையில் மூன்று வருடங்களுக்கு முன்பு மூன்று கணனிகள் திருடப்பட்டன. அதைப் பற்றியும் விசாரிக்குமாறு அக் கூலித்தொழிலாளியிடம் செல்வரத்தினம் கூறியிருந்தார். ஒருநாள் அக் கூலித்தொழிலாளி வெளிநாட்டில் வாழும் சகோதரியின் மகள் பூப்பெய்திவிட்டதாகக் கூறிப் பெரியதொரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான். அதற்கு மணிமாறனின் நண்பர்களையும் அழைத்திருந்தான்".

"**வெ**ளிநாட்டில் இருந்து அனுப்பப்பட்ட மதுபானைவகைகளைக் கொண்டுவந்து அக் கூலித்தொழிலாளி கொடுத்தபோது மணிமாறனும் அவனது நண்பர்களும் திகைத்துப் போனார்கள். அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சாப்பாட்டுக் கடையில் வாங்கிய மாமிசக் கறிவகைகளையும் தாராளமாகக் கொடுத்தான். பின்பு மூன்று வருடங்களுக்கு முன்பு பாடசாலையில் திருடப்பட்ட கணனிகள் பற்றி அந்தக் கூலித்தொழிலாளி நன்றாகக் குடித்தவன் போல ஆடி அசைந்து விழுந்து எழும்பிக் கேட்டான். மூன்று வருடங்களுக்கு முன் கடமையாற்றிய அதிபர் திருடன். அவன்தான் கணனிகளைத் திருடியவன். அதற்காக அவன் தண்டிக்கப்பட்டவன். அது காணாது இப்போ கல்விப்பணிப்பாளராக இருக்கும் செல்வரத்தினமும் திருடன். எமது பாடசாலைக்கு மணிமாறன் ஐயாவை அதிபராக நியமித்திருக்கலாம். நீங்கள் ஊரின் நடைமுறை தெரியாதவர். காசு தாராளமாகக் கொடுத்திருந்தால் பதவியைத் தந்திருப்பார். முந்திக் கல்விப்பணிப்பாளர்களாகக் கடமையாற்றியவர்கள் தரமில்லாதவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு அதிபர் பதவியைக் கொடுத்தவை".

"**உ**ங்கை எந்தப் பெரிய பாடசாலையில் தரமுள்ள அதிபர் நியமிக்கப்பட்டவர். அதிபர் தரமுடையவர்களெல்லாம் மூன்றாம் தரப் பாடசாலைகளில் தானே நியமிக்கப்பட்டவை. இவர் ஒருவர் தான் தரம் பார்க்கிறார். இவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். இப்போ புதிதாகக் கணனிகள், ஒலிபரப்புச் சாதனங்கள் பாடசாலைக்கு வந்துள்ளன. காவல்காரனுக்குச் கொஞ்சம் பணம் கொடுத்தால் சம்மதிப்பான். குழுவாகப் பலர் வந்து ஆயுதங்களைக் காட்டி மிரட்டிக் களவெடுத்தனர் என்று கூறச் சொல்லலாம்" என்றான்.

"**அ**தைக்கேட்டு மணிமாறன் பெரிதாகச் சிரித்துவிட்டு சொன்னான், "முன்னைய அதிபரைப் பழிவாங்குவதற்காக நான் தான் அதைச் செய்தேன். என்னுடன் பாலசிங்கமும், கருணாகரனும் சேர்ந்து வந்தவை. இப்போது பதவியில் உள்ள அதிபரும் நீதி, சட்டம், தர்மம் என்று பேசுகிறார். இப்ப எதையும் செய்ய முடியாமல் இருக்கிறது. விரைவில் அவருக்குப் பாடம் படிப்பிப்போம்"

என்று கூறிய மணிமாறன் தான் முன்பு எவ்வாறு கணனிகளைத் திருடினேன் என்று விபரமாகக் கூறினான்" என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "ஒற்று ஒன்றித் தந்த பொருளையும் மற்றும் ஓர் ஒற்றினால் ஒற்றிக்கொளல்" சபையோர்களே, முன்பு வாழ்ந்த பெரியவர்கள் கூறிய அறநெறி வாழ்வாதாரக் கருத்துக்களைக் கசடறக் கற்றவர் செல்வரத்தினம். அதனால் அவர் பழந்தமிழ் நூல்களில் கூறியபடியே வாழ்ந்து வந்தார். அவர் கூலிக்காரனை ஒற்றனாக நியமித்தது போல ஓர் ஆசிரியனையும் ஒற்றனாக நியதித்திருந்தார். அவர் அவ்வாறு நியமித்தது யாருக்கும் தெரியாது. கூலித்தொழிலாளியான ஒற்றன் வந்து கூறிச் சென்றபின், ஆசிரியர் வந்து அங்கு நடந்தவற்றைச் சொன்னார். இரண்டு பேரும் சொன்னது ஒன்றாக இருந்தமையால் அவை உண்மையான செய்திகள் எனச் செல்வரத்தினம் உறுதியாக நம்பி நடவடிக்கை எடுத்தார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "ஒற்று ஒற்று உணராமை ஆள்க, உடன் மூவர் சொல்தொக்க தேறப்படும்" ஒருவர் ஒற்றராக நியமிக்கப்பட்டது மற்றவர்களுக்குத் தெரியாதவாறு மூன்று ஒற்றர்களை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்த பின்பு அதை ஆராய்ந்து அதன் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்ளல் வேண்டும் இது அரசர்களின் நடைமுறை. ஆனால் செல்வரத்தினம் பலரை ஒற்றர்களாக நினைத்திருக்கிறார். தமது தேவைக்கென வரும் ஆசிரியர்கள், பெற்றார், பழைய மாணவர்கள் உட்பட அனைவரோடும் அன்பாகப் பேசுவார். அதனால் அவர்கள் தம்மையறியாது செல்வரத்தினத்திடம் பலவற்றையும் கூறிவிடுவார்கள்".

**"ச**ரஸ்வதி பூசையன்று செல்வரத்தினம் காட்டு விநாயகர் கோவிலுக்குச் சென்றபோது அதன் பூசகரான கஜேந்திரன் என்ற யானை அவரை மாலை அணிவித்து வரவேற்றுவிட்டுச் சொன்னது, "உங்களது நிர்வாகம் போற்றத்தக்கது. உடனடியாக நடவடிக்கை எடுப்பதால் குற்றம் செய்வோர் பயப்படுகின்றனர். மணிமாறன் முன்னைய கல்விப் பணிப்பாளர்களது கையாள். அவன் சொல்வதை நம்பித்தான் அவர் நடவடிக்கை எடுப்பார். அதனால் அவனுக்கு ஆசிரியர்கள், அதிபர்கள் எல்லோரும் பயப்படுவார்கள். இப்போ அப்படியல்ல எந்தப் பாடசாலைகளில் எது நடந்தாலும் உடனுக்குடன் அதை அறிந்து நடவடிக்கை எடுப்பதால் நீதி நிலைநிறுத்தப்படுகிறது. நீங்கள்

என்றும் சுகமாக வாழவேண்டும் என்று வாழ்த்தினார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "சிறப்பு அறிய ஒன்றின் கண் செய்யற்க; செய்யின் புறப்படுத்தான் ஆகும் மறை", "சபையோர்களே, அரசன் தனது நம்பிக்கைக்குரிய ஒற்றர்களுக்கு பிறர் அறியும் படி நன்மைகளையோ, உதவிகளையோ செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் தானே தனது இரகசியங்களை வெளிப்படுத்தியவனாவான். இவற்றையெல்லாம் நன்கறிந்தவர் செல்வரத்தினம். அவரது நம்பிக்கைக்குரிய கூலியாளான கோகுலன் என்ற மானுக்கு ஐந்து பிள்ளைகள். அவன் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவன். கணிதபாடத்தை தனது வீட்டில் வைத்து மாணவர்களுக்குக் கற்பிப்பவன். ஏதாவது ஒரு நல்ல வேலை கிடைக்கும் வரை கூலித்தொழிலைச் செய்வோம் எனத் தீர்மானித்தவன்".

**"அ**வன் அன்று செல்வரத்தினத்தின் வீட்டில் வந்து வேலை செய்தபோது அவர் சொன்னார், "கோகுலா, நீ கற்றவன். திறமைசாலி. அத்துடன் கணிதபாடத்தைக் கற்பிக்கிறாய் அதனால் நீ ஒரு தனியார்கல்வி நிலையத்தை ஆரம்பி".

**"ஐ**யா, இங்கு ஒரு பெரும் தனவந்தன்தான் தனியார் கல்வி நிறுவனத்தை நடத்துகிறான். அவன் தீயவன், பலர் ஆரம்பித்த போது அவன் அவற்றை அழித்துவிட்டான். காவல்துறையினரின் உதவியும் அவனுக்கு இருக்கிறது".

**"நீ** ஆரம்பி நான் சொன்னதாகவோ, நான் உதவி செய்வதாவோ யாருக்கும் சொல்லாதே. காவல்துறையின் மேலதிகாரி என்னுடன் ஒன்றாகப் படித்தவர் பயப்படாதே" என்றார். அவரை நம்பி கோகுலன் தனியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்தான். தற்பொழுது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் அங்கு கற்கின்றனர். ஊரவர் அவன் ஆரம்பிக்கும் போது கேலி செய்து சிரித்தனர். ஆனால் இரண்டு வருடங்களாக அது சிறப்பாக நடைபெறுவது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. செல்வரத்தினம் தனது நண்பருக்கு விபரமாகச் சொன்னமையால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

## ௨

**த**மிழறிஞர் உரையாற்றி முடிந்ததும் மேடைக்கு வந்த மகாநாட்டின் தலைவரான கதிரேசன், “சபையோர்களே, தமிழறிஞர் ஒற்றாடல் என்ற அரசர்க்குரிய அதிகாரத்தைச் சகலருக்கும் உரியதென்று நிறுவியுள்ளார். சாதாரணமான ஒருவருக்குக் கூட எதிரிகளைப் பற்றி அறிய நம்பிக்கைக்குரியவர்கள் தேவை. அந்த நம்பிக்கைக்குரியவர் தான் வாழ்வில் இடர்கள் ஏற்படும் போது அதை நிவர்த்தி செய்வதற்கான உதவிகளைச் செய்வார். திருக்குறளைப் பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களாக்க வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்றி வருகிறார். இது யாரும் இதுவரை செய்யாத செயல். வள்ளுவர் தான் தனது இலக்கியத்தைப் பன்முகப்படுத்தத் தமிழறிஞராகப் பிறந்திருக்கிறாரோ என்ற எண்ணம் நீண்டநாட்களாக எனது மனதில் உள்ளது. அதை இப்பொழுது வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆய்வு செய்யுங்கள். அடுத்து ஊக்கம் உடைமை என்ற அதிகாரத்தைப் பற்றி கலாநிதி இன்பவதனி அவர்கள் பேசுவார்கள். அவர் ஓர் ஆசிரியர், சிறந்த பேச்சாளர். இருப்பினும் கற்றவர்கள் அவரை ஓர் அறிஞராக ஏற்பதில்லை. இது வியப்புக்குரியதல்ல. சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. என்று இன்பவதனி கூறிச் சிரிப்பார். இப்போது அவரைப் பேசவருமாறு அழைக்கிறேன்.

**க**திரேசன் தனது ஆசனத்தில் அமர்ந்ததும் இன்பவதனி என்ற பெண் யானை எழுந்து வந்து தனது துதிக்கையை உயர்த்திப் பிளிறிச் சபைக்கு வணக்கம் தெரிவித்தது. பின், “சபையோர்களே, நான் தமிழறிஞரின் விசிறி அவரிடம் எந்த நேரமும் சென்று எதையும் கேட்டாலும் புத்தங்களைப் படிக்காது விபரமாக எடுத்துரைப்பார். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பர். அதுபோலத் தமிழறிஞரோடு பழகுபவர்கள் எல்லோரும் அறிஞராவர். எனக்குத் திருக்குறளைப் பற்றிப் பெரிதாகத் தெரியாது. அவரிடம் தான் கற்றேன். அதனால் தான் இன்று என்னால் பேச முடிகிறது. என்று கூறி இன்பவதனி முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினாள்.

**“உ**டையர் எனப்படுவது ஊக்கம், அஃது இல்லார் உடையது உடையாரோ மற்று. இங்கு நாம் உடையவர் என்று சொன்னால் மற்றவர்கள் ஆபரணங்களை உடையவர், காணிபூமிகளை உடையவர், அறிவுடையவர் என்று பலவற்றைக் குறிப்பிடுவர். ஆனால் வள்ளுவர் உடையவரென்றால் ஊக்கம் உடையவர் என்றும், ஊக்கமில்லாதவர்கள் எதைப் பெற்றாலும் அவர்கள் உடையவராகார் என்கிறார். அது உண்மை”.

“**தி**ரவிய வனத்தில் முருகவேள் ஆச்சிரமம் என்றோர் ஆச்சிரமம் உண்டு. அதற்குப் பொறுப்பானவராக முருகவேள் சுவாமியார் இருந்தார். அங்கு ஊரவர், வெளியூரவர்கள் வந்து செல்வர். அந்த ஆச்சிரமத்திற்கு ஏராளமான தரிசு நிலங்கள் இருந்தன. வேலவன் என்ற யானை அரச பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தது. அது முருகவேள் சுவாமியாரின் முதன்மையான சீடன். முருகவேள் என்ற வரிக்குதிரை வனவாசிகளுடன் மிகவும் அன்பாகப் பழகி, அவர்களது துன்பங்களை நீக்கிவந்தது”.

“**மு**ருகவேள் சுவாமியார் சில வாரங்களுக்கு முன் தேவ வனத்திற்குச் சென்றார். அவ் வனத்திற்குத் தேவர்கள் மாறுவேடமிட்டு வருவதுண்டு. அன்று இந்திரன் சுவாமியார் வேடமிட்டு அவ் வணத்திற்கு வந்திருந்தான். முருகவேள் சுவாமியார் தனது ஞானசிருஷ்டியால் அவனை அடையாளம் கண்டுவிட்டார். அதை உணர்ந்த இந்திரன் அவரை வணங்கி, “மா முனிவரே, தங்களது தவப் பெருமையை உணர்ந்து மிக்க மகிழ்வடைந்தேன். தங்களுக்கு விருப்பமானவற்றைக் கேளும்” என்றான்.

“**தே**வாதிதேவரே, தங்களது கருணை எப்போதும் எனக்கு இருத்தல் வேண்டும்” என்று கேட்க இந்திரன் ஒரு மூட்டையைக் கொடுத்து இதை உமது சீடர்களுக்குக் கொடும். இதை இங்கே பிரித்துப் பார்க்க வேண்டாம். உமது ஆச்சிரமத்திற்குக் கொண்டு சென்று பிரித்துப் பாரும்” என்றான்.

“**மு**ருகவேள் சுவாமியார் அம் மூட்டையை ஆச்சிரமத்திற்குக் கொண்டு வந்து தனது சீடர்களை அழைத்து அம் மூடையைப் பிரிக்கச் சொன்னார். வேலவன் அதைப் பிரித்துப் பார்த்தான் அதனுள் தேங்காய்கள் பொச்சுடன் இருந்தன. அவை பார்ப்பதற்கு பழுதடைந்தவை போல இருந்தன. முருகவேள் சுவாமியார் தனது சீடர்களைப் பார்த்து, “ஐந்து தேங்காய்களையும் நட்டுப் பராமரிக்க விரும்புபவர் யார்?’ என்று கேட்டார்”.

**ப**த்துச் சீடர்கள் அவை பழுதானவை, முளைக்காது என்றனர். சில சீடர்கள் அத்தேங்காயைக் குலுக்கிப் பார்த்துவிட்டுச், “சத்தம் கேட்கவில்லை இவை ஒல்லித் தேங்காய்கள்” என்றனர். வேலவன் சுவாமியாரை வணங்கி, “சுவாமி, நான் நட்டுப் பராமரிக்கிறேன் என்று கூறச் சுவாமியார் அவனைப் பார்த்துச் சிரித்தார்”.

“**சு**வாமி என்னிடம் சொந்தமாக வீடு கூட இல்லை. அதனால் தான் நான் தங்களுடன் தங்கிப் படித்து ஆசிரியனான போதும் தங்களுடனேயே வாழ்கிறேன். இதை எங்கு நடுவது” என்று கேட்டபோது சுவாமியார் சொன்னார், “சின்னப்பாச் செட்டியாரிடம் ஏராளமான நிலம் இருக்கிறது அதில் நடு. நான் அவரிடம் சொல்கிறேன்” என்றபோது வேலவன் எதுவும் பேசவில்லை.

“**சி**ன்னப்பாச் செட்டியார் என்ற யானை மிகப்பெரிய வர்த்தகர். அவருக்கு யசோதை என்று ஒரு மகள் இருக்கிறாள். சின்னப்பாச் செட்டியாருக்கு வேலவனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க விருப்பம். அவன் சுவாமியாரோடு சேர்ந்து சுவாமியாராகி விடுவானோ என்று பயப்பட்டார். அதைப்பற்றிச் சுவாமியாரோடு கதைத்தபோது அவர் சொன்னார், “செட்டியார், நான் சுவாமியல்ல. மக்கள் என்னைச் சுவாமியார் என்று அழைக்கின்றனர். அப்படி அழைக்க வேண்டாம் என்று கூறினாலும் கேட்கிறார்கள் இல்லை. நான் பற்றுக்களைத் துறக்கவில்லை. என்னைப் படைத்த இறைவன் மீது பற்றுவைத்துள்ளேன். இந்த வனவாசிகள் மீது பற்றுவைத்துள்ளேன். மரங்கள், செடி, கொடிகள் மீது பற்றுவைத்துள்ளேன்” இப்படிப் பல பற்றுக்கள் உண்டு”.

“**வே**லவன் நிறைந்த ஊக்கம் உடையவன். அவனால் செய்ய முடியாதென்று எச்செயலும் இல்லை. எமது வனத்தின் தெற்கு எல்லையில் உள்ள மலையில் இருந்து பாயும் ஆற்றை வடக்கு எல்லையில் உள்ள குளத்துடன் வாய்க்கால் வெட்டி இணைத்தவன். வடக்குப் பகுதி மேட்டுநிலம். அதற்கேற்றவாறு வாய்க்காலை ஆழமாக வெட்டி ஆற்றுநீரைக் குளத்திற்கு வரச் செய்ததால் வடக்கிலுள்ளோர் வருடம் முழுவதும் விவசாயம் செய்கின்றனர். உடையவர் என்று நாம் பெருமையோடு அழைக்கக் கூடியவர்கள் ஊக்கம் உடையவர்கள் மட்டுமே” என்றார் சுவாமியார்”.

“**தே**வலோகத்தில் இருந்த இந்திரனது தென்னந்தோப்பில் இருந்து கொண்டு வந்த அத் தேங்காய்களை வேலவன் செட்டியாரின் தரிசு நிலத்தில் நட்டுப் பராமரித்தான். இரு வருடங்கள் கழிய ஆயிரக்கணக்கான மரங்களும் ஆயிரக்கணக்கான காய்களைக் கொடுத்தன. அவற்றில் சிலவற்றை வேலவன் செட்டியாரின் தரிசு நிலங்களில் நட்டான். அவை இலட்சக்கணக்கான காய்களைக் கொடுத்தன. அவன் செட்டியாரின் மகளான யாசோதையைத் திருமணம் செய்தான். இப்போது அவன் செட்டியாரைவிடப் பணக்காரன்” என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், “உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும்” சபையோர்களே ஊக்கம் தான் ஒருவரது நிலையான செல்வமாகும். வேறு எந்தப் பொருளும் அழியும் தன்மை வாய்ந்ததாகும். பல வருடங்களுக்கு முன் ஒருநாள் சின்னப்பாச் செட்டியார் முருகவேள் சுவாமியாரின் ஆச்சிரமத்திற்கு வந்து சொன்னார், “சுவாமி, நான் ஒரு கப்பல் சொந்தக்காரனிடம் கூலியாக வேலை செய்தேன். ஊக்கமுடன் உழைத்து பொருள்தேடி அதை எனது முதலாளியின் கப்பலில் ஏற்றி அயல் வனத்திற்கு அனுப்பினேன். அன்று பெரும் சூறாவளி வீசியதால் கப்பலைக் காணவில்லை. எனது உழைப்பெல்லாம் வீணாகிவிட்டது” என்று அழுதார்”.

“**அ**தைக்கேட்ட சுவாமியார் சொன்னார், “சின்னப்பா, நாம் தேடும் பொருட்கள் எல்லாம் அழியக் கூடியவை. இன்று எனது பொருள் என்று சொல்வது நாளை வேறு ஒருவனுக்குச் சொந்தமாகலாம். பின் அது இன்னொருவனின் உடைமையாகலாம். இது காலமாற்றம். அதைத் தடைசெய்யவோ, மாற்றவோ முடியாது. அனுசரித்துத்தான் செல்ல வேண்டும். ஆனால் ஒருவரது மனதில் உள்ள ஊக்கமும் உறுதியும் அழிக்க முடியாதது. நடந்தவந்நை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் வாழமுடியாது. முன்பு உன்னிடம் பொருள் இருந்ததா…? இல்லையே ஊக்கமுடன் செயற்பட்டுப் பொருளைத் தேடினாய். இன்று அது அழிந்தது காலத்தின் செயல். அதை மறந்துவிட்டு மனவுறுதியுடனும், ஊக்கத்துடனும் செயற்படு. முன்பைவிட நீ முன்னேறுவாய்” என்றவர். அதை நம்பி ஊக்கத்துடன் செயற்பட்ட சின்னப்பாச் செட்டியார் இப்போது பெரும் தனவந்தர். அவர் இதை எனக்கு மட்டுமல்லப் பலருக்கும் கூறிவருகிறார். அதனால் ஊக்கத்துடன் செயற்படுவோர் வாழ்வில் நினைத்ததை எல்லாம் அடைவர்” என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னாள், “ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் ஊக்கம் ஒருவந்தம் கைத்து உடையார். சபையோர்களே ஊக்கமுடையவர்கள் செல்வத்தை இழந்தாலும், இழந்துவிட்டோம் என்று வருந்தமாட்டார்கள். இழந்தவற்றிலும் பார்க்க அதிகமாகச் சம்பாதிப்பேன் என்று மனதுள் உறுதி எடுத்துக் கொள்வார்கள். சபையோர்களே நான் தமிழறிஞரோடு பழகியபின் அவரது உத்தமமான நண்பர்கள் பலரின் நட்புக் கிடைத்தது. அதில் முக்கியமானவர் சின்னப்பாச் செட்டியார். நான் ஒரு பேச்சாளர் என்பதால் அவர் தனது அனுபவங்களை எனக்குக் கூறுவார். அவரது அனுபவங்களைக் கதைகளாக்கி நான் மாணவர்கள் மத்தியில் பேசும்போது கூறுவேன்.

அவர் சொல்வார், "எந்தத் தொழிலை பெரும் முயற்சியெடுத்து நேர்மையாகச் செய்தாலும் அதில் இலாபமும், நட்டமும் மாறிமாறி வரும். பலமுறை இலாபம் வந்தபோது மகிழும் மனம் ஒருமுறை நட்டம் வந்ததும் துவண்டுவிடும்".

"**ஒ**ன்றை மட்டும் நான் எப்போதும் உறுதியாக நம்பியுள்ளேன். ஒரு தொழிலில் நட்டம் வராதுவிட்டால் தொழில் செய்பவன் தன்னைவிடச் சிறந்தவன் யாருமில்லை என்று இறுமாப்புக் கொள்வான். அந்த இறுமாப்பு அவனைத் தொடர்ந்து நட்டமடையச் செய்யும். மன உறுதியுடன் எதையும் சிந்திக்காது ஊக்கத்துடன் முயற்சித்தால் நட்டங்கள் இலாபங்களாக மாறும். எனக்கு மிகவும் நம்பிக்கையான ஒரு நண்பன் இருந்தான். அவன் விவசாயிகளிடம் அவர்களது விளைபொருட்களை வாங்கி பிறநாடுகளுக்கு கொண்டு சென்று விற்றுவந்தான். பலமுறை ஒழுக்கமாகப் பணத்தைக் கொடுத்த அவன் அந்தமுறை ஏராளமான பொருட்களைக் கடனாக வாங்கினான்".

"**அ**வன் உடனுக்குடன் பணத்தைக் கொடுத்தமையால் விவசாயிகள் அவனைப் பூரணமாக நம்பினர். ஆனால் அவன் அந்தமுறை ஏமாற்றிவிட்டான். பொருட்களைக் கடனாகக் கொடுத்தவர்கள் என்னிடம் வந்து, "அவன் உங்களது நண்பன். அத்துடன் நீங்கள் சொன்னதால்தான் கொடுத்தோம்" என்றனர். அதனால் அவர்களுக்குரிய பணத்தை நானே கொடுத்தேன். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஊக்கத்துடன் உழைத்தால் அவற்றைப் பெறலாம் என நினைத்தேன். இழந்ததைவிடப் பலமடங்கு பணத்தை நான் பின்பு சம்பாதித்தேன். யாரையும் நம்பக்கூடாது. யாரையும் நம்பாமலும் வாழ முடியாது என்று நினைத்தேன்" என்று செட்டியார் கூறினார் என்று தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள், "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவு இலா ஊக்கம் உழையான் உழை", "சபையோர்களே, சின்னப்பாச் செட்டியாரின் கதையைக் கேட்ட பின்பு எனது மனம் உறுதியானது. மனதுள் ஊக்கம் பிறந்தது. எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றியது. சின்னப்பாச் செட்டியாரை அவரது நண்பன் ஏமாற்றிய பின்பு தான் ஏன் அத்தொழிலைச் செய்யக்கூடாது என்ற எண்ணம் அவரின் மனதில் எழுந்தது. அதனால் அவர் விவசாயிகளின் பொருட்களைக் கொள்வனவு செய்து பிறநாடுகளில் விற்றுவிட்டு அங்குள்ள பொருட்களை வாங்கிவந்து இங்கு விற்கத்தொடங்கினர். இலாபம் பன்மடங்காகப் பெருகியது. சோர்வில்லாத ஊக்கத்தை உடையவர்களிடம் செல்வமானது தானாகத் தேடி வந்து சேரும்.

அதுதான் நடந்தது என்று செட்டியார் மகிழ்வுடன் கூறினார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள், "வெள்ளத்து அணைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு", "சபையோர்களே, நீரில் வாழ்கின்ற செடிகளது பூவின் தாளின் நீளம் தண்ணீரின் மட்டத்தை ஒத்தது. அதுபோல ஒருவரது உயர்வு அவரது மனதில் உள்ள ஊக்கத்தின் அளவை ஒத்தது. சபையோர்களே சின்னப்பாச் செட்டியார் ஒழுக்கமானவர். நேர்மையானவர். பிறரின் பொருட்களை விரும்பாதவர். அதனால் அவர் வனங்களில் வசிப்போர் அவரின் நண்பர்களாயினர். அவரிடமே தமக்குத் தேவையான பொருட்கன் அனைத்தையும் வாங்கினர். அத்துடன் தமது விளைபொருட்களை அவருக்கு மட்டும் விற்றனர். அதனால் அவர் பெரும் குபேரனானார். அவரது மன உறுதியும், தளராத முயற்சியும் அவரைத் தினம்தினம் வளர்த்தன" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள், "உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்; மற்றுஅது தள்ளினும் தள்ளாமை நீர்த்து", "சபையோர்களே எப்போதும் உள்ளத்தால் எண்ணுபவை எல்லாம் உயர்வானதாக இருத்தல் வேண்டும். அது எண்ணுபவர் எண்ணத்தை நிறைவு செய்யாவிட்டாலும் உயர்வாக எண்ணுவதை எக்காரணங் கொண்டும் விடலாகாது என்று செட்டியார் அடிக்கடி சொல்வார். இலக்கியத்தில் பற்றுக் கொண்ட நான் பல சிறுகதைகள், நாவல்கள், தெய்வீகக் கதைகளை எழுதுவேன். ஆனால் இங்கு அதற்கு விமர்சனமோ, விருதோ கிடைப்பதில்லை. அதனால் மனம் சோர்ந்து விரக்தியடைவேன். அப்போது செட்டியார் சொல்வார், "மகளே, உனக்கு எழுத்தாற்றலை இறைவன் தந்துள்ளார். உனது எழுத்துக்கள் மக்களுக்கு நல்ல பயன்களைக் கொடுத்தபோதும் மேலாளர்கள் தமக்கு விரும்பியவர்களுக்குத்தான் விருதுகள் கொடுக்கிறார்கள், விமர்சிக்கிறார்கள்".

**"நீ** கவலைப்படுவது நியாயமானது. ஆனால் அக் கவலை உனது எழுத்தின் மீது உனக்கே வெறுப்பை உண்டாக்கிவிடும். உனக்கென எதிர்காலம் இருக்கிறது. வள்ளுவர் வாழும் போது அவரையும் திருக்குறளையும் யாரும் மதிக்கவில்லை. ஆனால் இன்று அது உலகப் பொதுமறையாகிவிட்டது. அந்தநிலை உனக்கும் ஏற்படும். அதற்கு ஆதாரமாக உனது சைவசித்தாந்தக் கதை நூல்களைத் தரமான சைவசித்தாந்த நூல்கள் என்று திருவாவடுதுறை

ஆதீனம் சான்றிதழ் தந்துள்ளது. அதைவிட மேலானது ஏதாவது இருக்கிறதா…? மனங்கோணாது உயர்வாக எண்ணு. அந்த உயர்வான எண்ணம் இப்போது பயனளிக்காவிட்டாலும் ஒருநாள் பயனளிக்கும்" என்றவர். அதன் பின் எனது மனதில் ஊக்கமும் பிறந்தது. என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள். 'சிதைவிடத்து ஒல்கார் உரவோர்; புதை அம்பிற் பட்டுப் பாடு ஊன்றும் களிறு', "சபையோர்களே, சின்னப்பாச் செட்டியார் பெரிதாகப் படிக்கவில்லை. ஆனால் அனுபவத்தாலும், பெரியோர்களது சுகவாசத்தாலும் பெரும் அறிவாளியானவர். அவர் சொன்னார், "மகளே, போர்க்களத்தில் உடம்பை மறைக்கும் அளவிற்கு அம்புகள் பட்டபோதும் யானை தனது வீரத்தை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கமுள்ளவர்களுக்கு உயிர்போகின்றளவிற்குத் துன்பங்கள் வந்தாலும் மன உறுதி தளரமாட்டார்கள். யானையைப் போல வீரத்துடன் எழுந்து போராடுவர். யாருக்கும் கொடுக்காத கொடையை இறைவன் உனக்குத் தந்துள்ளான். ஆதனால் நல்ல பல இலக்கியங்களை நீ எழுதியுள்ளாய். அவ்வாறு எழுதிய நீ முன்னோரின் சரித்திரத்தை அறியாதிருக்கமாட்டாய்".

**"ச**ங்ககாலம் தொடக்கம் இன்றுவரை அடிவருடிகளுக்குத் தான் விருதுகளும், பரிசுகளும் கிடைத்தன. திறமைமிக்கவர்கள் அடிபணியமாட்டார்கள். ஆனால் காலம் அவர்களை உயர்த்தி வைக்கும். நீ ஊக்கத்துடன் எழுது" என்றவர். அவரது சொல்லை மந்திரமாக ஏற்று வாழ்ந்து வருகிறேன்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "சபையோர்களே, உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு" ஊக்கம் இல்லாதவர்கள் எல்லாம் இருந்தாலும் எதுவும் இல்லாதவராவார். அவர்தான் தான் கொடையாளி என்று தம்மை மதித்துக் கொள்ளும் பெருமையை அடையமாட்டார்".

**"இ**ராகுலன் என்ற எலி சரியான சோம்பேறி. அது குடும்பமாக உச்சில் குளத்தின் அருகே உள்ள வயல் வெளியில் வாழ்ந்து வந்தது. அது அன்றன்றுக்குத் தேவையான தானியங்களைச் சேமித்துக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுக்கும். மனைவி மாலதி சுறுசுறுப்பானவள். அவள்

மழை காலத்திற்கெனத் தானியங்களைச் சேகரித்துக் கொண்டு வந்து உச்சில் குளத்தின் அணையில் பொந்து ஒன்றை அமைத்துச் சேகரித்து வைத்திருநதாள்”.

“**அ**ந்தமுறை பெருமழை பெய்ததால் ஊர்களில் பெய்த மழைநீர் அளவுக்கதிகமாக வயலுக்கு வந்ததால் அங்கு வசித்த எலிகள் எல்லாம் அகதிகளாகி உச்சில் குள அணையில் தங்கியிருந்தன. சில புத்திசாலி எலிகள் மாலதி தானியங்களைச் சேமிப்பதைப் பார்த்து தாமும் சேமித்தன. இராகுலனின் சகோதரியான ஈஸ்வரி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தபோது அவரின் கணவனை வெள்ளத்தில் தள்ளுப்பட்டு வந்த பாம்பு ஒன்று பிடித்து விழுங்கிவிட்டது. அதனால் அது இராகுலனின் வசிப்பிடத்திற்கு வந்து ஏழு குட்டிகளை ஈன்றது. மாலதி எல்லோருடனும் அன்பாகப் பழகி அவர்களுக்கு உதவிகள் செய்வதால் பல எலிகள் வந்து இராகுலனின் தங்கையையும், குட்டிகளையும் தூக்கிச் சென்று உச்சில் குளக்கட்டில் பத்திரமாக விட்டன”.

“**மா**லதியும் ஏனைய பல எலிகளும் அங்கு தங்கியிருந்த எலிகளுக்கு வேண்டிய உணவுகளை வழங்கின. அப்போது இராகுலனின் தங்கை சொன்னாள், “நீ பூமிக்குப் பாரமாகவே இருக்கிறாய். அண்ணியும் ஏனைய சிலரும் ஊக்கத்துடன் முயற்சி செய்தமையால் இன்று நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் உணவைப் பெறுகின்றன. உன்னால் ஒருபிடி தானியங்களைக் கூடச் சேமிக்க முடியவில்லை அண்ணியை ஊரவர் பாராட்டிப் பேசுகின்றனர். அண்ணி இல்லாவிட்டால் நீ பட்டினியால் செத்திருப்பாய் என்கிறார்கள். இன்று எனக்கும், எனது பிள்ளைகளுக்கும் போதியளவு உணவளிக்கும் அன்னபூரணியாக அண்ணி விளங்குகிறாள்” என்ற போது இராகுலன் அதைக் கேளாதது போல எழுந்து சென்றான்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள். “பரியது கூர்ங்கோட்டது ஆயினும், யானை வெரூஉம் புலிதாக் குறின்”, “சபையோர்களே, கூர்மையான கொம்புகளையும், பருத்த தேகத்தையும் கொண்ட யானை ஊக்கமுடை புலியைக் கண்டு அஞ்சி நடுநடுங்கும். அதுபோல சிறிய உருவமுடையவர்களும் ஊக்கம் உடையவரானால் அவரை வெல்வது கடினம். மாலதியின் மூத்த மகனான குமணன் பயந்தவன். இளைய மகனான குமார் ஊக்கமுள்ளவன், துணிந்தவன். அவனுக்கு உச்சில் குளத்திற்கு அப்பால் உள்ள காட்டைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. அதை அவன் தனது மூத்த சகோதரனான குமணனுக்குச் சொன்னபோது அவன் பயத்தினால் மறுத்துவிட்டான். அதனால் குமார் தனியே காட்டுக்குள்ச் சென்றான்”.

**“மி**கவும் அவதானமாகச் சென்ற அவன் எதிரே ஒரு காட்டுப் பூனை வருவதைக் கண்டு அங்கிருந்த ஒரு மரத்தில் தாவி ஏறினான். பூனை அவனைக் கண்டதால் தானும் மரத்தில் ஏறி அவனைத் துரத்தியது. குமார் விரைவாக ஓடும்போது கால் தடுக்கிக் கீழே விழுந்தது. அந்த மரத்தின் கீழ் யானை ஒன்று நன்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. குமார் அதன்மேல் விழுந்ததும் அதற்குக் கடுங்கோபம் வந்தது”.

**“இ**ன்றைக்கு ஆவணிச் சதுர்த்தி நான் விரதமிருந்து விநாயகரைத் தொழுவேன். அதற்காகக் காலையில் எழுந்து நீராடிவிட்டுப் படுத்திருந்தேன். கோவில் பூசை மணி கேட்டதும் எழுந்து செல்லலாம் என நினைத்தேன். நீ என்மீது விழுந்து என்னை மாசுபடுத்திவிட்டாய். நீ மாமிசம் உண்பவன். அதனால் நான் திரும்பவும் நீராட வேண்டும். இன்று சதுர்த்தி விரதம். அதனால் உன்னை கொல்லாமல் விடுகிறேன் ஓடிப்போ” என்று மிக்க கோபத்துடன் சொன்னது”.

**“அ**ண்ணா, காட்டுப் பூனை துரத்தியதால் ஓடி வந்தேன். கால் தடுக்கி விழுந்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று கை கூப்பித் தொழுதான் குமார்.

**“ச**ரிசரி போபோ…” என்று யானை சொன்னபோது குமார் சொன்னான், “அண்ணா, நீ வணங்கும் விநாயகரின் வாகனம் நான்தானே அதனால் இருவரும் நண்பர்களாவோம். நான் காட்டுக்கு அடிக்கடி வர விரும்புகிறேன்” என்றது. அதைக்கேட்ட யானை மிகுந்த கோபத்துடன் சொன்னது, “எனக்கு யாரையும் பிடிக்காது பேசாமல் சென்றுவிடு”.

**“கு**மார் கவலையுடன் சொன்னது, “அண்ணா, என்னைச் சிறியவன் என்று நினைக்காதே. நான் ஊக்கமுடையவன். ஒரு சிறிய முயல் பலம் மிகுந்த சிங்கத்தைக் கொன்றதை நீ அறியவில்லையா? அதுபோல உனக்கும் உதவி செய்யும் நிலை ஏற்பட்டால் நான் உதவி செய்வேன்” என்றதும் யானை சொன்னது, “நீ, எனக்கு உதவி செய்யப்போகிறாயா…?” என்று கேலியாகச் சிரித்தது. சில தினங்கள் கழிய யானை காட்டை விட்டு வெளியேறி வயல்களுக்கு அருகாமையில் இருந்த வாழைத்தோப்புக்குள் நுளைந்து வாழைக்குலைகளைத் தின்றது. அது வாரத்தில் ஒரு சில நாட்களில் அங்கு நுளைந்து வாழைக்குலைகளைத் திருடி உண்டு வந்தது”.

“அதனால் வாழைதோட்டக்காரர் ஒன்று சேர்ந்து யானையின் நான்கு கால்களுக்கும் தடம் வைத்தனர். இதை அறியாத யானை அங்கு சென்றபோது தடத்துக்குள் சிக்கிக் கொண்டது. பலம் மிகுந்த யானை தனது பலம் முழுவதையும் திரட்டிக் கால்களை விடுவிக்க முயன்றபோதும் அதனால் விடுபடமுடியவில்லை. அதனால் அது பிளிறியது. அச் சத்தத்தைக் கேட்டு அங்கு வந்த குமணனும் குமாரும் யானையின் அருகே வந்தனர். குமார் சொன்னான், “அண்ணா, இந்த யானை அடிக்கடி இங்கு வந்து வவிவசாயிகள் கஷ்டப்பட்டு நட்ட வாழை மரங்களை அழிப்பதோடு குலைகளையும் தின்றுவிடுகிறது. அதனால் தான் பொறி வைக்கப்பட்டுள்ளது. உதைக் கொல்ல வேண்டும்”.

“என்றபோது குமணன் சொன்னது, “நண்பா, நீ விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை அழிக்கிறாய். அது பாவமான செயல். கடவுள் காடுமுழுவதிலும் உனக்கான உணவு வகைகளைப் படைத்திருக்கும் போது ஏன் மற்றவர்களின் வாழ்க்கையைக் கெடுக்கிறாய்? இனிமேல் இந்தப் பக்கம் வரமாட்டேன் என்று சொல். நான் உன்னை விடுவிக்கிறேன். நான் மிகமிகச் சிறியவன் எனினும் ஊக்கமுள்ளவன். நான் நினைத்ததைச் செய்து முடிப்பேன். எப்படியான பலசாலியானாலும் தலைக்கனம் கொள்ளலாகாது, ஊக்கமும், அறிவும் இருந்தால் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றியளிக்கும் என்பதை உணர்ந்துகொள்” என்று கூறியதும் யானை அதை ஒப்புக் கொள்ளக் குமணனும் குமாரும் கட்டை அறுத்து அதை விடுவித்தன. ஆகையால் எதற்கும் உருவமும் பலமும் காரணியாகாது. ஊக்கமும், அறிவும் தான் வெற்றியைத் தரும்”. என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

இன்பவதனி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னாள், “உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை; அ·.து இல்லார் மரம் மக்கள் ஆதலே வேறு”, “சபையோர்களே, ஒருவர் ஊக்கத்தைத் தேடிக்கொண்டால் அவர் எல்லாச் செல்வங்களையும் தேடியவராவர். ஊக்கமில்லாதவர்கள் மரங்களைப் போன்றவர்கள். அவர்கள் உருவத்தால் தான் இன்னாரென இனங்காணப்படுகின்றனர் என்று கூறிய குமணன் தொடர்ந்து சொன்னான், “நண்பா, நீ உருவத்தில் பெரியவன். பலம் மிக்கவன் என்றும் கூரிய கொம்புகளை உடையவன் என்றும் நம்பியுள்ளாய். அந்த நம்பிக்கை உன்னளவில் சாத்தியமானதா என்று சொல். பலத்துடன் ஊக்கத்தையும் தேடினாயேயானால் புலியையும் நீ வென்றுவிடலாம். அதனால் ஊக்கத்தைத் தேடு” என்றது. என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**03**

**இ**ன்பவதனி பேசி முடிந்ததும் மேடைக்கு வந்த கதிரேசன் சொன்னார், “சபையோர்களே, இன்பவதனி அம்மையார் ஊக்கம் உடைமை என்ற அதிகாரத்தைப் பற்றி அருமையாகப் பேசினார். அவரது பேச்சுச் சபையோரை மிகவும் கவர்ந்தமையால் அடுத்த அதிகாரமான மடி இன்மை என்ற அதிகாரத்தில் உள்ள குறள்களுக்கும் அவரையே பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்” என்று கூறிவிட்டு அமர்ந்ததும் இன்பவதனி வந்து சபையோரை வணங்கிவிட்டு மடிஇன்மை என்ற அதிகாரத்தின் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், “குடி என்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும் மாசு ஊரமாய்ந்து கெடும்”. சபையோர்களே கடவுளால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் ஊக்கத்துடன் செயற்பட்டால் தான் குடும்பம் என்ற விளக்குப் பிரகாசமாக விளங்கும். அதில் சோம்பல் என்ற மாசு படியுமானால் குடும்பம் படிப்படியாகத் தேய்ந்து இறுதியில் அழிந்துவிடும். ஊக்கமுடையவர்களின் வாழ்க்கையில் ஒருபோதும் இருள்படியாது”.

“**கு**மணன் ஒரு உல்லாசமான ஊக்கமிகுந்தவன். அவன் அடிக்கடி ஊர்களைச் சுற்றிப் பார்த்து அங்குள்ளவர்களுடன் உரையாடுவான் அன்று அவனும் அவனது நண்பனான ஆரூரன் என்ற எலியும் அந்தக் காட்டின் நடுப்பகுதியைப் பார்க்கப் புறப்பட்டனர். அப்போது குமார் சொன்னான், “அங்கு காட்டுப் பூனைகள் அதிகம். அதனால் அங்கு போகாதீர்கள்” அதற்குக் குமணன் சொன்னான், “சோம்பேறிகள் தான் பயப்படுவார்கள். நானும் ஆரூரனும் ஊக்கம் மிக்கவர்கள், சோம்பல் இல்லாதவர்கள், பயப்படமாட்டார்கள். பூனைகள் வந்தால் அறிவால் வெல்வோம் அல்லது ஓடி வந்துவிடுவோம். நீ பயப்படாதே” என்று கூறிவிட்டுச் சென்றனர்.

“**ஒ**ரு பெரிய ஆல மரத்தின் கீழ் அன்று வயலுக்கு வந்து தடத்தில் சிக்கிச்கொண்ட யானையான நாதனும் இன்னொரு பெண் யானையையும் குமணன் கண்டான். நாதன் நித்திரை கொண்டு கொண்டிருந்தான். அவனது குறட்டை ஒலி பலமாகக் கேட்டது. அருகில் நின்ற யானை, “அப்பா, அப்பா.. எவ்வளவு நேரமாக எழும்பும்படி கூறுகிறேன். மமா வயல் காணி விடயமாகப் பேச வந்திருக்கிறார். எழும்பி வாருங்கோ…” என்று தும்பிக்கையால் தட்டிக் கொண்டிருந்தாள்”.

“**அ**ப்போது அங்கு வந்த நாதனின் மனைவி, “முகுந்தன் அண்ணா காலையில் எழுந்து இவரைத் தேடிப் பிடிக்கிறது தான் எமது வேலை. இரவு முழுவதும் நித்திரை கொண்டவர். விடிந்ததும் எழுந்து வந்து இங்கு படுத்துவிட்டார். காலையில் இவரைத்தேட நாம்படும்பாடு அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். இவர் வயலை ஈடுவைத்துவிட்டார். அண்ணை அதை மீட்டுத்

தருவதற்காக இன்று வருவதாகச் சொல்லியும் சோம்பல் காரணமாக காலை எழுந்து வந்துவிட்டார். அவர் பேசுவார் என்ற பயம். குடும்ப நினைவே இல்லை. இவரின் சோம்பலால் எமது முன்னேற்றம் பாழாகிவிட்டது" என்று அழுதாள் நாதனின் மனைவி மலர்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "மடியை மடியா ஒழுகல் குடியைக் குடியாக வேண்டுபவர், "சபையோர்களே, மலர் அழுதழுது சொன்னாள், "அண்ணா, நானாகத் தேடிக் கொண்டதால் நான்தான் துன்பப்பட வேண்டும். நான் பிறந்தன்றே எனது அம்மா தனது தம்பியின் மகனுக்குத் தான் என்னைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று நிட்சயித்தாள். நான்தான் இவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டேன். அதனால் எனது தாயார் இப்போதும் என்னோடு பேசுவதில்லை. எனது மைத்துனன் பெரும் தனவந்தன். அவனது வர்த்தக நிலையத்தில் ஐம்பதுபேர் வேலை செய்கின்றனர். ஆனால் நானும் எனது பிள்ளைகளும் பெருந்துன்பப்படுகிறோம்" மலர் விம்மி விம்மி அழுதாள்".

**"சி**றிது நேரம் கழித்து மலர் சொன்னாள், இவர் சோம்பேறி படிக்கும் போது வகுப்பில் நித்திரை கொள்பவர். தனது குடும்பத்தை ஊரார் மெச்ச வேண்டும் என்று நினைப்பவர்கள் சோம்பலில்லாது கடுமையாக உழைப்பர். இவர் இருபத்துநான்கு மணிநேரமும் நித்திரை கொள்வார். இவருக்கு வெட்கம், ரோசம், மானம் எதுவும் கிடையாது யார் எப்படிச் சொன்னாலும் புரிந்து கொள்ளமாட்டார். மொத்தத்தில் இவர் ஒரு கருங்கற்பாறை" என்று அழுதாள் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "மடிமடிக் கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி மடியும் தன்னினும் முந்து" மலர் அழுதழுது சொன்னாள், "எனது குடும்பத்தினர் எவருக்கும் இவரைப் பிடிக்காது. நான்தான் விபரமறியாது காதலித்துவிட்டேன். எனது தாத்தா சொன்னார், "மலர், இவனது பரம்பரையே முழுச் சோம்பேறிகள். அதனால் தான் இவர்களது குடும்பம் பெரும் வறுமைநிலையை அடைந்துள்ளது. இவனது தகப்பனும் சரியான சோம்பேறி. சோம்பேறியின் குடும்பம் அவனது கண்ணெதிரே அழிந்துவிடும். குடும்பத்திற்கு முன்னம் அவன் அழிந்துவிடுவான். அதனால் நீ உனது மாமனின் மகனைக் கட்டு என்றவர். நான் தீராத காதல் மோகத்தால் இவரைக் கட்டி இன்று அனுபவிக்கக் கூடாத துன்பங்களையெல்லாம் அனுபவிக்கிறேன். நீங்கள்

இவரது நண்பர். அதனால் புத்திமதி சொல்லுங்கோ” என்று அழுதவள்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து மாண்ட உஞற்றுஇலவர்க்கு” சபையோர்களே சோம்பற்பட்டு முயற்சியைக் கைவிட்டவர்களது குடும்பம் பெருமையை இழப்பதோடு பல்வேறுவிதமான குற்றங்களையும் செய்யும். மலர் அழுதழுது சொன்னாள், “அண்ணா, நான் அப்பாவுடன் இருக்கும்போது அப்பா நான் விரும்பியவற்றை உடனே வாங்கித் தருவார். நான் நினைத்தவாறு மிக்க மகிழ்வுடன் வாழ்ந்தேன். எனது அப்பாவின் பெயரைக் கேட்டாலே வனவாசிகள் மிக்க மகிழ்ச்சியடைவர். அவர் கோவிலுக்குச் சென்றால் அனைவரும் அவருக்கருகில் வந்து மகிழ்வுடன் கதைத்துச் சிரிப்பர். இப்போது என்னைக் கண்டவர்கள் காணாதவர்கள்போலச் செல்கின்றனர். கோவிலுக்குச் சென்றால் என்னோடு கதைக்க யாரும் விரும்புவதில்லை. பாடசாலையில் எனது பிள்ளைகளோடு பிறரின் பிள்ளைகள் சேர்வதில்லை. பெற்றோர் சேரக்கூடாதென்று சொல்லிவைத்துள்ளனர்”.

**“எ**ன்று கூறிவிட்டு அழுத மலர் பின்பு சொன்னாள், “மதிப்பு மரியாதை மட்டும் போகவில்லை கள்ளக் குடும்பம் என்ற பெயரும் வந்துவிட்டது. எனது சகோதரியின் மகனுக்குத் திருமணம் பேசியபோது பெண்வீட்டார், “அது கள்ளக் குடும்பம்” என்று சொல்லித் திருமணத்தைச் செய்யவில்லை. அதனால் எனது தங்கை வந்து பேசக்கூடாத வார்த்தைகளைச் சகசமாகப் பேசிவிட்டுச் சென்றாள். அதைக்கேட்ட ஊரவை சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார்கள். இவரின் நடத்தையால் ஒழுக்கமாக வாழ்கின்ற எனது சகோதரர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுகிறது” என்று அழுதாள் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “நெருநீர் மறவிமடி துயில் நான்கும் கெடுநீரார் காமக்கலன். “சபையோர்களே, மலர் விம்மிவிம்மி அழுது சொல்வதைக் கேட்டதும் குமணனின் கண்கள் கலங்கின. அவன் சொன்னான், “நண்பா, உனது மனைவி அதாவது நீ காதலித்து எத்தனையோ எதிர்ப்புகளுக்கு மத்தியில் உன்னை மட்டும் நம்பி வந்தவளை நீ துன்பப்படவைக்கிறாய். நம் முன்னோர் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளைப் பற்றியும் எழுதியவற்றை ஆசிரியர்கள் எமக்குக் கற்பித்தனர். பண்டிதர் சிற்றம்பலம் எவ்வளவு அழகாகத் திருக்குறளைக் கற்பித்தார். காலதாமதம்,

மறதி, சோம்பல், அளவுக்கு மிஞ்சிய தூக்கம் ஆகியவை கெட்டுப்போவோர் விரும்பி ஏறும் மரக்கலன்களாகும் என்றவர். அதைத்தான் நீ செய்கிறாய்".

**"நி**த்திரை அளவோடு இருத்தல் வேண்டும். அளவுக்கதிகமானால் அது சோம்பலைக் கொடுக்கும். சோம்பல் எதையும் செய்யவிடாது. அது காலதாமதத்தையும், மறதியையும் உண்டுபண்ணி வாழ்க்கையை முற்றாக அழித்துவிடும்" என்றவர். உன்னை இந்த நான்கும் பிடித்திருப்பதால் உனது குடும்பம் கஷ்டத்தையும், அவமானத்தையும் அடைந்துள்ளது. உனது மனைவியின் உறவினர்கள் உன்னையும் உனது குடும்பத்தினரையும் அவமானச் சின்னங்களாகக் கருதுகின்றனர். நானும் தெரியாத்தனமாக உன்னோடு நட்புப் பூண்டதால் எனது உற்றார், உறவினர், நண்பர்கள் என்னையும் வெறுக்கின்றனர்".

**"உ**ன்னை அன்று காப்பாற்றியதால் எனது உறவினர்கள் என்னை ஏசினர். இனிமேல் நான் உனக்கு உதவினால் எனது உறவைத் துண்டித்துவிடுவதாகக் கூறினர். உனது மகளும் உன்னைக் காப்பாற்றியது பெரும் தவறு என்று சொன்னவள். குற்றம் செய்தவர் கட்டாயம் தண்டனையை அனுபவிக்க வேண்டும். இவரைப் போன்றவர்களை முறையாகத் தண்டித்தால் திரும்பவும் குற்றங்களைச் செய்யமாட்டார்கள் என்றவள். நீ பெத்த மகளே இப்படிச் சொல்கிறாள் என்றால் ஊர் என்ன சொல்லும்" என்று கேட்டவன்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "படி உடையார் பற்று அமைந்தக் கண்ணும் மடியுடையார் மாண்பயன் எய்தல் அரிது" சபையோர்களே இது ஓர் அருமையான குறள். சோம்பல் உடையவர்களுக்கு நாட்டை ஆளுகின்ற மன்னனது நெருங்கிய நட்புக் கிடைத்தாலும் அதைச் சிறந்த முறையில் பயன்படுத்தி மேலான நன்மைகளைப் பெறமாட்டார்கள். குணமன் நாதனுக்குப் புத்திமதிகள் கூறிக்கொண்டிருந்த போது மலர் சொன்னாள், "அண்ணா, இவருக்குப் புத்திமதிகள் சொல்லாதவர்களே இல்லை. தானும், தனது குடும்பமும் எப்போதும் நல்வாழ்வு வாழவேண்டும் என்று நினைப்பவர்களுக்குப் புத்திமதிகளை யாரும் சொல்லத் தேவையில்லை. எனது தம்பி தான் காதலித்த பெண்ணை யாருக்கும் தெரியாது அழைத்து வந்துவிட்டான். பெண்வீட்டார் பெரும் தனவந்தர்கள். அவர்கள் அவளை ஒரு பொருட்டாகக் கூட எண்ணவில்லை".

**அ**தனால் ஊக்கம் கொண்ட தம்பிதான் அவர்களைவிடப் பணக்காரனாக வேண்டும் என்ற நினைவுடன் இராப்பகலாக அயராது உழைத்து இன்று அவர்களைவிடப் பணக்காரனாக இருக்கிறான். அவன் தனது வாழ்க்கை முறைபற்றிப் பல தடவைகள் கூறியும் உணராதவர் நீங்கள் கூறி உணரப் போகிறாரா…? இவருக்கு யார் சொன்னாலும் ஏறாது. மற்றவர்களின் செழிபான வாழ்க்கையைப் பார்த்தும் உணர்வுகள் வராது. எனது தம்பியுடன் சேர்ந்தாலே இன்று கோடீஸ்வரனாகியிருக்கலாம். அந்த நினைவுகள் இல்லை. பழுதடைந்த உணவைக் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிட்டுவிடுவார்" என்றவள்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "இடி புரிந்து எள்ளும் சொல்கேட்பர் மடிபுரிந்து மாண்ட உஞற்றுஇலவர்" சபையோர்களே சோம்பல் மிகுந்தவர்கள் பிறர் மிகமிகக் கேவலமான சொற்களால் இழிவாகப் பேசினாலோ அல்லது இடித்துக் கூறினாலோ அவற்றைக் கவனத்தில் எடுக்கமாட்டார்கள் என்று பெரியவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறியவை இப்போதும் பொருந்துவனவாகவே உள்ளது என்று நாதனின் விடயத்தில் அவனது மனைவி, மகள், மைத்துனன் சொன்னதில் இருந்து உணர்ந்துகொள்ளலாம். பலர் சொல்லியும் நாதன் படுத்திருந்தான். காத்துக் காத்துப் பொறுத்திருக்க முடியாத நாதனின் மைத்துணனான கெங்காதரன் மிகுந்த கோபத்துடன் வந்து சொன்னான்.

**"உ**ன்னைப் போல நானும் வேலைவெட்டியில்லாதவனா நான் வயல் உறுதியை மீட்டு எனது மருமகளின் பெயரில் எழுதியுள்ளேன் உனது பெயரில் எழுதினால் நீ விற்றுவிடுவாய். தங்கையும், பிள்ளைகளும் அனாதைகளாகிவிடும். நீ இங்கிருப்பதால் உனக்கும் சாப்பாடு தரவேண்டியுள்ளது. அதனால் எங்காவது சென்று பிச்சை எடுத்து வாழ்".

**"எ**ன்றபோது மலர் சொன்னாள், "வெட்கம், ரோசம், சூடு, சுரணை இல்லை அதனால் ஏசினால் என்ன, கேலி செய்தாலென்ன கோபம் வராது. உவரோடு கதைப்பதை விட்டுவிட்டு போய் உங்களது தொழிலைப் பாருங்கள்" என்ற போது குமணன் சொன்னான், "இப்படிப் பேச்சுக்கேட்டு வாழ்வதை விட தூக்கில் தொங்கிச் சாகலாம்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், “மடிமை குடிமக்கள் தங்கின் தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்திவிடும்” சபையோர்களே குமணன் சொன்னது அவனது நண்பனான ஆரூரனுக்குப் பிடிக்கவில்லை. விரோதியானாலும் பேசக்கூடாத சொற்களைப் பேசுவது பாவம் என்று நினைப்பவன். எனினும் அவன் அது பற்றிப் பேசாது நாதனைப் பார்த்துச் சொன்னான், “உன்னை யாரென்று எனக்குத் தெரியாது. எனினும் சுற்றியுள்ளவை பேசுவதைக் கேட்கப் பாவமாக இருக்கிறது. உங்கள் மனைவி, மகள், மைத்துனன் ஆகியோரைப் பார்த்தால் அவர்கள் நல்ல குடியில் பிறந்தவர்கள்போலத் தெரிகிறது. நல்ல குடியில் பிறந்த நீங்கள் சோம்பல் காரணமாகத்தான் மற்றவர்களால் வெறுக்கப்படுகிறீர்கள். காதலித்து பல எதிர்பார்ப்புக்களுடன் பெற்றோரையும், உறவினர்களையும் வெறுத்து உங்களுடன் வந்த பெண்ணை நீங்கள் துன்புறுத்தலாமா…? உங்களை நம்பிவந்த மனைவியையும், உங்களையே கதியென வாழும் மகளையும் வேதனைப்படுத்த எப்படி உங்களால் முடிகிறது. சற்றுச் சிந்தித்துப்பாருங்கள்” என்று கூறினான். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஒன்றதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள். ‘‘குடி ஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன் மடிஆண்மை மாற்றக் கெடும்’’, ‘‘சபையோர்களே, ஆரூரன் சொன்னதைக் கேட்ட குமணன் சொன்னான், “நண்பா, உன்னைப் பற்றி எதுவும் எனக்குத் தெரியாது. நீ முதல் முதலாக நான் உன்மீது விழுந்தபோது திட்டினாய். நான் அதைப் பெரிதாக எடுத்திருந்தால் உன்னைக் காப்பாற்றியிருக்கமாட்டன். ஒருவர் தவறுகள், குற்றங்கள் செய்வது இயல்பு. ஆனால் அதைத் தொடர்ந்து செய்வது கேலிக்குரியது, பழிக்குரியது, பாவத்துக்குரியது. குற்றம் செய்த ஒருவர் திருந்தலாம். நீ உனது மைத்துணனது வியாபார நிலையத்தில் சென்று ஊக்கத்துடன் வேலை செய்தால் உனக்கும் உனது குடும்பத்திற்கும் உண்டான அவமானங்கள் யாவும் நீங்கிவிடும்”.

**‘‘உ**லகத்தைப் பொறுத்தவரை முதலில் மதிக்கப்படுவது பணம்தான். அதற்குப் பின்புதான் கல்வி, பதவி என்பன மதிக்கப்படுகின்றன. பொன்னம்பலம் என்ற நரியை உனக்குத் தெரியும்தானே. ஐந்து வருடங்களுக்கு முன்பு பெரும் தீயவன். அவன் செய்யாத தீயசெயல்களே இல்லை. மூன்று வருடங்களுக்கு முன்பு அவனது இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டுக்குச் சென்றனர். இப்போது அவன் பெருந்தனவந்தன். ஊரவர்கள் அவன் முன்பு செய்தவை யாவற்றையும் மறந்துவிட்டனர். இப்போ அவன்தான் கிராமத்தின் தலைவன். கோவில் தலைவன். விழாக்களின் தலைவன். ஒருவர் பணத்தைத் தேடினால் முன்புபட்ட வடுக்கள் யாவும்

மறைந்துவிடும். அதனால் பணத்தைத் தேடு" என்று ஆரூரன் சொன்னவன்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "மடியிலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு'' சபையோர்களே ஆரூரன் தொடர்ந்து நாதனுக்குச் சொன்னான், "முன்பு நான் படிக்கும் போது தமிழாசிரியரான பண்டிதர் சிற்றம்பலம் அவர்கள் சொல்வார், "பிள்ளைகளே, ஊக்கம் உடையவனுக்குத்தான் உலகில் உள்ள அத்தனை பொருட்களும் சொந்தமாகும். உனது மாமனின் வரலாற்றை எண்ணிப்பார். ஆரம்பத்தில் அவர் தனது தந்தையுடன் தெருவில் ஒரு சிறிய பெட்டிக் கடைவைத்திருந்தவர். இன்று ஐந்து பெரும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர். இதற்கு அவரது விடாமுயற்சியே காரணமாகும். எனது குடும்பத்தை எமது ஊரில் உள்ள பெரியதனவந்தக் குடும்பமாக்குவேன் என்று நினை. அந்த நினைவு உனது சோம்பலை அகற்றிவிடும். பேச்சளவில் தான் அறிவு, பதவி, புகழ் என்பன இருக்கும். செயலில் இருப்பது பணம்தான்".

**"உ**னது மகளுக்குத் திருமண வயது வந்துவிட்டது. யாராவது பெண்கேட்டு வந்தார்களா? பொன்னம்பலத்தின் மகள் படிக்கிறாள். அவளைத் திருமணம் செய்ய எத்தனை பேர் விரும்புகிறார்கள். பொன்னம்பலம் அவளை வெளிநாட்டுக்கு அனுப்பப் போகிறாராம். இதற்கும் காரணம் என்னவென்று சொல் பார்க்கலாம். பணம் தான் காரணம். எனது தாத்தா சொல்வார், "பேரா, ஊக்கத்துடன் உழைத்தால் நினைத்தவற்றையெல்லாம் அடையலாம். ஏழை தனவந்தனாகலாம். மூடன் அறிவாளியாகலாம். அரசன் திருமாலினால் அளக்கப்பெற்ற இந்த உலகம் முழுவதையும் அடையலாம். அதனால் ஊக்கத்துடன் உழைக்க ஆரம்பி" என்று ஆரூரன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

## 04

**இ**ன்பவதனி தனது உரையை நிறைவு செய்துவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்ததும் விழாவின் தலைவரான கதிரேசன் எழுந்து வந்து சபையோரை வணங்கிவிட்டுப் பேச ஆரம்பித்தார், "இன்று ஒரு புதியவரை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்துகிறேன். எல்லாத் துறைகளுக்கும் புதியவர்களது வருகை அத்தியாவசியமானது. உதாரணமாகச் சொல்வதானால் தமிழறிஞருக்கு எண்பது வயது. அவர் ஓய்வுபெற விரும்பிப் பல மாணவர்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார். இன்று அவரது மாணவர்களில் ஒருவரான சிவலிங்கம் என்ற மானை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். இதுதான் அவரது முதலாவது மேடை அவர் நன்றாகப் பேசுவார். இனிமையாகப் பாடுவார். பலதரப்பட்ட இலக்கியங்களைத் தமிழறிஞரின் உதவியுடன் கற்றவர். அவரைப் பேசவருமாறு அழைக்கிறேன்".

**சி**வலிங்கம் பட்டுவேட்டி கட்டி, பட்டுச் சால்வை அணிந்து, தலைப்பாகையுடன் வந்தபோது சபையில் ஒரு கலகலப்பு எழுந்தது. சிவலிங்கம் அமைதியாக வந்து தமிழறிஞரின் கால்களைத் தனது கரங்களால் பற்றிப் பிடித்து அழுதான். "அழவேண்டாம் சென்று பேசு. உனது பேச்சைக் கேட்டுச் சபையோர் வியப்படைய வேண்டும்" என்றார்.

**சி**வலிங்கம் மேடைக்கு வந்து சபையோரை வணங்கினான் பின், "சபையோர்களே, நீங்கள் இரகசியமாக முணுமுணுப்பது எனக்கு இடியோசை போலக் கேட்கிறது. நான் தமிழறிஞரின் மாணவன் அல்ல. அவரின் வேலைக்காரன். அவரது அடிமை. சிறுவயதில் எனது பெற்றோரை இழந்தமையால் எனது பாட்டியுடன் வளர்த்தேன். பதினைந்து வயது வரை ஊர்சுற்றித் திரித்தேன். பாட்டி என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்று தமிழறிஞரின் வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிட்டாள்".

**"த**மிழறிஞர் அன்பே உருவானவர். அதனால் அவரை விட்டு ஒருகணம் கூட என்னால் பிரிந்திருக்க முடியவில்லை. அவர் நான் சென்ற அன்று என்னை அழைத்துச் சொன்னார், "மகனே, நீ கற்க வேண்டிய வயதில் கற்கவில்லை. ஊரைச் சுற்றினாய் கல்வி கற்க வயது தடையில்லை. ஒருவர் இறக்கும் வரை கல்வி கற்க வேண்டும். ஒருவர் கற்ற கல்வி அவர் எடுக்கும் பிறவிகள் தோறும் அவருடன் சென்று அவரை முன்னேற்றும். எனக்கு எண்பது வயது இப்போதும் கற்றுக் கொண்டிருக்கிறேன். முதலில் எழுத்துக்களை அறிதல் வேண்டும். எழுத்துக்களை அறிந்தால் நூல்களை வாசிக்கலாம். வாசிப்பு ஒருவரைப் பூரணமாக்கும்" என்று சொல்லி எழுத்துக்களை எனக்குச் சொல்லித் தந்தார். பின் நான் வாசிக்க ஆரம்பித்தேன். விளங்காதவற்றைக் கேட்டுத்

தெரிந்து கொண்டேன். அவரிடம் வரும் கல்வியாளர்களுடன் சேர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்பேன்".

**"அ**வர் சில தினங்களுக்கு முன் அழைத்து, "நீ நன்றாகக் கற்றுவிட்டாய். பேச்சுத் திறனும் உள்ளது அதனால் திருக்குறள் மகாநாட்டில் நீ பேசு" எனக்குப் பிடித்த அந்நியாயமான ஆள்வினை உடைமை என்ற அதிகாரத்தைப் பற்றிப் பேசு" என்று கூறி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லித் தந்தார். அதைத்தான் பேசப்போகிறேன். அதில் குறைகள் குற்றங்கள் இருப்பின் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு முதலாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான். "அருமையுடைத்து என்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்''. சபையோர்களே, இச்செயலால் என்னால் வெல்ல முடியாது என்று ஒருபோதும் எண்ணக்கூடாது ஏனென்றால் எண்ணங்கள் தான் செயல்களாகின்றன. முடியாது என்று நினைத்தால் மூளை மரத்துச் செயலிழந்துவிடும். முடியும் என்று நினைத்தால் மூளை விருத்தியடைந்து உடலை செயலுக்குரியதாக்கும். அச் செயலானது முயற்சியை உருவாக்கிச் செயலைத் தூண்டும் என்று தமிழறிஞர் கூறியதை வேதவாக்காக எண்ணியதால் தான் நான் இன்று ஆயிரக்கணக்கானோர் கூடியுள்ள சபையின் முன்நிற்கிறேன்".

**"த**மிழறிஞர் படிக்கச் சொன்னபோது நான் சம்மதித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டேன். பின் நான் செல்லவில்லை. தமிழறிஞர் என்னைத் தேடி எனது வீட்டுக்கு வந்துவிட்டார். அவரைக் கண்டதும் எனது பாட்டி உணர்ச்சிவசப்பட்டு அழத்தொடங்கிவிட்டார். தமிழறிஞர் பாட்டியைத் தேற்றிவிட்டு, "நீ படிக்க வேண்டாம் என்னோடு கூட வந்திரு" என்று அழைத்து வந்தார். அவர் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது நான் கேட்டுக் கொண்டிருப்பேன். தினமும் கேட்பதால் அதில் ஓர் ஈர்பு வந்தது. அவர் சொன்னதை நினைத்ததும் என்னுள் உற்சாகம் பிறந்தது. அவர் சொல்வார், "மகனே, நீ செய்ய முடியாதென்று விட்ட செயலை இன்னொருவன் செய்கிறான் என்றால் நீ பலவீனன் என்றுதானே அர்த்தம். ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன் பயப்படலாகாது. துணிவுடன் முயன்றால் துணிவு செயலை வெற்றியடையவைக்கும். அதனால் முயற்சி செய்துபார் என்பார். அவர் அதற்காக ஒரு கதை சொன்னார், "ஒரு காட்டில் ஒரு குரங்கும் மானும் நண்பர்களாக இருந்தன. குரங்கு மரங்களில் ஏறி இலைகளைப் பிடுங்கிப் போடும் அதை மான் உண்ணும்.

**“ஒ**ரு நாள் குரங்கு சொன்னது, “நண்பா, எத்தனை நாட்களுக்கு நான் உனக்கு உதவி செய்வது. நீ மரம் ஏறிப் பழகினால் உனக்கு விரும்பியபோதெல்லாம் சாப்பிடலாம்” என்றது. மான் மரத்தில் ஏற முயன்றது முடியவில்லை. அதைப் பார்த்த குரங்கு சொன்னது, “நண்பா, செயற்கரிய செயல்கள் என்று எவையுமில்லை. முயன்றால் எதையும் செய்யலாம் என்றது. மான் ஊக்கத்துடன் முயன்று மரத்தில் ஏறிவிட்டது. அதன் பின் அதற்குக் குரங்கின் உதவி தேவைப்படவில்லை. இக் கதையைத் தினமும் மனதில் சொல்லி வந்தேன். ஊக்கம் மனதில் பெருகியது. முயற்சிசெய்தேன். இன்று உங்கள் முன் பேச வந்துள்ளேன். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம். சபையோர் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். சிலர் விசிலடித்தனர். அருமையான பேச்சு, “தமிழறிஞரின் மாணவன் என்பதை ஒத்துக் கொள்கிறோம் எனச் சபையோர் பலமாகக் கூறினர்.

**அ**டுத்துச் சிவலிங்கம் இரண்டாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினான், “வினைக்கண்வினை கெடல்ஓம்பல்; வினைக்குறை நீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு'', ‘‘சபையோர்களே, தமிழறிஞர் சொல்லித் தந்ததையே நான் சொல்கிறேன். ஒரு செயலைத் தொடங்கினால் அதை முடிக்காது அரைகுறையாகவிட்டவரை உலகம் கேலி செய்யும். அவர் இரக்கமில்லாதவராவார். செய்யும் தொழில் தான் தெய்வம் என்று எம் முன்னோர் கூறியுள்ளனர். தொழிலைத் தெய்வமாக்கி ஆயுதங்களைத் தெய்வங்களுக்குச் சமர்ப்பித்து வணங்கும் வழக்கம் சைவசமயத்தவர்களுக்கு உண்டு. நவராத்திரியின் கடைசி மூன்று தினங்களும் ஆயுதபூசை எனப்படும். ஒவ்வொருவரும் தாம்தாம் செய்யும் தொழிலுக்குரிய ஆயுதங்களைத் தெய்வங்களுக்குச் சமர்ப்பித்து ஆசிபெறுவது தொழிலைத் தெய்வமாகக் கருதி உள்ளன்போடும், பக்தியுடனும், ஊக்கத்துடனும் முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகவே தெய்வ நினைவு மனதில் இருந்தால் செய்யும் தொழிலுக்கு உதவியாகத் தெய்வம் வந்து சேரும். போதிய முயற்சியில்லாதவர்கள்தான் தான் செய்யும் தொழிலை இடையில் கைவிடுவர்”.

**“ஒ**ரு செயலைத் தொடங்கிவிட்டு அரைகுறையாக விட்டவர் நட்டமடைவார் ஊரவரின் கேலிக்கும் ஆளாவார். மாதவன் என்ற குரங்கிற்கு அதன் மனைவியின் தகப்பனார் சிறிய வீடு ஒன்றை வரதட்சனையாகக் கொடுத்தார். அது சிறிய வீடாக இருந்தபோதும் அனைத்து வசதிகளும் அதனுள் இருந்தன. மாதவன் அந்த வீட்டைப் பெருப்பிக்க விரும்பி அதை இடிக்க விரும்பினான். அப்போது அவனது மாமன் சொன்னார், “மருமகனே, இந்த வீட்டுக்கு என்ன குறை. எனது மூன்று பெண் பிள்ளைகளையும் கரைசேர்த்த இராசியான வீடு இது. இங்கு எனக்கு எந்தக்

குறையும் ஏற்பட்டதில்லை. இடம் பட வீடு எடேல் என்று ஔவையார் கூறியுள்ளார். அதனால் யோசித்துச் செய்யுங்கள்" என்றார்.

"**மா**மனாரின் சொல்லைக் கேளாது மாதவன் வீட்டை பெருப்பிப்பதற்காக ஒரு பகுதியை இடித்தான். அவனது நண்பனான வாகீசன் என்ற நரி மற்றவர்களை புகழ்ந்து தன் நிலையை மறக்கச் செய்துவிடும். வாகீசன் மாதவனுக்குச் சொன்னது, "நண்பா, இது பழைய வீடு ஐம்பது வருடங்களுக்கு முன்பு கட்டியது. அதனால் அதை இடித்து தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப கட்டு. நான் உதவி செய்கிறேன் என்றது. வாகீசனின் பேச்சை நம்பிய மாதவன் வீட்டின் கூரையைக் கழற்றி விட்டு அதன் ஒரு பகுதிச் சுவரை இடித்தான்".

"**தொ**ழிலாளர்கள் மாதவன் ஒழுங்காகப் பணத்தைக் கொடாமையால் வேலைக்குவரவில்லை. உதவி செய்வதாகக் கூறிய வாகீசன் வேறு ஓர் ஊருக்குச் சென்றுவிட்டான். மழைக்காலம் வந்து வீட்டில் இருக்க முடியாமையால் மாதவனின் குடும்பம் கோவில் மடத்தில் தங்கியது. அப்போது மனைவியின் தந்தை வந்து சொன்னார், "எந்தச் செயலைச் செய்தாலும் நன்கு திட்டமிட்டு என்னால் இதைச் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். தன்னை மட்டும் நம்பித்தான் தொழிலைச் செய்ய வேண்டுமே தவிர வேறு யாரையும் நம்பக்கூடாது. இப்போ இடைநடுவில் விட்டதால் எவ்வளவு நட்டம். இருக்க வீடு இல்லை. ஊரவர் கேலி செய்கின்றனர். அது எனக்கு அவமானமாக இருக்கிறது" என்று அழுதார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், "தாளாண்மை என்னும் தகைமைக் கண் தங்கிற்றே. வேளாண்மை என்னும் செருக்கு. சபையோர்களே, பிறருக்கு உதவி செய்ய வேண்டும். துன்பப்படுவோரின் துன்பங்களை நீக்க வேண்டும் என்ற மேலான எண்ணங்களை உடையவர்கள் விடாமுயற்சியுடையவர்களாகவும், மனவுறுதியும், ஊக்கமும் உடையவர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்குத் தான் மற்றவர்கள்படும் துன்பங்கள் தெரியும். வாகீசன் தந்திரமுள்ளவன். அவனது பரம்பரையினர் பிறரை ஏமாற்றிப் பிழைப்பவர்கள். இது தெரியாமல் நீங்கள் அவனது ஏமாற்றுப் பேச்சை நம்பி ஏமாந்துவிட்டீர்கள். இப்போது அவனும் ஊரவருடன் சேர்ந்து நீங்கள் ஆண்மை இல்லாதவன், சோம்பேறி, முழு முட்டாள் என்கிறான். அவனது குணத்தை அறியாது அவனோடு பல வருடங்களாக நண்பனாக இருக்கிறீர்கள். இனியாவது திருந்தி வாழுங்கள்" என்று மாதவனின்

மாமன் மிக்க துயரத்துடன் மாதவனுக்குச் சொன்னார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், "தான் ஆண்மை இல்லாதான் வேளதண்மை பேடிகை வான் ஆண்மை போலக்கெடும்" மாதவனின் மாமன் தொடர்ந்து சொன்னார், "மருமகனே, ஊக்கமுடையவன் பிறர் எதைக் கேட்டாலும் மகிழ்வுடன் கொடுப்பான். ஏனென்றால் அவனால் எதையும் தேடிப்பெற்றுக் கொள்ள முடியும். நான் உங்களது நிலையைப் பற்றி எனது நண்பனான செந்தூரன் என்ற எருதுக்குச் சொன்னேன். அவன் வீட்டின் கூரையை உடனே போட்டுத்தருவதாகக் கூறியுள்ளான். அவன் நம்பிக்கையானவன். சொன்ன சொல் தவறாதவன். விடாமுயற்சி உடையவன். பலருக்கு உதவிகள் செய்துள்ளான்".

"**மு**யற்சியில்லாத சோம்பேறி தான் பெரிய செயல் வீரன் என்ற நினைப்புடன் தான் பிறருக்கு உதவிகள் செய்வது போல நடிப்பானே தவிர உதவிகள் எதுவும் செய்யமாட்டான். உங்களது நண்பன் வாகீசன் அப்படியானவன். அவன் யாருக்காவது ஏதாவது உதவி செய்ததாக நான் கேள்விப்படவில்லை. ஏமாற்றிப் பிழைப்பவன். அவன் ஒரு பேடி. பேடிகள் தமது கைகளில் வாள்களை எடுத்துத் தாம் மிகுந்த பலசாலி என சத்தமிட்டுக் கூறுவர். உண்மையான வீரனைக் கண்டால் ஓடி ஒளிந்துவிடுவர். இதை நீங்கள் படிக்கும் காலத்தில் ஆசிரியர் சொல்லித் தரவில்லையா…?" என்று கேட்டார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான். "இன்பம் விழையான், வினை விழைவான் தன் கேரிக் துன்பம் துடைத்து ஊன்றும் தூண்'', ''சபையோர்களே, மாதவனின் மாமன் தொடர்ந்து சொன்னார், "மருமகனே, முயல் பிடிக்கிற நாயை மூஞ்சையிலே தெரிந்து கொள்ளலாம் என்பர். ஓர் உதவி செய்பவன் தான் பொருளைத் தேடிச் சேமிக்கமாட்டான். பொருட்களால் வரும் இன்பங்களை பெரிதாக நினைக்கமாட்டான். அப்படியானவன் தான் சொன்ன சொல்லை நிறைவேற்றுவதையே விரும்புவான். அப்படியானவன் தனது சுற்றத்தவர்களைத் தாங்கும் தூணைப் போன்றவன். செந்தூரன் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட சுமார் ஐந்நூறு குடும்பங்களுக்குப் பத்து நாட்கள் மூன்று வேளையும் உணவு கொடுத்தவன். உடைகளையும் கொடுத்தவன். அவன் தனக்கெனச் சேமிப்பதில்லை. தேவைகளேற்படும் போது கடவுள் தனக்கு

உதவுகிறார் என்றே சொல்வான். அவனைப் போன்றவர்களைத் தான் நம்பவேண்டும்" என்று சொன்னவர்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், "முயற்றி திருவினை ஆக்கும், முயற்றிண்மை இன்மை புகுத்திவிடும்'', ''சபையோர்களே, மாதவனின் மாமன் தமிழறிஞரின் அபிமானி. அவர் தினமும் ஒரு மணி நேரமாவது தமிழறிஞருடன் இருப்பார். இலக்கியங்கள் பற்றிக் கலந்துரையாடுவார். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பர். அதுபோலத் தமிழறிஞரோடு கூட இருந்தாலே அறிவு பொங்கிப் பெருகும். பலர் அவரிடம் வந்து ஆலோசனை கேட்பர். அவர் தொடர்ந்து சொன்னார், "மருமகனே, ஒருவரை உயர்த்துவது முயற்சி, ஒருவருக்கு புகழ் வருவது அவரது முயற்சியால் தான். செல்வம் சேர்வதும் முயற்சியால் தான். அதனால் தான் பெரியவர்கள் முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்றனர். செந்தூரன் ஒரு கூலித்தொழிலாளியின் மகன். அவன் இளமைக்காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டவன். சாப்பாட்டுக்கே கஷ்டம் அந்த நிலையில் அவன் பண்ணையாரிடம் பத்து ஏக்கர் வயலைக் குத்தகைக்குப் பெற்று நெல் விதைத்தான். வரம்புகளில் மரக்கறிச் செடிகளை நட்டான். இரவும் பகலும் அவன் வயலில் உழைத்தமையால் பெருவிளைச்சலைப் பெற்றான். மார்கழி, தை மாதங்களில் மரக்கறிகள் குறைவு அதனால் அவனின் வயலின் வரம்புகளில் நின்ற காய்கறிச் செடிகள் நன்கு காய்த்தமையால் கூடிய விலைக்குக் காய்கறிகளை விற்றான்".

**"அ**ந்த வருடம் விளைந்த நெல்லின் இலாபத்தால் வயலை வாங்கினான். இவ்வாறு உழைத்து இரண்டு மூன்று வருடங்களில் நூறு ஏக்கர் வயலையும், பெரியதொரு தென்னந்தோப்பையும் வாங்கினான். இப்போ அவன் பெரும் கோடீஸ்வரன். அதனால் அவன் நினைத்தவற்றை எல்லாம் செய்கிறான். பாடசாலைப் பிள்ளைகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும் உணவு கொடுப்பதற்காக ஐம்பது ஏக்கர் வயலை வாங்கி நெல்லைப் பயிரிடுகிறான். செய்யும் தொழில் தான் தெய்வம் என்று உணர்ந்தவன். தெய்வத்தைப் போலத் தொழிலை மதிப்பான். அதனால் எந்தக் குறையும் அவனுக்கு வரத் தெய்வம் விடாது" என்று சொன்னவர்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஏழாவது குறளைப் பாடிவிட்டு, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், "மடிஉளாள் மாமுகடி என்ப மடியிலான் தாள் உளாள் தாமரையினாள்'', ''சபையோர்களே, தொடர்ந்து மாதவனின் மாமன் சொன்னார், "மருமகனே,

செய்யும் தொழில்தான் தெய்வம் என்று பெரியவர்கள் கூறியதை வள்ளுவர் மிக மிகச் சிறப்பாகக் கூறுகிறார். சோம்பல் உள்ளவனோடு முதேவி கூடி வாழ்கிறாள். சோம்பல் இல்லாதவனோடு செல்வத்துக்குரிய தெய்வமான திருமகள் வாழ்கிறாள். அவனுக்குத் திருமகள் செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பாள். மூதேவி தன்னோடு சேர்ந்தவனுக்குத் தரித்திரத்தையே தொடர்ந்து கொடுப்பாள்".

**"இ**ப்போது செந்தூரன் இரண்டு கப்பல்கள் வாங்கி, எமது வனத்தில் விளையும் பொருட்களை வாங்கிச் சென்று பிற நாடுகளில் விற்றுவிட்டு, அங்குள்ள அரிய பொருட்களை வாங்கி வந்து இங்கு விற்கிறான். அவனிடம் நூற்றுக்குமேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். உங்களது நண்பனான வாகீசனைப் பாருங்கள் அவன் பிறரை ஏமாற்றிப் பிழைக்கிறான். அவனை யாரும் நம்புவதில்லை. தொழிலும் செய்வதில்லை. அடிக்கடி அவனைக் காவல்துறையினர் கைது செய்து விசாரிக்கின்றனர். திரவிய வனத்தில் ஏதாவது களவு போனால் முதலில் நினைப்பது அவனைத் தான். அப்படியானவனின் நட்பை இனிமேலாவது விட்டு விடுங்கள். இல்லாவிட்டால் அவனோடு சேர்ந்து நீங்களும் களவு எடுக்கிறீர்கள் என்பார்கள்" என்று கூறினார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினான், "பொறி இன்மை யார்க்கும் பழிஅன்று; அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி" "சபையோர்களே, ஊழ்வினை காரணமாக இப்பிறவியில் இல்லாது இருப்பது பழியல்ல. செல்வம் தேடும் வழிகளை அறிவால் அறிந்து எந்தத் தொழிலைச் செய்தால் செல்வம் வந்தடையும் என்ற நினைப்போடு முயற்சி செய்தால் நினைத் செல்வங்கள் யாவும் வந்துசேரும் என்று நினைக்காது இருத்தல் தான் பழியாகும். முற்பிறப்பில் ஒருவர் செய்த புண்ணிய பலனால் தான் இப்பிறப்புச் சிறப்பாக அமையும் என்றில்லை. இறைவன் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான உடலையும், பலமான அங்கங்களையும் தந்துள்ளார். அறிவையும் தந்துள்ளார். தன்னுடைய அறிவைப் பயன்படுத்த வேண்டும். தனக்குப் போதிய அறிவில்லாத இடத்து அறிவுள்ளவர்களிடம் சென்று ஆலோசனையைப் பெறவேண்டும். அப்படிப் பெற்று முயற்சி செய்தால் நாம் விரும்பிய செல்வங்கள் அனைத்தையும் பெறலாம்".

**ரா**ணி என்ற குயில் பிறவியிலிருந்து குருடானது. அதனால் அதன் பெற்றோர் மிகவும் வருந்தினர். ராணியின் மாமனான வதனன் பெரும் சங்கீத வித்துவான். அவன் கச்சேரிக்குப் போகும்போதெல்லாம் ராணியையும் அழைத்துச் செல்வான். வீட்டில் அவளுக்கு முறைப்படி சங்கீதம் கற்பித்தான். நாளடைவில் அவள் கச்சேரி செய்யும் தகுதியை அடைந்தாள். அவளது

பாடலின் இனிமையை உணர்ந்த ஒரு சினிமா நிறுவனம் தனது படத்திற்கான பாடலை அவளைக் கொண்டு பாடுவித்தது. அப்பாடல்கள் மிகவும் பிரசித்தி பெற்றமையால் பல சினிமா நிறுவனங்கள் அவளது பாடலைத் தமது படங்களில் சேர்த்தன. இப்போது ராணி மிகவும் பிரபலமான பாடகி. பெரும் பணக்காரி.

**“ச**பையோர்களே, விதியை மதியால் மாற்றலாம் என்று பெரியவர்கள் பொழுது போக்கிற்காகச் சொல்லவில்லை. அவர்களின் வாக்கு வேதவாக்காகும். ஒருவர் விதி என்று நினைத்துத் தனக்கு வரும் துன்பங்களை அனுபவிப்பது விதியல்ல. அந்தத் துன்பங்களை எந்த வழியால் நீக்கலாம் என்று அறிந்து அதை நீக்குவதே விதியாகும். ராணியின் மாமனார் அவளின் குரல் வளத்தை நல்ல முறையில் பயன்படுத்தச் சொன்னதால் இன்று அவள் சகலராலும் மதிக்கத்தக்க ஒரு பிரமுகராக வாழகிறாள். அதனால் வரும் துன்பங்களை விதி என்று எண்ணாது, எப்படி அத்துன்பத்தை நீக்குவது என்று அறிந்தால் அவற்றை நீக்கலாம்” என்று கூறிச் சிவலிங்கம் தனது உரையை நிறைவு செய்தார்.

**சி**வலிங்கம் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினான், “தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்”, “சபையோர்களே, தெய்வத்தால் எமக்குத் தேவையான பொருட்களைத் தரமுடியாது. உயிர்கள் அனைத்திற்கும் தேவையான பொருட்களைத் தெய்வம் பூமி எங்கும் படைத்துள்ளது என்பதை உணர்ந்து ஊக்கத்துடன் முயற்சி செய்து தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக உணவை எடுத்துக் கொண்டால் இறைவனால் ஆயிரக்கணக்கான உணவுகள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தேவையானவற்றை நாம் தான் முயன்று பெறல் வேண்டும். ஒருவருக்குப் பிட்டுப் பிடிக்கும், இன்னொருவருக்கும் தோசை பிடிக்கும், வேறு ஒருவருக்கு இட்டலி பிடிக்கும். இவற்றை ஒவ்வொருவரினதும் விருப்புக்கேற்பச் சமைத்துக் கொடுப்பதா இறைவனின் தொழில். உலகில் கோடிக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு உயிரும் தான் விரும்பியது கிடைத்ததும் வேறொன்னைக் கேட்கும். அது கிடைத்ததும் பிறிதொன்றைக் கேட்கும். அதனால் இறைவன் எதையும் செய்து தரார். அருளைத் தருவார். முயற்சி செய்து இறைவனின் அருளால் அவர் படைத்தவற்றை ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளல் வேண்டும். அவரவரின் முயற்சிக்கேற்ற பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்” என்று கூறிச் சிவலிங்கம் தனது உரையை நிறைவு செய்தார்.

**சி**வலிங்கம் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், “உழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித் தாழாது

உஞற்றுபவர்", "சபையோர்களே, விதி என்பது ஒவ்வொருவரும் செய்யும் செயல்களின் பலன்கள் ஆகும். ஒருவர் இன்னொருவரிடம் கடன் வாங்கினால் கடனாளி. அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் உழைப்பாளி. விதி என்பது ஒருவரோடு நிரந்தரமாகத் தங்கும் பொருளல்ல. ஊக்கத்துடன் முயற்சி செய்யச் செய்ய விதியின் தாக்கம் குறைந்து குறைந்து நாளடைவில் அற்றுப்போய்விடும்".

**"சோ**ர்வில்லாத முயற்சி விதியை வெல்லும் தன்மையை உண்டாக்கும். ராணி தான் குருடாகப் பிறந்துவிட்டேன் என்று எந்தநாளும் துன்பப்படுவாள். அப்போது அவளது மாமனார் சொல்வார், "மருமகளே, வருந்தாதே. விதியென்பது மாற்றக் கூடிய நாணயத்தைப் போன்றது. அதை மாற்றுவது கடினம் தான். அதை மாற்ற அயராது முயற்சி செய்தல் வேண்டும். எறும்பு ஊரக் கல்லும் குழியும் என்பார்கள். சிறிதாகப் பாயும் ஆறும் பெரிய மரங்களையும் வேரோடு சாய்க்கும். அதனால் சங்கீதத்தைக் கல். உனது வைத்தியத்திற்குத் தேவையான பணத்தைப் பெறுவாய்" என்றவர்".

**"அ**ன்றிலிருந்து ராணி சோர்வில்லாது உழைத்தாள். இன்று அவள் பிரபலமான பாடகி. வெளிநாட்டுக்குச் சென்று கண் மாற்றுச் சத்திரசிகிச்சை செய்து, தற்போது கண்களைப் பெற்றுவிட்டாள். முயற்சி தான் கோளையை வீரனாக்குவது. மூடனை மேதாவியாக்குவது என்று தமிழறிஞர் கூறியதைக் கேட்டு அயராது படித்தேன். அவரின் பேச்சை கேட்டேன். அதனால் இன்று உங்கள் முன் பேசியுள்ளேன்" என்று கூறிச் சிவலிங்கம் தனது உரையை நிறைவு செய்தார்.

**சி**வலிங்கம் பேசி முடித்ததும் சபையோர் கைகளைத் தட்டி ஆரவாரித்தனர். தமிழறிஞர் மேடைக்கு வந்து சில கணங்கள் தடுமாறினார். பின், "இவ்வளவு சிறப்பாகவும், ஆழமாகவும் சிவலிங்கம் பேசுவான் என நான் எதிர்பார்க்கவில்லை. அதற்குக் காரணம் அவனது முயற்சிதான். இப்போது அவனும் ஓர் அறிஞனாகிவிட்டான் என்று கூறிக் கரங்குவித்து விடை பெற்றார் தமிழறிஞர்.

## 05

**த**மிழறிஞர் விடை பெற்றதும் மேடைக்கு வந்த மகாநாட்டின் தலைவரான கதிரேசன் சபையோரை வணங்கினார். பின் சபையோர்களே, சிவலிங்கத்தின் பேச்சு தரமாகவும், இனிமையாகவும், பொருள் பொதித்ததாகவும் இருந்ததாகச் சபையோர் பலர் குறுஞ் செய்திகள் மூலம் அறிவித்ததோடு அவரைத் தொடர்ந்து பேச அனுமதிக்குமாறு கோரியுள்ளனர். சிவலிங்கத்தை மகாநாட்டில் தமிழறிஞர் கூறியபோது பல கல்விமான்கள் கருத்துக் கூறவில்லை. பாடசாலையில் கற்றுப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பட்டதாரியான பின்பு மேலும் தொடர்ந்து படித்து பட்டங்கள் பெற்றவர்கள் தான் அறிவாளிகள் என்று இன்றும் சிலர் நம்புகின்றனர். அது பொய் என்று சிவலிங்கம் நிரூபித்துள்ளான். கல்வி வேறு, அறிவு வேறு. பாடசாலைக்குச் செல்லாத பலர் அரிய பல கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்துள்ளனர். கவிதைகளை எழுதியுள்ளனர். தமிழையும், சைவசமயத்தையும் வளர்த்துள்ளனர். தமிழறிஞரின் நிழல் பட்டாலே ஒருவர் பெரும் அறிஞராகிவிடுவார். சிவலிங்கம் அவருடன் சுமார் ஏழு வருடங்கள் கூட இருக்கிறான். அவனிடம் சமயம், இலக்கியம் சம்பந்தமான எத்தக் கேள்வியைக் கேட்டாலும் ஆதாரங்களுடன் பதிலளிப்பான். இன்று யாரும் எதிர்பாராதபடி பேசினான். அதனால் அடுத்த அதிகாரமான இடுக்கண் அழியாமை என்ற அதிகாரத்தில் உள்ள பாக்களுக்கான உரையையும், விளக்கத்தையும், கதைகளையும் கூறுமாறு சபையோர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறி விடைபெற்றார் கதிரேசன்.

**சி**வலிங்கம் மேடைக்கு வந்தபோது சபையோர் கைதட்டி ஆரவாரஞ் செய்தனர். சிவலிங்கம் உணர்ச்சிவசப்பட்டுச் சில நிமிடங்கள் எதுவும் பேசாது நின்றான். பின் கைகூப்பித் தொழுதான், ''சபையோர்களே, எனது பேச்சை நீங்கள் ஏற்றுக் கொண்டமையால் தான் மறுபடியும் பேசுமாறு கேட்டீர்கள். மிக்க நன்றி. பாடசாலைக்குச் செல்லாது தெருக்களில் சுற்றித் திரிந்த என்னை அழைத்து வந்து தனது வீட்டில் இருத்தி உற்சாகப்படுத்தி இந்த நிலைக்கு உயர்த்திய தமிழறிஞரை நான் எடுக்கும் பிறப்புக்கள் தோறும் மறக்கமாட்டேன். அவருக்கு அடிமையாகவே வாழ்வேன்'' அவனால் பேசமுடியவில்லை. விம்மினான்.

**சி**ல கணங்கள் கழித்து, ''சபையோர்களே, எனது பேச்சை விரும்பியமையால் தான் மறுபடியும் பேசுமாறு கேட்டீர்கள் மிக்க நன்றி. இன்று நான் இடுக்கண் அழியாமை என்ற அதிகாரத்தைப் பற்றி உரையாற்றவுள்ளேன். அதன் முதல் குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறுகிறேன், ''இடுக்கண் வருங்கால் நருக; அதனை அடுத்துஊர்வது அ∴து ஒப்பது இல்'', ''சபையோர்களே, வாழ்க்கையின் பெரும் பகுதி துன்பமானது. அதில் சில பகுதிகள் தாங்க முடியாத துன்பங்களைக் கொண்டது. அதனால்

துன்பங்கள் வருவது இயல்பானது என்று தெரிந்து கொண்டால் வரும் துன்பத்தை இன்பமாய் மாற்றும் வழிகளைப் பின்பற்ற வேண்டும். வந்த துன்பத்தை நினைத்துத் துன்பப்பட்டு அழுது கொண்டிருந்தால் துன்பம் கூடுமே தவிரக் குறையாது. அதனால் பெரியவர்கள் துன்பங்கள் வரும் போது சிரியுங்கள். சிரித்தால் வந்த துன்பங்கள் சென்று விடும் என்று கூறியுள்ளனர்''.

''**இ**ன்பமோதுன்பமோ நிரந்தரமானதல்ல. காலையில் வரும் துன்பம் மாலையில் மறைந்துவிடலாம். அதற்காக வருந்தினால் மனமும் உடலும் சோர்ந்துவிடும். அந்தச் சோர்வை நீக்க வேண்டுமானால் மகிழ்வுடன் சிரிக்க வேண்டும். ராணி எனது நண்பனின் பெண். இனிமையாகப் பாடுவாள். அவளுக்குக் கண் தெரியாது என்பதை அறிந்த நான் பல நாட்களாகத் துன்பப்பட்டேன். கடவுளைத் திட்டினேன். அதை அறிந்த அவள் சொன்னாள், ''மாமா அடுத்தவர் ஒருவர் துன்பப்பட்டால் அவருக்கு ஆறுதல் கூறலாகாது, பரிதாபப்படவும் கூடாது. அத்துன்பத்தை அவர்கள் உணராதவாறு சிரித்துக் கதைத்தல் வேண்டும். அவர்கள் ஒரு துறையில் மேலானவராக இருந்தால் அவரை ஊக்குவிக்க வேண்டும். எம்மவர் அவ்வாறு செய்யாது பரிதாபப்படுகின்றனர், தமது கற்பனைக்கேற்றவாறு இரக்கப்படுகின்றனர், விதியென்கின்றனர். ஆனால் திருமூலர் என்ற பெரியவர் குறைகளுக்கான காரணம் பெற்றோரின் தவறான நடத்தை என்கிறார்,

''**யா**ருக்குத் துன்பமில்லை. சகல வளங்களுடனும் நாட்டை ஆண்ட பேரரசர்களுக்கே பல குறைகள் இருந்தனவென்று சரித்திரம் கூறுகிறது. துன்பத்தைத் துன்பத்தால் போக்க முடியாது. அப்படிப் போக்க நினைப்பது தீயைத் தீயால் அணைப்பதைப் போன்றது. என்று எனது மாமா எனக்குக் கூறி என்னைத் தைரியமான பெண்ணாக்கினார். துன்பம் வரும்போது எமக்கு முன் உண்டான இன்பமான நினைவுகளை எண்ணிப் பூரணமாக மகிழ்ந்து சிரிக்க வேண்டும். அப்படிச் சிரித்துத்தான் நான் எனக்கு வந்த துன்பங்களை நீங்கினேன்'' என்றவள். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், ''வெள்ளத்து அணைய இடும்பை; அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்'', ''சபையோர்களே, ராணி தொடர்ந்து சொன்னாள், ''மாமா, எதுவும் இலகுவானது என்னால் அதைச் செய்ய முடியும் என்று நினைத்தால் செய்து முடித்துவிடலாம். கடினமானது செய்வது சிரமமானது என்று நினைத்தால் அச் செயலைச் செய்யத்தொடங்கவே முடியாது. மாமாவின் தைரியமான வார்த்தைகள் தான் என்னை இந்தளவுக்கு உயர்த்தின அவர் எப்பொழுதும் செயல்களை மிகமிக எளிமையானவை என்றே சொல்வார். "ராணி உனது குரல் மிகவும் இனிமையானது. அது கடவுள் தந்த வரம் என்று எண்ணிப் படி. உன்னை வெல்ல

யாராலும் முடியாது என்பார். அந்த வார்த்தைகள் எப்போதும் எனது மனதில் ஒலித்துக் கொண்டிருக்கும். அதனால் துன்பங்களை நான் துன்பமாகக் கொள்வதில்லை. அதை நீக்க முடியும் என்று நினைப்பேன். அந்த நினைவு வந்த துன்பங்களை நீக்கிவிடும். அதனால் தான் நான் ஓர் உலகப் பிரசித்தி பெற்ற பாடகியாக முடிந்தது".

"**நா**ன் குருடி. என்னால் இயங்க முடியாது என்று நினைத்திருந்தால் இந்த நிலையை என்னால் அடைய முடியுமா? கண்களை விட மனம் இனிமையானது, உறுதியானது, தைரியம் மிக்கது. அதனால் எதையும் அடைய முடியும். மாமா ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்வார். அவர் சொன்னவை எனது மனதுள் படமாக ஓடும். ஒரு காதலனும், காதலியும் நேரில் கண்டு கதைப்பதை விட முன்பு கதைத்துச் சிரித்தவையை நினைப்பது மேலான இன்பத்தைத் தரும் என்று மாமா சொல்வார். அது உண்மை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். கண்பார்வையுள்ளவர்களும் நடந்த இன்பமான நினைவுகளை எண்ணி மகிழ்வர் என்று மாமா கூறுவர். எனக்கு வந்தது பெரும் துன்பம் அதைப் போக்குவதற்கு முயற்சியும், பயிற்சியும், ஊக்கமும் தேவை என்று மாமா கூறுவார். அவரது தளர்வில்லாத சொற்கள் தான் எனது துன்பங்களைப் போக்கின" என்று சொல்வாள். அவளது பேச்சு எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. முயற்சியை அதிகரிக்கச் செய்தது. அதனால் தான் நான் இன்று ஒரு பேச்சாளனானேன்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், "இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅதவர்", "சபையோர்களே, ராணி அதிபுத்திசாலி, அவள் சொன்னாள், "மாமா, துன்பங்கள் வாழ்வில் அடிக்கடி வரும். அது ஏன் வருகிறது என்று சிந்தித்துப் பார்த்தால் அது சம்பந்தப்பட்டவர்களால் தான் வருகிறது. ஒவ்வொரு செயலையும் நன்கு ஆராய்ந்து செய்தல் வேண்டும். செயலில் தவறேற்பட்டால்தான் துன்பங்கள் வரும். துன்பங்கள் பலவிதமான கஷ்டங்களைக்க கொடுக்கும். இதற்குக் காரணகர்த்தா பிறரில்லை, நான்தான் என்று தெரிந்தவர்கள் வந்த துன்பத்திற்குத் துன்பத்தை உண்டாக்கிவிடுவர்".

"**எ**னது தாயாரின் சகோதரியான மாதவி பிறரை எவ்வேளையிலும் பரிகசித்துக் கொண்டே இருப்பாள். அவளுக்கு என்னைப் பிடிக்காது. ஓயாது ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பாள். ஒருநாள் மாமா எனக்கு ஒரு கர்நாடக சங்கீதப் பாடலைப் பாடிக்காட்டி அதைப் பாடும்படி சொன்னார். அது ஒரு கடினமான பாடல். மிகவும் சிரமப்பட்டேன். அதைக்கண்ட மாதவி

சொன்னாள், “ஐயா, உங்களது செயல் கல்லில் நார் உரிப்பதைப்போல இருக்கிறது. ஏற்கனவே அக்காவுக்குப் பாரமாக இருக்கிறாள். அவளுக்குப் படிப்புத் தேவையா…? நாய் ஊழையிட்டது போல இருக்கிறது” என்றாள்.

“**மா**மாவுக்குச் சரியான கோபம் வந்துவிட்டது. அவர் கண்டபடி ஏசிவிட்டு, “ராணி, தனது குடும்பத்திற்கு மட்டுமல்ல ஏழை எளியவர்கள் அனைவருக்கும் உதவுவாள். நீங்களும் அவளிடம் கைநீட்டுவீர்கள்” என்றார். அது அவளுக்குக் கோபத்தை அதிகரிக்கப் பண்ணியபோதும் அவள் அம்மாவுக்குப் பயந்து பேசாமச் சென்றுவிட்டாள். அவள் சென்றபின் மாமா சொன்னார், “ராணி, நான் சொன்னதை நிறைவேற்றுவாய். நீ வரும் துன்பங்களுக்கே துன்பத்தைக் கொடுக்கக் கூடியவள் என்றவர். அவர் சொன்னதுபோல நான் ஏழைகளுக்கு உதவி செய்கிறேன். கண்ணில் குறைபாடு உள்ளவர்களுக்குத் தகுந்த வைத்தியம் செய்கிறேன். மனவுறுதியும், ஊக்கமும், உயர்ந்த எண்ணங்களையும் உடையவர்களைத் துன்பங்கள் நெருங்கினால் அவர்கள் அத் துன்பத்திற்குத் துன்பங்களைச் செய்வார்கள்” என்று கூறினாள் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், “மடுத்தவாய் எல்லாம் பகடு அன்னான் வற்ற இடுக்கண் இடர் பாடுஉடைத்து”, “சபையோர்களே, தனது தகப்பன் தனக்காகப் பெருமளவு பணம் செலவு செய்து செய்து கொண்டிருப்பதைப் பார்க்க ராணிக்கு கவலையாக இருந்தது. அவளது வைத்தியச் செலவுக்காக அவர்படும் வேதனையை அவளால் சகிக்க முடியவில்லை. அதனால் சொன்னாள், “அப்பா, எனது நோய் குணமாகாது என்று பல வைத்தியர்கள் கூறிய பின்பும் புதுப்புது வைத்தியர்களிடம் அழைத்துச் செல்கிறீர்கள். அதற்காகப் பெருந்தொகைப் பணத்தையும் செலவு செய்கிறீர்கள். காய்க்காத மரத்தை வெட்டி வீசிவிடுங்கள். பால் கறக்காத பசுவைக் கூடக் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்றுவிடுவார்கள். அப்படி இருக்கக் குணமாக்க முடியாத நோய்க்கு ஏன் தொடர்ந்து செலவு செய்கிறீர்கள். வேண்டாம் அப்பா. நான் இனிமேல் வைத்தியர்களிடம் வரமாட்டேன்” என்றாள்.

“**அ**ம்மா, குணப்படும் என்று ஒரு சில வைத்தியர்கள் கூறுகிறார்கள். நான் அதை நம்புகிறேன். கடவுள் கருணை மிக்கவர். அவர் கட்டாயம் குணப்படுத்துவார். உனது மாமனார் நீ பெரும் சங்கீத வித்தகியாவாய் என்று தினமும் கூறுகிறார். அதை நம்பித்தான் நான் என்னைப் பொறுத்தவரை கடவுள் நம்பிக்கையை இழந்தவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைய முடியாது.

குடும்பம் என்ற வண்டிக்குத் தந்தை தான் எருது. எருதானது தடைப்பட்ட இடங்களை எல்லாம் தாண்டி வண்டியை இழுத்துச் செல்வது போல விடாமுயற்சியுடையவர்கள் ஒரு செயலில் வெற்றியடையும் வரை ஓயமாட்டார்கள். விடாது ஊக்கத்துடன் முயன்றால் வரும் துன்பங்கள் துன்பப்பட்டு அவனை விட்டு விலகிச் சென்றுவிடும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் முழுமையாக நம்புகிறேன். நீ கவலைப்படாது இரு" என்று சொன்னார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினான்", "அடுக்கிவரினும் அழிவு இலான் உற்ற இடுக்கண் இடுக்கண்படும்", "சபையோர்களே, ராணியின் தந்தை கூறிய போதும் அவளது மனம் சமாதானமடையவில்லை. மிகுந்த வேதனையை அவளது முகம் காட்டியது. அதனால் அவர் சொன்னார், "மகளே, உனக்கு ஒருபோதும் துன்பம் ஏற்படக்கூடாது. எப்பொழுதும் நீ மகிழ்வுடன் இருத்தல் வேண்டும். இதைதான் நான் விரும்புகிறேன். நீ கெட்டிக்காரி, அதிபுத்திசாலி. ஆசிரியர் சொல்வதை முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடியவள். உனது மாமனாருடன் நீ கச்சேரி செய்யும் போது எல்லோரும் அதை ரசித்துக் கேட்டுப் பாராட்டுவதை நீ மறந்துவிட்டாயா…? அப்படி அவர்கள் சொல்லும் போது எனக்கு வரும் துன்பங்கள் யாவும் நீங்கிவிடும். நான் ஒரு சிறந்த பாடகியின் தந்தை என்ற பெருமை எனது மனதில் பெரும் மகிழ்ச்சியை உண்டுபண்ணும். இதை விட எனக்கு வேறு என்ன வேண்டும். எனக்கு அடுக்கடுக்காகத் துன்பங்கள் பலவும் வந்து சேர்கின்றன. அதைக் கண்டு நான் அஞ்சவும் இல்லை. மனம் கலங்கவும் இல்லை. ஊக்கத்துடன் அதை எதிர்த்துப் போராடுகிறேன். அதனால் வரும் துன்பங்களை நான் இலகுவாக நீக்கிவிடுகிறேன். மிக விரைவில் நீ பெரிய பாடகியாகிவிடுவாய். இலட்சக்கணக்கில் சம்பாதிக்கப் போகிறாய் என்ற எண்ணம் எனது மனதில் நிரந்தரமாகத் தங்கிவிட்டது. அதனால் எனக்கு வரும் துன்பங்களையிட்டு நான் கவலைப்படுவதில்லை. அதற்காக ஏன் கவலைபடுகிறாய். கவலை தான் சகலவிதமான உபத்திரவங்களுக்குமான விதை. கவலை வந்தால் மனம் மரத்துவிடும். எதையும் நினைக்கவோ, செய்யவோ முடியாது. நம்பிக்கை மனதைவிட்டு அகன்றுவிடும்".

**"அ**தனால் கவலைப்படாது மகிழ்ச்சியாக இரு. நான் ஒரு பிரபலமான பாடகி என்று நினை. நம்பிக்கை வளமும், ஊக்கம் உண்டாகும். கவலைகள் நீங்கும். துணிவும், உறுதியும் உண்டாகும். அதனால் கவலைப்படாதே. உள்ளம் உறுதியாகி வலிமையடைந்தால் வருகின்ற துன்பமே வருந்திப் பின்வாங்கிவிடும்" என்று கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினான், “அற்றேம் என்று அல்லல் படுபவோ, பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர்”, “சபையோர்களே, ராணி தனது பதிலால் திருப்தியடையவில்லை என்று உணர்ந்த தந்தை சொன்னார், “மகளே, நீ ஒருபோதும் எதற்கும் துன்பப்படக்கூடாது என்று நினைப்பவன் நான். சென்றவாரம் இசை விழாவில் பாடியதற்காக நீ சிறந்த பாடகி என்ற விருது தந்து உன்னைக் கௌரவித்ததோடு பத்தாயிரம் ரூபா பணமும் தந்தனர்.

**“ப**ணம் இங்கு யாரிடம் இல்லை. ஊக்கமுள்ள ஒருவர் எவ்வளவு பணத்தையும் சம்பாதிக்கலாம். எமது வனத்தில் பலரிடம் பணம் அளவுக்கதிகமாக உள்ளது. ஆனால் புகழ் உன்னிடமும், உனது மாமனிடத்து தான் உள்ளது. பணத்தைச் சம்பாதிப்பதைப் போலப் புகழைச் சம்பாதிக்க முடியாது. பெரும் பாடகியான உனது தந்தை நான் என்ற பெருமை மட்டும் எனக்குப் போதும் பணத்தை நான் மதிப்பதில்லை. பணத்தை மதித்திருந்தால் உனக்கு வைத்தியம் பார்த்திருக்கமாட்டேன். வாழ்க்கைக்குப் பணம் தேவை. அதற்காக பணம்தான் வாழ்க்கை அல்ல. பணத்தை தீயவழியில் சேர்க்கக் கூடாது. தீயவழியில் செலவு செய்யக் கூடாது. அதை முதலீடாகக் கொள்ளல் வேண்டும். அதனால் தான் உனக்குக் கணக்குப் பாராது செலவு செய்தேன். அது எனது கடமை. இப்போது பணம் வருகிறது. அதைச் சேமிப்பேன். குவலைப்படாது உனது செயலில் மிக்க கவனத்துடன் இரு” என்றவர் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானான், “இலக்கம் உடம்பு இடும்பைக்கு என்று கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல்”, “சபையோர்களே, ராணி தனது பேச்சால் திருப்தியடையவில்லை என்று உணர்ந்த அவனது தந்தை சொன்னார், “மகளே, உடம்பெடுத்தவர்களை நோக்கி அடிக்கடி துன்பங்கள் வந்து கொண்டேயிருக்கும் என்பதை உணர்ந்தவர்கள் தம்மை நோக்கிவரும் துன்பங்களை எண்ணிக் கவலைப்படமாட்டார்கள் ஏனென்றால் கவலைப்படுவதாலோ, அழுது புலம்புவதாலோ, இல்லைக் கடவுளை வணங்குவதலோ துன்பங்கள் நீங்காது. குறையவும்மாட்டாது. மாறாக அதிகரித்து பல்வேறு விதமான நோய்களைத் தோற்றுவிக்கும். அதனால் அறிவுள்ளோர் துன்பங்களைத் துன்பங்களாக ஏற்காது அவற்றை இன்பங்களாக்கிக் கொள்வர்”.

**“எ**னது நண்பனான விதுரன் என்ற மைனாவைப் பற்றி உனக்குத் தெரியும். உன்னை அவன் தனது மகளாகக் கருதி உனக்கு பல உதவிகள் செய்பவன். அவனது மகனை யாரோ

கொன்றுவிட்டார்கள். அந்தத் துக்கம் தாங்கமுடியாது அவனது மனைவி நோயாளியாகிவிட்டாள். இதைப்பற்றியெல்லாம் அவன் கவலைப்படுவதில்லை. அவனது இனத்தவர்கள், “இவன் கவலை இல்லாதவன் பிள்ளையைப் பற்றியோ, மனைவியைப் பற்றியோ கவலை கொள்ளாது மகிழ்வுடன் வாழ்கிறான்” என்பர். அதற்கு அவன் சொன்னான், “எல்லாம் விதிப்படிதான் நடக்கிறது. மகன் இறந்ததை எண்ணித் துன்பப்பட்டால் மகன் உயிரோடு வந்துவிடுவானா…? நோயாளியான எனது மனைவி கவலைப்பட்டால் குணமடைந்துவிடுவாளா… மாறாக நானும் மனைவியைப் போல நோயாளியாகிவிடுவேன். பின் எனது குடும்பத்தைக் கவனிப்பது யார்” என்றவன்”.

**“அ**து மறக்க முடியாத உண்மை. துன்பம் வந்தால் அதை உறுதியுடன் ஏற்று அதை நீக்கும் வழிவகைகளை ஆராய வேண்டுமே தவிரத் துன்பப்படக் கூடாது, “மகளே, நீ துன்பப்பட்டு என்னையும் துன்பத்துக்குள்ளாக்குகிறாய்” என்று அழுதார்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானான், “இன்பம் விழையான்; இடும்பை இயல்பு என்பான் துன்பம் உறுதல் இலன், “சபையோர்களே, தனது தந்தை தன்னையிட்டும் பெருங் கவலை கொள்வதை நினைக்க ராணிக்குத் துன்பமாக இருந்தது. அவரது நிலையைப் பார்த்தும் அவளுக்கு விதுரன் சொன்னது நினைவுக்கு வந்தது, “உனது தந்தை எனது விருப்புக்குரிய நண்பன். அவன் எனக்குச் சொல்லாமல் எதையும் செய்ததில்லை. அவனுக்கு நீ கவலைப்படுவது தான் கவலையை அளிக்கிறது” மனத்தைத் தேற்றினாலும் நீபடும் துன்பங்களைத் தன்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று மிக்க கவலையுடன் சொல்வான். மகளே, நீ கற்றவள், அறிவுள்ளவள், உனது தந்தை இன்பத்தை விரும்பாதவர். துன்பம் இயல்பாக எல்லோருக்கும் வரும் என்பதை உணர்ந்தவர். அதனால் அவர் துன்பங்களைக் கண்டு அஞ்சுவதில்லை. ஆனால் தேவையில்லாது நீ கவலைப்படுவதால் தான் அவர் கவலைப்படுகிறார்”.

**“உ**னக்குக் கண் தெரியாதது தான் ஒருகுறை. நன்றாகப் பாடுகிறாய். உன்னை வெல்ல யாராலும் முடியாது. உனது குறை விரைவில் நீங்கிவிடும். உனது மாமனின் மகன் ஊமை. ஆனால் அறிவால் படித்தவன், கனணிகளையும், கம்பியூட்டர்களையும் திருத்துபவன். அவன் ஒருநாளும் கவலைப்பட்டதில்லை. என்னைவிடச் சிறந்த உழைப்பாளி யார் இருக்கிறார்கள் என்று நினைப்பவன். அதனால் அவன் மகிழ்வுடன் வாழ்கிறான். நீ ஒரு சிறந்த பிரபலமான பாடகி. அதை நினைத்துப் பெருமையுடன் வாழ்” என்றவர். அதனால் நான் இனிக் கவலைப்பட்டு

உங்களைத் துன்புறுத்தமாட்டேன் என்றவள்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினான், "இன்பத்துள் இன்பம் விழையாதான்; துன்பத்துள் துன்பம் உறுதல் இவன்", "சபையோர்களே, தொடர்ந்து விதுரன் சொன்னான், "ராணி, இன்பம் வந்தபோது பெரிதாக மகிழ்ந்து கொண்டாடாதவன் துன்பம் வந்தபோது வருந்தமாட்டான். இது உனது தந்தைக்குப் பொருந்தும். நீ ஊரில் கச்சேரி செய்தபோது நான் மிகமிக மகிழ்ந்தேன். ஆனால் உனது தந்தை அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இதைவிட பெரிய கச்சேரி நடந்தாலும் நான் மகிழமாட்டேன். ஏனென்றால் அவள் இந்த வனத்தில் பெரிய பாடகியாக வரவேண்டும். உந்தச் சிறிய சிறிய இன்பங்கள் இன்பங்களல்ல" என்றவர். உனக்குக் கண்தெரியாது என்ற துன்பம் அடுத்தவர்களுக்கு இருக்கிறது. உனது மாமன் அடிக்கடி துன்பப்படுவார். ஆனால் உனது தந்தை அவளுக்குச் சத்திரசிகிச்சை மூலம் கண் பார்வை கிடைக்கும் என்று வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி இருக்க நான் ஏன் கவலைப்பட என்று கேட்பார்".

**"உ**னது மாமனின் மகனும் தான் பேசமுடியாதவன் என்று கவலைப்பட்டதில்லை. அவன் ஒருநாள் எழுதிக்காட்டினான். எனது நண்பன் மதியழகன். பெரிய தனவந்தனின் மகன். அவனுக்கு அங்கங்கள் எல்லாம் நல்லவாறு இருக்கிறது. புத்தி குறைவு. புத்தியை நாம் தான் வளர்க்க வேண்டுமே தவிர இன்னொருவரால் வளர்த்துத்தர முடியாது. நான் கனணிவேலைகளை ஒரு கடையில் நின்று கற்றேன். இப்பொழுது தனியாகத் திருத்தும் தொழிலை ஆரம்பித்துள்ளேன். இலட்சக்கணக்கில் வருமானம் வருகிறது".

**"ம**தியழகனின் தந்தை திடீரென்று இறந்துவிட்டார். அவனால் அந்த வர்த்தக நிறுவனத்தை நடத்தமுடியவில்லை. பெருநட்டமேற்பட்டு மூடிவிட்டான். அங்கங்கள் சரியாக இருந்தும், பேசமுடிந்தும் அவனால் இயங்க முடியவில்லை. அவற்றை நினைத்தேனேனாயால் என்னை நினைத்து நானே பெருமைப்படுவேன். வாய்பேச முடியாதது ஒரு குறையா..." என்று எழுதியிருந்தான் நான் மற்றவர்களை விட அதிகமாக உழைக்கிறேன். என்னை நன்நாறப் படித்த ஒரு பெண் விரும்புகிறாள். என்னில் அவள் குறை கண்டால் என்னை அவள் விரும்புவாளா?" என்றும் எழுதிக்கேட்கிறான். அந்த மனோநிலை உனக்கும் வரவேண்டும் என்றவர். அதை நான்

ஏற்றுக் கொண்டேன்" என்று ராணி கூறினாள்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

**சி**வலிங்கம் பத்தாவது குறளைப் பாடிவிட்டு, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானான், "இன்னாமை இன்பம் எனக்கொளின், ஆகும்தன் ஒன்னார் விழையும் சிறப்பு", "சபையோர்களே, ஒருவர் தனக்கு வரும் துன்பங்களை இன்பங்கள் என்று கருதி வாழ்ந்தாரேயானால் பகைவர்களும் போற்றுவர். எனது மாமா என்மீது உயிரையே வைத்திருக்கிறார். மாமாவின் மகன் அடிக்கடி என்னை வந்து சந்தித்துப் பேசுவான். அவனுக்குப் பேச இயலாது. எழுதுவான். அவன் எழுதுவதை என்னால் வாசிக்க முடியாது. அதனால் அவன் எழுதித்தந்ததை எனது தங்கையிடம் கொடுப்பேன். அவள் வாசிப்பாள். ஒருநாள் அவன் எழுதித்தந்ததை எனது தங்கை வாசித்தாள் அதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

"**ரா**ணி, உயிர்களுக்கு அங்கக் குறைபாடுகள் உண்டு. அதைப் பெரிதாக எடுத்தால் இயங்க முடியாது. பேசாவிட்டால் உடலில் உறுதி இல்லாமற்போகுமா…? இல்லை அறிவு இல்லாமற்போகுமா. எனது அறிவைப் பயன்படுத்தி நான் உயர்ந்தேன். உனது திறமையைப் பயன்படுத்தி நீ உயர்ந்தாய். உன்னைப் போலப் பாடக்கூடியவர்கள் இங்கு யார் இருக்கிறார்கள் பிறகேன் கவலைப்படுகிறாய். எனக்கு வந்த துன்பத்தை நான் துன்பமாகக் கருதாததால்தான் நான் இவ்வளவு உயரமுடிந்தது. அதைப்போல நீயும் எண்ணு".

"**எ**ன்னை ஊமையன் என்று பரிகசித்தவர் பலர். பலர் இவரால் எதுவும் செய்ய முடியாது என்றனர். ஆனால் இன்று எனது உயர்வைக் கண்டு அதிசயிக்கின்றனர். என்னைப் பிடிக்காதவர்கள்கூடத் தமது கனணிகளை என்னிடம் தான் கொண்டு வந்து திருத்துகின்றனர். அதற்குக் காரணம் என்னுடைய ஒழுக்கம், மனவுறுதி, ஊக்கம் நீ என்னைவிட மேலானவர். அதனால் கவலைப்படாதே".

"**எ**னது மைத்துனனுக்கு என்னைப் பிடிக்காது. சிறு வயதிலிருந்தே என்னுடன் பிரச்சினைப்படுவான். சில சமயம் எனக்கு அளவுக்கதிகமான கோபம் வரும். நன்றாக அடித்துவிடுவேன். அதனால் அவன் என்னைக் கண்டால் பயப்படுவான். ஒருநாள் தனது நண்பர்களுடன் சேர்ந்து என்னைத் தாக்கிவிட்டான். அதனால் வைத்தியசாலையில் மூன்று தினங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றேன். அதன்பின் இருவரும் பரம எதிரிகளானோம். அவனது கனணி பழுதடைந்துவிட்டது. பலரிடம் கொண்டு சென்று திருத்தியபோதும் அது வேலை

செய்யவில்லை. மாமா அவனது கனணியைக் கொண்டுவந்து தந்தார். திருத்திக் கொடுத்தேன். இப்போது அவன் தனது தவறை உணர்ந்து என்னோடு நண்பனாகிவிட்டான். நாம் உறவாடும் அனைத்தும் நிலையற்றவை. அவ்வாறு பார்த்தால் எமக்கு வரும் இன்பங்களும், துன்பங்களும் நிலையற்றவை தானே. பிறகு எதற்காகக் கவலைப்பட வேண்டும் என்றவன். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சிவலிங்கம்.

## 06

**சி**வலிங்கம் பேசி முடித்ததும் பேசவந்த கதிரேசன் சொன்னார், "மிகமிக அருமையாகச் சிவலிங்கம் பேசினான். நான் எதிர்பார்க்கவில்லை. ஊக்கமும் முயற்சியும் இருந்தால் எதையும் செய்யலாம் என்பதைச் சிவலிங்கம் நிரூபித்துள்ளான். இதுபோல அனைவரும் ஊக்கமும், முயற்சியும் உடையவர்களாக வாழவேண்டும். அடுத்து அமைச்சு என்ற அதிகாரத்தைப் பற்றி தமிழறிஞர் பேசுவார் என்று கூறி விடைபெறத் தமிழறிஞர் வந்து சபைக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு முதலாவது குறளைப் பாடினார், பின்பு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லனானார். "கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு", சபையோர்களே, முன்பு அரசர்களது ஆட்சிதான் உலகெங்கும் நடைபெற்றது. அது காலப்போக்கில் அழிந்து மக்களாட்சி வந்தபோதும் அவ்ஆட்சியில் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு அமைச்சர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அமைச்சர்கள் என்பதன் பொருள் ஆலோசகர்கள் என்பதாகும். அமைச்சர்கள் எவ்வாறு கடமையைச் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறியது இப்போது மட்டுமல்ல எப்போதும் பொருந்தும்.

"**ஒ**ரு செயலை நல்ல முறையில் செய்ய வேண்டுமானால் அச்செயலைச் செய்வதற்குரிய கருவிகள் அனைத்தும் வேண்டும். அத்துடன் பொருந்தமான காலத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். அச்செயலை நல்லபடி செய்து முடிக்கக் கூடிய செயல்முறைகளையும் தெரிந்திருத்தல் வேண்டும். இம்மூன்றையும் நன்கு அறிந்து சிறப்புடன் செய்து முடிப்பவனே சிறந்த அமைச்சனாவான். இது சாதாரணமான ஒரு விவசாயியானால் அதற்குரிய உபகரணங்களை வைத்திருத்தல் வேண்டும். அதுபோல ஒரு கூலியாளனால் அவ்வேலைக்குரிய கருவிகளை வைத்திருத்தல் வேண்டும். கருவிகள் இல்லாது எத்தொழிலையும் செய்ய முடியாது. கருவியைப் போலக் காலமும் மிகவும் முக்கியமானது. காலத்தை அறிந்து தான் பயிர் செய்கையைச் செய்கிறார்கள். அத்துடன் ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன் அத்தொழிலை நன்கு கற்றல் வேண்டும். உதாரணமாக ஒரு நாற்காலியைச் செய்ய வேண்டுமானால் அதற்கான பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்".

“**வ**ருணன் என்ற ஒட்டகம் வயல் விதைக்க விரும்பியது. அதனிடம் கலப்பை இருக்கவில்லை. அது தனது சகோதரியின் கணவனிடம் கலப்பையை இரவலாகக் கேட்டது. அவன் தருவதாக ஒப்புக் கொண்டான். அன்று காலையில் வருணன் தனது மைத்துணனிடம் சென்றபோது அவன் தனது வயலை உழுது கொண்டிருந்தான் மறுநாள்ச் சென்றபோது அவன் கூலிக்கு ஒருவரின் வயலை உழுது கொண்டிருந்தான். இவ்வாறு மூன்று தினங்கள் சென்றபோதும் அவனால் கலப்பையைப் பெற முடியவில்லை. அன்று இரவு கடும் மழை பெய்தது. மறுநாட் காலை அவனது மைத்துணன் கலப்பையைக் கொண்டு வந்து கொடுத்தான்”.

“**வ**ருணன் தனது வயலுக்குச் சென்றபோது வயலின் சில இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. எனினும் அவன் வயலை உழ ஆரம்பித்தான். காளைகள் நிலத்தில் விழுந்து படுத்தன. அப்போது அங்குவந்த ஒரு விவசாயி சொன்னான், “வயலுள் நீர் நிற்கும் போது காளைகள் எப்படி வயலை உழும். மழை பெய்தால் நிலம் காயும்வரை காத்திருக்க வேண்டும். இது தெரியாத நீ நெல் விதைத்தால் நன்றாகத் தான்” இருக்கும் என்று சொல்லிவிட்டுச் சென்றான் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “வன் கண் குடிகாத்தல் கற்று அறிதல் ஆள் வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு” சபையோர்களே, எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்திருக்கமாட்டார்கள். நன்றாக் கற்ற பெரியவர்களிடம் ஏனையோர் சென்று தமக்குத் தெரியாதவற்றைப்பற்றிக் கேட்டறிவர். இது உயிர்கள் பிறந்தன்றிலிருந்து நடைமுறையில் உள்ளது. இவர்களை முன்பு அமைச்சர்கள் என்றனர். அமைச்சர்கள் சிறந்த ஆலோசகர்களாவர். அவர்கள் முக் காலமும் உணர்ந்தவர்கள்.

“**சி**வபுரி ஒரு சிறிய வளங்கள் நிறைந்த நாடு. அதன் அயல்நாடு நாகநாதபுரி. மிகவும் பெரிய வளம் மிக்கநாடு. சிவபுரியின் பகைநாடு உருத்திரபுரம். உருத்திபுர மன்னனான வரராஜசிங்கன், நாகநாதபுரி இளவரசனும், உருத்திரபுரி இளவரசனும் ஒரே குருவிடம் கல்வி கற்றவர்கள். அவர்கள் குருகுலவாசத்தை முடித்த பின்பும் உற்ற நண்பர்களாக இருந்தனர். சிவபுரியின் இளவரசி தேன்மொழி அவளை நாகநாதபுரியின் இளவரசன் காதலித்தான். இருவரும் ஒருவரை ஒருவர் காணவில்லை. சிவபுரியின் ஆஸ்தானப் புலவரும், நாகநாதபுரியின் புலவரும் உற்ற நண்பர்கள். அதனால் இருவரும் இடைஇடையே சந்தித்துப் பேதுவது வழக்கம். அப்போது

நாகநாதபுரி இளவரசனான மணிமாறனும் அவர்களுடன் கூட இருந்து அவர்களின் கவிதைகளை ரசிப்பான்".

"**சி**வபுரியின் புலவரான கபிலருக்குத் தேன்மொழியை பிடிக்கும். அவள் தனது சிறந்த இளைய மகளைப் போல் இருப்பதாக எண்ணிப் பார்த்து மகிழ்வார். அவருக்குத் தேன்மொழியை மணிமாறனுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தமையால் அவளின் அழகைப் பற்றிபல கவிதைகளை எழுதி மணிமாறனுக்குக் கொடுப்பார். அதைக் படித்த மணிமாறனுக்குத் தேன்மொழியைப் பார்க்க வேண்டும் என்ற நினைவு எழுந்து மலைபோல வளர்ந்தது. அதை அறிந்த புலவர் அவனை ஓர் இளம் புலவர் வேடமிட்டு சிவபுரியின் அரசசபைக்கு அழைத்துச் சென்றார்".

"**பு**லவர் கவிதைகளில் வர்ணித்ததைவிடத் தேன்மொழி மிகவும் அழகாக இருந்தாள். அவளைக் கண்டவுடன் மணிமாறனுக்கு அவளைப் பிடித்துவிட்டது. புலவர் தேன்மொழிக்கு மணிமாறனின் அழகையும், வீரத்தைப் பற்றியும் கூறியமையால் தேன்மொழியும் மணிமாறனை விரும்பினாள். புலவரின் திட்டப்படி இருக்கும் நந்தவனத்தில் தனிமையில் சந்தித்துப் பேசி மகிழ்ந்தனர்.

**சி**வபுரி செல்வங்கொழிக்கும் நாடாக இருந்தமையால் அதைக் கைப்பற்ற உருத்திரபுர மன்னன் திட்டம் தீட்டினான். அதை ஒற்றர்கள் மூலம் அறிந்த சிவபுரியின் முதலமைச்சரான சுந்தரனார் சிவபுரியின் மன்னனைத் தனிமையிற் சந்தித்துச் சொன்னார், "மன்னா, வளங்கள் நிறைந்த எமது நாட்டை நாகநாதபுரி மன்னன் கைப்பற்றத் திட்டம் தீட்டுகிறான். அது பெரிய நாடு. வளம் குறைந்தநாடு. இதற்கு ஏதாவது செய்தல் வேண்டும்" என்றபோது,

"**சி**வபுரி மன்னன் சொன்னான், "எமது நாடு வளம் மிகுந்தது. ஆனால் சிறிய நாடு. நாகநாதபுரி படைப்பலம் மிகுந்த நாடு என்ன செய்யலாம் என்று நீரே சொல்லும்".

"**ம**ன்னா, நான் சொல்வது உண்மை. நான் சொல்வதை அமைதியாகக் கேட்டுவிட்டு உங்களின் பதிலைச் சொல்லுங்கள்" என்ற சுந்தரனார், "மன்னா, தங்களது மகளும் நாகநாதபுரி இளவரசனும் காதலர்கள்...".

**“எ**ன்ன..? நான் நம்பமாட்டன். நீர் பொய் சொல்கிறீர். இது பொய்யாக இருந்தால்” மன்னனுக்குக் கடுங்கோபம் வந்தது.

**“ம**ன்னா, நான் இதுவரை சொன்னவற்றில் ஏதாவது தவறு நேர்த்ததா…? எமது அவைப் புலவர் தேன்மொழி மீது அளவில்லாத பாசம் வைத்திருக்கிறார். அவரின் ஏற்பாட்டில் தான் இருவரும் சந்தித்துப் பேசுகின்றனர். நான் தான் புலவருக்கு விளக்கமாகச் சொல்லி இருவரையும் காதலிக்க வைத்தேன். எமது நாடு மிகவும் சிறிய நாடு. அயல் நாடுகள் எமது வளத்தை அபகரிக்கத் திட்டமிடுகின்றன. எம்மிடம் படைப்பலம் இல்லை. நாகநாதபுரி மிகப் பெரியநாடு. அத்துடன் திருமண உறவு வைத்தால் எம்மை யாராலும் வெல்ல முடியாது. பகைவர்களும் அஞ்சுவர். அதனால் நாகநாதபுரிக்குச் சென்று அந்நாட்டு மன்னனுடன் பேசுங்கள்” என்றார்.

**சி**வபுரி மன்னன் திகைத்துத் திகிலடைந்து போனான். அவனால் பேச முடியவில்லை. சிறிது நேரங்கழித்து மிக்க மகிழ்வுடன் சுந்தரனாரைக் கட்டியணைத்த அவன் சொன்னான், “உம்மை முதலமைச்சராகப் பெற நான் பெரும் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். அஞ்சாமையும், உயர்குடிப் பிறப்பும், கற்றுணர்ந்த மேன்மையும், தாய்நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயர்ந்த குணமும், சோர்வில்லா முயற்சியும் உள்ள தங்களைப் பாராட்டுகிறேன்” என்றான். சில தினங்களின் பின் தேன்மொழிக்கும் மணிமாறனுக்கும் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது” என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “பிரித்தலும் பேணிக் கொளலும் பிரித்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு”, “சபையோர்களே, தனது மகளுக்குப் புலவரின் உதவியுடன் பெரியதொரு பலம் மிகுந்த நாட்டின் இளவரசனைத் திருமணம் செய்து வைத்த அமைச்சரைக் கௌரவிக்க எண்ணி, அவரை நந்தவனத்திற்கு வருமாறு அழைத்தான் சிவபுரி மன்னன், அமைச்சர் வந்ததும் சொன்னான், “அமைச்சரே, தாங்கள் ஏன் நாகநாதபுரி மன்னனையும், குமுதநகர மன்னனையும் திருமணத்திற்கு அழைக்க வேண்டாம் என்று சொன்னீர்கள். இப்போதும் எனக்குப் புரியவில்லை”.

**“ம**ன்னா, அமைச்சரின் கடமை என்ன என்று நினைக்கிறீர்கள். பகைவருக்கு ஆதரவளிப்போரைப் பிரித்தல் தம்மிடம் நட்பு வைத்தவர்களைக் காத்தல், சிறுசிறு தவறுகளுக்காகப் பிரிந்தவர்களை ஒன்று சேர்த்தல் என்பனதானே எனது பிரதானமான செயல்கள். எதிரிகளுடன் போரிடலாம், சமாதானம் பேசலாம், திமிருடன் நடந்து கொள்ளலாம். முன்பு நாம்

போரிட முடியாது. சமாதானம் பேசினால் நாம் பலவீனர்கள் என்று அவர்கள் நினைப்பர். அதனால் தான் சற்றுத் திமிருடன் நடந்து கொள்வதற்காகவே இருவருக்கும் அழைப்பிதழ் கொடுக்க வேண்டாம் என்றேன்".

**இ**ப்பொழுது நீங்கள் பெரும் சக்கரவர்த்தியின் சம்மந்தி. உங்கள் மீது யாராவது யுத்தம் தொடர முடியுமா...? உங்கள் எல்லோரையும் விட நான் பலசாலி என்று கூறாமற் கூறுவதற்காகவே அழைப்பிதழைக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னேன். நாகநாதபுரி மன்னனை எதிர்க்க எந்த மன்னனுக்கும் துணிவு இல்லை. அவரின் நட்புக்காக அவர்கள் இருவரும் வருவார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் தான் அப்படிச் சொன்னேன். நீங்கள் சொல்லாவிட்டாலும் அவர்கள் வந்து மணமக்களை வாழ்த்திப் பரிசுகள் கொடுத்துவிட்டுத்தானே சென்றனர். நாகநாதபுரி மன்னன் பகைவன். குமுதநகர மன்னன் நாகநாத மன்னின் நெருங்கிய நண்பன். அவன் அடிக்கடி சிவபுரியைக் கைப்பற்றும்படி கூறுவான். இப்போது திருமணம் நடந்தபின் இருவரும் பலத்தால் பிரிந்துவிட்டனர். எனது தொழில் முடிவடைந்துவிட்டது" என்று சிரித்தார். சிவபுரியின் மன்னன் அமைச்சருக்கு வேண்டியளவு பொருளுதவி செய்தான்". என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு", "சபையோர்களே, அமைச்சர் சொன்னார், "பெரியவர்கள் ஓர் அமைச்சர் எவ்வாறு செற்பட வேண்டும் என்று கூறிய படிதான் நான் நடந்தேன். மன்னா, நானும் எனது பரப்பரையினரும் இங்குதான் வாழ்ந்து வருகிறோம். எனது தாய்நாட்டை எதிரிகள் கைப்பற்றப் போவதாக எனக்கு ஒற்றர்கள் மூலம் தகவல் வந்தது. அதனால்தான் நான் இரகசியமாகத் தங்களுக்கும் கூடத்தெரியாது தொழிற்பட்டேன். அமைச்சன் என்பவன் இரகசியத்தைக் காப்பவன். இரகசியங்கள் நிஜமாகும் வரை அதை வெளியிடாதவன். நான் தங்களுக்குத் தேன்மொழியின் விடயத்தைத் தெரிவித்திருந்தால் நீங்கள் சம்மதித்திருக்கமாட்டீர்கள். அதனால் பல விபரீதங்களும் ஏற்படலாம். நாட்டைக் காப்பாற்ற எனக்கு வேறு வழிகள் தெரியவில்லை. அதற்காகத்தான் செய்ய வேண்டியது என்ன என யோசித்துப் பார்த்தேன். இதைத்தவிர வேறு வழி தெரியவில்லை. அதனால் தான் துணிந்து செயற்பட்டேன். இது எனது தொழில்மட்டுமல்ல கடமையும் கூட. நாகநாதபுரி மன்னன் தீயவன். இரக்கமில்லாதவன். பழிவாங்குபவன் என்பது தங்களுக்குத் தெரியும். அவன் நாட்டைக் கைப்பற்றினால் உங்களையும், மகாராணியையும், இளவரசியையும் சிறையில் அடைப்பான் அல்லது கொன்றுவிடுவான். அதனால்தான் நான் தங்களுக்குச் சொல்லாது

செயற்பட்டேன். அது தவறு தயவு செய்து என்னை மன்னியுங்கள் மன்னா” என்று கூறிக் கைகூப்பி வணங்கினார் அமைச்சர்”.

“**அ**மைச்சரே, நீர் நல்ல செயலைத்தான் செய்தீர். இப்படியான ஒரு பேரரசனை எனது மகளுக்குக் கணவனாக்கியது மட்டுமல்லாது, எனது அரச பரம்பரையையும் காப்பாற்றியுள்ளீர். இதற்கு நான்தான் நன்றி கூறவேண்டும்” என்று கூறி அமைச்சரைக் கட்டித் தழுவினான் மன்னன். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் தேர்ச் சித்துணை”, “சபையோர்களே, மன்னன் இறுகக் கட்டியணைத்ததும் அமைச்சருக்கு மெய்சிலிர்த்தது. மன்னன் சொன்னான், “அமைச்சரே, நீர் அறத்தை நன்கு உணர்ந்தவர். அறிவு மிகுந்தவர். செயல்வீரர். எச்செயலை உமக்குத் தந்தாலும் அதை கச்சிதமாக நிறைவேற்றுவதில் வல்லவர். என்மீதும், நாட்டின் மீதும் உயிரை வைத்திருப்பவர். நாகநாதபுரி இளவரசன் உருத்திரபுர மன்னனின் மகளை விரும்புவதாகத்தான் நான் கேள்விப்பட்டேன்” என்றபோது அமைச்சர் குறுக்கிட்டுச் சொன்னார்,

“**ம**ன்னா, இரு நாட்டு இளவரசர்களும் ஒரு குருகுலத்தில்தான் தங்கிக் கற்றவர்கள். அதனால் அவர்கள் கற்றுமுடித்த பின்பும் நல்ல நண்பர்களாகவே பழகிவந்தனர். அதனால் இருவரும் மாமாறி அரண்மனைக்குச் செல்வது வழக்கம். உருத்திரபுர இளவரசிக்கு நாகநாதபுர இளவரசன் மீது விருப்பம் இருந்தது. அதை அறிந்த இளவரசன் அங்கு செல்வதை நிறுத்திவிட்டான். எனக்குப் பலகாலமாகத் தேன்மொழியை அவனுக்குக் கட்டிக் கொடுத்து நாட்டைக் காக்க வேண்டுமென்ற ஆசை மனதில் இருந்தது. அதனால்தான் அரச சபைக்குச் செல்லும் புலவருக்குச் சொல்லி இளவரசனை வசீகரிக்கச் செய்தேன். அதற்காகத் தாங்கள் புலவருக்குச் சன்மானம் வழங்க வேண்டும்” என்றார்.

“**நா**ன் அதை மறந்துவிட்டேன் அழைத்து வாருங்கள்” என்ற போது அமைச்சர் சொன்னார், “மன்னா, மன்னர் சன்மானம் வவழங்குவதை இரகசியமாகச் செய்தல் வேண்டும். புலவர் தான் இத் திருமணத்திற்குக் காரணி என்று அறிந்தால் எதிரிகள் இரகசியமாக அவரைத் தாக்கவும் கூடும்” என்றார்.

“**உ**ண்மையில் நீர் தகுதியான மிகச்சிறந்த அமைச்சர். எக்காலத்தையும் உணர்ந்து, செயல்மிக்கவராக விளங்குபவர் நீங்கள்” என்று அரசன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “சபையோர்களே, மதிநுட்பம் நூலோடு; உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன் நிற்பவை”. சபையோர்களே, அறிவுதரக் கூடிய அனைத்து நூல்களையும் விளங்கிக் கற்றவர்களுக்கு அவர்களது இயல்பான அறிவு பல மடங்கு உயரும். இவர்கள் தமது அறிவால் முக்காலங்களிலும் நடைபெறுபவற்றை முன்கூட்டியே அறிந்து கொல்வதோடு அவர்களால் தீர்க்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் எதுவும் இராது என்று எளியவர்கள் கூறியதைப் படித்துவிட்டு, இப்படியும் நடக்குமா என்று சந்தேகிப்பேன். ஆனால் உமது செயல்களைப் பார்த்த பின்பு உம்மால் எதையும் தீர்மானிக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன்”.

“**மு**ன்பு ஒருமுறை சேது வனத்தின் அரசனான சேதுபதி என்ற குரங்கு தனது படைவீரர்களை பலரை இரவில் அனுப்பி எமது பழவகைகளையும், காய்கறிகளையும் அழித்து வந்தது. ஒற்றர்களால் கூட என்ன நடைபெறுகிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அத்துடன் காட்டின் வடக்குப் பகுதியில் மனிதர்கள் வாழ்கின்றனர். அவர்கள் பனை மரங்களிலும், தென்னை மரங்களிலும் கள்ளுச் சீவுவார்கள். அதை எமது துட்ட வனவாசிகளுக்குக் கொடுத்துக் கலகத்தை உண்டு பண்ணுவார்கள். அதனால் நான் பெருந்துன்பப்பட்டபோது தாங்கள் என்னை முல்லை வனத்திற்குச் சென்று அதன் அரசனான கஜமுகன் என்ற சிங்கத்தை நட்புரீதியாகச் சந்தித்து வருமாறு கூறினீர்கள்”.

“**நா**ன் அதற்கான காரணத்தைக் கேட்டபோது, “அங்கே செல்லுங்கள் மன்னா, ஆச்சரியமான நிகழ்வுகள் நடைபெறும் என்றீர்கள். நான் அங்கு தங்களுடனும், வேறு பலருடனும் சென்றபோது அங்கே எமக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. அந்த நாட்டின் முதலமைச்சர் தங்களது இரத்த உறவினன் என்று அங்கு சென்ற பின்புதான் அறிந்தேன்”.

**நா**ம் அங்கு சென்று வந்த பின்பு இன்றுவரை சேது வனத்துக் குரங்குகள் எமது வனத்திற்கு வருவதில்லை. இது முல்லை வனத்து அரசனான பாலன் என்ற குரங்கு எமது வனத்தைக் கைப்பற்றுவதற்கான சூழ்சி என்று பின்னர் அறிந்து கொண்டேன்.

“**இ**யல்பான அறிவும், அறிவு தரும் நூல்களைப் படித்த அறிவும், தூரநோக்கும், எதிர்காலத்தை உணர்ந்து கொள்ளும் ஆற்றலும் மிக்க உமது நுட்பமான மூளை எதிரிகளால் எமக்கு வரப்போகும் துன்பங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளும். நீர் ஒரு மேதை. உம்மை அமைச்சராக பெற்ற நானும் எமது நாடும் பெரும் பாக்கியம் செய்துள்ளோம் என்று கூறினான்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அழிந்து செயல்”, “சபையோர்களே, அதிகாலையில் இருந்து சிவபுரி அரண்மனை அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. சிவபுரியின் வீதிகள் யாவும் வாழை மரங்களும், தோரணங்களும், மாவிலையும் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது. மக்கள் தமது வீட்டு வாசல்களில் பூரண கும்பம் வைத்துத் திருவிளக்குகளை ஏற்றியிருந்தனர். நடனமகளிர் வீதிகளில் நடனமாடிக்கொண்டிருந்தனர்”.

“**சி**வபுரி மன்னனின் குரு இமயமலைக்குச் சென்று தவம் சென்றுவிட்டு தனது சீடர்களுடன் சிவபுரிக்கு வந்து கொண்டிருந்தார். மன்னன் தனது குருவான பாலதேவர் என்ற யானையை வரவேற்பதற்காக அரண்மனை வாசலில் மகாராணியுடனும், மந்திரி பிரதானிகளுடனும் காத்திருந்தனர். குரு யானைகள், குதிரைகள், எலிகள், புறாக்கள் போன்ற நூற்றுக்கணக்கான சீடர்களுடன் வந்தார். அப்போது பேரிக்கைகள் முழங்கின, மங்கலவாத்தியங்கள் இசையை எழுப்பின, பிராமணர்கள் வேதமோதினர். மன்னர் குடத்தில் நீர் கொண்டுவந்து குருவின் பாதங்களைக் கழுவி விட்டு அந்தப் புனித நீரைத் தனது தலையில் தெளித்துக் கொண்டான்”.

“**கு**ரு அரண்மனைக்குள் வந்து ஆசனத்தில் அமர்ந்தார். அனைவரும் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினர். குரு சொன்னார், “மன்னா நீதியாக நாட்டை நீ ஆள்வதால் மக்கள் எந்தவிதமான குறைகளும் இன்றி வாழ்கின்றனர். மிகவும் சக்திவாய்ந்த, மதிநுட்பமுள்ள அமைச்சர் உனக்குத் துணையாக இருக்கிறார். அவர் எல்லா அறநூல்களையும் விளங்கிக் கற்றவர். நூல்கள் பல்வேறு விதமான வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைக் கூறுகின்றன. அவற்றைக் கற்போர் அவற்றின் உண்மைகளை மட்டும் உணர்ந்தால் போதாது. கற்றபடி வாழ வேண்டும். அத்துடன் இயற்கையை நன்கு உணர வேண்டும். நாகபுரி என்றொரு நாடு இயமமலையின் அடிவாரத்தில் உண்டு. மிகவும் வறிய நாடு அது. மன்னனுக்கு நாட்டின் நிலை தெரியாது. அவன் கோளிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்”.

“**ம**க்கள் பசியால் வாடினர். மழை பெய்யாமையால் பசுக்கள் பல உணவின்றி இறந்தன. மக்கள் பொங்கி எழுந்து அரண்மனைக்குச் சென்றனர். மன்னன் இல்லாததால் அமைச்சர் வந்து மக்களைச் சந்தித்தார். எமக்குக் கஞ்சி குடிக்கக்கூட வழியில்லை என்று அழுதனர். அதற்கு அமைச்சர் சொன்னார், “கஞ்சி குடிக்க முடியாவிட்டால் சோறு சாப்பிடங்கள்” என்றார். கஞ்சி குடிக்க முடியாதவர்களார் எப்படிச் சோற்றை உண்ண முடியும். இது அந்நாட்டின் இயல்பான நிலையை அறிந்து அதன்படி செயற்படாமையால் வந்த துன்பமாகும். ஆனால் உனது அமைச்சர் நன்கு கற்றவர். நாட்டின் நிலையை அறிந்தவர். அதனால் தான் நாட்டிற்குத் துன்பங்கள் வந்தபோதெல்லாம் தனது அறிவால் நீக்கியவர்” என்று குரு கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “அறி கொன்று அறியான் எனினும் உறுதி உழை இருந்தான் கூறல் கடன்”, “சபையோர்களே, குரு தொடர்ந்து சொன்னார், மன்னா நாகபுரி மன்னன் அறிவுறுத்துபவர்களின் அறிவுரைகளைக் கேட்பதில்லை. தானும் நல்லவற்றை நாடிக் கேட்பதில்லை. பெரியோர்களை மதிப்பதில்லை. அவன் தான் நினைத்தவற்றைச் செய்து இன்பமாகப் பொழுதைக் கழித்து வந்தான். அமைச்சர் பல்வேறு விதமான அறநூல்களைக் கற்றவர் அதனால் நாட்டுநிலைமையைக் கருத்திற் கொண்டு நல்லவற்றைத் தினமும் செய்வார். நாட்டு மக்களின் நிலைமையை விபரமாகக் கூறுவார். அவற்றை மன்னன் ஏற்பதில்லை. அவரை அவமானப்படுத்துவான். அதனால் தான் மக்கள் பசியோடு அரண்மனைக்குச் சென்றபோது கஞ்சி குடிக்க வழியில்லையானால் சோற்றை உண்ணுங்கள் என்று சொன்னவர். அதனால் ஒரு புரட்சி உண்டாகட்டும் என்று நினைத்தார். அவர் நினைத்தபடி மக்கள் புரட்சி செய்தனர். மன்னன் நாட்டை விட்டுத் தப்பி ஓடிக் காட்டில் மறைந்து வாழ்கிறான்”.

“**அ**தனால் அமைச்சர் மிகவும் முக்கியமானவர். அவர் ஆராய்ந்து சொல்லும் வார்த்தைகள் வேதவாக்குகளாகும். அது உனக்குத் தெரியும். அதனால் தான் நாடு மிக்க வளமுள்ளதாக இருக்கிறது” என்று குரு கூறினார்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்து உள்தெவ்வோர் எழுது கோடி உறும்” சிவபுரி மன்னன் குருவின் பாதங்களைத் தொட்டு வணங்கியபடி இருந்தமையால்

மகாராணியைத் தவிர ஏனையோர் சென்றுவிட்டனர், “மன்னா, நீ எனது முதன்மையான சீடன். ஒழுக்கம்மிக்கவன். எல்லா உயிர்களையும் மதிப்பவன். அதனால் நீயும் மகிழ்ச்சியாக இருக்கிறாய். உனது ஊழியர்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். மக்கள் மிக்க மகிழ்வுடன் வாழ்கின்றனர்”.

**“ம**க்களுக்கு அளவுக்கு அதிகமாகத் துன்பம் ஏற்பட்டால் கிளர்ச்சி செய்வர். போர் வீரர்களுக்குத் துன்பமேற்பட்டால் போரின் போது பின்வாங்குவர். அமைச்சருக்குத் துன்பமேற்பட்டால் அவர் பக்கத்தில் இருந்து கொண்டு நீ பேசுவதையெல்லாம் ஏற்பது போல நடித்து, உனக்குத் தவறான ஆலோசனைகளைத் தருவர். அப்படியான அமைச்சன் எழுபதுகோடி பகைவர்களுக்கும் சமனானவனாவான் அதனால் தான் நாகபுரி அமைச்சர் கஞ்சி குடிக்க வழியில்லாவிட்டால் சோற்றை உண்ணுங்கள்” என்று கூறிவிட்டு அரசனுக்கு எதிராக மக்களைத் தூண்டியவர். மக்கள் கிளர்ச்சி செய்யப் போர்வீரர்கள் அரண்மனையை முற்றுகையிட்டனர். அரசன் தப்பி ஓடினாலும், அவன் திரும்பி வந்து விடுவான் என்று நினைத்து அவனைக் கொல்ல நாகபுரி மக்கள் அவனைத் தேடி அழைக்கின்றனர்” என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினார், “முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலே செய்வர் திறப்பாடு இலாஅதவர்”, “சபையோர்களே, குரு தொடர்ந்து சொன்னார், “மன்னா, உனது அமைச்சர் எனது குருகுலத்திற்கு அடிக்கடி வருவார். அவர் என்னைத் தனது தந்தை போல எண்ணிப் பணிவிடைகள் பலவும் செய்வார். உன்னில் உள்ள அவாவின் மிகுதியால்தான் நான் அவர் மீதும் நட்புக் கொண்டேன். அவர் தான் செய்ய நினைப்பவற்றை எனக்குச் சொல்லிவிட்டுத்தான் செய்வார். அவர் ஒரு நாள் என்னைச் சந்தித்துச் சொன்னார், “சுவாமி, எமது நாடு மிகவும் சிறியது. ஆனால் வளம்மிக்கது. அதனால் இதைக் கைப்பற்றப் பலர் திட்டமிடுகிறார்கள். அது நடக்கக் கூடாது”.

**“அ**தை எப்படி நிறைவேற்றுவது என்று யோசிக்கிறேன். எமது மன்னர் உங்களின் பிரதம சீடன் அதனால் அவரைக் காப்பாற்றவேண்டியது உங்களது கடமை என்றபோது நான் சொன்னேன் நீர் விரும்பியபடி செயற்படும். தேவை ஏற்படின் நான் உனக்கு உதவி செய்கிறேன்” என்றேன். உருத்திரபுர மன்னன் பெரும் அறிவாளியல்ல. அவனது அமைச்சரும் புத்திசாலியல்ல. இருவரும்

இனத்தவர்கள், நட்புக் காரணமாகவே உருத்திரபுர மன்னன் தனது நண்பனான கந்தப்பனை அமைச்சராக நியமித்தான்".

"**உ**ருத்திரபுர மன்னனான வரராஜசிங்கனுக்கு கந்தப்பனாரின் தங்கை மீது மோகம் இருந்தது. ஏற்கனவே இரு மனைவிகளை உடைய வரராஜசிங்கன் கந்தப்பினாருக்கு அமைச்சர் பதவியைக் கொடுத்துவிட்டு அவரது தங்கையுடன் காமத்தொடர்பு வைத்திருந்தான். இதை அறிந்த உனது அமைச்சர் கந்தப்பனாருடன் உறவு கொண்டு உருத்திரபுர மன்னனுக்குச் சொல்லி சிவபுரியைக் கைப்பற்றுமாறு கூறும்படி கூற கந்தப்பனார் அதுபற்றி கவனம் செலுத்தாது தனது வருமானத்தைப் பெருக்குவதிலேயே கண்ணாக இருந்தார்"

"**க**ந்தப்பனார் செயற்படமாட்டார் என்று உனது அமைச்சருக்குத் தெரியும். உருத்திரபுர மன்னனுக்கு கந்தப்பனார் சிவபுரியைக் கைப்பற்ற வேண்டும் என்று கூறினாரே தவிர அதற்கான வழிவகைகளைக் கூறவில்லை. அந்த இடைவெளியில் உமது அமைச்சர் தான் நினைத்ததைச் செய்து முடித்துவிட்டார். செயல்களைத் திறமையாகச் செய்து முடிக்கத் தெரியாதவரைத் தனது நன்மைக்காகச் செயலில் ஈடுபடுத்தினால் அவர்கள் சரியாகச் செயற்படமாட்டார்கள். மன்னனுக்குக் காம ஆசை, மந்திரிக்குப் பண ஆசை. உமது அமைச்சரை பணம் பொருளால் வாங்கமுடியாது. பெண் பித்தும் இல்லை. அதற்குக் காரணமானவன் நீதான். ஏனென்றால் அமைச்சருக்குத் தேவைக்கு அதிகமான திரவியங்களைக் கொடுத்தமையால் அவர் திருப்தியுடன் வாழ்கிறார்" என்று குரு கூறினார். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

## 07

**த**மிழறிஞர் பேசி முடித்ததும் கதிரேசன் வந்து பேச ஆரம்பித்தார், "சபையோர்களே, திருக்குறள் மகாநாடு நாம் எதிர்பார்த்ததை விட மிகமிகச் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. பேச்சாளர்கள் நன்றாக ஆயத்தம் செய்து தக்க சான்றுகளுடன் பேசிவருகிறார்கள். அவர்கள் இதுவரை யாரும் பேசாத புதுப் புதுக் கருத்துக்களைத் தமது உரையில் ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகின்றனர். நாம் ஒளிபரப்புச் செய்வதால் உலகநாடுகளில் உள்ள அறிஞர்கள் பெருவிருப்புடன் கேட்டு விமர்சிக்கின்றனர். ஆனால் இங்குள்ளவர்கள் எவரும் விமர்சிக்கவில்லை. விமர்சனம் என்பது புகழாரம் என்று இங்குள்ளோர் நினைக்கின்றனர். அப்படியல்ல. விமர்சனம் என்பது பேசிய பேச்சை, எழுதிய எழுத்தைத் திருத்துவதற்கான ஒரு செயற்பாடாகும்".

“**இ**ன்று சொல்வன்மை என்ற அதிகாரத்தைப் பற்றி முல்லை வனத்தைச் சேர்த்த சேதுராமன் என்ற குரங்கார் உரையாற்றுவார். அவர் இரு கலாநிதிப்பட்டங்களைப் பெற்ற ஓர் ஆசிரியர். மூன்றாவது கலாநிதிப்பட்டத்திற்காக பல்வேறு நூல்களை ஆய்வு செய்கிறார். இறக்கும் வரை கற்க வேண்டும் என்று செயல்படுவர். அவர் இலக்கிய உலகிற்குப் புதியவர். புதியவர்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அதற்கமையவே அவரைத் தெரிவு செய்தோம். அவர் இப்பொழுது பேசுவார்” என்று கூறி விடைபெற்றார் கதிரேசன்.

“**சே**துராமன் பட்டுவேட்டி, பட்டுச்சட்டை, பட்டுதலைப்பாகை அணிந்து மேடைக்கு வந்து சபையோரைக் கரங்கூப்பி வணங்கினார், “சபையோர்களே, எனக்குப் பிரமுகர்கள் யாரையும் தெரியாது. ஆமைதியாகப் படித்துக் கொண்டும், மாணவர்களுக்குக் கற்பித்துக் கொண்டும் இருந்தேன். மாணவர்களுக்கு எப்போதும் அறக்கருத்துக்களைக் கூறி அதைப் பின்பற்றி வாழுமாறு கூறுவேன்.

“**ஒ**ருநாள் தமிழறிஞர் எமது பாடசாலைக்கு வந்து என்னைச் சந்தித்து உரையாடினார், “ராமரே, உமது கற்பித்தல் மிகவும் சிறப்பானது என்று கேள்விப்பட்டேன். மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் கற்பிக்கிறீர்கள். மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும், கற்பிக்கிறீர்கள். தற்போதைய ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் காலையிலும், மாலையில் நள்ளிரவு வரையும் காசுக்காகக் கற்பிக்கின்றனர். அவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் அர்ப்பணிப்புடன் கற்பிக்கிறார்கள். நீங்கள் இலவசமாகக் கற்பிக்கிறீர்கள். இது எனக்கு மிகவும் பிடித்துள்ளது. அதனால் நீங்கள் எமது திருக்குறள் மகாநாட்டில் பேச வேண்டும். சமூகசேவை செய்பவர்களை ஊக்குவிப்பதற்காகவே உங்களை நான் பேசுமாறு கேட்கிறேன்” என்றவர் அதனால் தான் இன்று பேச முடிகிறது”.

“**நா**ன் மூன்று நூல்களை வெளியிட்டுவிட்டு இங்குள்ள அறிஞர்களிடம் கொண்டு சென்று கொடுத்துவிட்டு விமர்சிக்குமாறு கேட்டேன். யாரும் விமர்சிக்கவில்லை. தமிழறிஞரிடம் கொடுத்தேன். இரண்டு நாளில் என்னை அழைத்து விமர்சித்தார். சில திருத்தங்களையும் சொன்னார். இலக்கியவாதிகள், சமயத்தை வளர்ப்போர், எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்போது தான் இலக்கியமும், சமயமும் வளரும். இன்று எனக்குப் பேசத்தந்த தலைப்பு, சொல்வன்மை என்பதாகும். தமிழறிஞர் பேசுவதற்கான விடயங்களை விபரமாகக் கூறவிட்டு இதைத்தான் பேச வேண்டும் என்றில்லை. முதன் முதலாகப் பேசுவதால் சொன்னேன். நீ விரும்பியவாறு பேசு என்றவர். எனது குலதெய்வத்தை வணங்கிப் பேச்சை ஆரம்பிக்கிறேன்”.

**“சொ**ற்கள் தான் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. அவை உயிர்களோடு பிறவிகள் தோறும் சேர்ந்து வந்து இன்பங்களையும், துன்பங்களையும் கொடுக்கின்றன. ஒரு சொல்லைப் பேசும் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். நல்ல சொற்கள் கூடப் பேசும் தன்மையால் தீயசொல்லாக மாறும். உதாரணமாக ஒருவரைக் கண்டு, “நலமாக இருக்கிறாயா…” என்று கேட்டால் அவருக்குக் கோபம் வரலாம் அவர் தன்னைக் கேலி செய்கிறார் என்று நினைக்கிறார். ஆனால் நல்ல சொற்களைப் பேசும் போது மன மகிழ்வுடன் பேசுதல் வேண்டும். இனி நான் விடயத்திற்கு வருகிறேன்”.

**சே**துராமன் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம் யாநலத்து உள்ளது உம் அன்று”, “சபையோர்களே, பேச்சுவன்மை என்பதும் பணம், பொருள், மக்கள் போன்ற செல்வத்தைப் போன்றது. அந்த நநலம் உலகில் உள்ள அனைத்து நலன்களையும் விடச் சிறந்த நலமாகும். அதனுடன் எந்த நலத்தையும் ஒப்பிட முடியாது.

**ஒ**ருவரை மற்றவர்கள் அவரின் பணம், பொருள், செல்வாக்கு, கல்வியால் மதிப்பதில்லை. அவர் மற்றவர்கள் மீது செலுத்தும் அன்பால்தான் மதிக்கப்படுகிறார். அன்புடையவரை எல்லோரும் விரும்புவர். அது உயர்வான நட்புக்களை உருவாக்கும். ஒருவரை உயரவைப்பது அன்பு. அன்புள்ளம் கொண்டவர்கள்தான் உயிருள்ளவர்கள். பொருள் எல்லோரிடமும் இருக்கும். ஆனால் அன்பு உயர்ந்தவர்களிடம்தான் இருக்கும். அன்புள்ளவர்களின் மனதில் அருள் இருக்கும். அவர்களுக்குத் துன்பம் வர ஏனையோர் விடமாட்டார்கள். ஒரு பிறவியில் மற்றவர் மீது காட்டும் அருளான அன்பு அவர் எடுக்கும் பிறவிகள் தோறும் கூட வந்து துணைசெய்யும். பொருள் இல்லாதவர்கள் பல வழிகளாலும் பொருளைத் தேடிப் பெறலாம். ஆனால் இயல்பான குணமான அன்பு இல்லாதவர்களால் எதையும் தேடிப் பெற்றுக் கொள்ள முடியாது. அன்பு நல்ல சொற்களைப் பேசுபவர்களிடம் மட்டும் இருக்கும் பெருஞ்செல்வமாகும்”.

**“ஒ**ருநாள் எமது வனத்தில் உள்ள கோவிலில் திருவிழா நடைபெற்றது. ஏராளமான மக்கள் அங்கு குழுமியிருந்தனர். அன்று தமிழறிஞர் பேசுவதாக அறிவித்திருந்தனர். தமிழறிஞர் வந்ததும் கோவில் குருக்களில் இருந்து அங்கு வந்திருந்த அனைவரும் தமிழறிஞரைச் சூழ்ந்து நின்று சுகம் விசாரித்தனர். சிறுவர்கள் அவரைத் தொட்டு விளையாடினர். ஒரு சிறுவன் சொன்னான், “ஐயா, இன்று நீங்கள் பேச வேண்டாம். எம்முடன் விளையாடுங்கள். தமிழறிஞர் சுமார் ஒரு

மணித்தியாலம் பேசினார். அதன்பின் பிள்ளைகளுடன் விளையாடினர். பிள்ளைகளுடன் அவர்களது பெற்றோரும், தாத்தாக்களும் ஓடிஆடி விளையாடினர். அதைப்பார்க்க எனக்கு அதிசயமாக இருந்தது. எனக்கு அருகில் நின்ற ஒருவர் சொன்னார், "தாய்பாலைக் குடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகூடத் தமிழறிஞரின் குரலைக் கேட்டால் பால் குடிப்பதை விட்டு விட்டு அவரிடம் ஓடிவரும் அப்படியானவர் தமிழறிஞர். சொல்வன்மையுடன் அன்பும் கலந்திருந்தால் தேனுடன் பாலும் கலந்த சுவை உண்டாகும். அது எல்லா நலன்களையும் உடனுக்குடன் பெற்றுத்தரும்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "ஆக்கமும் கேடும் அதனால் வருதலான் காத்து ஓம்பன் சொல்லின் காண் சோர்வு", "சபையோர்களே, சொற்கள் உயிருள்ளவை அவை பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்து இன்பங்களையும், துன்பங்களையும் தந்து கொண்டே இருக்கும். பேசும்போது சொற்களில் தவறுகள் ஏற்படாதவாறு பேசுதல் வேண்டும். தீயவற்றைப் பேசினால் தீமைதான் வரும். நல்லவற்றைப் பேசினால் நன்மைதான் வரும். முல்லை வனத்தில் வளவன் என்ற நரி வாழ்ந்து வந்தது. அது நண்பர்களைப் பிரித்துவிடும் யாராவது மகிழ்வுடன் பேசினால் அதற்குப் பிடிக்காது. ராமு என்ற முயல் நல்ல செயல்களையே செய்யும். பிறருக்கு உதவும். எப்பொழுதும் தானும் மகிழ்ச்சியாக இருந்து மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வாழவைக்கும். அதனால் முல்லை வனவாசிகள் அதன்மீது அளவில்லாத அன்பு வைத்திருந்தனர். வனவாசிகள் அனைவரும் அன்புடன் ராமுவுவோடு பழகுவதைக் கண்ட வளவன் ராமுவுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கோகுலன் என்ற மானிடம் சென்று சொன்னது, "நண்பா, நீ ராமுவுடன் நெருக்கமாகப் பழகுகிறாய் ஆனால் ராமு உனது எதிரியான லிங்கம் என்ற நரியோடு மிகவும் அன்னியோன்னியமாகப் பழகுகிறான். ஒருநாள் இருவருமாகச் சேர்ந்து உன்னைத் தாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை".

**அ**தற்கு ராமு சொன்னான், "நண்பா, எல்லோரிடமும் அன்பாகப் பேசினால் பேசுபவனுக்குத் துன்பம் வராது. ஒருவன் என்னைப் பற்றித்தவறாக எண்ணினால் என்னால் என்ன செய்யமுடியும். எதிரியையும் மன்னிக்க வேண்டும். மன்னிப்பதன் மூலம் கெட்டவர்கள் கூட நல்லவராவர். எனக்குத் தீமை செய்தவர்களுக்கும் நான் தீமை செய்யமாட்டேன். தீயதை நினைப்பதே பாவம். நீ சொன்னதற்கு நன்றி" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான். "ஒருவர் பேசுகின்ற சொற்களால்தான் நன்மையும், தீமையும் வருகின்றன. அது உனக்கே தெரியும். நீ தவறாகப் பேசிப் பலரிடமும் அடிவாங்கியும் உனக்குப் புத்திவரவில்லை. இப்போ நான் ஏதாவது சொன்னால் அதை மாறுபாடாக மற்றவர்களிடம் சொல்லிவிடுவாய்" என்று நினைத்தவாறு சென்றான்.

**சே**துராமன் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார். "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்", "சபையோர்களே, ஒருவர் பேசவிரும்பினால் சபையோரைக் கவரும் வகையில் பேசவேண்டும். சபையோர் பேசும் பேச்சாளருடன் சேர்ந்திருத்தல் வேண்டும். சில சபைகளில் பேச்சாளர் பேசிக்கொண்டிருப்பார் சபையோர் சிரித்துக் கதைத்துக் கொண்டிருப்பர். ஒரு நல்ல பேச்சாளர் பேசும் போது சபையில் சலசலப்பு ஏற்படக் கூடாது. அவரது பேச்சைத் திரும்பத்திரும்பக் கேட்கவேண்டும் என்ற உணர்வைச் சபையோரிடத்து ஏற்படுத்த வேண்டும். சந்தர்ப்பவசத்தால் அப்பேச்சை கேட்க முடியாது போனவர்கள் அருமையான பேச்சைத் தவறவிட்டு விட்டேனே என வருத்தம் ஏற்படக்கூடிய வகையில் பேச்சு அமைய வேண்டும். சில பேச்சாளர்களுக்குச் சபையில் பேசவேண்டும் என்ற ஆசை அவாவாக மாறி இருக்கும். ஒருவர் பேசியதைத் திரும்பத்திரும்பப் பேசினால் கேட்பவர்களுக்குச் சலிப்பும், வெறுப்பும் ஏற்படும். அதனால் பேசுபவர்கள் புதுப்புதுக் கருத்துக்களை ஆராய்ந்து பேசுதல் வேண்டும். எமது முன்னைய அறிஞர்கள் ஆயிரக்கணக்கான நூல்களை எழுதியுள்ளனர். சிலர் சில நூல்களைப் படித்துவிட்டுத் திரும்பத்திரும்ப அதையே பேசுகின்றனர்".

"**சு**ந்தரவனத்தில் சிவகுருநாதபிள்ளை என்ற வரிக்குதிரை வாழ்ந்து வந்தது. அது பேரறிஞன். சுந்தரவனம் கடலுக்கு அப்பால் உள்ள பெரியவனம். சிவகுருநாதபிள்ளை சிறந்த பேச்சாளர். அவர் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உரையாற்றுவார். திரவிய வனத்தைச் சேர்ந்த கலைவாணன் அவரது பேச்சைத் தவறவிடுவதேயில்லை. அவர் திரவிய வனத்தில் நடைபெறும் தமிழ் மகாநாடு ஒன்றிற்கு வருகைதரவிருப்பதாக அறிவித்திருந்தார். அதைக் கேள்விப்பட்ட கலைவாணனுக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் கேட்டு இரசித்த அவனுக்கு அவரை நேரில் காண வேண்டும் என்ற ஆசை வெகுநாட்களாக இருந்தது".

"**அ**ன்று சிவகுருநாதபிள்ளை வருகிறார் என்ற செய்தி திரவியவனம் முழுவதற்கும் தெரிந்தமையால் அவரது ரசிகர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். கலைவாணன் வீட்டில் இருந்து புறப்பட்டுக் காட்டு வழியாக வந்தபோது நாகபாம்பு தீண்டியதால் அவன் மயக்கமடைந்துவிட்டான். வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது நான்கு நாட்கள் அங்கு தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவன் தனது மனைவிக்குச் சொன்னான், "சிவகுருநாதபிள்ளையை நேரில் சந்தித்து அவரது பேச்சைக் கேட்க வேண்டும் என்று பல வருடங்களாகக் காத்திருந்தேன். அதைக் கேட்க முடியாது போனது எனது துரதிஷ்டம். அதில் பார்க்க நான்' இறந்திருக்கலாம்"

என்று அழுதான். சபையோர்களே பேசும் போது கேட்பவர்களைக் கவரும்படியாகப் பேசுதல் வேண்டும். அதைக் கேட்காதவர்கள் கேட்க வேண்டும் என்று ஆசைப்படக் கூடியதாகப் பேசவேண்டும்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "திறன் அறிந்து சொல்லுக சொல்லை; அறனும் பொருளும் அதனின் ஊங்கு இல்", "சபையோர்களே, சொற்கள் உயிருள்ளவை. பல்வேறுவிதமான கருத்துக்களைக் கொண்டவை. வலிமை உள்ளவை. பேசுகின்ற பேச்சு ஒருவரைப் புகழின் உச்சிக்கும் கொண்டு செல்லும். அதுபோல இகழ்ச்சியையும் உண்டாக்கும். அதனால் சொற்களின் உரிமையை முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும். அதன்பின் சபையோரின் தகுதியையும் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு பேசினால் அது சிறந்த அறமாகவும், பொருளாகவும் அமையும்".

**"ச**பையோர்களே, கலைவாணன் சிவகுருநாதபிள்ளை தொலைக்காட்சியில் பேசினால் ஒருபோதும் தவறவிடமாட்டான். மிகமிக அத்தியாவசியமான வேலை இருந்தால் அப்பேச்சைப் பதிவு செய்துவைக்குமாறு மகளிடம் சொல்வான். அவள் பதிவு செய்துவைப்பாள். ஒருநாள் அவள் கேட்டாள், "அப்பா, நீங்கள் சிவகுருநாதபிள்ளையின் பேச்சை ஒருபோதும் தவறவிடுவதில்லை. பதிவு செய்துவைத்தால் திரும்பத்திரும்பக் கேட்பீர்கள். அப்படி அவரது பேச்சில் என்ன இருக்கிறது".

**"ம**களே என்ன இருக்கிறது என்று நினைப்பதை விட என்ன இல்லை என்று நினைத்துப் பார்த்தல் வேண்டும். சிவகுருநாதபிள்ளை பெரும் அறிஞர். எல்லா நூல்களையும் கற்றுணர்ந்தவர். சபைக்கு ஏற்றவாறு பேசுபவர். நான் ஓர் ஏழை. வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்தவன். எனது ஆசிரியரான பண்டிதர் சிற்றம்பலம் அவர்கள் எனக்கு அடிக்கடி சொல்வார், "கலைவாணா, நீ சிவகுருநாதபிள்ளையின் பேச்சைக் கேள். அவரது பேச்சைக் கேட்டுத்தான் நான் இந்த நிலையை அடைந்தேன்". அதனால் அவரது பேச்சைக் கேட்க ஆரம்பித்தேன் தேனாக இனித்தது. அவர் பேசும் ஒவ்வொரு சொல்லும் வாழ்க்கையின் தத்துவத்தை உணர்த்தும். அவரது பேச்சில் வாழ்க்கையை மேம்படுத்தும் விடயங்கள் அடங்கியிருக்கும். ஏழையாகப் பிறப்பது உனது குற்றம் அல்ல. ஏழையாக வாழ்வது தான் குற்றம் கடவுளை நம்பி அவரிடம் பொன்னைப் பொருளைக் கேளாதே. உனது முயற்சிகள் செயலாக

வேண்டும் என்று கேட்டு வணங்கு. சலிப்படையாது முயற்சியை மேற்கொள். வெற்றி நிட்சயம் கிடைக்கும். முயற்சி எல்லாவற்றையும் தரும்" என்றவர்.

**அ**தை நம்பி நான் ஒரு சிறு காய்கறி விற்பனை நிலையத்தைத் தொடங்கினேன். அவர் சொல்வார், "எப்பொழுதும் கடவுளின் நினைவாக இரு. அவரை நினைத்துக் கொண்டே நித்திரைவிட்டெழு. அவருக்குச் சொல்லிவிட்டுச் செயல்களைச் செய். ஒழுக்கம் தவறாதே. பிறரை வஞ்சிக்காதே. தீயவற்றை எண்ணாதே. உனது முயற்சிகள் பயனளிக்கும். தனவந்தனாக மாறினாலும் பழையவற்றை மறக்காதே" இவ்வாறு சொல்வார். அவரது ஆலோசனைப்படி வாழ்ந்தால்தான் நான் பெரும் தனவந்தனானேன். அவர் சொற்களின் வலிமையை அறிந்து கேட்பவர்களின் தகுதியையும் அறிந்து பேசுவதால் எல்லோரும் நன்றாக வாழ்கின்றனர்" என்று கலைவாணன் தனது மகளுக்குக் கூறினான்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் ஐந்தாவது குறளைப்பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல், அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து", "சபையோர்களே, ஒருவர் சொல்லும் சொற்கள் கேட்பவர்களுக்குத் துணிவையும், வெற்றியையும் தரவேண்டும். அவர் சொன்ன சொல்லை வெல்லக்கூடியவேறு சொற்கள் இல்லை என்பதை அறிந்தபின்பே அச் சொல்லைப் பேசவேண்டும். தொடர்ந்து கலைவாணன் சொன்னான், "மகளே, சிவகுருநாதபிள்ளை ஒருசபையில் பேசினாரேயானால் அவரை அது சம்பந்தமாக யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். சபையோர் கேட்கப்போகும் கேள்விகள் அனைத்தையும் தனது அறிவால் உணர்ந்து சகலருக்கும் பொருந்தும்படியாகவே பேசுவார். அவர் ஒருமுறை கல்வியைப் பற்றிப் பேசினார், "ஒருவர் இறக்கும் வரை கல்வியைக் கற்றல் வேண்டும். பாடசாலைக்கோ, பல்கலைக்கழகத்திற்கோ கல்வி கற்பதற்காகப் போகத்தேவையில்லை. நம்முன்னோர் உலகில் நடக்கப்போகின்றனவற்றையெல்லாம் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே எழுதிவைத்துவிட்டனர்".

**"தி**ருமந்திரம் என்றொரு ஒப்பற்ற நூலைப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் திருமூலநாயனார் இயற்றினார். அதில் பூமியைப் பற்றிய சகல விடயங்களும் உள்ளன. உயிர்களுக்கு வரும் நோய்கள் அனைத்தைப் பற்றியும் உள்ளன. குறிப்பாக உயிர்களின் முன்னேற்றத்திற்குக் காரணியான கருவுறப்பத்திபற்றி விரிவாக உள்ளது. அந்நூலைப் படித்தால் ஒரு சித்தவைத்தியராகலாம். பழந்தமிழ் நூல்கள் உலகில் நடக்கவிருப்பவற்றை எல்லாம்

கூறிவிட்டன. சிவகுருநாதபிள்ளை எல்லா நூல்களையும் தேடியெடுத்து வாசித்துவிட்டு அதை மேடைகளில் பேசுவதால் மக்கள் அதைப் புரிந்து கொள்வர். எனது நண்பனான சிவபாலன் என்ற புலியின் மகன் ஆரூரன் சிவபாலன் என்னைப்போல சிவகுருநாதபிள்ளையின் பேச்சைத் தவறாது கேட்பான்".

**"அ**வர் கேட்பதால் அவரது மகனான ஆரூரனும் கேட்பான். அவன் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து ஒரு சிறு அரசத் தொழில் பார்த்தான். இறக்கும் வரை கற்கவேண்டும் என்று சிவகுருநாதபிள்ளை பேசியதைக் கேட்டு அவன் வீட்டில் இருந்தே கல்வி கற்று இரண்டு கலாநிதிப் பட்டங்களைப் பெற்றான். இப்போது அவன் திரவியவனப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். இப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்கிறான். தான் பேசும் பேச்சை வேறுயாரும் வெல்ல முடியாது பேசியதால் தான் அவரது பேச்சால் பலர் முன்னேறியுள்ளர்" என்று கலைவாணன் தனது மகளுக்குக் கூறினான்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினார், "வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல் மாட்சியின் மாசுஅற்றார் கோள்" "சபையோர்களே, ஒருவர் நன்றாக ஆயத்தப்படுத்தி பேசும் போது கேட்கின்றவர்களுக்கு விருப்பம் உண்டாக வேண்டும். அவ்வாறு விருப்பத்தை உண்டாக்கிவிட்டுத் தனது கருத்துக்களைக் கூறவேண்டும். சபையோர் பேச்சைக் கேட்டுவிட்டு விமர்சிப்பர் அவ்வாறு விமர்சித்தால் அதை ஏற்றுக் கொள்பவர்கள் தான் குற்றமற்ற பேச்சாளர்களாவர். சபையோர் சொல்வதை ஆராயாது மறுக்கவோ, ஒத்துக்கொள்ளவோ கூடாது".

**"ஆ**ரூரன் கற்கவேண்டிய நூல்களையெல்லாம் கற்றவன். ஒருநாள் திருமூலர் மந்திரத்தைப் பற்றி பேசும் போது சபையில் இருந்த ஒருவன் எழுந்து கேட்டான் தங்களின் பேச்சைக் கேட்கும்போது ஆச்சரியமாக உள்ளது. பேசும்போது தாங்கள் கற்ற நூல்களின் பெயர்களைக் கூறி அவை கூறும் கருத்துக்களையும் கூறுகிறீர்கள். திருமூலர் வாழ்ந்தகாலம் பற்றிப் பல்வேறுபட்ட ஆய்வாளர்கள் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர். இவர் கி.பி ஆறாம் நூற்றாண்டு என்கின்றனர். வைசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தசரத இராமன் வாழ்ந்த காலம் கி.மு 6000 என்று பல்வேறு விதமான ஆதாரங்களுடன் கூறியுள்ளது. இதில் எது உண்மையானது" என்று கேட்டான். அதற்கு ஆரூரன் சொன்னான், "அன்பரே, நீர் திருமந்திரத்தைப் பற்றி அறியவேண்டியவற்றை அறிந்துள்ளீர். அதற்காக உம்மை நான் பாராட்டுகிறேன். இப்போது

சபையினர் திருமந்திரம் கூறும் நவீன விஞ்ஞானக் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காகவே வந்திருக்கின்றனர்".

"**அ**வர்களுக்குத் திருமூலர் வாழ்ந்த காலம் முக்கியமானதல்ல. அவர் கூறிய கருத்துக்கள் தான் முக்கியமானவை. கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டியவை. சாதாரணமான ஒருவர் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான தகவல்கள் பலவும் திருமந்திரத்தில் உண்டு. நீர் கரு உற்பத்தி பற்றிப் படித்திருப்பீர். ஒரு குழந்தை பெற்றோரின் தவறான நடத்தையால்தான் முடமாக, குருடாக பிறக்கிறது என்று திருமூலர் கூறுகிறார். இப்படியான கருத்துக்கள் பல திருமந்திரத்தில் உண்டு. அவற்றைப் பெரும்பான்மையானவர்கள் அறிந்திருக்கவில்லை. அப்படியான கருத்துக்களைக் கூறுவதுதான் எனது இலட்சியம். திருமூலர் வாழ்ந்த காலம் பற்றிய தேவை எமக்கு இல்லை. அதுபற்றி ஆய்வாளர்களின் மத்தியில்தான் பேசவேண்டும். சாதாரணமானவர்களுக்கு இது தேவையில்லை. அதுபற்றி நாம் இருவரும் தனிமையில் சந்தித்துப் பேசலாம்" என்றான்.

"**அ**தைக் கேட்டவர் மிகவும் மகிழ்ந்து உங்களுக்கு நேரம் உள்ள நேரத்தைச் சொல்லுங்கள். இருவரும் பேசுவோம்" என்றார். சபையோர்களே, ஒருவர் உரையாற்றும் போது கேட்கின்றவர்களுக்கு விருப்பம் உண்டாகும்படி பேசவேண்டும். சபையோர் சொல்வதையும் கேட்டு அவரின் மனம் புண்படாதபடி பேசவேண்டும். ஆரூரன் உணர்ந்து பேசினான்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் ஏழாவது குறளைப்பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "சோர்வு இலன், அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது", சபையோர்களே தான் பேசவேண்டியவற்றை மிகவும் தெளிவாகவும், இலகுவாகச் சபையோர் புரிந்து கொள்ளக் கூடியவனவாகவும், சொல்லும் போது தடுமாறாமலும், மறதி இல்லாமலும் சபைக்கு அஞ்சாமல் சபையோரின் கருத்துக்களை உள்வாங்கி அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலைக் கூறக்கூடியவனாகவும் இருப்பவனை யாராலும் வெல்லமுடியாது என்று எனக்குப் பலர் கூறியபோதும் அதை நம்பாது ஆரூரனைக் கேள்விகேட்டு சபையின் நடுவே தடுமாறச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுத்தான் நாங்கள் வந்தோம். உண்மையில் ஆரூரன் கெட்டிக்காரன், வீரன் என்பதை ஒப்புக்கொள்கிறோம்" என்று சபையில் திருமூலரது காலம் பற்றிக் கேட்டவன் கூறி அதற்காக மன்னிப்புக் கேட்டான்".

“**ச**பையோர்களே, இது போன்ற ஒரு சம்பவம் சென்ற மாதம் முல்லைவனத்தில் நடைபெற்றது. கேசவன் என்ற மான் பெரிதாகப் படிக்கவில்லை. ஆனால் கற்றவர்களோடு சேர்ந்திருப்பதால் அவர்கள் கற்ற நூல்களின் பொருளை அவர்கள் உரையாற்றும் போது கேட்பான் பின் பல்வேறு வகையான நூல்களைத் தேடிப் பெற்று வாசிப்பான். கற்றவர்களுக்குச் கேசவனை நன்கு பிடிக்கும். அதனால் அவர்கள் அவன் கேட்கும் கேள்விகளுக்கு விரிவான பதிலைக் கூறுவார்கள். ஆரம்பத்தில் அவன் சிறுவர்களுக்குக் கதைகளைக் கூறுவான். பின் அவர்களுக்கு ஒழுக்கக் கருத்துக்களைக் கூறுவான். அவனது சொல்வன்மையையும், சபைக்கு அஞ்சாத தன்மையையும் கண்ட பண்டிதரான சிவயோகன் என்ற புலி அவனை பேசுமாறு அழைத்தது. சிலநாட்களில் கேசவன் சபையோரைக் கவரக் கூடிய வகையில் பேசத்தொடங்கினான்”.

“**கே**சவனின் நண்பன் துவாரகன் என்ற நரி. கேசவனை எல்லோரும் மதிப்பதைக் கண்ட துவாரகனுக்குப் பொறாமையாக இருந்தது. அதனால் அவன் பேசும் கூட்டங்களுக்கு வந்து அர்த்தமில்லாத கேள்விகளைக் கேட்டு சபையைக் குழப்பிவிடுவான். அதனால் சிலர் கேசவனைப் பேசவருமாறு அழைப்பதில்லை. ஆனால் சிறுவர்களும், பெரியவர்களும் அவனது பேச்சைக் கேட்கவிரும்பினர். அதனால் பண்டிதர் சிவயோகன் துவாரகனிடம் சென்று சொன்னது, “துவாரகா, கேசவனது பேச்சை எல்லோரும் விரும்புகின்றனர். அவன் சிறந்த பேச்சாளன். ஒரு நூலின் கருத்தை எல்லோருக்கும், குறிப்பாகச் சிறுவர்களுக்கும் விளங்கத்தக்க வகையில் கூறுபவன். சிறுவர்கள் அவனது பேச்சை மகிழ்வுடன் கேட்பார்கள். சிறுவர்களைக் கவரக் கூடிய வகையில் பேசுவோர் மிகமிகக் குறைவு. அதனால் நீ அவன் பேசும் கூட்டங்களுக்கு வந்தால் அமைதியாக இருந்து பேச்சைக் கேள். நீ பொறாமை காரணமாக வேண்டும் என்றே குளப்புவதாகப் பலரும் சொல்கின்றனர். அதனால் கவனமான இரு என்று சொல்லிவிட்டுச் சென்றது.

“**அ**தைக் கேலியாக எண்ணித் துவாரகன் சிரித்தான். அன்று நடைபெற்ற சிறுவர்தின விழாவில் கேசவன் பேசிக்கொண்டிருந்த போது துவாரகன் எழுந்து எதையோ பேச முனைந்தான். அப்போது பல சிறுவர்கள் கம்புகளுடன் வந்து துவாரகனைப் பலமாகத் தாக்கினர். பெரியவர்கள் அவர்களைத் தடுத்த போது ஒரு சிறுவன் சொன்னான், “எமக்குப் பிடித்த பேச்சாளர்களில் ஒருவர் கேசவன் அண்ணா. துவாரகன் அவர் பேசும் கூட்டங்களில் வந்து குளப்பம் விளைவிக்கிறார். இனிமேல் அவ்வாறு நடந்தால் இதிலும் மோசமான விளைவுகள் ஏற்படும்” என்றவன் சபையோர்களே, ஒரு கருத்தை இலகுபடுத்திச் சபையோர் அனைவருக்கும் கூறுவதில் வல்லவனாகவும் தான் ஆயத்தப்படுத்திவந்தவற்றை மறக்காமல், அஞ்சாது கூறவல்லவனை எல்லோரும் விரும்புவர்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “விரைந்து தொழில் கேட்கும் ஞாலம், நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்” சபையோர்களே பண்டிதர் சிவயோகன் சொன்னார், “கருத்துக்களை மிகவும் இலகுபடுத்தியும், ஒழுங்குபடுத்தியும் கவற்சியாகச் சொல்லக் கூடியவர்களின் பேச்சைக் கேட்டு அதன்படி நடக்க உலகம் காத்துக் கொண்டிருக்கும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அது உண்மை. பெரியவர்களின் வார்த்தைகள் தேனுவார்த்தைகள். கேசவன் அருமையான பேச்சாளன். அவன் பேசினால் சிறுபிள்ளைகள் கூட அவதானமாகக் கேட்டு வீட்டுக்குச் சென்று அவனைப் போலவே பேசுவர். இது பெற்றோர்களுக்கு மிகுந்த மகிழ்வைக் கொடுக்கும். பல பெற்றோர் துவாரகனின் செயலை எதிர்த்தனர். அவனை நான் பலமுறை கண்டித்தும் அவன் கேட்பதாக இல்லை. அவன் பேசும் போது துவாரகன் வந்தால் அனைவரும் மிகுந்த கோபம் கொள்வர்”.

**“சி**ல பெற்றோர் வீட்டில் தமக்குள், “துவாரகன் அடிக்கடி கூட்டத்தைக் குளப்புவதால் அவனுக்கு அடிக்க வேண்டும்” என்று பேசிக்கொள்வர். அதைக்கேட்ட ஒரு சிறுவன் தனது நண்பர்களுடன் சேர்ந்து துவாரகனைப் பலமாகத் தாக்கிவிட்டான். வன்முறையை ஊக்குவிக்கக்கூடாது என்றாலும் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்காதும் விடலாகாது. இனிமேல் கேசவன் பேசும் கூட்டங்களுக்குத் துவாரகன் வரமாட்டான்” என்று கூறிச் சிரித்தவர்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

**சே**துராமன் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “பலசொல்லக் காமுறுவர் மன்றமாக அற்ற சிலசொல்லால் தேற்றாதவர்”. சபையோர்களே எமது முன்னோர் பூவுலகிலும் சரி கிரகவுலகிலுமும் சரி எதிர்காலத்தில் நடைபெறவுள்ளன பற்றி மிகவும் விளக்கமாகச் சொல்லிவிட்டனர். அவற்றைப் படிக்காதவர்கள் தான் தமிழில் சமூக விஞ்ஞானக் கருத்துக்கள் இல்லை என்கின்றனர். அதைப் பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறிவிட்டனர். இன்று பழந்தமிழ் நூல்களில் உள்ள நல்ல கருத்துக்களைப் பண்டிதர் நாவுக்கரசன் உங்களுக்கு உரையாற்றுவார்” என்று சேதுராமன் கூறிவிட்டு அமர்ந்ததும் நாவுக்கரசன் மேடைக்கு வந்து சபையோர்க்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, “சபையோர்களே, தமிழில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கூறப்பட்ட கருத்துக்களையே இன்றைய விஞ்ஞானிகள் தமது கருத்துப்போலச் சொல்கிறார்கள். நவக்கிரகங்களைப் பற்றி பல ஆயிரம் வருடங்களுக்கு முன் எமது மூதாதையர் கூறிவிட்டனர். ஒன்பது கிரகங்களைவிட ஏராளமான கிரகங்கள் வானவெளியில் உள்ளன. அவைபற்றி ஆராய்தல் வேண்டும். தற்போது விஞ்ஞானிகள்

கூறுபவவை யாவும் உண்மையானதல்ல. அவற்றை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்புதான் நம்பவேண்டும். தற்காலத்தில் விஞ்ஞானம் பற்றிப் பேசுவோர் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு போகிறது".

**அ**ப்போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. சிலர் எழுந்து சென்று கொண்டிருந்தனர். சிறுவர்கள் தமக்குள்ப் பேசிச் சிரித்து விளையாடினர். அதைப் பார்த்த பண்டிதரான நாவுக்கரசன் என்ற குரங்கார் தருமாறிப்போனார். சேதுராமனுக்குச் சிரிப்பு வந்தது. நாவுக்கரசன் சேதுராமனின் நல்ல நண்பர். அவர் பேசவேண்டும் என்று ஆசைப்பட்டமையால் அவர் கதிரேசனிடம் சொல்லி பேசுவதற்கான அனுமதியைப் பெற்றார். அவர் இவ்வளவு மோசமாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. "பேசுவோர் குற்றமில்லாத சொற்களைப் பேசவேண்டும். பழந்தமிழ் நூல்கள் கூறிய கருத்துக்களை இலகுபடுத்தி தனது மொழியில் பேசவேண்டும். அந்நூல்களைத்தான் நான் எழுதினேன் என்ற நினைப்பு மனதில் உருவாக வேண்டும். சபையைக் கவரக் கூடிய சொற்களைத் தெரிந்து பேச வேண்டும். அப்படிப் பேசாதவர்களின் பேச்சு அர்த்தமற்றது. அதைச் சபையோர்கள் கேட்கமாட்டார்கள். அதுதான் இப்பொழுது நடைபெறுகிறது என்று நினைத்தார் சேதுராமன். பண்டிதர் நாவுக்கரசன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். சபையோர் வெளியேறிக்கொண்டிருந்தனர். அதைக் கவனியாது பண்டிதர் பேசிக்கொண்டிருந்தார்.

**சே**துராமன் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானார், "இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது உணர விரித்துரையாதார்", சபையோர்களே ஒரு நூலைக்கற்பதனால் அதனால் பயனேற்படும். உணவைக்கூடப் பகிர்ந்துண்ணும் படி எம்முன்னோர் கூறியுள்ளனர். பொன், பொருள், பணம், உணவு முதலியன கொடுப்பது தான் தானமல்ல. நல்லநூல்களின் கருத்தைப் பலருக்குச் சொல்வதும் உயர்ந்த தானமாகும். அறநூல்கள் தீயவற்றைச் சொல்லாது. நல்லவற்றைச் செய்யுமாறு கூறுகின்றன. அந்த நல்லவை எவை எவையென்று பலருக்குத் தெரியாது. கற்றவர்கள் அதைத் தெரியாதவர்களுக்கு விளக்கிக் கூறுவது மேலான தர்மமாகும். இதைப் பலரும் உணர்வதில்லை. நாவுக்கரசனது பேச்சைக் கேட்ட சபையோர் எழுந்து சென்றனர்".

**"ஒ**ருவர் ஒரு செயலைச் செய்ய விரும்பினால் அதைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ளல் வேண்டும். மேடையில் பேசுவது என்பது இலகுவான செயலல்ல. மிகமிகக் கடினமான செயல். அதனால் ஒரு நூலைப் பற்றியோ அல்லது ஒரு தலைப்பைப் பற்றியோ பேசுவதானால் அதுபற்றி முழுமையாகத் தெரிந்திருத்தல் வேண்டும். அதைவிட முக்கியமானது தான் கற்றதைச்

சபையோர் இலகுவாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் பேசவேண்டும். அப்படிப் பேச முடியாதவர்கள் கொத்தாக மலர்ந்துங்கூட வாசமில்லாத மலரைப் போன்றவராவர்".

"**சி**ல மாதங்களுக்கு முன்பு கடம்ப வனத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. பெரும்பெரும் அறிஞர்கள் பலர் பேசுவதற்காகவும், பேச்சைக் கேட்பதற்காகவும் வந்திருந்தனர். தமிழறிஞர் பேசினார். அவர் பேசி முடியும்வரை சிறுவர்கள் கூட மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர். அவர் பேசிமுடித்த பின்பும் சபையோர் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இன்னும் பேசமாட்டாரா என்ற எதிர்பார்ப்பு எல்லோரது முகங்களிலும் காணப்பட்டது. அந்த மகாநாட்டிற்கு பல அறிஞர்கள் வந்திருந்தனர். சிறப்பாக நடைபெற்ற அந்த மகாநாட்டின் பேச்சைக் கேட்கவே பலர் வந்திருந்தனர். தமிழறிஞர் பேசி முடித்ததும் பேரறிஞர் விநாயகமூர்த்தி என்ற வரிக்குதிரை பேச வந்தார். ஆரம்பத்திலேயே அவர் தடுமாறினார். சபையில் அமர்ந்திருந்த அறிஞர்களைப் பார்த்ததும் அவர் நிலைதடுமாறிப் போனார். அதனால் அவரால் பேசமுடியவில்லை. சபையில் பலதரப்பட்டவர்கள் இருப்பார்கள். சிலர் விசிலடித்தனர். சிறுவர்கள் பலமாகக் கதைத்தனர். அதனால் மகாநாட்டின் தலைவர் மின்சாரத்தைத் துண்டித்தார். பின் மேடைக்கு வந்து அவரை அழைத்துச் சென்றார்".

"**ந**ட்பு, இனத்தவர், தெரிந்தவர், நன்றாகக் கற்றவர் என்று நினைத்துப் பேசுவதற்கு ஒருவரை அழைக்கக் கூடாது என்று இரு சம்பவங்கள் நடந்த பின்பு நான் உணர்ந்து கொண்டேன்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சேதுராமன்.

## 08

**சே**துராமன் பேசி முடித்ததும் கதிரேசன் மேடைக்கு வந்து பேசினார், "சபையோர்களே, எமது மகாநாடு மிகவும் கோலாகலமாகவும், அர்த்தம் உள்ளதாகவும் நடைபெறுகிறது. பல அறிஞர்கள் நேரில் வந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். பேச்சாளர்கள் புதுப்புதுக் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே இருக்கின்றனர். வள்ளுவர் குறள்களுக்கு உரை எழுதவில்லை. அதற்குக் காரணம் குறள் பல விளக்கங்களைத் தரவல்லது. ஒவ்வொரு அறிஞரும் தான் விரும்பியவாறு பொருத்தமான கருத்துக்களைக் கூறட்டும் என்றுதான் உரையை எழுதாதுவிட்டிருக்கிறார். இம் மகாநாட்டில் பேசியவர்கள் பொருத்தமான உரைகளையும், புதுப்புது விளக்கங்களையும் சொல்லிக் கொண்டே இருக்கின்றனர். அந்தவகையில் இம் மகாநாடு மிகவும் பயனுடையதாக அமைந்ததையிட்டு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். அடுத்து வினைத்தூய்மை என்பு அதிகாரம் பற்றிப் புலவர் விநாயகமூர்த்தி அவர்கள் பேசுவார்" என்று கூறினார்.

**வி**நாயகமூர்த்தி என்ற மான் மேடைக்கு வந்து சபையோரை வணங்கினார், “சபையோர்களே, திருக்குறள் மகாநாடு மிகவும் கோலாகலமாகவும், பயனுள்ளதாகவும் நடைபெற்று வருகிறது. அதற்காக விழாக் குழுவினரை நான் பாராட்டுகிறேன். உள்நாட்டு ரசிகர்களும், வெளிநாட்டு ரசிகர்களும் பாராட்டிய வண்ணம் இருக்கின்றனர். குறளுக்கு இப்படியெல்லாம் கருத்துக்கள் இருக்கா என்று எண்ணி மகிழ்கிறோம் என்று வெளிநாட்டில் இருக்கும் நண்பர்கள் கூறுகிறார்கள். அந்தளவில் பிரசித்தி பெற்ற மகாநாட்டில் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது பெரும்பாக்கியமாகும்”.

“**இ**ன்று நான் வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில் வள்ளுவன் கூறிய குறள்களுக்கு உரையும், விளக்கமும், கதைகளையும் கூறவந்துள்ளேன். பேசியவற்றைப் பேசக்கூடாது புதுப்புதுக் கருத்துக்களைக் கூறவேண்டும் என்று விழாவை ஏற்பாடு செய்தவர்கள் கூறியிருக்கின்றனர். என்னால் முடிந்தளவு புதுப்புதுக் கருத்துக்களைக் கூறுகிறேன்” என்றவர் முதலாவது குறளை இனிமையாகப் பாடினார், “துணை நலம் ஆக்கம் தரூஉம் வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்’’ சபையோர்களே ஒருவருக்குப் பெரியோர்களின் துணை செல்வத்தைக் கொடுக்கும். அவர் செய்யும் நல்ல செயல்கள் அவர் விரும்பிய அனைத்தையும் கொடுக்கும். நல்ல செயல்கள் அனைவரையும் கவரும். அதனால் அவரைப் பெரும்பான்மையானவர்கள் விரும்புவர். அன்பாகப் பேசுவர். உதவிகள் செய்வர்”.

“**சு**ந்தரன் என்ற குருங்கிற்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர் சுந்தரனுக்கு பத்து வயதாக இருக்கும் போது அவனது தந்தையார் விபத்தில் சிக்கி இறந்துவிட்டார். அவர்களது குடும்பம் வசதியான குடும்பமல்ல. சுந்தரன் மூத்தவன். அவன் தந்தை இறக்குமுன்பே சிவஞானம் என்ற பண்டிதரான குரங்கின் வீட்டுக்குச் சென்று அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் அவர் சுந்தரனைத் தனது பிள்ளை போல அன்பு செலுத்தி வந்தார்.

“**த**ந்தை இறந்த பின் அவனால் பாடசாலைக்குச் செல்ல முடியிவ்லை. அதை அறிந்த சிவஞானம் அவனை அழைத்துச் சென்னார், “மகனே, கல்வி தான் ஒருவரது கண்களாகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் கல்வியைக் கற்காதுவிடக் கூடாது. நானும் உன்னைக் போன்றவன் தான். நான் எல்லோருடனும் இனிமையாகப் பேசி, அவர்களுக்கு உதவிகள் செய்வதால் அனைவரும் என்னை மதிக்கின்றனர். நான் உனக்குப் பணம் தருகிறேன். பாடசாலைவிட்ட பின்பும், விடுமுறை நாட்களிலும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்” என்றார்.

“**சு**ந்தரன், அவரின் வழிகாட்டலில் நூறு கோழிகளை வாங்கி வளர்த்து வந்தான். அத்துடன் ஐந்து கோழிகளுக்கு எழுபது முட்டைகளை வைத்து அடைகட்டினான். சிவஞானம் அவனுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்தார். அவன் பாடசாலைக்குச் சென்ற வேளைகளில் கோழிகளை அவர் பராமரித்தார்”.

“**ஒ**ரு வருடம் கழிய சுந்தரனிடம் தேவையானளவு பணம் சேர்ந்தது. சிவஞானத்தின் உதவியுடன் அவன் கூடுகளை அமைத்துச் சுமார் ஆயிரம் கோழிகளை வளர்த்தான். அத்துடன் நல்ல இனக் கோழிகளுக் குஞ்சுகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தான். வசதியீனம் காரணமாகக் கற்க முடியாத மாணவர்களுக்குப் போதிய உதவிகள் செய்வான். எல்லோருடனும் இனிமையாகப் பேசி உதவிகள் செய்வான். அதனால் வனவாசிகள் அவனை மிகவும் விரும்பினர். அவனது சகோதரியினர் மூவரும் பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்விகற்று உயர்ந்த உத்தியோகம் பார்க்கிறார்கள். அதனால் சபையோர்களே, எப்பொழுதும் நல்லவர்களைத் துணையாக்கிக் கொள்ளுங்கள். நல்ல செயல்களைச் செய்யுங்கள். அது நீங்கள் விரும்பிய அனைத்தையும் கொடுக்கும்” என்று கூறித் தனது உரையைப் பூர்த்தி செய்தார் விநாயகமூர்த்தி.

**வி**நாயகமூர்த்தி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு நன்றி பயவாவினை”, சபையோர்களே, சுந்தரன் அறவில்லாத செயல்களை ஒருபோது செய்யமாட்டான். அறமில்லாத செயல்கள் துன்பங்களையும், அவமானங்களையும் இகழ்ச்சியையும்தான் கொடுக்கும். அறச் செயல்கள் அதாவது நல்லவற்றைக் கொடுக்கும் பெரியவர்களின் நட்பைக் கொடுக்கும்.

“**சு**ந்தரன், தனது சகோதரிகள் மூவருக்கும் நல்ல இடங்களில் திருமணம் செய்துவைத்தான். பெரும் பெரும் பிரமுகர்கள் பலர் தமது பிள்ளைகளுக்குச் சுந்தரனது சகோதரியைத் திருமணம் செய்யப் போட்டிபோட்டனர். சுந்தரன் தனது சகோதரிகளுக்குத் திருமணம் செய்து வைத்தபின்பு தான் திருமணம் செய்யவிரும்பினான். பல தனவந்தர்கள் அவனைத் தத்தமது மகளுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்பினர். அவன் சிவஞானத்திடம் சென்று சொன்னார், “ஐயா, எனது வாழ்க்கை உங்களால் அமைத்துத்தரப்பட்டது அதுபோல எனது திருமணத்தையும் நீங்களே செய்துவையுங்கள்” என்றான்.

**“சி**வஞானம் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தார். சுந்தரன் சொன்னான், “ஐயா, தந்தையை இழந்து அனாதரவாக இருந்த போது உறவினர்கள் எவரும் எம்மைக் கவனிக்கவில்லை. நீங்கள் உதவி செய்தமையால்தான் நான் ஒரு தனவந்தனானேன். எனது சகோதரிகள் கற்று நல்ல நிலையில் இருக்கின்றனர். அந்த நல்ல மனம்தான் என்னை உயர்த்தியது. உங்களது பேர்த்தியின் குடும்பம் வசதியானதல்ல, ஊக்கமும், முயற்சியும், நல்ல பெரியவர்களின் துணையும் இருந்தால் பிச்சைக்காரனும் குபேரனாவான். அதை நீங்கள் நிரூபித்துள்ளீர்கள். என்னால் எதையும் செய்ய முடியும். அறமில்லாத செயல்கள் தான். ஒரு தனவந்தனையும் பிச்சைக்காரனாக்குவது நான் அறமில்லாத எச்செயலையும் ஒருபோதும் செய்யமாட்டேன் என்று சுந்தரன் கூறியபோதும் சிவஞானம் பேசவில்லை” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் விநாயகமூர்த்தி.

**வி**நாயகமூர்த்தி மூன்றாவது குரலை பாடிவிட்டு அதற்கான உரியையும் விளக்கத்தையும் கதையையும் சொல்லலானார் ‘‘ஓ ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை ‘ஆஅதும்’ எனும் அவர்’’ சபையோர்களே மேலும் மேலும் மேன்மை அடைய வேண்டும், புகழை பெற வேண்டும் நன் மதிப்பை பெற வேண்டும் என்று நினைப்பவர்கள் தீய செயல்கள் எதையும் செய்யக்கூடாது. சுந்தரன் அறிவுடையவன், நல்லொழுக்கமுடைய ஒருவன் பெரும் அறிவுடையவனாகவே இருப்பான். அவனை யாரும் ஏமாற்ற முடியாது. தான் உழைத்து சம்பாதித்து உதவ வேண்டியவர்களுக்கு உதவ வேண்டும் என்று நினைப்பானே தவிர இன்னொருவரின் சொத்தை அடைய வேண்டும் என்று நினைக்க மாட்டான்.

**சு**ந்தரனை எனது மகளுக்கு கட்டாயமாக திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று பெரும் தன வந்தனான சிறுத்தொண்டன் விரும்பினான். அதனால் அவர் கல்யாண தரகர் இடம் சென்று சுந்தரனை தனது மகளுக்கு திருமணம் செய்து வைத்தால் கேட்கும் பணத்தை தரக பணமாக தருவதாக கூறினார். சுந்தரம் சம்மதிக்கவில்லை அதனால் அவர் சிவஞானத்திடம் சென்று சொன்னார்.

**சி**வஞானம் எதுவும் பேசாது இருந்ததால் சுந்தரன் சொன்னான், ‘‘ஐயா உங்கள் பேத்தியின் குடும்பம் வசதிகளற்றது அதனால் தான் நேர்மையாக வாழும் நீங்கள் தயங்குகிறீர்கள். நான் உங்களுடன் அன்பாக பழகி வருகிறேன். எனது உயர்வுகளுக்கு காரணமானவர் நீங்கள். அதனால் வசதிகள் இல்லாத உங்களது பேத்தியை நான் திருமணம் செய்தால் நீங்கள் தான் அதற்குக் காரணமானவர் என ஊரார் கருதுவர் என்று தானே தயங்குகிறீர்கள். நான் உங்களது பேத்தியை காதலிக்கவில்லை. முதியவரான உங்களையும், உங்கள் மனைவியையும் பராமரிப்பது

உங்கள் பேத்தி. நான் அவளை திருமணம் செய்தால் உங்களுக்கு சேவை செய்தவன் ஆவேன். சிறு தொண்டன் நீதியான வழியில் பணத்தை சம்பாதிக்கவில்லை. களவும், கலப்படமும், நிறை குறைந்தும், பதுக்கியும் தான் சம்பாதித்தார் என்று ஊரவர் பேசுகின்றனர். அறம் இல்லாத செயல்களை செய்யும் ஒருவனோடு ஒழுக்கம் மிக்கவன் சேர்ந்திருந்தால் ஊரவர் அவனையும் ஒழுக்கம் இல்லாதவன் என்று சொல்வர். நான் நீதியாகவும் நேர்மையாகவும் சம்பாதித்து செல்வம் சிறுதொண்டானது செல்வத்துடன் சேர்ந்தால் கரை பட்டுவிடும். மேலும் மேலும் உயர்வடைய வேண்டும் என்று எண்ணுகின்ற நான் அறமில்லாத தீய செயல்களை செய்யலாமா..? என்று சுந்தரேசன் கேட்டான். என்று கூறி தனது உரையை மறைவு செய்தார் விநாயகமூர்த்தி.

**வி**நாயகமூர்த்தி நான்காவது குரலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானார் ‘‘இடுக்கண் படினும் இளிவந்த செய்யார் நடுக்கு அற்ற காட்சியவர்’’ சபையோர்களே வெகுநேரம் மௌனமாக இருந்த சிவஞானம் சுந்தரா சிறுத்தொண்டன் பல பெரியவர்களை அணுகி தனது ஒரே ஒரு மகளை உனக்கு திருமணம் செய்ய முயற்சித்தார். நீ சம்மதிக்கவில்லை. அதனால் அவர் என்னிடம் வந்து உன்னோடு பேசி உன்னை சம்மதிக்க செய்யுமாறு சொல்லிவிட்டு சென்றார். தீயவரானாலும் அவர் சொன்னதை எப்படி உன்னிடம் சொல்வதென்று அறியாத தடுமாறினேன். நல்லவர்கள் எப்போதும் அறிவு மிக்கவர்களாகவும் தீயவற்றை எண்ணாதவர்களாகவும் இருப்பர். பெருந்துன்பங்கள் வந்தாலும் அதை நீக்ககூட இழிவான செயலை செய்ய மாட்டார்கள். தீயவனான சிறுதொண்டன் கூறியவற்றை கூறக்கூட என்னால் முடியவில்லை. நல்லவர்களுக்கு தீமையானவற்றை கூறுவதே பாவம் என்று நினைப்பவன் நான். அதனால் தான் சொல்ல தயங்கினேன். நீ உனது தந்தையை இழந்து வறுமையில் வாடிய போதும் உண்மையை பேசினாய். உறுதியாக இருந்தாய். ஊரின் பெருந் தனவந்தரான வடிவேலு என்ற குதிரை தனது பணப்பெட்டியை தவறவிட்ட போது அதை வழியில் கண்டெடுத்த நீ அதை என்னிடம் கொண்டு வந்து தந்தாய். பெட்டியைத் திறந்து அதற்குள் என்ன இருக்கிறது என்று கூட பார்க்கவில்லை. நான் வடிவேலுவை அழைத்து பெட்டியை கொடுத்த போது வடிவேலு மிகவும் மகிழ்ந்து உனக்கு பரிசாக கொஞ்சப் பணத்தை தந்தவர். அதைக் கூட நீ வாங்கவில்லை. அதனால் மனம் வருந்திய வடிவேலு உனது தங்கையின் கல்விச்செலவை ஏற்றவர்’’.

**வி**நாயகமூர்த்தி ஐந்தாவது குரலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் கூறலானார் ‘‘எற்று என்று இறங்குவ செய்யற்க செய்வானில் மற்று அன்ன செய்யாமை நன்று’’ சபையோர்களே இச்செயலை ஏன் செய்தேன் என்று எண்ணி வருந்தும்படியான செயலை செய்யக்கூடாது. ஒருவேளை தவறுதலாகவோ, அறியாமை காரணமாகவோ ஒரு

செயலை செய்ய நினைத்தால் மீண்டும் ஒருமுறை அச்செயலை செய்யக்கூடாது என்று பெரியவர்கள் கூறி இருக்கிறார்கள். சில சமயங்களில் புண்ணியம் கருதியோ, கருணையினாலையோ, அல்லது நட்பு, உறவு காரணமாகவோ செய்த செயல் தீமைகளை செய்திருக்கும். ஆனால் பின்பு அது போன்ற செயலை எக்காரணம் கொன்றும் செய்யலாகாது.

**ச**பையோர்களே சுந்தரன் இரக்க சுபாவம் உடையவன். யாராவது வந்து அழுதழுது தனது துன்பங்களை கூறினால் அவன் தன்னை மறந்து விடுவான். ஒரு நாள் மாலை நேரம் சிவம் என்ற எருமை சுந்தரனிடம் வந்து ‘‘தம்பீ பல நாட்களாக மழை விடாது பெய்கிறது. வீட்டைச் சுற்றி வெள்ளம், வீட்டுக்குள் வெள்ளம் வற்றாது நிற்பதால் சமைக்க கூட முடியவில்லை. உணவகங்கள் கூட மூடப்பட்டு விட்டன. பிள்ளைகள் பசியால் வாடுகின்றன. அதை என்னால் பார்க்க முடியவில்லை’’ என்று விம்மிவிம்மி இழுதான். அதைக்கேட்ட சுந்தரன் சிவத்தின் மீது இரக்கம் கொண்டு பெருந்தகை பணத்தை கொடுத்துவிட்டு தேவை என்றால் வா இன்னும் தருகிறேன் என்று கூறினான்.

**‘‘அ**ன்று மாலை அவனது மனைவி சுந்தரனிடம் வந்து தம்பி எமது ஏழ்மை நிலையை நினைத்து நீர் எனது கணவனுக்கு உதவி செய்தீர். நீர் கொடுத்த பணம் முழுவதற்கும் குடித்து விட்டு வந்து சட்டி பானைகளை எல்லாம் அடித்து நொறுக்கி விட்டு, என்னையும் பிள்ளைகளையும் கடுமையாக தாக்கினார்’’ என்று விக்கி விசும்பி அழுதாள். ‘‘அம்மா நான் உனது கணவன் சொன்ன சொற்களை நம்பிக் கொடுத்து விட்டேன் என்னை மன்னித்துக் கொள்’’ என்று கூறிவிட்டு பணம் கொடுத்தான்.

**சி**ல மாதங்களின் பின் சிவத்தின் மூத்த பிள்ளைக்கு கொரோனா வந்துவிட்டது. சிவம் சுந்தரனிடம் வந்து அழுதது எனது மகனுக்கு கொரோனா என்று வைத்தியர் கூறுகிறார். மருந்து வாங்க பணம் கொடுங்கள் என்றான். சுந்தரன் அதைக் கேளாதது போல சென்று விட்டார். விசாரித்துப் பார்த்ததில் உண்மையில் சிவத்தின் பிள்ளைக்கு கொரோனா நோய் வந்திருந்தது. அதனால் சுந்தர் அதற்கான வைத்திய செலவை அவனது மனைவியிடம் கொடுத்தான். இதை ஏன் செய்தோம் என்று வருந்தும் படியான செயலை இனி செய்யக்கூடாது என்று சுந்தரன் முடிவெடுத்தமையால் தான் அவ்வாறு நடந்தான். பின் தீர விசாரித்த பின்பு உரியவர்களிடம் கொடுப்பான் என்று கூறி விநாயகமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

**வி**நாய மூர்த்தி ஆறாவது பாடலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையை சொல்லலானார். ''ஈன்றால் பசி காண்பான் ஆயினும் செய்யகற்க சான்றோர் பழிக்கும் வினை'' சபையோர்களே சுந்தரன் சிவஞானத்துடன் விரும்பி பழகி வந்ததால் அவர் அவனுக்கு அறநெறிகளை போதித்தார். அறநெறி நீதிக் கதைகளை சொல்வார். அதனால் அவன் பொய் பேசமாட்டான். களவு எடுக்கமாட்டான். எல்லோருடனும் அன்பாக பழகி வந்தான். சிவஞானம் சொல்வார், ''மகனே ஒழுக்கமான வாழ்வு என்றும் உயர்வையே தரும். ஒருவர் எதை செய்தாலும் செய்யலாம். ஆனால் பொய் பேசக்கூடாது. ஒருவன் இன்னொருவனின் பொருளை திருடிவிட்டான். அவனை விசாரிக்கும் போது அவன் பொய் சொல்லாதவனென்றால் திருடியதை ஒப்புக் கொள்வான். எப்பொழுதும் உண்மை உயர்வைத் தரும் என்பார்".

**"சு**ந்தரனின் தந்தை நோயாளி, பெரிதாக வேலை செய்யமாட்டார். அவர் உயிரோடு வாழ்ந்த காலத்திலேயே அவர்களை வறுமைவாட்டியது".

**"அ**வர் இறந்த பின்பு உணவுக்கே கஷ்டமாக இருந்தது. தாய் சில சமயங்களில் உண்ணாமல் பசியோடு இருப்பது தெரிந்தும் சுந்தரன் தீய செயல்களில் ஈடுபடாது வாழ்ந்து வந்தான். அவன் வழியில் கிடந்த பணப்பையை எடுத்துக் கொண்டு வந்தபோது அவனது தாயார் அதைப் பிரித்துப் பார்க்க விரும்பினார். அதற்குச் சுந்தரன் சம்மதிக்கவில்லை, "அம்மா, இதைப் பிரித்துப் பார்த்தால் அதனுள் இருக்கும் பொருட்களைக் கண்டதும் மனதில் ஆசைவரும். அதனால் களவெடுக்க வேண்டிய சூழ்நிலையும் வரும். களவெடுப்பது பாவம். யாரோ கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை நாம் அபகரிக்க வேண்டும் என்று நினைத்தலாகாது. ஏனென்றால் நினைவுதான் செயலாகிவிடும்" என்று சொல்லிவிட்டு அப்பொதியைக் கொண்டு சென்று சிவஞானத்திடம் கொடுத்தான். சபையோர்களே பெற்ற தாய் பசியால் வாடியபோதும் சுந்தரன் ஒழுக்கமானவர்கள் பிறர் பழிப்பதற்கான செயல்களைச் செய்யமாட்டார்கள்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் விநாயகமூர்த்தி.

**வி**நாயகமூர்த்தி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "பழிமலைத்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழிநல் குரவேதலை" சபையோர்களே, வள்ளுவர் பழிக்குக் காரணமான இழிவான தொழில்களைச் செய்து செல்வத்தைச் சேர்ப்பதைவிட நல்லவர்களாக வாழ்ந்து வறுமையில் வாடுவது சிறப்பானது என்று கூறியுள்ளார். சுந்தரனைத் தனது புத்திரனாகக் கருதி நீதி நூல்களையும், அறநெறிக் கதைகளையும் சிவஞானம் கூறி வந்தமையால் அவனுக்குத் தீயசெயல்களைச் செய்யக் கூடாது

என்ற நினைவு மனதில் தோன்றி உறுதியாகி விட்டது. இருந்தபோதும் அவன் வடிவேலுவின் பணப்பையை எடுத்து வந்து கொடுத்ததோடு, அவர் கொடுத்த சன்மானத்தையும் வாங்க மறுத்தது அவருக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர் அவனை அழைத்துக் கேட்டார், "மகனே, நீ வடிவேலுவின் பெறுமதிமிக்க பணப்பையைக் கொடுத்தது சரி. ஏன் அவர் தந்த பணத்தை வாங்கமறுத்தாய். உனது குடும்பம் வறுமைப்பட்டிருந்தபோதும் அதை நீ வாங்காதது ஆச்சரியத்தைக் கொடுத்தது என்றார்".

"**ஐ**யா, உங்களது அறம் சார்ந்த பேச்சைக் கேட்ட பின் ஒழுக்கமாக வாழ்ந்தால் கடவுளின் அனுக்கிரகம் கிடைக்கும் என்கிறீர்கள். வீமன் என்ற நாயின் கதையையும் சொன்னீர்கள். வீமனும் என்னைப் போலச் சிறுவயதில் தந்தையை இழந்தவன். அவன் தனது ஆசிரியரின் சொற்படி வாழ்ந்து வந்தவன். அவனது குடும்பம் மிகவும் வறியது. அதனால் அவன் ஆசிரியரின் உதவியோடு ஒரு வர்த்தக நிலையத்தில் மாலைவேளைகளிலும், விடுமுறைநாட்களிலும் வேலை செய்து வந்தான். அவனது ஒழுக்கத்தைக் கண்ட முதலாளி அவனைப் படிப்பித்தார். அவன் பெரிய அதிகாரியானான். பின் வர்த்தகர் தனது மகளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்துத் தனது சொத்துக்களையும் கொடுத்ததாகச் சொன்னீர்கள்".

"**எ**ன்றபோது சிவஞானம் கேட்டார்" அது சரி. அவர் சன்மானமாகத் தந்த பணத்தை ஏன் வாங்காது விட்டாய்".

**அ**தற்கு சுந்தரன் சொன்னான், "ஐயா, நீங்கள் சொன்னபடிதான் நான் வாழ்கிறேன். ஒருவருக்கு உதவி செய்தால் அதற்குப் பிரதியுபகாரத்தை எதிர்பார்க்கக் கூடாது. அப்படி எதிர்பார்த்தால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. கடவுள் அனைத்தையும் அறிபவர். அவர் வேண்டிய நேரம் உதவி செய்வார் என்கிறீர்கள். அதை நான் நம்பியுள்ளேன்" என்று கூறி விநாயகமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

**வி**நாயகமூர்த்தி எட்டாவது குரலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார் ''கடிந்த கடிந்து ஓரார் செய்தார்க்கு அவைதாம் முடிந்தாலும் பீழை தரும்'' சபையோர்களே சுந்தரம் சொன்னான், ''ஐயா நீங்கள் ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று கூறி கூறும் ஒழுக்ககருத்துகளுக்குப் பொருத்தமான கதைகளையும் கூறுவீர்கள். ஒழுக்கமாக வாழ்பவன் ஆரம்பத்தில் பல துன்பங்களை சந்தித்தாலும் இறுதியில் கடவுள் அருளால் பெற

வேண்டிய செல்வங்களையெல்லாம் பெற்று குடும்பத்தினருடன் இன்பமாக வாழ்வான் என்று பல கதைகளில் கூறினீர்கள். அதில் விமனின் கதை எனக்கு மிகவும் பிடித்தது''.

**"மா**றன் என்ற நரி ஒரு ஏமாற்றுப் பேர்வழி. அது பலரிடம் வட்டிக்கு பணம் பெறும். ஆனால் திருப்பிக் கொடாது. கொடுத்தவர்கள் கேட்டால் தீய வார்த்தைகளால் ஏசும், "இப்ப நான் என்ன செத்தா போனேன்? நான் யாருக்காவது பணத்தை கொடுக்காது விட்டேனா?'' என்று கேட்கும். அது ஒரு வர்த்தக நிலையம் நடத்தி வந்தது. பொருட்களை அதிக விலைக்கு விற்கும். தரக்குறைவான பொருட்களை தரமான பொருட்கள் என்று மலிவாக விற்கும். கலப்படம் செய்யும். அது தனது வீட்டோடு சேர்த்தே வர்த்தக நிலையத்தையும் கட்டியிருந்தது. ஒரு நாள் நள்ளிரவு மின் ஒழுக்கு காரணமாக வர்த்தக நிலையமும் வீடும் முற்றாக இருந்து சாம்பலாகி விட்டது என்று கூறினீர்கள். அதன் பின் தீய செயல்களை நினைக்கவே எனக்கு பயமாக இருக்கிறது'' என்றான் சுந்தரன். என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார் விநாயகமூர்த்தி.

**வி**நாயகமூர்த்தி ஒன்பதாவது குரலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார் "அழக் கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும் பிற்பயக்கும் நட்பாலவை'' சபையோர்களே சிவஞானத்திற்கு சுந்தரம் சொன்னான், "ஐயா, நீங்கள் சொன்ன அறக்கருத்துக்களையும், அறநீதி கதைகளையும் நான் எப்போதும் நினைவில் வைத்திருக்கிறேன். அவையாவும் உண்மையானவை. ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டு தேடிய செல்வத்தை இன்னொருவர் வஞ்சகமான முறையில் பறித்தால், கஷ்டப்பட்டு பொருளைத் தேடியவன் எவ்வளவு துன்பப்படுவான் அந்தத் துன்பத்தை அவனிடம் ஏமாற்றி பறித்தவன் வருந்தி அழும்படி அப்பொருள் அவனை விட்டு நீங்கிச் சென்றுவிடும் என்றீர்கள். அது உண்மை. மாறன் பிறரை ஏமாற்றிப் பொருளைச் சேர்த்தான். அவனது பரம்பரை சொத்துகளும் அழிந்துவிட்டன. கடன்காரர் கண்ட இடத்தில் அவனைத் தாக்குகின்றனர். சிறிய தொகையானால் கொடுத்து உதவலாம். பெருந்தொகையை எப்படிக் கொடுப்பது. செய்த வினையை அனுபவிக்கதானே வேண்டும். அவனது நிலையை பார்த்து ஏனையோர் திருந்த வேண்டும் என்று சுந்தரனன் கூறினான்'' என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார் விநாயகமூர்த்தி.

**வி**நாய மூர்த்தி பத்தாவது குரலை பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார். "சலத்தால் பொருள் செய்து ஏமார்தல் பசுமண் கலத்துள் நீர் பெய்து இரீஇ யற்று'' சபையோர்களே சிவஞானத்துக்கு சுந்தரம் சொன்னான், "ஐயா, உங்களைப் போன்று பெரியவர்களின் நட்பைப் பெற்ற எவரையும் யாரும் ஏமாற்ற முடியாது. என்னுடன் படித்த

சிவராமன் என்ற எருதை நீங்கள் அறிவீர்கள். அவன் ஒழுக்கமானவன், பிறரின் பொருள்களுக்கு ஆசைப்படாதவன். அதனால் தான் நான் பாடசாலையை விட்டபின்பும் நட்பை தொடர்ந்தேன். சமீப காலமாக அவனது நடத்தையில் மாற்றம் இருப்பது போல எனக்குத் தெரிந்தது. நீங்கள் கூறியபடி நான் வாழ்வதால் எச்சந்தர்ப்பத்திலும் நான் ஏமாறமாட்டேன். ஒருநாள் அவன் வந்து தனது தொழிலை விஸ்தரிக்க இரண்டு லட்சம் ரூபாய் வேண்டும் என்று கேட்டான்.

“**இ**தற்கு முன் அவன் என்னிடம் கடன் கேட்டதில்லை. அதனால் விசாரித்துப்பார்த்தேன். எனக்கு நம்பிக்கையானவர்களை விசாரித்த போது அவன் சிலதுட்ட நண்பர்களுடன் சேர்ந்து தடை செய்யப்பட்ட பொருட்களை முல்லைவனத்தில் இருந்து திரவிய வனத்துக்கு கடத்தி வந்து விற்பனை செய்கிறான் என்று கூறினர். பல ஆண்டுகளாக நண்பனாக இருந்த ஒருவன் தீயவர்களுடன் சேர்ந்து வஞ்சகமான வழியில் பொருள் தேடுவதை அறிந்ததும் எனக்கு மன வருத்தமாக இருந்தது’’.

“**அ**தனால் அவனிடம் சென்று, ‘‘சிவராமா, தீயவழிகளில் பொருளைத் தேடக்கூடாது. அது உனது குடும்பத்துக்கு கெட்டதையும், அவமானத்தையும் தரும். அதனால் நீ செய்யும் தீய தொழிலை விட்டுவிட்டு. உனக்கு தேவையான பணத்தை நான் தருகிறேன்’’ என்றேன்.

“**ந**ண்பா, நீ ஒரு வருடம் முழுவதும் உழைத்து சம்பாதிக்கும் பணத்தை நான் இரண்டொரு தினங்களில் சம்பாதித்து விடுவேன். நீதி, நியாயம், ஒழுக்கம் என்பதை பற்றி பேசலாமே தவிர, அதை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றான்.

“**அ**ப்படி சொல்லாதே தீயவழியில் மாறன் தேடிய சொத்து முழுவதும் அழித்துவிட்டது. ஒழுக்கமான முறையில் தேடிய செல்வம் கிணற்று நீரைப் போன்றது. இறைக்க இறைக்க கிணறு ஊறுவது போல நீதியான முறையில் தேடிய செல்வமும் எடுக்க எடுக்கப் பெருகுமே தவிர, குறையாது. நீ பச்சை மண் பாத்திரத்தில் நீரைச் சேமிக்கிறாய். அது விரைவில் அழிந்து விடும். தயவுசெய்து இனிமேல் என்னுடன் தொடர்பு கொள்ளாதே’’ என்று கூறிவிட்டு வந்தேன். சில தினங்களின் பின் சிவராமன் முல்லைவனத்தில் இருந்து கடத்தி வந்த தடை செய்யப்பட்ட பொருட்களைக் கடற்கபடையினர் கைப்பற்றியதோடு, அவனை கைது செய்தனர். அவனது தீய நண்பர்களின் ஆசை வார்த்தைகளை நம்பிச் சிவராமன் தனது முழுச் சொத்துக்களையும் இழந்துவிட்டான்’’ என்று கூறி விநாயமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

## 09

**வி**நாயகமூர்த்தி தனது உரையை நிறைவு செய்ததும், மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்தார், ''சபையோர்களே, நாம் எதிர்பார்த்தைவிடச் சிறப்பாக விநாயகமூர்த்தி பேசினார். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை மிகமிக அமைதியாக இருந்து விருப்புடன் அவரது பேச்சைக் கேட்டனர். குறள்களுக்குப் பொருத்தமான சுவையான கதைகளை அவர் எல்லோரும் விரும்பும்படி மிகவும் எளிமையான தமிழில் பேசினார். கதைகளைச் சிறுவர்கள் அமைதியாக இருந்து கேட்டதே எமக்கு உற்சாகத்தைத் தந்துள்ளது. குறள்தோன்றி இரண்டாயிரம் வருடங்களாகின்றன. இவ்வளவு காலமும் குறளுக்கு உரைமட்டுமே எழுதப்பட்டது. பேசப்பட்டது. எமது தமிழறிஞர் அனைத்துக் குறள்களுக்கும் பொருத்தமான கதைகளை எழுத வேண்டும் என விரும்பி ஒரு குறளுக்குப் பல கதைகளை எழுதினார். அத்துடன் தனது மாணவர்களையும் கதைகளை எழுதுமாறு ஊக்குவித்தார். அதன் பயன்தான் இந்த மகாநாடு. அடுத்து இறைமகள் என்ற பஞ்சவர கிளி வினைத்திட்பம் என்ற அதிகாரத்தைப் பற்றிய உரையும், கதையும், விளக்கமும் அளிப்பார். அவர் ஒரு நடன ஆசிரியை. சகல இலக்கியங்களையும் கற்றவர். பல மேடைகளில் நடன அரங்கேற்றம் செய்தவர். அவர் இப்போது பேசுவார்'' என்று கூறித் தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

**இ**றைமகள் அழகாகப் பறந்து மேடைக்கு வந்தாள். ''சபையோர்களே, இப்பெரிய மகாநாட்டில் பெருந்தொகையான பார்வையாளர் மத்தியில் என்னைப் பேசுமாறு அழைத்தமைக்குத் தமிழறிஞர்தான் காரணம். அவர் தான் எனக்கு எல்லாம். அவரது ஆக்கங்களை வாசித்துத் திருத்தும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமையால்தான் நான் பேசக் கூடிய தகுதியைப் பெற்றேன். அவருக்கு எனது வாழ்த்துகள்'' என்ற இறைமகள் வினைத்திட்பம் என்ற அதிகாரத்தின் முதலாவது குறளை இனிமையாகப் பாடியவாறு நடனமாடினாள். ''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்; மற்றைய எல்லாம் பிற'' சபையோர்களே ஒருவர் வேலை செய்வது எதனால் என்று யாராவது சொல்லுங்கள் பார்ப்போம். சபை அமைதியாக இருந்தது. பின் சலசலப்பு ஏற்பட்டதே தவிர யாரும் பதில் கூறவில்லை. அதனால் இறைமகள் சொன்னாள், ''இதென்ன கேள்வி என்று நினைக்கிறீர்கள். ஆரம்பத்தில் கைகளால்தான் அனேகமான தொழில்களைச் செய்கிறோம். அதற்கு உதவியாக இருப்பது மூளை என்று நினைத்தேன். ஆனால் தமிழறிஞர் அதை மாற்றிவிட்டார். ஒரு செயலைச் செய்வது மனம். ஒரு செயலின் வலிமை என்பது செயலைச் செய்பவனின் மன வலிமையே ஆகும். மனதைத்தவிர ஏனையவையாவும் மனவலிமைக்குப் பிறகுதான்''.

**அ**து ஒரு மலைப் பாதை. இரவு பெய்த மழை காரணமாக மலையின் உச்சியில் இருந்த ஒரு பெரிய கல் உருண்டு வந்து மலையூடாகச் செல்லும் பாதையின் குறுக்கே விழுந்துகிடந்தது. வழிப்போக்கர்கள் அதை நின்று வேடிக்கை பார்த்துவிட்டுச் சென்றனர். இருசக்கர வாகனங்களும், முச்சக்கர வாகனங்களும் சிரமத்தின் மத்தியில் ஒருவாறு சென்றுவிட்டன. முகுந்தன் என்ற மானும் அவனது நண்பனான சரவணன் என்ற எருமையும் மோட்டார் வண்டியில் வந்தனர். பாதையால் சிலர் சென்று கொண்டிருந்தனர். ஒருவன் சொன்னான், ''இப்பாதையில் அடிக்கடி மண்சரிவு ஏற்படும். கீழே திரும்பிச் சென்று வடக்குப் பக்கமாகச் செல்லும் பாதையால் தான் இப்பாதை தடைப்படும் போது வாகனங்கள் செல்லும். அப்படிச் செல்லுங்கள்'' என்றான்.

**''மு**குந்தா, வா அப்பாதையால் செல்வோம்'' என்றான் சரவணன். ''அது நெடுந்தூரப் பாதை. கல்லை உருட்டிவிட்டுப் போவோம்'' என்றான் முகுந்தன்.

**''உ**து பெரியகல். உருட்ட முடியாது, தூரமென்றாலும் அப்பாதையால் தான் செல்ல வேண்டும். வேறு வழியில்லை'' என்றான் சரவணன்.

**''நீ** எதைச் சொன்னாலும் மறுப்பாய். இல்லாவிட்டால் முடியாது என்பாய். முயற்சி செய்யாமல் முடியாது என்று சொல்பவர்கள் பலவீனர்கள். ஒரு செயலைச் செய்யலாமா, செய்யக்கூடாதா என்று முடிவெடுப்பது மனம். மனத் தைரியமுள்ளவர்கள் முடியாது என்று எச்செயலையும் கைவிடமாட்டார்கள். வா'' என்று அவனை அழைத்துச் சென்று கல்லைப் பார்த்தான். அது பெரிதாக இருந்தது. அப்போது இருவர் அப்பாதையால் நடந்து வந்தனர். முகுந்தன் அவர்களை உதவிக்கு அழைத்தான். அவர்கள் வந்ததும் நால்வருமாகச் சேர்ந்து ஓரிரு நிமிடத்தில் கல்லை உருட்டிக் கரையில் விட்டனர்''.

**''க**ல்லை உருட்டிவிட்ட பின் முகுந்தன் சொன்னான், ''ஒரு செயலைச் செய்யுமுன் அதைச் செய்ய முடியாது என்று தீர்மானிக்கக் கூடாது. முயன்றுபார்க்க வேண்டும். முயற்சி எப்பொழுதும் வெற்றியைத் தரும். கல்லை உருட்டிவிட்டதால் நாம் போகவேண்டிய இடத்திற்குப் போகவேண்டிய நேரம் போய்விடலாம். எந்தச் சூழ்நிலையிலும் பலவீனமான எண்ணங்களை எண்ணக்கூடாது'' என்று முகுந்தன் சொன்னான்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ''ஊறு ஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் ஆய்ந்தவர் கோள்'' சபையோர்களே சரவணன் சொன்னான், ''முகுந்தா, நீ எதற்கும் பயப்படுவதுமில்லை. தயங்குவதுமில்லை. துணிந்து செயலில் இறங்கிவிடுவாய். உனது செயலால் இன்று பலர் பயனடைந்துள்ளனர். என்னால் அப்படி நடந்து கொள்ள முடிவதில்லை. நீ எப்படித்தான் சொன்னாலும் எனக்குப் பயமாக இருக்கிறது. ஒரு தொழிலைத் தனியாகத் தொடங்கினால் நட்டமடைந்தால் எப்படி அதை நீக்குவது என்று பயப்படுகிறேன்".

**"ஒ**ரு தொழிலில் நட்டமும் வரும் இலாபமும் வரும். அதனால் எமது அறிவைப் பயன்படுத்தி ஒரு துன்பம் அதாவது நட்டம் வந்தால் என்ன செய்யவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். கவனமாகச் செயற்பட்டால் நட்டம் வராது. சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் துன்பங்கள் வரலாம். அப்போது மனம்தளராது வந்த துன்பங்களை எப்படிப் போக்குவது என்று சிந்திக்க வேண்டுமேதவிர மனம் உடைந்துபோகக் கூடாது. இது எந்தத் தொழிலைச் செய்பவர்களுக்கும் பொருந்தும்".

**"வி**யாபாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்த நான் ஒரு சிறிய பலசரக்குக் கடையைத் தொடங்கினேன். பலர் உதவி செய்தமையால் அச் சிறுகடை பெரிய கடையாயிற்று. அதன்பின் பொருட்களைப் பெருந்தொகையாக வாங்கி விற்க ஆரம்பித்தேன். ஒருமுறை நெல்லைக் கொள்வனவு செய்து விற்றதில் பெரும் லாபம் அடைந்தேன். இன்னொருமுறை நெல்லைக் கொள்வனவு செய்து விற்றபோது பெரும் நட்டமைந்தேன். லாபம் அடையும்போது நான் மகிழவும் இல்லை. நட்டமடைந்த போது கலங்கவும் இல்லை. அதற்குக் காரணம் ஆயிரம் ரூபாவுடன்தான் நான் தொழிலை ஆரம்பித்தேன். நட்டமடையும் போது பல இலட்சம் ரூபாவிற்குச் சொந்தக்காரனாக இருந்தேன். வாழ்வில் எதுவும் நடக்கும். அதற்காக நடக்காத ஒன்று நடந்துவிடுமோ என்று பயப்படுவது கூடாது. அது மனதைப் பலவீனப்படுத்தும். என்னால் செய்யமுடியும் என்று நினைப்பவன் தான் வாழ்க்கையில் வெற்றியடைவான். நீயும் நானும் ஒன்றாகப் படித்தோம். உனது தந்தை பெரிய பணக்காரர். ஆனால் எனது தந்தை ஒரு கூலித்தொழிலாளி. அப்படியிருக்கும்போது எனது மனவலிமை தான் என்னை உயர்த்தியது" என்று முகுந்தன் சரவணனுக்குக் கூறியபோதும் அவனது மனம் பலவீனமாகவே இருந்தது" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், "கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை, இடைக்கொட்கின் ஏற்றா விழுமம் தரும்" சபையோர்களே, ஒரு செயலைச் செய்யத்தொடங்குமுன் அதுபற்றிய எந்தத் தகவல்களையும் யாரிடமும் சொல்லக்கூடாது, மீறிச் சொன்னால் அத்தொழிலைச் செய்யமுடியாத நிலை தோன்றும். பல இடர்கள் வந்து சேரும். கேட்போர் கேலிசெய்வர். முகுந்தன் சரவணனுக்குச் சொன்னான், "சரவணா, எதைச் செய்ய நினைத்தாலும் அதை மனதுள்வைத்துக் கொள்ளல் வேண்டும். என்னைப் பொறுத்தவரை மனைவிக்குக்கூடச் சொல்வதில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

**"எ**னது வர்த்தகப் பங்காளியான ரவீந்திரன் பத்து ஏக்கர் வயல்நிலத்தை வாங்க விரும்பினான். அவன் தனது மனைவிக்கு எதையும் மறைப்பதில்லை. அதனால் வயல் நிலத்தை வாங்கும் விடயத்தை மனைவிக்குச் சொன்னான். அவனது மனைவி தற்பெருமை உடையவள். அந்த விடயத்தைத் தனது தந்தைக்குச் சொல்லிப் பெருமைப்பட்டாள். அவர் மதுபானம் அருந்துபவர். அவர் தனது நண்பன் ஒருவனுக்கு அதைப் பெருமையாகக் கூறினார். அவன் பலருக்குச் சொல்லிவிட்டான். அதனால் இன்னொருவன் ரவீந்திரன் கொடுக்கச் சம்மதித்த தொகையைவிடக் கூடுதலாகக் கொடுத்து அந்த வயலை வாங்கிவிட்டான். மனைவி, தந்தை, தாய் போன்றவர்கள் தமது கணவன், பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசத்தை வைத்திருப்பதால் அவர்கள் செய்வதைப் பிறரிடம் பெருமையாகச் சொல்லி மகிழ்வர். எனவே அவதானமாக இருத்தல் வேண்டும்".

**"நீ**யும், ரவீந்திரனது மனைவியைப் போன்றவன். செய்ய நினைப்பதைப் பெருமையாகப் பிறரிடம் கூறிவிடுவாய். அதனால் நீ பல அவமானங்களை அடைந்தும் திருந்துகிறாயா" என்று முனுந்தன் சரவணனுக்குக் கூறினான்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" சபையோர்களே சொற்கள் மிகவும் வலிமையானவை. அவை சொல்பவனின் மனவலிமையைப் பொறுத்தே அர்த்தத்தைத் தரும். மனவலிமை உள்ள ஒருவர் ஒரு சொல்லைச் சொன்னால் அதில் அர்த்தம் இருக்கும். வலிமை இருக்கும். உயர்வைக் கொடுக்கும். பலவீனன்

ஒரு சொல்லைச் சொன்னால் அதில் அர்த்தமிராது. வலிமை இராது. உயர்வு இராது. ஏனையோர் அதைக் கேலிச்சொல்லாகவே மதிப்பர். அதனால் அவமானம் ஏற்படும்".

**மு**குந்தன் சரவணனுக்குச் சொன்னான், "நண்பா, நீ என்னிலும் பார்க்கப் பணக்காரன். உழைக்காது இருந்தால் உனது சொத்துக்கள் நாளடைவில் அழிந்துவிடும். அதற்காகத்தான் உன்னை ஒரு தொழிலை ஆரம்பிக்குமாறு கூறுகிறேன். குத்தி இருந்து உண்டால் குன்றும் குழியாகுமென்று பெரியவர்கள் சொல்வார்கள். உனது தந்தை உன்னைப் பற்றிக் கவலைப்படுகிறார். தான் இல்லாதகாலத்தில் இவனை ஏமாற்றிவிடுவார்கள். நான் உயிரோடு இருக்கும் போது ஒரு தொழிலை ஆரம்பிக்கச் சொல். நீ அவனது உயிர் நண்பன். நீ சொன்னால் அவன் கட்டாயம் கேட்பான். அதனால் ஒரு பொருத்தமான தொழிலை ஆரம்பிக்கச் செய்" என்கிறார். அவரது நிலையைப் பார்க்க எனக்குக் கவலையாக உள்ளது" என்றான்.

**"நா**ன் என்ன தொழிலைச் செய்வது என்றுதான் யோசிக்கிறேன்" என்று சரவணன் சொன்னபோது முகுந்தன் சொன்னான், "இதெல்லாம் யோசிக்கக்கூடிய செயலல்ல. முடிவெடுக்க வேண்டிய செயல். முன்பும் நீ பல தொழில்களைச் செய்யப்போவதாகச் சொன்னாய். அதை நம்பி உனது தந்தை உனக்குத் திருமணம் பேசினார். உனது தாய்மாமன் என்ன சொன்னவர் என்று சிந்தித்துப்பார்.

**"அ**வன் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தொழிலைச் செய்யப்போவதாகச் சொல்வானே தவிர செயலில் இறங்கமாட்டான். அவனை நம்பி எனது மகளைத் திருமணம் செய்து கொடுக்கமாட்டேன்" என்றது உனக்குத் தெரியும். அவற்றைத் தெரிந்திருந்தும் நீ தொடர்ந்து அதைச் செய்யப்போகிறேன், இதைச் செய்யப்போகிறேன் என்பாய். ஆனால் எதுவும் செய்யமாட்டாய்".

**"ம**னதில் உறுதியுள்ளவர்களுக்குச் செயலின்தன்மை விளங்கும். விளங்காவிட்டால் அவர்கள் பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். எனது குரு தமிழறிஞர். நீ அவரிடம் சென்று ஆலோசனைகளைக் கேள் என்று சொன்னேன். நீ அதைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை. எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்துகொண்டு பிறப்பதில்லை. மனவலிமையால் தான் அறிகிறார்கள். அறிந்ததைச் செய்கிறார்கள். பயனில்லாத பேச்சுக்களைப் பேசுபவர்கள் பைத்தியக்காரர்கள். உன்னை ஊரவர் அப்படித்தானே பேசுகின்றனர். சொல்வது இலகுவானது.

அதைச் செய்து முடிப்பது மிகவும் கடினமானது. அதனால் இனியாவது திருந்தப்பார்" என்று முகுந்தன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள், "வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப்படும்" சபையோர்களே தனது செயல்திறனால்தான் நினைத்ததைச் செய்து முடித்துப் புகழ்பெற்றவர்களின் திறமையை நாட்டை ஆளும் மன்னனும் போற்றிப் புகழ்வான். செயல்திறன்மிக்கவர்கள் தான் நினைத்தவற்றை, நினைத்தவாறு செய்து முடிப்பர். முகுந்தன் செயல்வீரன். ஒரு சிறிய வியாபார நிலையத்தை நிறுவித் தனது திறமையால் அதைப் பெரிய வர்த்தக நிறுவனமாக்கியவன். அத்துடன் கமக்காரர்களின் விளைபொருட்களை நியாயவிலையில் வாங்கி விற்பனை செய்கின்றவன். அதனால் அவன் பெரும் தனவந்தனானான்".

**அ**ப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. திரவிய வனத்தில் உள்ள வியாபாரிகள் வேறு வனங்களுக்குச் சென்றுதான் தமக்குத் தேவையான உடைகளை வாங்கிவந்து விற்பனை செய்தனர். அதனால் உடைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் திரவிய வனத்தில் நிறுவினால் நல்லது என்று நினைத்துப் பெரியதோர் ஆடைத் தொழிற்சாலையைத் தொடக்கினான். அது தொடங்கி ஐந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவன் ஐந்தாவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட விரும்பி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்".

"**அ**தை அறிந்த திரவிய வனத்தின் பிரதமரான நாகலிங்கம் என்ற சிங்கம் அவனைக் கௌரவப்படுத்த விரும்பியது. விழாவன்று நாகலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்ததோடு பரிசும், சான்றிதழும் வழங்கிக் கௌரவித்தது. அது பேசும்போது சொன்னது, "எனக்குத் தெரிந்த காலம் முதல் எமக்குத் தேவையான துணிமணிகளை நாம் முல்லைவனத்தில் இருந்தே பெற்றுவந்தோம். முகுந்தன் ஆடைத்தொழிற்சாலையைத் தொடங்கிய பின்பு எம்மவர் இங்கேயே மலிவாகத் தமக்குத் தேவையான ஆடைகளைப் பெற்று வருகின்றனர். இது ஒரு பெரிய சாதனையாகும். அதற்காக நான் முகுந்தனைப் பாராட்டுவதோடு, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறேன்" என்றார்.

"**ச**பையோர்களே, மனவலிமை உள்ளவர்கள் தாம் நினைத்தவற்றைத் தாம் நினைத்தபடி செய்து முடிப்பர். இப்போது முகுந்தன் வேறு பல வனங்களுக்கும் ஆடைகளை ஏற்றுமதி செய்கிறான்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், "எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின்" சபையோர்களே ஒருவர் தான் எண்ணியபடி செயலைச் செய்யும்போது பலதடைகள் வரும். பிரச்சினைகள் வரும். பற்றாக்குறைகள் வரும். இவற்றையெல்லாம் ஏற்று வெற்றி பெறுபவர் தான் எண்ணியதை எண்ணியபடி செய்து முடிப்பவர். முகுந்தன் ஆடைத் தொழிற்சாலையை ஆரம்பித்ததும் பல பிரச்சினைகள் வந்தன. அவன் ஆடைத்தொழிற்சாலைக்கு ஒருவரிடம் வாங்கிய நிலம் தன்னுடையது என்று ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்குப் பொய்யானது என்று நிறுவ ஒருவருடம் சென்றது".

**"மு**ல்லை வனத்தின் ஆடைத்தொழிற்சாலை முதலாளி பெரும் தனவந்தன். அவன் முல்லை வனத்தைச் சேர்ந்த தீயவர்களுக்குப் பணம் கொடுத்து கட்டிடத்தை இடித்தல், தீவைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டான். அதை முகுந்தன் காவல்துறைக்கு முறையிட்டு அப்பிரச்சினைகளை நீக்கினான். அவன் ஒருநாள் திரவிய வனத்து இளைஞர்களையும், இளம் பெண்களையும் அழைத்துச் சொன்னான், "நண்பர்களே, உடை என்பது மிகவும் அத்தியாவசியமானது. ஒருவர் நல்ல உடைகளை வாங்கப் பெரும் பணம் செலவு செய்கிறார். உடைகளை இன்னொரு வனத்தில் இருந்து பெறுவதால் நீங்கள் பெரும் பணம் செலவு செய்கிறீர்கள். அதை இங்கேயே செய்தால் பணம் மிச்சமாகும். அத்துடன் வேலை இல்லாது இருக்கின்ற ஆயிரம்பேருக்கு வேலையும் கொடுக்க முடியும். அதனால் சிந்தித்துச் செயற்படுங்கள்" என்றவன்.

**அ**தன்பின் தீயசெயல்கள் நடைபெற இளைஞர்கள் விடவில்லை. முகுந்தன் திறமையானவன், மனவலிமை உள்ளவன். எதிர்காலத்தின் தேவையை அறிந்தவன். அவன் எதை எண்ணினாலும் அதைச் செய்துமுடித்துவிடுவான். அதற்குக் காரணம் அவனது மன உறுதிதான். மனம் தளர்ந்தால் எண்ணியவற்றை இடைநடுவில் விட்டுவிடுவர். மனவலிமை உடையோர் தன்னை நாடிவரும் எதிர்ப்புக்களைத் தனது எண்ணத்தால் முறியடித்துவிடுவர்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், "உருவு கண்டு எள்ளாமை வேண்டும். உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" சபையோர்களே ஒருவரது உருவம் அவர் உடுத்தியிருக்கும் உடை

முதலியவற்றைக் கொண்டு அவரது தகுதியைக் கணிப்பிடலாகாது. அவரது செயற்பாடுகளைக் கண்டே அவரது கல்வி அறிவு, தகுதி, தராதரம் பற்றி முடிவெடுக்க வேண்டும். பெரும் பெரும் ஞானிகள், அறிவாளிகள், பேதைகள் தமது தகுதி தராதரங்களை வெளிப்படுத்தக் கூடியவாறு நடந்துகொள்வதில்லை. முகுந்தன் வேதனத்தில் உள்ள ஒரு பெரியவரிடம் தனது எண்ணங்களைக் கூறி அதை நிறைவேற்றும் வழிவகைகளையும் கூறுவான். அப்பெரியவர் அவனது கருத்துக்களைக் கேட்டுவிட்டுப் பூரண மகிழ்வுடன் சிரித்தாரேயானால், அவன் அதை உடனே செய்து முடித்துவிடுவான். தாமதித்து எதையாதும் சொன்னால் அதை அவன் சிறிது தாமதித்துச் செய்வான். இது பலவருடங்களாக நடைபெற்றுவருகிறது".

"**ஒ**ருமுறை சிவகுரு என்ற பெரியவரான யானையிடம் செல்லும்போது அவன் சரவணனைப் பேச்சுத்துணைக்கு அழைத்துச் சென்றான். சிவகுரு மெலிந்த தோற்றத்தை உடையவர். கோவணத்தைக் கட்டியிருப்பார். அதிகம் பேசமாட்டார். அவன் வர்த்தக நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காகவே சென்றான். முகுந்தன் சிவகுருவின் பாதங்களைப் பணிந்து அவரை வணங்கித் தனது உணர்வுகளை ஒடுக்கிக் கண்களை மூடியபடி நின்றதைப் பார்த்து சரவணனுக்குச் சிரிப்பு வந்தது".

**அ**வர்கள் திரும்பி வரும்போது சரவணன் கேட்டான், "இவரையா பெரியஞானி, அறிவாளி, முக்காலமும் உணர்ந்தவர் என்று சொல்கிறாய். ஒரு நல்ல ஆடை அணியாது கோவணத்துடன் குந்தியிருக்கும் இவர் ஒரு பெரியஞானி. நீ ஒரு பெரிய வர்த்தகன். கோவணத்துடன் குடிசையில் தங்கியிருக்கும் ஒருவரைப் பெரியவர் என்று கூறுவது நகைப்புக்குரியது. அவர் பெரும்ஞானி. நடப்பவற்றைச் சொல்பவர் என்றால் தான் ஒரு வசதியான வீட்டைக் கட்டி இருக்கலாம் தானே" என்றான்.

"**ச**ரவணா, உனது கேள்விகளுக்குப் பதில் கூற என்னால் முடியாது. அவரவரது மனம் எதை எண்ணுகிறதோ, அதுவே சரியானது என்று அவர்கள் நம்புகின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அமைப்பு உண்டு. அதைத் தீர்மானிப்பது மனம். நாம்தான் நாள்கோள், நட்சத்திரம் பார்க்கிறோம் என்றில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளான அமெரிக்கா, ரஸ்சியா, ஜேர்மனி போன்ற நாடுகளும் தாம் செய்யும் செயல்களுக்கு நாள், கோள் பார்க்கின்றன. ரஸ்சியா அண்மையில் விண்ணுக்கேவிய விண்கலத்திற்கும் பலகாலத்திற்கு முன்பே அனுப்பும் நாள், நேரம் என்பன தீர்மானிக்கப்பட்டன. பூமி வட்டவடிவமானது. தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுவதாகத் திருமூலர் திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

“**தி**ருமந்திரம் ஐயாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட நூல். எம்மவர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறியதை எம்மவரே நம்புவதில்லை. பூமி சுற்றுவதால் இன்று ஞாயிற்றுக்கிழமை என்கிறோம். இன்னொரு நாடு சனிக்கிழமை என்று சொல்லும். திருமணத்தை நாம் அட்டமிநவமியில் செய்வதில்லை. எனது அண்ணாவின் மகன் அமெரிக்காவில் வாழ்கிறான். இங்கு திங்கட்கிழமை நல்லநாள். அங்கு செவ்வாய்க்கிழமை அட்டமி. இதை எதுவும் செய்ய முடியாது. அனுசரித்துத்தான் போகவேண்டும்”.

“**எ**ன்னை மனவலிமை உள்ளவனாக மாற்றியது சிவகுருசாமியார். அதை நான் நம்புறன். உனது நம்பிக்கை எனக்கு உதவாது. ஒருவரது தோற்றம், உடைகள் என்பது அவரது அறிவை வெளிப்படுத்துவதில்லை” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது தூக்கம் கடிந்து செயல்” சபையோர்களே தொழிலில் வேறுபாடோ, உயர்வு, தாழ்வோ இல்லை. இது சிறிய தொழில் இதைச் செய்து முன்னேற முடியாது. இது பெரிய தொழில் இதைச் செய்தால் இலகுவாக முன்னேறலாம் என்று நினைப்பது தவறு. முகுந்தன் சரவணனுக்குச் சொன்னான், “நான் அன்றன்று சந்தையில் பொருட்களை வாங்கி வந்து ஊருக்குள் விற்பனை செய்தது உனக்குத் தெரியும். இப்போது நான் பல வர்த்தக நிலையங்களுக்கும், இரண்டு தொழிற்சாலைகளுக்கும் முதலாளி. செய்யும் தொழில்தான் தெய்வம் என்பார்கள். அது முற்றிலும் உண்மை. தெய்வத்தைப் பயபக்தியுடன் வணங்குவதைப் போலச் செய்யும் தொழிலையும் புனிதமானதாக நினைத்துச் செய்தல் வேண்டும்”.

“**நீ** எத்தனை தொழில்களைத் தொடங்கிக் கைவிட்டாய். செய்வதென்று தீர்மானித்துச் செய்யத்தொடங்கிய தொழிலை மனம் கலங்காது, காலம் தாழ்த்தாது, தளராது, மனவலிமையுடன் முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் தொழில் பெரும் லாபம் தரும் தொழிலாகக் காலப்போக்கில் மாறிவிடும். உனக்குத் தெரிந்த சிவபாலன் என்ற குரங்கு பட்டணத்தில் உள்ள உடுபுடைவைகளை வாங்கிச் சிறியலாபம் வைத்து எமது வனத்தில் விற்பனை செய்து வந்தது”.

“**ஆ**ரம்பத்தில் கால்நடையாகத் தோளில் சுமந்து வியாபாரம் செய்த சிவபாலன் பின் ஒரு ஓட்டோ வாகனம் எடுத்து அதில் வியாபாரம் செய்தது. இப்போது சிவகுரு பெரிய புடைவை வியாபாரி. பெரியதொரு புடைவைக் கடையைத் திறந்து வியாபாரம் செய்கிறது. அதில்

ஐம்பதிற்குமேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். சிவகுரு புடைவை வியாபாரம் செய்யும்போது நீ இயந்திரங்களின் உதிரிப்பாகங்களைவிற்பனை செய்தாய். இப்போது அதை மூடிவிட்டாய். மனத்தளர்ச்சி இல்லாது துணிவுடன், காலந்தாழ்த்தாது செய்யும் முயற்சி ஒருவரை இமயமாக உயர்த்தும்" என்று முகுந்தன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "துன்பம் உறவரினும் செய்க, துணி ஆற்றி இன்பம் பயக்கும் வினை" சபையோர்களே வாழ்க்கை துன்பங்கள் நிறைந்தது. சோதனைகள் மிக்கது. அவற்றைத் துச்சமாக மதிப்பவர்களால் தான் இன்பமாக வாழமுடியும். எந்த ஒரு செயலும் இலகுவானதல்ல. இலகுவானது என்று நினைப்பவர்கள்தான் வரும் துன்பங்களைக் கண்டு பயப்படுகிறார்கள். செய்யும் தொழிலை இடையிலே கைவிடுகிறார்கள். சோறு உண்பது கூட இலகுவானதல்ல. உண்பதற்கும் பெரியவர்கள் பல வழிமுறைகளைக் கூறியுள்ளனர். உணவை மகிழ்வுடன் இருந்து கடவுளின் நினைவோடு உண்ணுதல் வேண்டும். பல சிந்தனைகள், கவலைகளுடன் அவதானமின்றி உண்டால் உணவு புரையேறும், விக்கும். உணவு புரையேறி இறந்தவர்கள் உண்டு. அதிலிருந்து ஓர் உயிர் எதைச் செய்தாலும் அவதானமாகச் செய்தல் வேண்டும்.

**"மு**குந்தன் சரவணனுக்குச் சொன்னான், "சரவணா, உனக்கு நானும், வேறுபலரும் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லிவிட்டோம். அறிவுள்ளவனுக்கு ஒரு சொல் சொன்னால் புரிந்து கொள்வான். நீ புரிந்து கொள்ளும் அளவில் இல்லை. புபல தொழில்களைச் செய்து கைவிட்ட நீ எனது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கிச் சென்று விற்று வந்தாய் அதில் போதிய இலாபம் இல்லை என்றுகூறிக் கைவிட்விட்டாய். ஒரு தொழிலைச் செய்யத் தொடங்கினால் பல்வேறுவிதமான துன்பங்கள் தானாக வந்து சேரும். இது இயல்பானது. ஆரம்பத்தில் செலவிடும் முதலீட்டைப் பெறச் சில வருடங்களாகும். அதன்பின் வருவதெல்லாம் இலாபத்தைத்தந்து தொழில் செய்பவனை மகிழ்ச்சியடையச் செய்யும். இடையில் வரும் துன்பங்களை மனவுறுதியுடன் தாங்கிக் கொள்ள வேண்டும். எந்தத் தொழிலும் ஆரம்பத்தில் இலாபத்தைத்தராது. நான் ஆடைத் தொழிற்சாலையை ஆரம்பித்தபோது ஆரம்பித்த காணியில் தனக்குப் பங்கிருக்கிறது என்று ஒருவர் வழக்குத் தொடர்ந்தார். பின் கட்டிடத்தை இடித்தனர், கொழுத்தினர். இவையெல்லாம் கஷ்டங்கள் என்று நினைத்து ஆடைத்தொழிற்சாலையை இடைநடுவில் விட்டிருந்தால் எவ்வளவு நட்டம் என்று உனக்குத் தெரியுமா?".

“**து**ணிவுடன் போராடினால் வரும் துன்பம் பயந்து ஓடிவிடும் என்று சிவகுரு சொல்வார். அவர்தான் தொடங்கிய தொழிலை எக்காரணம் கொண்டும் கைவிடாதே என்றவர். கால மாற்றத்தின் போது வரும் துன்பங்கள் காலப்போக்கில் இன்பமாக மாறும் என்றும் அவர் சொல்வார்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், “எதைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு” சபையோர்களே ஒருவர் பல செயல்களில் ஈடுபட்டு அவற்றை வெற்றிகரமாக முடித்தாலும், தான் எடுத்த ஒரு தொழிலைச் செம்மையாகச் செய்யாவிட்டால் ஊரவர் அச் செயலைத்தான் பெரிதாக எண்ணி இகழ்வர். இது ஊரவரின் இயல்பு. முகுந்தன் வனத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்குத் தவறாது செல்வது வழக்கம். அரச பிரதிநிதிகள் முதியவர்களுக்கோர் இல்லம் அமைத்து ஆதரவற்றவர்களுக்கு உதவ முன்வந்தனர்”.

“**அ**தற்கான கூட்டம் நடைபெற்றபோது பெரியவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து முதியோர்க்கான இல்லம் அமைக்குப் பொறுப்பை முகுந்தனிடம் ஒப்படைத்தனர். முகுந்தன் பல தொழில்களைச் செய்பவன். அவன் அதிகாலை நான்கு மணிக்கு நித்திரை விட்டெழுந்து இரவு பத்து மணிவரை வேலை செய்பவன். அதனால் அவன் அந்தப் பொறுப்பை ஏற்கமறுத்தான். சிவகுருசுவாமிகள், “முகுந்தா, இது ஒரு புனிதமாக காரியம். அதற்குப் பொருத்தமானவர் நீ என்று கடவுள் நினைத்தமையால்தான் பெரியவர்கள் அப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்துள்ளனர். மறுக்காது அதைச் செய்து முடி” என்றார்.

**சு**வாமியாரின் பேச்சை முகுந்தனால் மறுக்க முடியவில்லை. அவன் செயப்படத் தொடங்கினான். அதற்கென்று ஒரு பொறியியலாளரைத் தனது சம்பளத்தில் நியமித்து வேலைகளை ஆரம்பித்தான். அதை அறிந்த சரவணன் வந்து சொன்னான், “யாரோ ஒரு சாமியாரைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுகிறாய். அவர் சொல்வதை எல்லாம் நீ செய்வாயா…? உனக்குப் பல தொழில்கள் உண்டு. அவற்றுடன் இதையும் சேர்த்துள்ளாய். கட்டிடம் கட்டுவது பெரியவேலை. அதை உரியகாலத்தில் முறைப்படி செய்யாவிட்டால் ஊரவர் கேலி செய்வர். வேறு பல செயல்களில் உறுதியாக இருந்து உரிய முறைப்படி செயலாற்றும் நீ இதை எவ்வாறு செய்யப்போகிறாய்” என்று கேட்டான்.

"**எ**தையும் செய்ய வேண்டும் என்று நினைத்தால் செய்து முடிக்கலாம். நினைவு தான் செயலாகிறது. அதனால் நான் அதையிட்டுக் கவலைப்படவில்லை. ஒவ்வொருவரும் உணவு உண்ண, உடலைச் சுத்தப்படுத்த, ஓய்வெடுக்க என்று நேரத்தை ஒதுக்குகிறார்கள். பத்துத் தொழில்கள் இருந்தாலும் ஒவ்வொரு தொழிலுக்கும் நேரம் ஒதுக்கினால் அவற்றைச் செய்து முடிக்கலாம். எனது மனைவி படித்தவள். ஆசிரியையாகக் கடமையாற்றியவள். நான்தான் அவளை வேலை செய்ய வேண்டாம் என்று தடுத்தேன். அவள் தான் முதியோர்க்கான இல்லத்தை அமைக்கும் பொறுப்பை ஏற்கிறாளாம். அதனால் அவளை மேற்பார்வை செய்தால் போதும்" என்று முகுந்தன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

## 10

**இ**றைமகள் உரையாற்றி முடிந்ததும் மேடைக்கு வந்த கதிரேசன், "சபையோர்களே, நடன ஆசிரியரான இறைமகளின் பேச்சைப் கேட்டேன். முதல்முறையாகப் பேசுகிறேன் குறைகள் இருப்பின் மன்னியுங்கள் என்று கூறிவிட்டுப் பேச ஒப்புக்கொண்டவர். மிகமிகச் சிறப்பாகப் பேசினார். புதியபுதிய இளம் பேச்சாளர்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எமது எண்ணம் நல்லபடி நடைபெறுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த வகையில் ஒரு புதியவரான செல்வி யதுர்சினி கதிரவேலு என்ற பெண் புலியைப் பேசவருமாறு அழைக்கிறேன். அவர் ஒரு முதுகலைமானிப்பட்டதாரி. கலாநிதிக்கான பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார். இன்னும் வேலையாகவில்லை. படிப்பதே அவரது பொழுதுபோக்காகும். இப்போது அவர் வினை செயல்வகை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியவற்றைத் தனது பாணியில் விளக்குவார்".

**ய**துர்சினி பட்டாடை உடுத்தி, மலர்மாலைகள் அணிந்து மேடைக்கு வந்து கரங்கூப்பி வணக்கம் செலுத்தினாள் பின்", ''சபையோர்களே, நான் வயதில் மிகவும் இளமையானவள். திருக்குறளை எனது வாழ்க்கைப்படிப்பாக ஏற்றுள்ளேன். திருக்குறளைப்பற்றி இதுவரை செய்யப்படாத ஆய்வுகளைத் தமிழறிஞர் மேற்கொண்டு வருகிறார். அவருக்கு உதவியாளராக நான் கடமையாற்றுகிறேன். அதனால் தான் இன்று இப்பெரிய மகாநாட்டின் பேச்சாளராக வர முடிந்தது. அதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன்" என்று கூறி மேடையை விட்டு இறங்கித் தமிழறிஞரின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு, "என்னை ஆசீர்வதியுங்கள்" என்று வணங்கினாள்.

"**ச**பையோர்களே, ஒருவருடைய செயல்கள் எப்படியானவையாக இருக்க வேண்டும், அவ்வாறு இருந்தால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு

முன்பே கூறிவிட்டார். அவ்வாறு யாரும் எந்த மொழியிலும் கூறாமையால் தான் இன்று குறளை உலக மக்கள் தம்தம் தாய்மொழியில் மொழிபெயர்த்துத் தமது வாழ்க்கை நூலாக ஏற்றுள்ளனர். எனக்கு இன்று பேசத்தரப்பட்ட விடயம், "வினை செயல் வகை" ஆகும். இதுபற்றி மிகவும் விரிவாகத் தமிழறிஞருடன் ஆய்வு செய்துவிட்டே பேச வந்துள்ளேன்".

**ய**துர்சினி முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்; அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது" சபையோர்களே, ஒருவர் தனது அனுபவத்தை மனதில் கொண்டு பலவற்றையும் ஆராய்ந்து எண்ணி முடிவெடுப்பது என்பது துணிந்து அச் செயலைச் செய்து முடிக்கவே. அந்த முடிவை மாற்றமுடியாது என்பதை உணரல் வேண்டும். அவ்வாறு எண்ணி முடிவெடுத்த பின்பு காலகாமதம் செய்வது துன்பங்கள் நிறைந்த தீமைகளைத் தரும் என்று வள்ளுவர் சொன்னது எந்நாட்டவர்க்கும், எக்காலத்திலும் பொருந்தும். வள்ளுவனது கருத்துக்கள் முக்காலத்திற்கும் முழு உலகிற்கும் பொருந்துவது போல வேறு எவரின் கருத்துக்களும் அமையவில்லை.

"**மு**குந்தன் சரவணனுக்குச் சொன்னான், "சரவணா, ஒருவர் பல்வேறுபட்ட திறமைகளைக் கொண்டிருப்பது போலச் சிலர் முக்கியமான விடயங்களைக்கூடப் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறார்கள். ஒரே சம்பத்தில் பத்து விடயங்களைக் கிரகிக்கக் கூடியவர்களைத் தசாவதானி என்றும், எட்டு விடயங்களைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களை அட்டவதானி என்றும் கூறுவர். அவர்கள் தம்மை அவ்வாறு ஆக்கிக் கொண்டனர். அதுபோல திறமை உள்ள ஒருவர் பல தொழில்களைச் செய்கிறார். திறமையில்லாதவர் ஒரு தொழிலைக்கூடச் செய்யமுடியாது இருக்கிறார். இதற்குக் காரணம் அவரவரது மனங்கள் தான்".

"**ம**னதை ஒருநிலைப்படுத்த வேண்டும். பரபரப்புள்ளவர்களால் மனதைக் கட்டுப்படுத்த முடியாது. அதனால்தான் அவர்கள் ஒருநிலைப்படாது பரபரப்பினால் செய்யக் கூடியவற்றைச் செய்ய முடியாது இருக்கின்றனர். எந்த ஒரு தொழிலும் தரக்குறைவனாது அல்ல. அத்தொழிலைச் செய்யும் முறைகளை அறிந்து செய்தால் தோல்வி ஏற்படாது. நீ இதுவரை எத்தனை தொழில்களை ஆரம்பித்து இடை நடுவில் விட்டுவிட்டாய். ஒரு தொழிலை ஆராய்ந்து என்னால் செய்து முடிக்க முடியும் என்று நினைத்துச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தும் தோல்வி ஏற்பட்டால் அதைத் திரும்பவும் முறைப்படி செய்ய வேண்டுமேதவிர அதைக் கைவிட்டு விட்டு வேறு தொழிலைத் தொடங்கக் கூடாது".

**“உ**னக்கு நான் இதுபற்றிப் பலமுறை சொல்லியும் நீ கேட்பதா இல்லை. ஒருவர் பல விடயங்களையும் ஆராய்ந்து முடிவெடுப்பது துணிவைப் பெறுவதற்காகவே. துணிவு என்பது மனமலிமை ஆகும். மனவலிமை உள்ளவன் முடிவை மாற்ற மாட்டான். தான் முடிவெடுத்ததைத் தானும் செய்து, பிறரையும் செய்யவைப்பான். அத்தகைய உணர்வை எனக்கு ஏற்படுத்தியவர் சிவகுருசுவாமிகள். அவரில் உனக்கு நம்பிக்கை இல்லை. அதனால் தான் நீ துன்பப்படுகிறாய்” என்று முகுந்தன் கூறினான் என்று கூறித் யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள், “தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க தூங்காது செய்யும் வினை” சபையோர்களே, ஒரு செயலை நினைத்தவாறு செய்யலாம். ஆனால் நினைத்தவுடன் செய்ய முடியாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. காலம் தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்தித்தான் செய்ய வேண்டும். காலம் தான் வாழ்க்கையை நிர்ணயிக்கும் கடவுள். அகால நேரங்களில் செய்யக்கூடாதவற்றைச் செய்யக்கூடாது. உடனே செய்ய வேண்டியவற்றிற்குக் காலந்தாழ்த்தக் கூடாது. இது வள்ளுவனது கோட்பாடு”.

**“மு**குந்தன் சரவணனுக்குச் சொன்னான், “சரவணா, என்னதான் திறமை இருந்தாலும், மெத்தப்படித்தாலும், பணம் படைத்தவனாக இருந்தாலும் காலம் அறிந்துதான் எதையும் செய்தல் வேண்டும். காலத்தைப் படைத்தவர் கடவுள். கடவுளின் படைப்பை மாற்ற முடியாது. அதை அவரின் துணையுடன் அனுசரித்துப் போக வேண்டும். அதற்கு அறிவு தேவை. சிற்றுயிர்கள் தமது அறிவைக் கொண்டு காலத்தை உணர்கின்றன. அப்படி உணர்ந்து செயற்படுவதன் மூலம் அவை தமது எண்ணங்களை நிறைவேற்றுகின்றன. சிங்கார வனத்தில் நாகநாதன் என்ற நரி அரிசி வியாபாரம் செய்துவந்தது. அது விவசாயிகளிடம் பெருமளவு நெல்லைக் கொள்வனவு செய்து அரிசியாக்கிச் சில்லறையாகவும், மொத்தமாகவும் வியாபாரம் செய்யும்”.

**“மா**ரிகாலம் வந்தபோது முல்லை வனத்து அரசனான ராஜசிங்கன் என்ற சிங்கம் நாகநாதனிடம் வந்து தனக்கு உடனே ஆயிரம் கிலோ அரிசி தேவை எனச் சொன்னது. அதற்கு நாகநாதன், “ஐயா, இப்போ மழைகாலம் குத்தரிக்குத் தட்டுப்பாடு உண்டு. அதனால் கூடிய விலை கொடுத்துத்தான் அரிசியை வாங்கவேண்டும். ஐம்பது ரூபா கிலோ விற்றது. இப்போது எழுபது ரூபா” என்றது. அதற்கு ராஜசிங்கம் சொன்னது, “நாகநாதா, நான் நூறு ரூபா தருகிறேன். உடனே அரிசியைக் கொண்டு வந்து தா” என்றது.

**“நா**கநாதன் மிக்க மகிழ்வுடன் அதற்குச் சம்மதித்தது. அதனிடம் ஐம்பது கிலோ அரிசி இருந்தது. அதனால் மிகுதியை அவிக்கும்படி தனது ஏவலாளர்களுக்குக் கூறியது. அவர்களில் ஒருவன் சொன்னான், “ஐயா, இப்போ மாரிகாலம். திடீர் திடீரென்று மழை வரும். நெல்லைக் காயவிடமுடியாது” என்றபோது நாகநாதன் கோபத்துடன், “நான் சொன்னதைச் செய்” என்றது. வேலையாட்கள் நெல்லை அவிக்கத் தொடங்கியதும் மழை பெய்ய ஆரம்பித்துப் பெருமழையானது. பத்து நாட்கள் தொடர்ந்து பெய்தது. அதனால் நாநநாதனுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டதுடன். ராஜசிங்கத்தின் கோபத்திற்கும் ஆளானது.

**“ச**ரவணா, செய்யும் தொழிலைக் காலமறிந்தே செய்தல் வேண்டும். காலம் சரியாகும் வரை காத்திருத்தல் வேண்டும். நாகநாதன் இலாபத்தைப் பார்த்தானே தவிரக் காலத்தை உணரவில்லை. உடனடியாக அரிசி தேவைப்பட்டால் அதை விற்கும் வியாபாரிகளிடம் சென்று வாங்க வேண்டுமே தவிர காலத்தை கவனிக்காது செயற்படக் கூடாது ராஜசிங்கன் இன்னொரு வியாபாரியிடம் சென்று கிலோ அறுபது ரூபாய்படி வாங்கினான்” என்று முகுந்தன் கூறினான் என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “ஒல்லும் வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல்” சபையோர்களே, ஒருவன் செய்யக் கூடிய நல்ல செயல்களைத் தாமதியாது உடனே செய்து முடித்துவிட வேண்டும். அவரால் செய்ய முடியாதநிலை ஏற்பட்டால் வேறு தக்க வழிகளை ஆராய்ந்து செயற்பட வேண்டும். ஒரு நல்ல செயலை உடனே செய்தல் வேண்டும். காலதாமதமானால் சில வேளைகளில் அச் செயலைச் செய்யமுடியாது போகலாம். நல்ல செயல் ஒன்றைத் தவிர்க்க முடியாத காரணங்களால் செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அதைச் செய்து முடிக்கக் கூடிய வேறு நல்ல வழிகளை ஆராய்ந்து செயற்படல் வேண்டும். முகுந்தனது வீட்டிற்கு முருகேசனார் சனசமூக நிலையத் தலைவரான ஆறுமுகம் என்ற வரிக் குதிரையும், அதன் செயலாளரான நாவேந்தன் என்ற ஒட்டகமும் வந்தன. இருவரும் வந்து முகுந்தனை வணங்கினர். ஆறுமுகம் சொன்னான், “தம்பீ, எமது வனம் ஐம்பது வருடங்களுக்கு முன் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. உமது பாட்டனார் தான் அதை முன்னேற்றவிரும்பி ஒரு சனசமூக நிலையத்தையும், சிறுவர் பாடசாலையையும் சிறு ஓலைக்கொட்டகை அமைத்துத் தொடங்கினார். அதனால்தான் எம்மவர் படிக்கத்தொடங்கினர். அவர் இறந்த பின்பு இரண்டு நிறுவனங்களுக்கும் தங்களது பாட்டனாரான முருகேசனாரின் பெயரைச் சூட்டிச் சிறுகட்டடம் அமைத்தோம். அடுத்த வருடம் ஐம்பது ஆண்டு நிறைவடைகிறது.

கட்டிடத்தைப் பெருப்பித்து ஐம்பதாவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட விரும்புகிறோம்".

**"ந**ல்ல விசயம், அப்பா அந்தச் சிறிய கட்டிடத்தைப் பெரிய கட்டிடமாகக் கட்டிக் கொடுக்கும்படி அடிக்கடி கூறுவார். அதை நான் உடனே மாடிக் கட்டிடமாகக் கட்டித் தருகிறேன். கீழ்ப்பகுதி சிறுவர் பாடசாலையாக இருக்கட்டும். மேற்பகுதியைச் சனசமூக நிலையமாக்குவோம்" என்றான் முகுந்தன்.

**"மி**க்க மகிழ்ச்சி தம்பி. உமக்குப் பல வேலைகள்" என்று ஆறுமுகம் சொல்லும்போது முகுந்தன் இடைமறித்துச் சொன்னான், "எனக்கு வேலைகள் அதிகம் தான். இருந்தாலும் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை உடனே செய்து முடித்துவிடுவேன். அடுத்த மாதம் தமிழ்நாட்டில் உள்ள பூங்காவனம் என்ற வனத்திற்கு வியாபாரவிடயமாகச் செல்கிறேன். வர மூன்று மாதகாலமாகும். அதனால் கட்டிடத்தை ஒப்பந்தகாரரிடம் கொடுக்கிறேன். உங்களுக்குச் சம்மதமா…?" என்று கேட்டான் முகுந்தன்.

**"எ**ங்களுக்கு விருப்பம் தம்பி. நீர் செய்தால் அது சரியானதாகத்தான் இருக்கும். அத்துடன் இங்கு ஒரு நூல்நிலையம் ஒன்று…" என்று ஆறுமுகம் கூறும்போது முகுந்தன் இடைமறித்துக் கூறினான், "நான் நூலகத்திற்குத் தேவையான நூல்களைத் தமிழ்நாட்டில் வாங்கி அனுப்புகிறேன். நானில்லாத போது வேலைகளைச் சரியான முறையில் செய்கிறார்களா என்று கவனித்துக் கொள்ளுங்கள்" என்று முகுந்தன் கூறினான். சபையோர்களே, செய்வன திருந்தச்செய் என்று சிவகுருசுவாமியார் கூறியதை வேதவாக்காக எண்ணிச் செயற்படுபவன் முகுந்தன்" என்று கூறித் யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள்" வினைப்பகை என்று இரண்டன் எச்சம் நினயுங்கால் தீஎச்சம் போலத் தெறும்" சபையோர்களே, எதையும் தீர்க்கமாக ஆய்வு செய்து முடிவெடுத்த பின்பே தொடங்க வேண்டும். ஒரு தொழிலானால் தேவையான முதலை முன்பே பெற்றுவிட வேண்டும். போதிய முதலில்லாதவிடத்துத் தன்னிடமுள்ள பொருளுக்கேற்ற தொழிலையே தேர்வு செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தொடங்கிய தொழிலை இடையிலே நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும். அதுபோல ஒரு சிறிய பகை ஏற்பட்டாலும் அதை முடிவுக்குக் கொண்டுவரல் வேண்டும். பகை என்பது நாளுக்குநாள் வளரக்கூடியது. எதிரிகள் அதற்கு நீரும், பசளையுமிட்டு

வளர்த்துவிடுவர். அதனால் அவை இரண்டும் அணைக்காமல்விடப்பட்ட தீயைப்போல சுவாலித்து எரிந்து பெருங்கேட்டை உண்டாக்கும் என்று சிவகுருசுவாமிகள் கூறியதை நினைத்துப் பார்த்தான் முகுந்தன்.

**“மு**குந்தன் ஆறுமுகத்திற்குச் சொன்னான், “நான் தவிர்க்கமுடியாத காரணத்தால் தான் வெளிநாட்டிற்குச் செல்கிறேன். கட்டிட வேலைகளை மிக்க கவனத்துடன் செய்யுங்கள். கட்டிடத்தில் ஏதாவது தவறு ஏற்பட்டால் அதை நான் வேண்டும் என்றே செய்ததாக எனது எதிரிகள் நினைப்பார்கள்” அப்போது ஆறுமுகம் இடைமறித்துக் கேட்டார், “எல்லோருக்கும் உதவி செய்யும் உங்களுக்கு எமது வனத்தில் யார் எதிரிகள்”.

**அ**தற்கு முகுந்தன் சொன்னான், “எம்மைப் படைத்துக் காத்து அருள்கின்ற கடவுளுக்கே பல எதிரிகள் உண்டு. எமது வனத்தில் வாழ்கின்ற சுமித்திரன் என்ற நரி கடவுளைப்பற்றி இகழ்வாகத்தானே பேசுகிறது. முகுந்தனுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறாய். எனக்கென்ன தந்தாய் என்று பலமுறை பலரறியக் கேட்பது உள்களுக்குத் தெரியாதா…?” அதனால் பகையை வளரவிடக் கூடாது. இடையில் நிறுத்தப்பட்ட தொழிலும், பகையும் அணையாத நெருப்புக்கள். அது தேவையேற்படும் போது பற்றி எரியும். அ் கட்டிடம் முறையாகக் கட்டப்படுகிறதா என்று நோட்டமிடுங்கள்”. என்று முகுந்தன் கூறியபோது ஆறுமுகம் சொன்னான், “பயப்படாதை தம்பி. நீர் நினைப்பது சரி. ஒரு தொழிலை முறைப்படி மேற்பார்வை செய்யாவிட்டால் அத்தொழில் பலவீனமடைந்துவிடும். கட்டிடத்தை முறைப்படி கட்டாவிட்டால் இடிந்துவிழும். நாங்கள் முக்கியமான வேலைகள் நடைபெறும் போது வீடியோவில் உங்களுக்குக் காண்பிக்கிறோம்” என்றபோது முகுந்தன் பலமாகச் சிரித்தான்” என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், “பொருள்கருவிகாலம் வினை இடனொடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல்” சபையோர்களே, தொழில் செய்வோர் முக்கியமாக ஐந்து முறைகளை நிறைவேற்ற வேண்டும். அதில் மிகவும் முக்கியமானது தொழிலைப் பூரணமாகச் செய்வதற்கான பொருள். அதாவது முதல். அத்தொழிலைச் செய்து முடிப்பதற்குரிய கருவிகள். பொருத்தமான காலம். செய்யவேண்டிய முறைகளைப் பூரணமாக அறிந்திருத்தல். தொழில் செய்வதற்குப் பொருத்தமான இடம். பெரும் தொழில் அதிபரான முகுந்தன் எதையோ யோசித்துக்

கொண்டிருந்தான். அதனால் அவன் பேசவில்லை. ஆறுமுகம், "தம்பி, என அழைத்து எதையோ சொல்லமுற்பட்ட போது முகுந்தன் சொன்னான்,

"**நீ**ங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் வெளிநாட்டுக்குச் சென்றால் என்னிடமிருந்து எவ்வாறு பணத்தைப் பெறுவது எப்படி என்றுதானே யோசிக்கிறீர்கள். அதற்குத் தேவையான பணம் முழுவதையும் எனது தந்தையின் பெயரில் வங்கியில் வைப்பில் இடடுள்ளேன். வேலை பகுதி பகுதியாக முடிய முடிய அப்பாவிடம் பணத்தைப் பெற்றுத் தொழிலாளர்களுக்குக் கொடுங்கள். ஒப்பந்த அடிப்படையில் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்துள்ளேன் அதனால் அவர்கள் தேவைக்கேற்ற கருவிகளைக் கொண்டு வருவார்கள். இப்போது மாசிமாதம். நல்ல செயல்களைத் தொடங்கக்கூடாது. அதனால் பங்குனி மாதம் தொடங்குங்கள். வேலைகளைக் கவனிக்கப் பொறியியலாளர் ஒருவரை நியமித்திருக்கிறேன். தாத்தா முன்பு கட்டிய போது எமது நிலத்தின் சிறிய ஒரு பகுதியில் தான் கட்டிடத்தை சிறிதாகக் கட்டினார். இப்போ பெரிதாகக் கட்டலாம் என்று தேவையான நிலத்தையும் தருகிறேன்".

"**ஆ**றுமுகம் திகைத்துப்போனார். இருக்கும் கட்டிடத்தைச் சிறிது பெருப்பிக்க வேண்டும் என்று நினைத்து வந்த அவருக்குப் பெரியதொரு கட்டிடம் கிடைப்பதை எண்ணி பூரிப்பாக இருந்தது. அதைப் பலரிடம் சொல்லி மகிழவேண்டும் என்று நினைத்தார் என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், "முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும். படுபயனும் பார்த்துச் செயல்" சபையோர்களே, முகுந்தன் ஆறுமுகத்திற்குச் சொன்னான், "செயலைப் பூரணமாக முடிக்கும் வகைகளை நான் அறிவேன். உங்களுடனும், ஒப்பந்தகாரருடனும், வேறு தேவையானவர்களோடும், நான் தேவையேற்படும் போதெல்லாம் கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவேன். தொழிலாளர்கள் வேலை செய்வதை நீங்கள் எனக்கு வீடியோ மூலம் தேவையேற்படும்போது காண்பிக்கவும்".

"**ஒ**ப்பந்தகாரன் பல கட்டிடங்களைக் கட்டுவதற்குப் பலரிடம் ஒப்பந்தம் செய்திருப்பான். அதனால் அவனால் தான் இடைக்கிடை இடையூறுகள் வரும். அதற்காக அவன் சொல்லும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். இந்தக் கட்டிடம் நல்லபடி முடிந்தால் எனது பாட்டனாரின் ஆன்மா மிக்க மகிழ்வடையும். அவர் மிகவும்

வறியவராக இருந்தபோதும் முடியும் இடங்களில் எல்லாம் நல்ல செயல்களைச் செய்துள்ளார். பல ஏழைப் பிள்ளைகளைக் கற்பித்திருக்கிறார். தானதர்மங்கள் செய்திருக்கிறார். அதனால் தான் எமது குடும்பம் இப்போது குபேரக்குடும்பமாக வாழ்கிறது. அவரின் பெயரைச் சொல்லி இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய விரும்புகிறேன்" என்று முகுந்தன் கூறினான் என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை உள்ளறிவான உள்ளம் கொளல்" சபையோர்களே, ஒரு செயலைச் செய்ய விரும்புகின்றன் அச் செயலை உடனே செய்யத் தொடங்கலாகாது. அச் செயலை வெற்றிகரமாகச் செய்து இலாபங்கண்ட பெரியவர்களிடம் சென்று அத்தொழிலின் நுட்பங்களை அறிந்துகொள்ளல் வேண்டும். அவ்வாறு அறியாதவர்களால் அச் செயலை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க இயலாது".

"**மு**குந்தன் சிறுவயதிலிருந்தே வியாபாரம் செய்யத் தொடங்கியவன். ஊர்ப் பெரியவர் ஒருவரின் பெரிய வியாபார நிலையத்தில் நல்ல முறையில் பணி செய்தவன். அதனால் அவன் தனியாக வியாபாரம் செய்யவிரும்பிச் சிவகுருசுவாமியாரிடம் ஆலோசனை கேட்டான். அவர் செய்யச் சொன்ன பின்னே செய்தவன். அதன்பின் தனது செயல்களைச் சுவாமியாரிடம் விபரமாகக் கூறி ஆலோசனை பெற்ற பின்பே செய்தான். அவன் ஆடைத்தொழிற்சாலையைத் தொடங்குமுன் சுவாமியாரிடம் ஆசிபெற்றபோது அவர் தனது விருப்புக்குரிய சீடனான சிவநாதன் என்ற எருதிடம் அனுப்பிவைத்தார். சிவநாதன் வேதவனத்தில் ஓர் ஆடைத்தொழிற்சாலையை நிறுவி அதை நல்லமுறையில் நடத்திக் கொண்டிருந்தார்".

"**மு**குந்தன் வேதவனத்திற்குச் சென்று சிவநாதனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். முகுந்தனது செயற்பாடுகள் சிவதாசனுக்குப் பிடித்தமையால் அவர் அதன் நுட்பங்கள் யாவற்றையும் விபரமாகச் சொல்லிக் கொடுத்தார். அவர் சொன்னார், "முகுந்தா, எந்த ஒரு தொழிலானாலும் அதை அர்ப்பணிப்புடன் செய்தல் வேண்டும். ஒழுக்கம் தான் மிகமிக முக்கியமானது. செயற்பாடுகளில் வீரனாக இருந்தால் ஒழுக்கமில்லாவிட்டால் அவனால் முன்னேற முடியாது. காலம் முக்கியமானது. நான் சிறுவயதில் மிகவும் கஷ்டப்பட்டடேன். எமது வனத்தில் இருந்த ஆடைத்தொழிற்சாலையில் கூலியாகச் சேர்ந்தேன்".

“அங்கு செயற்படுவோரின் செயல்களை மிகுந்த அவதானத்துடன் அவதானித்தேன். எனது முதலாளி மதுப்பழக்கம் உள்ளவர். இரவு பகலாகக் குடிப்பார். அதனால் அவருக்கு நட்டமேற்பட்டது. அவர் தொழிலைக் கைவிட நினைத்தபோது அவரிடம் மாதாந்த வாடகைக்குத் தொழிற்சாலையைப் பொறுப்பேற்றேன். மாதாமாதம் அவருக்கு வாடகை கொடுத்துவந்தேன். அவர் அதை விற்க விரும்பினார். சிவகுருசுவாமியாரின் உதவியுடன் அவருக்கு வேண்டிய ஒருவர் தொழிற்சாலையை விலைக்கு வாங்கினார். சிலகாலம் செல்ல அவர் தொழிற்சாலையைச் சுவாமியாரிடம் ஒப்படைத்துவிட்டார். இப்போது நான்தான் பொறுப்பாக இருக்கிறேன். இதன் வருமானத்தில்தான் சுவாமியார் பல நலத்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துகிறார்” என்று சிவநாதன் முகுந்தனுக்குக் கூறினார். என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

யதுர்சினி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத்தற்று” சபையோர்களே, ஒருவர் ஒரு செயலைச் செய்யும்போது அதற்குத் தொடர்புடைய இன்னொரு செயலையும் செய்தால் அது இரட்டிப்பு இலாபத்தைக் கொடுக்கும். அது பழக்கப்பட்ட யானை மூலம் இன்னொரு யானையைப் பிடிப்பது போன்றது. சிவநாதன் முகுந்தனுக்குச் சொன்னார், “நான் ஏற்கனவே ஓர் ஆடைத்தொழிற்சாலையைத் தொடக்கி நடத்தி வந்தேன். நல்ல வருமானம் கிடைத்தது. அத்துடன் சுவாமியாரின் அன்பும், ஆதரவும், நம்பிக்கையும் கிடைத்தது. அதனால் சுவாமியார் என்னை முழுமையாக நம்பினார். அந்த நம்பிக்கை எனக்கு பேருதவியாக இருந்தது. பக்தர்கள் என்னை மதித்தனர். பிரமுகர்கள் என்னை மதித்து நம்பிக்கைவைத்தனர். அதனால் சுவாமியார் இல்லாதபோது சுவாமியாரின் கடமைகளை நான் தான் செய்துவந்தேன்”.

“முகுந்தா, நம்பிக்கை என்பது உயிரைப் போன்றது. உயிர் போனால் திரும்பிவராது. அது போன்றது தான் நம்பிக்கையும். அவர் இப்போது உன்னில் நம்பிக்கை வைத்திருக்கிறார். அதனால்தான் உன்னை எண்ணிடம் அனுப்பினார். அவர் சொல்வார், “சிவநாதா, முயற்சியுடையவன் எந்நேரமும் தொழிற்பட்டுக் கொண்டுதான் இருப்பான். அவன் ஒரு தொழிலைச் செய்யும் போது அதனுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு தொழிலையும் பின் வேறொரு தொழிலையும் செய்வான். அதனால் வரும் வருமானத்தைச் சேமிக்காது பொதுநலத் தொண்டுகளுக்கு உதவி செய்தல் வேண்டும்…” என்று சிவநாதன் கூறும்போது முகுந்தன் குறுக்கிட்டுச் சொன்னான், “அது ஒரு யானையை வைத்து மற்றொரு யானையைப் பிடிப்பது போன்றது”.

**சி**வநாதன் சிரித்தார். பின்பு சொன்னார், "நீ உண்மையில் சுவாமியாரின் சீடன் தான். அவர் ஒருவர் மீது நம்பிக்கை வைத்தால் அவர் உத்தமராகிப் பல தொழில்களைச் சிறப்புறச் செய்வர்" என்று சிவநாதன் கூறினார் என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், "நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்தே ஒட்டாரை ஒட்டிக் கொளல்" சபையோர்களே, நல்லதொரு நண்பருக்குத் தொடர்ந்து நன்மை செய்து கொண்டிருப்பதைவிட மிக விரைவாகச் செய்ய வேண்டியது பகைவனை நண்பனாக்கிக் கொள்வதாகும். முகுந்தன் சரவணனுக்குத் தொடர்ந்து உதவிகள் செய்துவந்த போதும் அவன் அதனால் நன்மையடையவில்லை. அதற்குக் காரணம் மனப்பலவீனம்தான். எதைச் சொன்னாலும் அவன் புரிந்துகொள்ள மாட்டான். எவ்வளவு பொருள் கொடுத்தாலும் அவன் முன்னேறமாட்டான் என்று தெரிந்தும் தொடர்ந்து உதவி வந்த முகுந்தனுக்கு அவனது செயல் கோபத்தை வரவழைத்தது.

"**மு**குந்தனிடம் சரவணன் வந்தால் ஏதாவது உதவி கோரித்தான் வருவான் என்று உணர்ந்த முகுந்தன் சரவணனுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினான், "சரவணா, உனக்கு உபதேசம் செய்து நான் களைத்துவிட்டேன். உதவிகள் செய்தும் உன்னால் முன்னேறமுடியவில்லை. சோம்பேறியுடன் நட்புக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. அதனால் நீ இங்கு வராதே. எம்முடன் கூடப் படித்த மணியம் என்ற ஓநாய்க்கு என்னைப் பிடிக்காது. படிக்கும் போதே எனக்கு அடிப்பான். பெண் பிள்ளைகளின் புத்தகங்களை எடுத்து எனது புத்தகங்களோடு வைப்பான். அதனால் ஆசிரியர்கள் என்னைக் கண்டிப்பர். என்னைப்பற்றி ஊவரிடம் இல்லாதபொல்லாதவற்றைச் சொல்வான். அதனால் பெற்றோர் என்னைத் தண்டிப்பர். அது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்".

"**பா**டசாலையை விட்ட பின்பும் அவன் எனக்குப் பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். நான் ஆடைத்தொழிற்சாலையைத் தொடங்கியபோது வேலையாட்கள் தங்கவென அமைத்த கொட்டகைகளை அழித்தது, இடித்தது எல்லாம் அவன் தான். அது உனக்குத் தெரியும். அதை நான் சுவாமியாருக்குச் சொன்னபோது அவர் சொன்னார், "மகனே, திருமூலர் இரப்பவர்களுக்கெல்லாம் தகுதிதராதரம் பாராது தானம் செய் என்று சொல்லியிருக்கிறார். நண்பர்களுக்கு உதவி செய்வதுபோல எதிரிகளுக்கும் உதவவேண்டும். சந்தர்ப்பம் ஏற்படும்போது மணியத்துக்கு உதவிசெய்" என்றவர்.

“**அ**வனது வீட்டுக் கூரை ஓலையால் வேயப்பட்டது. ஒருநாள் அது முற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டது. அவனது தாய்க்குப் பல இடங்களில் தீக்காயம் ஏற்பட்டது. நான் அங்கு சென்றபோது அவனது குடும்பத்தினர் உடுத்த உடையுடன் நின்றனர். அன்று உணவு கூட உண்ணவில்லை. நான் அங்கு சென்று அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தேன். மணியத்திற்கும் ஒரு நிறுவனத்தில் வேலைபெற்றுக் கொடுத்தேன். இன்று அந்தக் குடும்பம் எனக்காக எதையும் செய்யும். மணியம் என்னைக் கண்டதும் கண்கலங்குவான். இது நான் செய்த ஒரு உதவியின் பயன். நீ எவ்வளவு உதவிகளைச் செய்தாலும் முன்னேறுவதாக இல்லை” என்று கோபத்துடன் முகுந்தன் ஏசினான் என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**ய**துர்சினி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “உறைசிறியார் உள்நடுங்கல், அஞ்சிக் குறைபெறின் கொள்வர் பெரியார் பணிந்து” சபையோர்களே, முகுந்தன் அவ்வாறு சொல்வான் என்று எதிர்பாராத சரவணன் திகைத்துப் போனான். அவன் சிறிது நேரத்தின் பின் சொன்னான், “முகுந்தா, நீ மணியத்திற்கு உதவி செய்தது பயம் காரணமாக என்று ஊரவர் கதைக்கின்றனர்”.

**அ**தற்கு முகுந்தன் சொன்னான், “ஊரவர் எதையும் கதைக்கட்டும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. கடவுள் எல்லாம் அறிவார். நான் கடவுளாக நினைக்கும் சுவாமியார் சொற்படி தான் நடப்பேன். ஊரவர் வாழ்ந்தாலும் கதைப்பர். தாழ்ந்தாலும் கதைப்பர். அவர்களுக்கெல்லாம் பதில் கூற முடியாது. பகைவரை வெல்லப் பல வழிகள் உண்டு. அதில் ஒன்று தான் இது. மன்னர் காலத்தில் இருந்து இம்முறை நடைமுறையில் உள்ளது”.

“**சி**றிய நாட்டு மன்னன் படைப்பலம் குறைந்தவன். பேரரசான மன்னன் படைப்பலம் மிகுந்தவன். அதனால் வலிமை குறைந்த மன்னன் வலிமை கூடிய மன்னனை விரோதிக்கமாட்டான். மாறாக நட்புக் கொள்வான். வேப்பம் காடு ஒரு சிறிய வளம்மிக்க காடு. அதன் அரசன் மணிமாறன் என்ற யானை அவனது மகள் பூங்கொடி, பேரழகி. வேப்பங்காட்டைக் கைப்பற்ற அருகில் உள்ள நாவலடிநாடு முயற்சித்தது. அதை அறிந்த மணிமாறன் பேரரசான நாகபுரி அரசனின் பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு பரிசுடன் மகளையும் அழைத்துச் சென்றான். பேரழகியான பூங்கொடியைக் கண்டு மயங்கிய நாகபுரி மன்னனின் மகன் சூரியதேவன் என்ற யானை தனது தந்தைக்குத் தனது விருப்பத்தை வெளிப்படுத்த அவனது தந்தை மகனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார்”.

**அ**தனால் நாவலடி மன்னன் மணிமாறன் தன்னைத் தாக்கி மக்களைத் துன்பப்படுத்துவான் என்று எண்ணி பணிந்து அவனை நண்பனாக்கிக் கொண்டான். வீரம் என்பது போர் தொடுத்து வெல்வது மட்டுமல்ல. தந்திரமான முறையில் வெல்வதும் வீரம். ஏதிரியை நண்பனாக்கிக் கொள்வதும் வீரம். அடுத்தவர்களுக்குத் துன்பம் செய்யாது அறிவால் எதையும் செய்யலாம். அதுவும் வீரம் தான்" என்றான் முகுந்தன். சரவணன் எதுவும் பேசவில்லை" என்று கூறி யதுர்சினி தனது உரையை நிறைவு செய்தாள்.

**11**

**ய**துர்சினி உரையாற்றி முடிந்ததும் மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து, "சபையோர்களே, இளவயதுப் பட்டதாரியான யதுர்சினி இனிமையாகப் பேசினார். அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். கருத்தாளம்மிக்க பேச்சு. குறளின் உரை அவரது பேச்சின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வெளிப்பட்டு எம்மைக் கவர்ந்தது. அவருக்கு இன்மொரு சந்தர்ப்பம் கொடுக்குமாறு சபையோர் கேட்கின்றனர். கொடுப்பதாகத் தீர்மானித்துவிட்டோம். இளம்பேச்சாளர்களை அறிமுகப்படுத்தி அவர்களை உற்சாகப்படுத்தி சமூகத்திற்கு நல்ல போதனைகளைச் செய்விப்பதால் எமது நோக்கம். அந்தவகையில் முன்பு பேசிய நடன ஆசிரியயையான இறைமகள் தூது என்ற அதிகாரத்தை விளக்குவார்".

**வே**ப்பம் காட்டின் அமைச்சரவைக் கூட்டம் அரசனான மணிமாறனின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது வாயிற்காவலன் மணிமாறனுக்கு அருகில் வந்து அவனை வணங்கிவிட்டு, "மன்னா, ஊர் பெயர் சொல்லாத ஒரு பரதேசி உங்களை உடனே காண வேண்டும். மிகமிக முக்கியமான செய்தியைச் சொல்ல வேண்டும் என்று அடம்பிடிக்கிறான். அவனைத் துரத்தமுடியவில்லை.

**ஆ**ளைப் பார்க்கவே அருவருப்பாக உள்ளது. அவனின் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுகிறது. நான் என்ன செய்வது?" என்று கேட்டான்.

**"ம**ணிமாறன் சிங்காசனத்தால் எழுந்து நடமாடினான். அவன் முக்கிய விடயங்களுக்கு முடிவு காண வேண்டுமானால் அவ்வாறு நெடுநேரம் உலாவுவான். அவன் உலாவுவதைக் கண்ட அமைச்சர்கள் எழுந்து வெளியே சென்றனர். சிறிது நேரம் நடைபயின்ற மணிமாறன் காவலனின் அருகிச் சென்று, "அவனை வரச்சொல்" என்றான்.

“**வா**யிற் காவலன் அரண்மனை வாசலில் பிதற்றிக்கொண்டிருந்த குதிரையை அழைத்து வந்தான். வந்தவன் மணிமாறனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான் பின், “மன்னா, விரைவில் பேரரசனாகப் போகிறீர்கள். நாவலடியும் உங்களது கட்டுப்பாட்டுக்குள் வரப்போகிறது” என்றான்.

“**ம**ணிமாறன் அவனை அதிசயமாகப் பார்த்தான். பின்பு, “நீ யார், ஏன் இப்படிப் பேசுகிறாய். நீ அயல்நாட்டவனின் கையாளா…? உன்னை உடனே கைது செய்யச் சொல்கிறேன் என்று கோபித்தான் மணிமாறன்.

“**வ**ந்தவன் பலமாகச் சிரித்தான், “என்னை உங்களால் கைதுசெய்ய முடியுமா…? நான் யார் தெரியுமா…?” என்று கேட்டான். அவனது பேச்சு மணிமாறனுக்கு வியப்பைக் கொடுத்தது. அரசசபைக்கு வந்து துணிவுடன் வீராப்பாகப் பேசும் இவன் யார் என்று நினைத்தவாறு உடைவாளை உருவினான்” வந்தவன் சிரித்தவாறு தனது வேடத்தைக் கலைத்தான். அவனைக் கண்ட மணிமாறன், ‘நகுலா’ எனப் பலமாக அழைத்தான். நகுலன் மீண்டும் மன்னனை வணங்கிவிட்டுச் சொன்னான், “மன்னா, நாகபுரி மன்னன் எமது நாட்டைக் கைப்பற்ற எண்ணியுள்ளான் என்பதை அறிந்து என்னை நாகபுரி மன்னனான சந்திரசேனனைச் சந்தித்து உதவி கோரும்படி அனுப்பினீர்கள். ஆனால் நான் மன்னனைச் சந்திக்காது இளவரசனான சூரியதேவனைச் சந்தித்து இளவரசியின் படத்தைக் காண்பித்து அவனது அழகை விமர்சித்தேன். இளவரசன் மயங்கிவிட்டார்”. மணிமாறன் தனது மகளின் திருமணம் பற்றி ஆச்சரியத்துடன் நினைத்துக் கொண்டிருந்தான். அப்போது மகாராணி வந்து அவனை அணைத்தான். திடுக்கிட்டு எழுந்தான் மணிமாறன், “என்ன கனவு காண்கிறீர்களா…?”.

“**அ**ன்பும், பண்பும் நற்குடிப்பிறப்பும், அரசரை விசுவாசிக்கும். குணமும், நாட்டு மக்கள் துன்பப்படக்கூடாது என்ற எண்ணமும், நாம் அடிமைப்படக்கூடாது என்ற விருப்பமும் உடைய தூதுவனான நகுலனின் பெரும் உதவி இது. இதை நான் மறக்கமாட்டன்” என்று மணிமாறன் கண்கலங்கினான்” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், “அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று” சபையோர்களே, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குத் தூதுவனாகச் செல்கின்றவனுக்கு முக்கியமாக மூன்று பண்புகள் வேண்டும். இம்மூன்று

பண்புகளும் உடையவன் தான் நினைத்ததை இலகுவாகச் செய்து முடித்துவிடுவான். அன்புள்ளம் கொண்டவனாக இருத்தல் வேண்டும். ஏனென்றால் வேற்றுநாட்டரசன் தனது நாட்டிற்கு வந்தவனை நல்லபடி உபசரித்தாலும், மனதுள் பல எண்ணங்களும், வேறுபாடுகளும் இருக்கும். அதனால் அவன் திமிராகவும் பேசுவான். சென்றநாட்டரசன் படைப்பலம் குறைந்தவனாக இருந்தாலும் அவனது நாட்டிற்குள் எதுவும் செய்ய முடியாது. அதனால் மகிழ்வுடன் அன்பாகப் பேசுதல் வேண்டும். முழுமையான அறிவு இருந்தால் தான் அவர்கள் சந்தேகிக்காது பதில்களைக் கூறமுடியும். அத்துடன் சம்பவங்களை ஆய்வு செய்து ஏற்றபடி பேசவேண்டியவற்றைப் பண்புடன் பேசுதல் வேண்டும்".

"**ச**பையோர்களே, நான் சொன்ன மூன்று பண்புகளும் நகுலனிடம் இருந்தன. மணிமாறன் மகாராணிக்குச் சொன்னான், "ராணி, நகுலன் மிகவும் நல்லவன். நாட்டுக்காகத் தன் உயிரையும் பணயம்வைப்பான். அன்புள்ளம் கொண்டவன், அறிவுமிக்கவன், எதையும் ஆராய்ந்து தகுந்த முடிவு எடுப்பவன். பேரரசரிடம் உதவி கோரித்தான் அனுப்பினேன். அவன் அவனை எனது சம்மந்தியாக்கிவிட்டான். புளியந்தோப்பு மன்னனான விக்கிரமன் என்ற யானையின் மகள் வேதவல்லி. அவளைச் சூரியதேவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விக்கிரமன் விரும்பினான். புலியந்தோப்பு மிகவும் பெரியநாடு. வளம் மிகுந்த நாடு. படைப்பலம் மிக்க நாடு. இதை அறிந்த நகுலன் சூரியதேவனுக்குப் பூங்கொடியில் பல்வேறுபட்ட படங்களைக் காட்டி, பூங்கொடி நடனமாடுவாள், நன்றாகப் பாடுவாள், அன்பானவள், அழகானவள் என்று கூறி எமது நாட்டில் பொங்கல் விழா நடைபெறும்போது மாறுவேடம் பூண்டு சூரியதேவனை அழைத்து வந்து பூங்கொடியைக் கட்டியிருக்கிறார். இதை முன்பு ஒற்றர்கள் எனக்குக் கூறினர். நான் அதை விசாரித்தபோது நகுலன் தான் சூரியதேவனைக் கூட்டி வந்ததாக அறிந்தேன். அவன் எனது விசுவாசி எனக்குத் துரோகம் செய்யமாட்டான் என்று தெரிந்ததால் நான் ஒற்றரை மேற்கொண்டு விடயங்களை அறியுமாறு பணித்தேன்".

"**எ**மக்குப் புளியந்தோப்புக் காட்டாலும் துன்பம் வரலாம் என்று தனது அறிவின் மூலம் ஆராய்ந்து அறிந்த நகுலன் சூரியதேவனைப் பூங்கொடிக்குத் திருமணம் செய்யது கொடுக்க முடிவெடுத்தான்" என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், "நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு" சபையோர்களே, ஒரு நாட்டிற்குச் சென்று தனது நாட்டின் மன்னனது பெருமைகளை எடுத்துச் சொல்பவனுக்குத் துணிவு வேண்டும். அறிவு வேண்டும்.

சூழ்நிலைக்கேற்பக் கதைத்து கேட்பவரின் மனதைக் கவரக் கூடிய ஆற்றல் வேண்டும். இத்தகைய தூதுவன் எல்லா நூல்களையும் கற்றவர்களை விட மேலான அறிவுள்ளவனாவான். மணிமாறன் மிக்க மகிழ்வுடன் மகாராணிக்குச் சொன்னார்".

"மகாராணி, நகுலன் மிக்க அறிவுடையவன். கற்ற அறிஞர்களை விட அறிவில்மேம்பட்டவன். நாவலடி மன்னன் எமது நாட்டைக் கைப்பற்றி விடுவான் என்று உணர்ந்ததால்தான் நகுலன் சூரியதேவனுடன் கதைத்தார். ஒருவனுக்குத் திருமணம் பேசுவதானால் பெற்றோருடன் தான் முதலில் பேசவேண்டும். சூரியதேவனின் தந்தை தனது மகனுக்குப் பெரியபெரிய வனராஜாக்களின் மகள்களையே திருமணம் செய்ய விரும்பினார். பல வனத்து அரசர்கள் சூரியதேவனைத் தமது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பினர். சிலர் மன்னனோடும் கதைத்தனர்".

இதை அறிந்த நகுலன் சூரியதேவனை அணுகிப் பூங்கொடியைப் பற்றிக் கூறி அவனுக்குக் காமத்தைத் தூண்டினான். தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக அவன் பல தந்திரமான வழிமுறைகளைக் கையாண்டான். அதில் ஒன்றுதான் பொங்கல் விழாவுக்கு அவனை அழைத்துவந்தது. சூரியதேவனின் மனதில் பூங்கொடி படர்ந்துவிட்டாள் என்பதை உணர்ந்த நகுலன் மிகவும் தந்திரமாக சூரியதேவனைக் கொண்டே தனது தந்தைக்கு தனது காதல் விடயத்தை அறியச் செய்தான். இது எல்லோராலும் இலகுவில் செய்யக்கூடிய செயல் அல்ல. அவன் பேரறிஞன். எந்த இடத்தில் எப்படிப் பேசவேண்டும் என அறிந்து அதற்கேற்றவாறு திட்டமிட்டுப் பேசுவான். மற்றவர்களையும் பேசவைப்பான்" என்று மணிமாறன் கூறினான் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

இறைமகள் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், "அறிவு உரு ஆராய்ந்த கல்வி இம் மூன்றன் செறிவு உடையான் செல்க வினைக்கு" சபையோர்களே ஒரு தூதுவனுக்கு முக்கியமாக மூன்று தன்மைகள் இருத்தல் வேண்டும். இவற்றுள் மிகவும் முக்கியமானது இயற்கையான அறிவு. இயற்கையான அறிவென்பது ஒருவர் சொல்லும் சொல்லையும், அவரது செயலையும், முகபாவனையையும் அறிந்து அவற்றின் உள்நோக்கங்களைப் புரிந்து கொள்பவனாகவும், அவற்றால் எதிர்காலத்தில் நடைபெறுபவற்றை அறியக்கூடியவனாகவும் இருத்தலே இயற்கையான அறிவாகும். அத்துடன் ஆராய்ந்து கற்ற கல்வியாளனாகவும், கவற்சியான தோற்றத்தையும், பேச்சையும் உடையவனாக இருப்பவனே சிறந்த தூதுவனாவான். இத்தகைய மூன்று குணங்களும் நகுலனிடம் இருந்தன".

**“ச**பையோர்களே, மணிமாறன் மகாராணிக்குச் சொன்னான், “தேவி, நகுலனைப் போன்ற ஓர் அறிவாளி எல்லா அரசர்களுக்கும் இலகுவில் கிடைக்கமாட்டான். அவன் முக்காலங்களையும் தனது இயற்கையான அறிவால் அறிந்துகொள்வான். நாவலடி வரண்ட காடு. மழைவீழ்ச்சி மிகவும் குறைவு. அதனால் அந்நாட்டு மன்னனால் எமக்குக் கட்டாயம் பெரும் துன்பங்கள் வரும் என்று சரியான ஆதாரங்களுடன் சொல்வான். அத்துடன் எம்மால் அவர்களை வெல்ல முடியாதென்றும் சொல்வான். இது அவனது முதிர்ந்த அறிவுக்கெட்டிய ஞானம். அதனால் தான் நான் நாகபுரி மன்னனிடம் உதவி செய்யும்படி கோரி அவனை அனுப்பினேன். அவன் நாகபுரிப் பேரரசை எமக்குச் சொந்தமாக்கிவிட்டான்”.

**ம**கிழ்வுடன் பெரிதாகச் சிரித்தான் மணிமாறன். “இயற்கையான அறிவுடைய அவனது மகிழ்வான தோற்றத்தையும், கலகலப்பான பேச்சையும் கேட்பவர்கள் அவனது அறிவுத் திறமைகளினால் மயங்கிவிடுவர். இதுதான் சூரியதேவனுக்கு நடந்தது” என்று மீண்டும் மிக்க மகிழ்வுடன் சிரித்தான் மணிமாறன் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச் சொல்லி நன்றி பயப்பதாம் தூது” சபையோர்களே, ஒரு தூதுவன் பல விடயங்களைத் தொகுத்துச் சொல்வான். பயனில்லாதவற்றை ஒருபோதும் மறந்தும் சொல்லான். தான் சொல்பவற்றை யாராலும் மறுத்துச் சொல்லாதபடி சொல்லிக் கேட்போரை மகிழச் செய்வான். அவனது வார்த்தைகள் யாவும் நாட்டிற்கு நன்மை பயப்பனவாகவே இருக்கும்”.

**“ம**ணிமாறனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தான் யாரும் அடையமுடியாத பெரும் பொக்கிசத்தை அடைந்து விட்டதாகவும், அதனால் தனக்கும் நாட்டுக்கும் ஒருபோதும் கெட்ட பெயரோ, அழிவோ ஏற்படாது என்றும் நினைத்து மகிழ்ந்தான். அவன் மகாராணிக்குச் சொன்னான், “நான் முன்பு அரசர்கள் பெரிதாகக் கொண்டாடும் விழாக்களுக்குச் சென்றால் என்னைக் கவனிப்பாரில்லை. நலம் கூட விசாரிக்கமாட்டார்கள். எல்லா அரசர்களும் பெரும் பெரும் அரசர்களுடனேயே கதைத்துச் சிரிப்பார்கள். நான் தனியே இருந்து விழாவைக் கவனிப்பேன். இன்று அப்படி இல்லை. விழா நடத்தும் அரசர்கள் என்னை மகிழ்வுடன் அழைத்துச் சென்று பிரபல அரசர்களுடன் அமரவைப்பர். அவர்களும் மகிழ்வுடன் வணங்கி வரவேற்பர். இதெல்லாம் நகுலனால்தான் எனக்குக் கிடைத்தது”.

**“பே**சுவதை நிறுத்திவிட்டுக் கண்களை மூடிச் சிலகணங்கள் தன்னை மறந்திருந்த மணிமாறன் சிறிது நேரத்தின் பின் சொன்னான், “ராணி, நகுலனது பேச்சு போக்கு, நடத்தை செயல்கள் யாவும் மாப்பிள்ளைக்கு மிகவும் பிடித்துவிட்டது. பல்வேறுபட்ட விடயங்களைக் கிரகித்து, அவற்றில் பயனில்லாதவற்றை நீக்கி சொல்லவேண்டியவற்றைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும், விறுவிறுப்பாகவும், விருப்புடன் கேட்கக்கூடியதாகவும் சொல்லும் தன்மையும் நாட்டின் மீதுள்ள பற்றும் அவரைக் கவர்ந்தமையால் அவர் என்னுடன் சேர்த்து நகுலனையும் தனது நாட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார். அதற்கு அனுமதிதாருங்கள்” என்று கேட்டாள். நான் சம்மதித்துவிட்டேன். நகுலனும் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டான் கூறியபோது மணிமாறன் குரல் தளதளர்த்தது” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “கற்றுக் கண் அஞ்சரன் சொலச்சொல்லிக் காலத்தால் தக்கது அறிவதாம் தூது” சபையோர்களே, தூதுவன் எனப்படுபவன் கற்கவேண்டிய யாவற்றையும் கற்றவன். எந்த வலிமையான பகைவர்களுக்கும் அஞ்சமாட்டான். அத்துடன் தான் சொல்பவற்றைக் கேட்பவரின் மனதில் பதியவைத்துவிடுவான். அத்துடன் காலத்தை அனுசரித்தே அவனது செயல்கள் யாவும் இருக்கும். அப்படியான நகுலனைப் பற்றி மகாராணி மணிமாறனுக்குச் சொன்னாள், “நாதா, நகுலன் எல்லாம் அறிந்தவன். அத்துடன் வல்லவன். அவனறியாத செயல்கள் எதுவும் இந்த நாட்டில் அல்ல எந்த நாட்டிலும் இராது. ஒவ்வொரு வனத்து அரசர்களைப் பற்றியும் அவர்களது பலம், பலவீனம் பற்றியும் அவன் பூரணமாக அறிந்திருப்பதால் தான் பூங்கொடியின் விஷயத்தில் வெற்றிகண்டவன். சூரியதேவன் இளைஞன். அவன் முன்பே பூங்கொடியைப் பற்றி அறிந்திருக்கிறான். அரச குமாரர்கள் இளைஞர்கள். அவர்கள் இளம் பெண்களைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புவர்.

**“கா**தல் என்பது தீக்குச்சியைப் போன்றது. சிறிது உராய்வு ஏற்பட்டாலும் தீக்குச்சி பற்றிக் கொள்வதுபோல இளைஞர்களுக்கு ஒரு இளம் பெண்ணின் தகவல்கள் பூரிப்பைக் கொடுக்கும். சுசற்று அதிகமாகக் கேள்விப்பட்டால் மோகம் உண்டாகிவிடும். அதன்பின் காம உணர்வு ஏற்படும். அதைச் சரியான முறையில் வளர்த்தால் பற்றி எரியும். அதுதான் பூங்கொடியின் விடயத்தில் நடைபெற்றது. நகுலன் தான் சொல்பவற்றை கேட்பவர்களின் உள்ளத்தில் ஆழமாகப் படியும் படி செய்வதில்வல்லவன். பூங்கொடியை அரசசபையின் ஓவியரைக் கொண்டு பல்வேறு அழகிய தோற்றங்களில் வரைந்து, அதைக் கொண்டு சென்றுள்ளான்”.

“**ஒ**ரு செயல் நிறைவேற என்னென்ன செய்ய வேண்டும் என்பதை நன்றாக அறிந்த நகுலன் தனது திறமையை வெளிப்படுத்தி வெற்றிகண்டுள்ளான். அதற்கு அவனது மேலான அறிவுதான் காரணம். இதைச் செய்வதன் மூலம் எவ்வாறு பகைவர்களை அடக்கலாம் என்று அவனுக்குத் தெரியும். அதனால் மாப்பிள்ளைக்குத் துணையாக அவனை அனுப்பிவையுங்கள்” என்று மகாராணி கூறினாள்” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து எண்ணி உரைப்பான் தலை” சபையோர்களே, நல்லதொரு தூதுவன் தன்னையும், தனது அரசனையும், நாட்டையும் முழுமையாக அறிந்து வைத்திருப்பான். அவன் தனது கடமை இன்னது என்று தெளிவாக உணர்ந்து, அதைச் செய்வதற்குரிய காலத்தையும், இடத்தையும் முழுமையாக அறிந்து அதைச் செயலாக்குபவனே நல்ல தூதுவனாவான்.

“**ம**காராணி தொடர்ந்து சொன்னாள், “நாதா, எமக்குத் தெரியாது நகுலன் அந்தப்புரத்திற்குச் சென்று பூங்கொடியைச் சந்தித்து, “இளவரசி நாகபுரி மிகமிகப் பெரிய நாடு. வளம் மிகுந்த நாடு. அதன் மன்னரும், மகாராணியும் நல்ல பண்புகள் உள்ளவர்கள் சிறுவயதில் இருந்தே உங்களுடன் நான் விருப்புடன் பழகிவந்தேன். அத்துடன் உங்கள் மீது எனக்கு அளவுகடந்த நீங்கள் பிறந்தன்று தான் எனக்கு மகள் பிறந்தாள். நான் திருமணம் செய்து பத்து வருடங்கள் கழிந்தும் பிள்ளைகள் பிறக்கவில்லை. கோவில் கோவிலாகத் திரிந்து எனது மனைவி பிள்ளையைப் பெற்றாள். எனது மகள் பிறந்தன்று நீங்களும் பிறந்தமையால் எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன என்று தான் நினைத்தோன். அதனால் தான் பேரரசரின் மகனைத் திருமணம் செய்துவைத்தேன். நீங்கள் பண்புள்ளவர், நல்ல குணசாலி. கணவனையும் அவனது பெற்றோர்களையும் உங்களது பெற்றோராக நினைத்துக் கொள்ளுங்கள்” என்றவனாம்.

“**ந**குலன் தனது கடமையை உணர்ந்தவன். தனக்கு வேண்டியவர்களின் நலனையும் பாதுகாப்பவன். யார்யாருக்கு எவ்வாறு சொல்ல வேண்டுமோ அவ்வாறு சொல்பவள். அதனால் இயல்பாகவே நற்குணங்கள் நிறைந்த பூங்கொடி அவனது சொற்கேட்டு நடந்தமையால் பூங்கொடியை அந்த பேரரசனும், பிரதானிகளும், மக்களும் விரும்புகின்றனர்” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "தூய்மை, துணைமை, துணிவுடைமை இம் மூன்றன் வாய்மை வழி உரைப்பான் பண்பு" சபையோர்களே, ஒரு தூதுவனுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றி பல ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழந்த பெரியவர்கள் கூறியுள்ளனர். அதன்படி ஒரு தூதுவனின் மனம் எப்பொழுதும் தூய்மையானதாக இருக்க வேண்டும். மனதில் பற்றுக்கள், பக்கச்சார்பு, எதிர்பார்ப்புகள், வஞ்சனை, சூது முதலியன இருந்தால் அவனைக் குழப்பிவிடும். வலிமையான துணை மிகுந்த துணிவு உடையவன் தான் தூதுவன்".

"**ம**ன்னன், பட்டத்துராணிக்குச் சொன்னான். நகுலனின் மனதில் களங்கமில்லை. பற்றுக்கள் இல்லை. அதனால் அவன் எப்போதும் நேர்மையுள்ளவனாகவும், எதற்கும் அஞ்சாத மனவலிமை உள்ளவனாகவும் இருக்கிறான். யாருக்கும் அஞ்சாத தன்மையால் அவன் துணிவுள்ளவன். அதனால் அவன் எதையும் தானே சிந்தித்து முடிவு செய்து அதை நிறைவேற்றிவிடுவான். அவன் பூங்கொடி விஷயத்தில் மிகுந்த துணிவுடன் நடந்து கொண்டான். மன்னர்கள் அனுப்பும் தூதுவர்கள் மன்னர்களுடன் தான் பேசுவர். ஆனால் நகுலன் நன்கு திட்டமிட்டு இளவரசனுடன் பேசி முடிவெடுத்ததோடு இளவரசரைக் கொண்டே தந்தையின் விருப்பத்தை அறிந்துள்ளான். இது ஒரு பெரும் துணிவான விடயம். தூதுவர்கள் வலிமைமிகுந்தவர்களின் தொடர்பை ஏற்கனவே பெற்று அவர்கள் மூலம் கருமாற்றுவர். ஆனால் நகுலன் வலிமை மிகுந்த இளவரசனின் துணையை உடனே பெற்று, உடனே செயலையும் முடித்துவிட்டான்" என்று மன்னன் கூறினான் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், "விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம் வாய்சோராவன் கணவன்" சபையோர்களே, ஓர் அரசனின் தூதுவன் அரசர் எதைச் சொன்னாரோ அதையே பயமின்றித் துணிவுடன் சொல்வான். அவனது மனதை எந்தச் சக்தியாலும் மாற்ற முடியாது. நாட்டுக்குப் பாதுகாப்புத் தேடுவானே தவிரத் தவறாக எதையும் சொல்லமாட்டான்".

"**பு**ளியந்தோப்பு மன்னனின் படைவீரர்கள் மணிமாறனுக்கு தொந்தரவு கொடுப்பதற்காக அவனது நாட்டுக்குள் புகுந்து கொள்ளையிட்டனர். மக்கள் அச்சத்தால் நடுநடுங்கினர். மணிமாறன் நகுலனை அழைத்துச் சொன்னான், நகுலா, புளியந்தோப்புக்குச் சென்று மன்னனைச் சந்தித்து இங்கு நடைபெறும் கொள்ளைகளைப் பற்றி விபரமாகச் சொல். மறந்தும் அவனுக்குச் சினத்தை

வரவழைக்கும் சொற்களைச் சொல்லாதே. அவன் அதைக் கேளாவிட்டால் போர்தான் முடிவு என்று சொல்" என்றான் கண்டிப்புடன்.

**"ம**ணிமாறன் அவ்வாறு கோபப்பட்டதை அறியாத நகுலன் திகைத்துப்போனான். அவனால் பதில் கூறமுடியவில்லை தயங்கினான். அதை உணர்ந்த மணிமாறன் சொன்னான், "நகுலா, கடுஞ் சோலைவனத்து அரசன் வியபாலன் என்ற சிங்கம் எனது குருகுலத் தோழன். நான் கேட்டால் அவன் உதவி செய்வான். நான் அடுத்தவாரம் அவனது பிறந்ததினம் வருகிறது. மகாராணியுடன் செல்லவுள்ளேன். அவனது உதவி எனக்கு எப்போதும் இருக்கும். நீ கவலைப்படாதே" என்று மணிமாறன் சொன்னதும் மிகுந்த தைரியத்துடன் புளியந்தோப்புக்குச் சென்றான் நகுலன்.

**"பு**ளியந்தோப்பு மன்னன் நகுலனை அலட்சியமாக வரவேற்றான். அவன் அலட்சியப்படுத்தியதைச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணினான் நகுலன், "மன்னா, வீரமான மன்னன் நேருக்குநேர் மோதுவானே தவிரக் கொள்ளைகளில் ஈடுபடமாட்டான். எமது நாடு சிறியது என்று எண்ணாதே. எமது மன்னருடன் பெரிய பெரிய நாட்டு மன்னர்கள் நட்புப் பூண்டுள்ளனர். உன்னைப் போல தீயவழியை எமது மன்னர் நாடமாட்டார். தனது முடிவை எனக்குச் சொல்லியுள்ளார். அதை நான் உனக்குச் சொல்கிறேன். நீ திருடுவதை விடாவிட்டால் விரைவில் உனது நாடு எமது நாட்டோடு இணைக்கப்படும் என்று கூறச் சொன்னவர். நன்றாகச் சிந்தித்து முடிவை எடு" என்று கூறிவிட்டு வந்துவிட்டான். அன்றிலிருந்து புளியந்தோப்பு வீரர்கள் திருடுவதை நிறுத்திவிட்டார். சபையோர்களே, தூதுவன் தனது நாட்டு அரசனுக்குக் கட்டுப்படுவான். அவன் சொல்வதைத் துணிந்து பயமின்றி ஏனைய தேசத்து அரசர்க்குச் சொல்வான். ஒரு சொல்லைக்கூடத் தவறாகச் சொல்லமாட்டான்" என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

**இ**றைமகள் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், "இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு உறுதி பயப்பதாம் தூது" சபையோர்களே, ஒரு தூதுவன் தனது அரசனுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுப்பது போல ஏனைய அரசர்க்குக் கொடுக்கமாட்டான். அவன் தனது அரசன் சொன்னவற்றை அப்படியே சொல்வான். அரசர் கடுமையான வார்த்தைகளைச் சொன்னால் அதே வார்த்தைகளைச் சிறிதும் மாற்றாது சொல்வான். அஞ்சமாட்டான். தனக்கு அழிவு வந்தாலும் அதற்காக அஞ்சாமல் தனது அரசன் சொல்லச் சொன்னவற்றைத் துணிவுடன் கூறுபவனே தூதுவன். அப்போது அவன் தனது நாட்டின் அரசனாகவே செயற்படுவான்".

“நகுலனின் துணிவான பேச்சு புளியந்தோப்பு மன்னனுக்கு அச்சத்தைக் கொடுத்தது. கொள்ளைகளில் ஈடுபட்டு மக்களை அச்சுறுத்திதான் அவர்கள் கலக்கமடைவர். அதனால் மன்னன் மீது அவர்களுக்கு வெறுப்பு உண்டாகும் என்றே புளியந்தோப்பு மன்னன் நினைத்தான். அதற்கு மாறாக மணிமாறன் போர் தொடுப்பேன் என்று எச்சரித்தது அவனுக்கு அச்சத்தைக் கொடுத்தது. மணிமாறன் அன்பானவர். பலநாட்டு மன்னர்களுடன் நட்புப்பூண்டவன். தூதுவனான நகுலனது இறுமாப்பான பேச்சும் அவனுக்குப் பலவிதமான எண்ணங்களைத் தோற்றுவித்தது. அதனால் அவன் வீரர்களை அனுப்பிக் கொள்ளையிட விரும்பவில்லை. அரசனின் தூதுவனாகச் செல்பவன் பயந்தானேயானால் அவனது அரசனும் பயப்படுகிறான் என்று தான் ஏனைய அரசர் நினைப்பர். அதனால் தூதுவர்கள் யாருக்கும் எதற்கும் அஞ்சாதவர்களாகவே இருப்பர்” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இறைமகள்.

## 12

இறைமகள் பேசி முடிந்ததும் மேடைக்கு வந்த கதிரேசன், “சபையோர்களே, அடுத்து ஓர் இளைஞரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அவர் முருக வனத்தைச் சேர்ந்தவர். கலைப்பட்டதாரி ஆசிரியராகக் கடமைபுரிகிறார். தமிழறிஞரின் பேனா நண்பர். அவர் நெடுந்தொலைவில் உள்ள பெரியதொரு வனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தமிழறிஞரின் மாணவர். பேனா நண்பர் என்ற காலம் முடிவடைந்துவிட்டது. முன்பு முகந்தெரியாத இருவர் பேனா மூலம் தொடர்பு கொண்டு இலக்கியத்தை வளர்த்தனர். இப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இலக்கியத்தை வளர்க்கின்றனர். அந்த வகையைச் சேர்ந்தவர்தான் பாலேந்திரன். இங்கிருந்து பல ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள முருக வனத்தில் அவர் வசித்தபோதும், தமிழறிஞரின் பேச்சுக்களைத் தொலைக்காட்சியில் கேட்டு நட்பானவர். இப்போதுதான் இருவரும் நேரில் சந்திக்கின்றனர். பாலேந்திரனது இலக்கிய ஆர்வமும், இலக்கிய அறிவும், தமிழறிஞரைக் கவர்ந்தமையால் மகாநாட்டைப் பார்வையிட வந்தவரைப் பேசும்படி அழைத்திருக்கிறார். அவரைப் பேச வருமாறு அழைக்கிறேன்”.

பாலேந்திரன் என்ற ஒட்டகம் தலையைத் தாழ்த்திச், சபையோரை வணங்கியபடி வந்து, “சபையோர்களே, நான் படிக்கும் காலத்திலிருந்தே கடதாசிமூலமும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு பேசி வருகிறேன். எனது கல்விக்கு உறுதுணையாகத் தமிழறிஞர் இருக்கிறார். படித்தது போதும் என்று நிறுத்திவிட்டுத் தொழில்பார்த்தேன். தமிழறிஞர் படிப்புக்கும், தொழிலுக்கும் சம்பந்தமில்லை. ஓய்வுநேரங்களில் படி என்றார். அவரது அன்பான வார்த்தைகளை மீற எனது பெற்றோர் விடவில்லை. அதனால் படித்துக் கலாநிதியானேன். அதன்பின் படிக்க

வேண்டும் என்ற ஆர்வம் மேலிட்டமையால் படித்து இரண்டாவது கலாநிதிப்பட்டத்தையும் பெற்றேன். மூன்று மாதங்களுக்கு முன்பு தான் எனக்குத் திருமணமானது. எனது மனைவியுடன் வந்து தமிழறிஞரின் வீட்டில் தங்கியிருக்கிறேன். அவரிடம் இல்லாத புத்தகங்கள் இல்லை. நான் அவரை மிகமிக நேசிக்கிறேன்".

"எனக்குப் பேசத்தந்த விடயம் மன்னரைச் சேர்ந்து ஒழுகல் ஆகும். இது அறுபத்தெட்டாவது அத்தியாயமாகும். அதிகாரமுள்ள பெரியவர்களுடன் மிகமிக அவதானமாகப் பழகுதல் வேண்டும். அவர்களுக்கு பல்வேறு விதமான பிரச்சினைகள் வரும். அவை அவர்களின் மனநிலையை மாற்றும் சக்தி வாய்ந்தனவாகவும் இருக்கும். அதனால் அவர்களது நிலை கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கும். நாட்டை ஆளும் மன்னர்களுக்கு உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து பிரச்சினைகள், துன்பங்கள், போட்டி பொறாமைகள், எதிர்ப்புகள் வரும். எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம். வலிமையான மனம் சலசலப்புக்களுக்கு அஞ்சாது ஆனால் அரசர்களது மனம் அமைதியாக, நிம்மதியாக மகிழ்ச்சியாக எப்போதும் இராது. அதனால் அவர்களிடம் தேவை கருதிச் செல்வோர் மிக்க அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்".

பாலேந்திரன் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார்".

**பா**லேந்திரன் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார்". சபையோர்களே, அரசனைச் சார்ந்து வாழ்வோர், அரசனை விட்டு அதிகமாக விலங்கிச் செல்லாமலும், மிக நெருக்கமாக இருக்காமலும், நெருப்பின் முன் குளிர்காய்பவர்கள் போலச் செயற்பட வேண்டும். எல்லோருடனும் ஒரேமாதிரிப் பழகமுடியாது. அவரவரின் தகுதி, தராதரம், பதவி என்பவற்றை அறிந்தே பழகுதல் வேண்டும்".

**க**னகவனம் என்ற பெரிய வனத்தின் அரசன் கனகசிங்கன் என்ற சிங்கம். அன்று இரவு கனக வனத்தின் முதலமைச்சரான சுந்தரவதனன் என்ற வரிக்குதிரையும் ஒற்றனான மகேசன் என்ற நாயும் மாறுவேடம் பூண்டு வனத்தைச் சுற்றி வந்தனர். அவ் வனத்தின் மத்தியில் உள்ள சிவன் கோவிலில் வன வாசிகள் கூடியிருந்தனர். அங்கு கர்நாட இசைக்கச்சேரி நடைபெற்றுக்

கொண்டிருந்தது. அது மிகப்பெரிய வனம். அத்துடன் மிக்க வசதிகளை உடைய வனம். அங்கு வாழும் பலர் பெருந்தனவந்தர்களாவர்".

**சி**வன் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. அதனால் அங்கு நடைபெறும் விழாக்களுக்கு அயல் வனத்தைச் சேர்ந்தவர்களும் வருவார்கள். கனகசிங்கனும், முதலமைச்சரும், மகேசனும் அங்கு வந்த போது கர்நாட இசைக்கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கேசவன் என்ற குயில் இனிமையாகப் பாட, இரத்தினம் என்ற மயிலும் அதன் தோழர்கள் இருவரும் தாளம் தப்பாது ஆடிக்கொண்டிருந்தனர். சேதுபதி என்ற குரங்கு மிருதங்கம் அடித்துக் கொண்டிருந்தது. கனகசிங்கன் இசைப்பிரியன். அதனால் அவன் அந்நிகழ்ச்சி முடியும் வரை கோவிலில் தங்கியிருந்தான். அவனுக்கு அந்நிகழ்ச்சி நன்றாகப் பிடித்தமையால் சுந்தரவதனனிடம் அவர்களை அரண்மனைக்கு வந்து கச்சேரி வைக்குமாறு சொன்னான்".

**இ**ரண்டு குதிரைகளின் பின் அவர்கள் அரண்மனைக்கு வந்து சில நாட்கள் தங்கிக் கச்சேரிவைத்தார். கனகசிங்கனுக்கு அந்த இசை நிகழ்ச்சி பிடித்தமையால் அவன் விரும்பும்போது அவர்கள் வந்து கச்சேரியை வைத்துவிட்டுப் பெறுமதியான பரிசுகளை பெற்றுச் சென்றனர். கேசவனையும், இரத்தினத்தையும், சேதுபதியையும் கனகசிங்கனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் அவர்களுக்கு அவன் பரிசாக விவசாய நிலங்களையும், வீடுகளையும் கொடுத்தான்".

**"கே**சவனுக்குத் தலைக்கணம் அதிகம். முன்பே திமிராகப் பேசியவன், அரசரின் நட்பைப் பெற்றபின் வனவாசிகளுடன் சவால்விட்டுப் பேசினான். தான் நினைத்தால் அரசனைக் கொண்டு எதையும் செய்விப்பேன் என்று கூறினான். அதனால் வனவாசிகள் அவனை அக்காட்டின் இரண்டாவது தலைவன் எனக்கூறினர். இந்த விடயம் கனகசிங்கனுக்குத் தெரிந்தபோது அவன் பெருங்கோபங் கொண்டு கேசவனைக் கைது செய்யுமாறு சுந்தரவதனனுக்குக் கட்டளையிட்டான். கேசவனைக் கைது செய்தபோது சுந்தரவதனன் சொன்னான், "கேசவா, அரசரை உனது நண்பன் அல்லது இனத்தவன் என்று நினைத்தாயா…? அரசர் திறமைமிக்கவர்களைப் பாராட்டுவார். பரிசுகள் அளிப்பார். அது அவரது கடமை. அதற்காக அவரை எனது கையாள் என்று நினைத்துவிட்டாய். அரசரோடு யாரும் பழகலாம். அவரைச் சார்ந்து வாழ்வோர் அவரை விட்டு நீங்காமல் இருக்க வேண்டுமானால் மிகமிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும். அவர் இனிமையாகக் கதைத்தால் உனக்கு நட்பானவராகிவிடமாட்டார்".

“**அ**ரசரைச் சார்ந்து வாழ்வோர் மிகமிக நெருக்கமானவர் என்று கருதலாகாது. அதுபோல அவரைவிட்டு விலகிச் செல்லவும் கூடாது. இரத்தினம் அழகாக ஆடுபவன். அதை அரசர் புகழ்ந்து பரிசளித்தார். அதன்பின் அவனை அழைத்து ஆடவைக்க முயன்றபோதெல்லாம் அவனைக் காணமுடியவில்லை. அதனால் முகுந்தன் என்ற மயில்தான் இப்போது ஆஸ்தான ஆடலன். அரசரை மதித்துக் போற்றி வாழ்கிறான். அரசர் அவனது ஆட்டத்தில் மயங்கிப் பரிசுகள் அளிக்கின்றார். மிகவும் வசதியாக வாழ்கிறான். அரசரைச் சார்ந்து வாழ்பவர்கள் அதிகமாக நீங்கிச் செல்லாமலும் மிக நெருங்காமலும் நெருப்பின் முன் குளிர்காய்பவர்கள் போல இருக்க வேண்டும். நெருங்கினாலோ அல்லது விலகிச் சென்றாலோ ஆபத்து அவர்களுக்குத்தான்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினான், “மன்னர் விழைய விழையாமை மன்னரால் மன்னிய ஆக்கம் தரும்” சபையோர்களே, அரசர்கள் சகல வல்லமைகளையும் கொண்டவர்கள். அவர்கள் எடுக்கும் முடிவுகளை யாராலும் மாற்ற முடியாது. அதனால் அவர்கள் விரும்புவற்றை மக்கள் விரும்பலாகாது. விரும்பினால் கேடுகள் மட்டுமே தொடர்ந்து வரும். கனகவன அரசரின் ஆஸ்தானப் புலவர் சந்திரனார். அவர்தனது மகனான வேல்மாறனுக்குச் சொன்னார், “மகனே, எனது சகோதரியின் மகள் அகல்யா நல்ல அழகி. ஆனால் வசதியானவள் அல்ல. எனினும் நீ அவளது முறைமாப்பிள்ளை அவள் பிறந்தபோதே அவளைத்தான் உனக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று உனது தாயார் விரும்பினார். சில காலங்களின் பின் உனது தாயார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள்”.

“**அ**தன் பின் உன்னை வளர்ப்பதற்காக உனது தாயாரின் சகோதரியைத் திருமணம் செய்தேன். அதை உனது மாமனார் விரும்பாததால் எமது உறவு முறிந்துவிட்டது. இப்போது அவள் திருமண வயதை அடைந்துவிட்டாள். உனக்கு அவளின் மீது காதல் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் அகல்யாவின் தந்தை விரும்புவாரோ தெரியாது”.

“**ச**ந்திரனார் பேசிக்கொண்டிருக்கும் போது அவரது மகனான வேல்மாறன் சொன்னான், “அப்பா, அகல்யாவுக்கு என்மீது மதிப்பும், அன்பும் உண்டு. அவள் எனது தங்கைக்கு தான் என்னை விரும்புவதாகக் கூறியுள்ளாள்”.

“**எ**னக்கு அது தெரியும். ஆனால் இப்போது ஒரு புதிய பிரச்சினை வந்துள்ளது. இளவரசனான புவனசிங்கன் கலைவிழாவின் போது அகல்யாவைக் கண்டு அவளின் அழகில் மயங்கிவிட்டான். அத்துடன் அவன் தனது காதலைப் பற்றிக் கூறிச் சம்மதமும் பெற்றுவிட்டான். இந்த நிலையில் நாம் பெண் கேட்டுப்போவது முறையல்ல. அவள் உன்னை விரும்பினாலும் அரசர் விரும்புவதை அவரைச் சார்ந்து வாழும் நாம் விரும்பலாகாது. விரும்பினால் பல தீமைகள் தொடர்ந்து வரும். புவனசிங்கன் பெரும் வீரன். தான் நினைத்தவற்றைச் செய்துமுடிப்பவன். அத்துடன் அகல்யா உனது தங்கையிடம் சொன்னாளேதவிர நேரில் சொல்லவில்லை. தற்பொழுது அரசகுமாரன் தனக்கு மாப்பிள்ளையாக வருகிறான் என்றால் அவனைத்தானே விரும்புவாள். அகல்யாவின் குடும்பத்தினருக்கு எம்மைப் பிடிக்காது. அதனால் அந்த ஆசையை விட்டு விடு” என்றார்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினார், “போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது” சபையோர்களே, அரசர்களோடு இருப்பவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள விரும்பினால் தவறுகள் செய்யாதிருத்தல் வேண்டும். அத்துடன் அரசர்களின் சந்தேகத்திற்கு ஆளாகாது காத்துக்கொள்ளல் வேண்டும். சந்திரனார் சொன்னார், “மகனே, அரசர்களைச் சார்ந்திருப்போர் வாள்முனையில் தாங்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளல் வேண்டும். அரசன் சகல அதிகாரங்களும் கொண்டவன். ஆஅவன் தீர்பளித்தால் அதைத் தடுக்க முடியாது. அரசன் ஒருவர் மீது சந்தேகப்பட்டால் ஓரிரு நாட்களில் உண்மையான நிலையைத் தெரிந்து கொள்வான். அதற்கேற்ற படைப்பலம் அவனிடம் உள்ளது”.

“**நா**ம் குடிமக்கள். எப்போதும் அவதானமாக இருத்தல் வேண்டும். புவனசிங்கன் அகல்யாவைத் திருமணம் செய்யப்போகிறான் என்ற விடயம் அரண்மனைமட்டத்தில் எல்லோருக்கும் தெரியும். அது நாளை நாடு முழுவதற்கும் தெரியவரும். அதனால் எதையும் யாருக்கும் கூறாதே. முதலமைச்சர் என்னில் விசுவாசமுள்ளவர். நான் அவருக்குச் சொன்னபோது அவர் சொன்னார், “புலவரே, தாய்மாமனுக்கு ஒரு மகன் பிறந்தால் அதை முறைமாப்பிள்ளைக்குத் திருமணம் செய்துவைப்பதாக நாட்டில் உள்ளவர்கள் முடிவெடுப்பது இயல்பு. ஆனால் பிள்ளைகள் வளர்ந்தபின்பு அது நடைபெறுமா என்று நம்பிக்கையுடன் சொல்ல முடியாது. எனது சகோதரிக்கு மகள் பிறந்தபோது சகோதரி எனது மகனுக்குத் தான் அவளைத் திருமணம் செய்துவைப்பதாக முடிவெடுத்தாள். நானும் சம்மதித்தேன். அவனுக்குப் பத்து வயதானபோது பாம்புதீண்டி அவன்

இறந்துவிட்டான். இப்போ அவள் இன்னொருவனைத் திருமணம் செய்துவிட்டாள். அதற்கு முன்நின்று நடத்தியது எனது சகோதரி".

"**இ**து இயற்கையான நிகழ்வு. சிலர் பிறந்தபோது நிட்சயிக்கப்பட்டதாயினும், வளர்ந்தபின் தாம் விரும்பியவர்களைத் திருமணம் செய்துவிடுகிறார்கள். உமது விடயம் வேறுமாதிரியானது. உமது சகோதரியின் குடும்பம் உம்மை ஏற்கவில்லை. இந்நிலையில் நீர் அங்கு சென்று கேட்பது முறையல்ல. அத்துடன் இளவரசன் அவளை விரும்பிவிட்டான். அரசர் விரும்புவதைக் குடிமக்கள் விரும்பக்கூடாது. விரும்பினால் பெரும் ஆபத்துக்கள் வரும். அதனால் இதை யாரிடமும் சொல்லாதீர்கள்" என்றவர். அவர் சொன்னதுபோல நீயும் யாருக்கும் நடந்தவற்றைச் சொல்லாதே" என்று சந்திரனார் கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினார், "செவிச் சொல்லும் சேர்ந்தநகையும் அவித்து ஒழுகல் ஆன்ற பெரியார் அகத்து" சபையோர்களே, அரசசபையில் அவர் காணும்படி பிறரின் காதுக்குள் சொல்வதையும், கண்களால், கைகளால், முகத்தால் சைகளைக் காட்டுதலையும் தவிர்த்தல் வேண்டும். தொடர்ந்து சந்திரனார் தனது மகனுக்குச் சொன்னார், "மகனே, கனகபுரத்து அரசனுக்கு வீரத்தைவிட அறிவுகூட. அதனால் கதைப்பதை அவதானமாகக் கதைக்க வேண்டும். இங்கு வீசும் காற்றிற்கும் காதுகள் இருக்கிறது. ஒருநாள் வனத்தின் ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் குதிரைப்படைத் தளபதியான சுந்தரநாதன் என்ற நரியுடன் யாரோ ஒருவன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தான். அவன் வீட்டுக்குச் சென்றதும் பாடைவீரர்கள் அவனது வீட்டுக்குச் சென்று அவனைக் கைது செய்தனர். அவன் விசாரணையின்போது அவன் முல்லை வனத்து ஒற்றன் என அடையாளம் காணப்பட்டான்".

"**இ**ன்னொருமுறை அரசன் வனவாசிகளைச் சந்தித்தபோது சபையில் இருந்த ஒருவனை வீரர்கள் கைது செய்தனர். அச்சபையில் சுந்தரநாதனும் மக்களின் குறைகளைக் கேட்டறிய வந்திருந்தான். சிறிது நேரத்தில் அரசனின் தூதுவன் ஒருவன் வந்து சுந்தரநாதனை அழைத்துச் சென்றான். விசாரணையின் பின் இருவரும் பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டனர். அதற்குக் காரணம் சபையில் இருந்தவன் கண்களைச் சிமிட்டினான். தலையை இடைக்கிடை ஆட்டினான். சொண்டைப் பற்களால் கடித்தான். இடைக்கிடை சிரித்தான். ஆஅதனால் சபையில் இருந்த ஒரு பொதுமகன் அதை வீரனுக்குச் சொல்லி அவனை அவதானிக்குமாறு கூறியுள்ளான். சபையில்

இருந்தவனுக்கு பரிசுகள் கொடுக்கப்பட்டதால் வனவாசிகள் மிகவும் அவதானத்துடன் வந்தவர்களை நோக்குவர்".

**"ம**கனே, மன்னன் நீதியாக வனத்தை ஆள்கிறான். மக்களுக்கு எந்தக் குறையும் இல்லை. அதனால் நாம் கேள்விப்பட்டவற்றையும், சந்தேகத்திற்கு இடமான நடத்தைகளை உடையவர்களையும் காட்டிக் கொடுத்துவிடுவார்கள். அதனால் நீ வாயே திறக்காதே. கதைத்தால் பாதாளச் சிறைக்குதான் போகவேண்டி வரும்" என்று சந்திரனார் கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினார், "எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை விட்டக்கால் கேட்க மறை", "சபையோர்களே, சந்திரனார் தொடர்ந்து தனது மகனுக்குச் சொன்னார், "மகனே, அரசசபைப் புலவர் நான். என்மீது அரசர் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார். அதனால் பலநேரங்களில் அவர் என்னுடன் மனம்விட்டுக் கதைப்பார். நல்லவர்களுக்கு அவர் நல்லவர். ஆனால் ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் ஓரிரு நாட்களில் ஒற்றர்கள் உண்மையைக் கண்டுபிடித்து விடுவார்கள். அரசர் மிகவும் அன்பாகப் பழகித் தேவையான உதவிகளைச் செய்வதால் படைவீரர்களும், மக்களும் அவருக்காகத் தமது உயிரையே கொடுப்பார்கள். அரசசபையில் அரசர் தனது கருத்துக்களைக் கூறியபின் வனவாசிகள் தத்தமது குறைகளை எடுத்துச் சொல்லலாம். எந்தநேரமும் அரசசபை விழிப்புடன் இருப்பதால் கீழான செயல்களைச் செய்ய எவரும் முன்வரார்".

**"ச**பையில் அரசர் பேசும்போது படைத்தளபதிகள், வீரர்கள், முக்கிய பிரமுகர்கள் பேசவேண்டி வந்தால், அவர்களுடன் அரசர் பலத்தும், இரகசியமாகவும் பேசுவார். அப்படி அவர் பேசும்போது இருவர் பேசுவதையும் உற்று யாரும் கேட்கமாட்டார்கள். எங்காவது பார்த்துக் கொண்டிருப்பார்கள். வந்து பேசியவர்களை சபையோர்க்கு ஏதாவது சொல்லவேண்டும் என்றோ, அவர்கள் சொன்னவற்றை மக்களும் அறியவேண்டும் என்றோ அரசர் நினைத்தால் அவரே அதைச் சொல்வார். அப்போது தேவையில்லாத கேள்விகளை வனவாசிகள் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் அரசர் சொல்ல வேண்டியவற்றை விபரமாக எல்லோருக்கும் விளங்கும்படி தான் சொல்வார்"

**"வ**னவாசிகள் தமது குறைகளை அசரருக்கு விபரமாக எடுத்துச் சொல்லலாம். அரசர் அன்புடன் பொறுமையாகப் பதிலளிப்பார். தேவையில்லாத கேள்விகளைக் கேட்டால்

தண்டணைக்குள்ளாக வேண்டிவரும். ஒருமுறை போர்வீரன் ஒருவன் முல்லை வன அரசனிடம் பெருந்தொகையான திரவியங்களைப் பெற்றுக் கொண்டு உடைவாளுடன் வந்து அரசரைத் தாக்க முயன்றபோது மெய்பாதுகாவலரில் ஒருவன் அரசருக்கு விழவிருந்த வெட்டைத் தான் வாங்கப் பின்னால் நின்ற மெய்ப்பாது காவலன் வெட்ட வந்தவனை வெட்டிக் கொன்றுவிட்டான். அரசனின் மீது மிகுந்த விசுவாசம் உள்ள பலர் நாட்டில் இருப்பதால் யாரும் அரசரை லேசில் தாக்க முடியாது" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "குறிப்பு அறிந்து காலம் கருதி வெறுப்பு இல் வேண்டுபவ வேட்பச் செயல்" சபையோர்களே, சந்திரனார் ஒரு கவிஞர். அவர் பல காவியங்களை எழுதிவைத்திருந்த போதும் அவற்றில் ஒன்றையாவது வெளியிடவில்லை. அவரின் கவிதைகளை வாசித்த பல அறிஞர்கள் அவை தரமானது என்றும் மக்களுக்குப் பயன்தரன் கூடியது என்றும் சொன்னார்களே தவிர அவற்றை வெளியிட விரும்பவில்லை. அரண்மனையில் வீற்றிருக்கும் தலைமைப் புலவருக்கு அதுபற்றிச் சொல்லியும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் தன்னைவிடப் பிறர் பெயரும் புகழும் பெறுவதை விரும்பாதவர். சந்திரனார் அதுபற்றிக் கேட்கும் போதெல்லாம் ஒவ்வொரு சாட்டுச் சொல்வார். அவரை மீறி அரசனிடம் சென்று முறையிடப் பலரும் பயப்படுவர். ஏனென்றால் அரசனிடம் தம்மைப்பற்றி அவர் தவறாகச் சொல்லிவிடுவார். அதனால் சந்திரனார் எதையும் செய்யத் தோன்றாது பேசாதிருந்தார்".

"**த**னது நிலைபற்றிச் சந்திரனார் தனது நண்பணான கதிரேசனார் என்ற புலமைவாய்ந்த யானையிடம் சொல்லி மனம் வருந்தினார். கதிரேசனார் சொன்னார், "உமது கவிதைகள் சிலவற்றை நான் வாசித்தேன். அவை மிகவும் தரமானவை. நீர் ஏன் தலைமைப் புலவரிடம் சென்று முறையிட்டுக் கவலைப்படுகிறீர். அரசசபையில் அரசர் இருக்கும் போது அரசரின் குறிப்பை அறிந்து, தகுந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பார்த்து மங்கலமான செய்திகளைக் கூறலாம். வெறுக்கத்தக்கவற்றை ஒருபோதும் கூறக்கூடாது. தலைமைப் புலவரின் சகவாசத்தை விட்டு விட்டு உமக்குத் தேவையானவற்றைச் சொல்லும். நீர் இந்த வனத்தின் பிரஜை. அரசருடன் நேரடியாகக் கதைக்கக் கூடிய உரிமை உமக்கு உண்டு. அது உமக்குமட்டுமல்ல எமது வனவாசிகள் அனைவருக்கும் உண்டு. பயப்படாமல் சொல்லும்" என்றார்.

"**அ**ன்று சபைகூடியபோது அரசனான கனகசிங்கன் மிக்க மகிழ்வுடன் காணப்பட்டான். சபையில் இருந்த பெரியவர்களையும், பிரமுகர்களையும் தனித்தனியாக அழைத்துப் பேசினான்.

கதிரேசனார், சந்திரனாரின் அருகில் வந்து, “இன்று அரசர் மிக்க மகிழ்வுடன் காணப்படுகிறார். உமது பிரச்சினையைக் கூறும்” என்று சொன்னதும் சந்திரனார் எழுந்து மன்னரை வணங்கினார். அதைக்கண்ட கனகசிங்கன், “புலவரே, புலவர் என்று சொன்னால் மட்டும் போதாது. அதை உறுதி செய்யத்தக்க நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். எமது வனத்தின் வரலாற்றையும், பெருமைகளையும் புலவர்கள் தான் எடுத்துப் பிற்சந்ததியினர்க்குச் சொல்ல வேண்டும். நீர் என்ன செய்தீர்” என்று கேட்டான்.

**“வே**ந்தே, எமது வனத்தைப்பற்றியும், அதன் பெருமைகள் பற்றியும், தங்களது முன்னோர் செய்த அரிய செயல்களைப் பற்றியும் ஐந்து காவியங்கள் எழுதியுள்ளேன். அவற்றைத் தாங்கள் அரங்கேற்ற வேண்டும்” என்றார்.

**“இ**தை ஏன் முன்பே சொல்லவில்லை. நான் இசைப்பிரியன். கலைப்பிரியன் என்று உமக்குத் தெரியாதா? உமது ஆக்கங்களை உடனே முதலமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். நான் அவற்றை ஆராய்ந்து முடிவு செய்கிறேன். அவை தரமானவையாக இருந்தால் உடனே அரங்கேற்றுவேன்.” நீர் எதற்காக இது பற்றிப் பேசவில்லை சொல்லும்” என்று அரசன் கேட்டபோது, சந்திரனார் தனக்கு நடந்தவற்றைச் சொல்ல விரும்பவில்லை” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானார், “வேட்பன சொல்லி வினைவில எஞ்ஞான்றும் கேட்பினும் சொல்லாவிடல்” சபையோர்களே, சந்திரனாரது பேச்சைக் கேட்ட அரசன் உணர்ச்சிவசப்பட்ட பின் என்னுடைய மூதாதையரின் வரலாற்றை எழுதிய நீர் ஏன் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டீர். ஒரு கலைஞன் தனது ஆக்கத்தை வெளியிட ஆர்வமுடையவனாக இருப்பான். உமக்கு ஏன் அந்த ஆர்வம் வரவில்லை. உமது ஆக்கங்கள் பற்றித் தலைமைப் புலவருக்குக் கூறியிருந்தால் அவர் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பார். எனது ஆட்சியில் எந்த ஓர் உயிரும் துன்பப்படக்கூடாது என்று நினைப்பவன் நான்” என்று அரசர் கூறியபோது சந்திரனாருக்குக் கதிரேசன் கூறியது நினைவுக்கு வந்தது, “சந்திரா, அரசர்களுக்கு விருப்பமானவற்றை மட்டும்தான் அவரின் குறிப்பினை அறிந்து சொல்லுதல் வேண்டும். அவர் வெறுப்படையக் கூடிய எதையும் எக்காரணங் கொண்டும் சொல்லக்கூடாது. நீ தலைமைப் புலவரோடு பலமுறை பேசியதை ஒருபோதும் வெளியாருக்குச் சொல்லாதே. ஏனெனில் அவர்கள் வேண்டும் என்று அல்ல வாய்தவறியும் அரசருக்குக் கூறிவிடலாம். அதைவிடத் தலைமைப் புலவரைப் பலருக்குப்

பிடிப்பதில்லை. அதனால் நீர் கூறியதைத் திரித்தும் அரசருக்குக் கூறலாம். அதனால் தேவையில்லாத விடயங்களை அரசர் வற்புறுத்திக் கேட்டாலும் கூறக்கூடாது. அது நாளடைவில் உமக்குப் பாதிப்பை உண்டாக்கும்” என்று கூறியது அவரது காதில் ஒலித்தது. அதனால் சந்திரனார் சொன்னார், “அரசே, தாங்கள் கலைஞர்களை மிகவும் கோலாகலமாகக் கௌரவித்து வருகிறீர்கள். அது இந்த வனத்திற்கு மட்டுமல்ல உலகெங்கும் தெரியும். நான் எழுதியவற்றில் சொற்பிழை, பொருட் பிழைகள் இருக்கலாம். அதனால் திரும்பத்திரும்ப வாசித்துத் திருத்தங்கள் செய்தபின்பே தங்களுக்குச் சொல்லலாம் என்று நினைத்தேன். இப்போது காவியங்கள் பூர்த்தியாகிவிட்டன. இன்றே நான் அவற்றை முதலமைச்சரிடம் ஒப்படைக்கிறேன்” என்று சந்திரனார் கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “இளையார் இன முறையார் என்று இகழார் நின்ற ஒளியோடு ஒழுகப்படும்”, சபையோர்ர்களே, கனகசிங்கன் இளைஞன், சுறுசுறுப்பானவன், வீரன், வனவாசிகள் மீது அளவில்லாத பற்றுக் கொண்டவன். சபைகூடும் வேளைகளில் பிரமுகர்களையும், பிரபுக்களையும், முதியவர்களையும் மதிப்போடும் மரியாதையோடும் நடத்துபவன். சபையில் தலைமைப் புலவரான முருகேசர் என்ற நரிக்குத் தொண்ணூறு வயது. அதனால் முருகேசர் நடக்கக் கஷ்டப்பட்டால் அரசன் கைத்தாங்கலாக அவரை அழைத்து வருவான். பிற இடங்களில் உற்சாகமாக நடந்து செல்லும் முருகேசர் சபைக்கு வந்தால் வேண்டுமென்றே தடுமாறுவார். காவலர்கள் அவரை அழைத்துச் செல்ல முயன்றால் விடமாட்டார். அரசன் வந்து அழைத்துச் செல்லும் வரை தடுமாறியபடி நிற்பார்”.

**“மு**ருகேசர் அதைத் தனக்குக் கிடைத்த கௌரவமென நினைத்து மகிழ்வதுடன் ஏனையோர்க்கும் பெருமையாகச் சொல்லி மகிழ்வார். இது பலருக்குப் பிடிப்பதில்லை. எனினும் எதுவும் செய்யத்தோன்றாது மனதுள்ப் புழுங்குவர். அன்று சபைகூடியபோது முருகேசர் நடுங்கியவாறு வந்து விழுவது போலப் பாசங்கு செய்து, “கனகசிங்கா, என்னைப் பிடி” என்று அலறக் கனகசிங்கன் தனது இருப்பிடத்தை விட்டு அவசரமாக எழுந்து வந்து அவரைத் தாங்கிப்பிடித்தான். முருகேசர் அடிக்கடி அரசனைச் சந்தித்துக் கதைப்பார். அவர் கற்றவர், முதியவர் என்பதற்காக அரசன் அவரை மதித்தான். அரசரைப் பெயர் சொல்லி அழைத்தது முதலமைச்சருக்குப் பிடிக்கவில்லை. அரசர் தனக்கு இளையவர் என்றோ, இன்ன முறையில் உறவினர் என்றோ, அறிவில் சிறந்தவர் என்றோ, முதியவர் என்றோ யாரும் நினைக்கக்கூடாது. அவரது தகுதியை மதிக்க வேண்டும். இளைஞன் என்றாலும் அரசன். பெரும் வீரன். எதிரிகள் அவனது பெயரைக் கேட்டாலே அஞ்சுவர். அப்படியானவனைச் சபையில் பெயர் சொல்லி

அழைத்தால் முதலமைச்சர் கடுஞ்சினமுற்றார். எப்படியாவது அவரைப் பழிவாங்கித் திருத்த வேண்டும் என்று முடிவு செய்தார்".

**க**னக வனத்தில் அரசனுக்குச் சாதகமான பல இளைஞர் குழுக்கள் உண்டு. முதலமைச்சரின் வேண்டுகோளின் படி முகமூடி அணிந்து ஓர் இளைஞர் குழு முருகேசனது வீட்டுக்குச் சென்று முருகேசரைப் பிடித்து மரத்துடன் கட்டியது. புலி சொன்னது, "அரசர் சிறு குழந்தையாக இருந்தாலும் அவரை மதிக்க வேண்டும், தரக்குறைவாக நினைத்தல் கூடாது. நீ எப்படி மன்னரின் பெயரைச் சொல்லலாம். அதனால் உனக்கு நாம் மரணதண்டனை வழங்குகிறோம். இந்தக் கயிற்றை உனது கழுத்தில் கட்டி மரத்தில் தொங்க விட்டு விட்டு நீ தற்கொலை செய்து கொண்டாய் என்று சொன்னால் சகலரும் நம்புவர். ஏனென்றால் நீ யாரையும் மதிப்பதில்லை" என்று உறுமியது".

**"ஐ**யையோ, அப்படிச் செய்யாதீர்கள். நீங்கள் கூறியபடி நான் செய்கிறேன். என்னை மன்னித்துவிட்டு வாருங்கள்" நடுங்கியவாறு அழுதான் முருகேசன்.

**"நீ** தேவைக்கு எதுவும் செய்வாய். பின் மனம்மாறிவிடுவாய். உன்னைவிடக்கூடாது" என்றது மான்.

**"உ**ன்னை ஒருபோதும் நம்ப முடியாது. உன்னோடு பலமுறை சந்திரனார் தனது நூல்களை அரங்கேற்றுமாறு கேட்டும் நீ சாட்டுப்போக்குச் சொல்லி மறுத்துவிட்டாய். இதைப்பற்றி யாருக்காவது சொன்னால் உன்னுடைய குடும்பத்தை இரவோடு இரவாக எரித்துவிடுவோம். இப்போது எல்லோரிடமும், "நான் இனித் தவறாக நடக்கமாட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் என்று ஒவ்வொருவரின் கால்களிலும் விழுந்து மன்னிப்புக் கேள்" என்றது யானை. முருகேசர் எல்லோரது கால்களிலும் விழுந்து மன்னிப்புக் கேட்டார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செய்யார் துளக்கு அற்ற காட்சியவர்" சபையோர்களே யானை சொன்னது, "அறிவைத் தருகின்ற அறநூல்களையும், ஏனைய நூல்களையும் முழுமையாகக் கற்று, அந்நூல்கள் கூறியவாறு வாழும் பெரியவர்கள், அரசர்களுக்குத் தாம் தேவையான ஆலோசனைகளைக் கூறுபவர்களாக

இருந்தாலும், அரசர் இளமையானவராக இருந்தாலும், தாம்தாம் பெரியவர்கள் என்று எண்ணித் தகாத காரியங்களைச் செய்யமாட்டார்கள். அரசர்களுக்குரிய மதிப்பையும், மரியாதையையும் கொடுப்பார்கள். இது உனக்குத் தெரியாதா…? எமது வனத்தில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை போற்றி மதிக்கப்படுவர் பொன்னம்பலவானர் என்ற மான்".

"**பொ**ன்னம்பலவானர் கற்காத நூல்கள் இல்லை. அரசியல் சம்பந்தமான யுத்தம் சம்பந்தமான நூல்கள் அனைத்தையும் கற்றவர். அவர் வயோதிபர். அதனால் அரசன் தேவைப்படும் போதெல்லாம் வீரர்களைக் கொண்டு அவரைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு வருவான். அவர் தான் அரசரின் ஆலோசகர். அரசனுக்குப் பாட்டனைப் போன்றவர். அப்படியானவரே அரசர் சபைக்கு வரும்போது எழுந்து நின்று அவரை வரவேற்பார். இது அரசருக்குப் பிடிப்பதில்லை. அவரை அமரந்திருக்கும்படி பலமுறை கூறியும் அவர் அமர்வதில்லை. அவர் சொல்வார், "அரண்மனையை பழந்தமிழ் நூல்கள் கோவில் என்று சொல்கின்றன. கோவிலில் குடியிருக்கும் மன்னன் கடவுள் என்றும் சொல்கின்றன".

"**இ**தெல்லாம் படித்தேன் என்று மார்புதட்டிப் பேசும் உமக்குத் தெரியாதா…" ஆணவம் உமது கண்களை மறைத்துவிட்டது. அதனால்தான் இவ்வாறு திமிராக நடந்து கொள்கிறீர். உம்மை விட நூறு மடங்கு கற்ற பொன்னம்பலவானரே அரசரை எழுந்து நின்று மதிக்கும்போது அரைகுறையாகப் படித்த நீர் திமிருடன் நிக்கலாமா…? உமது செயலைப் பற்றி வனவாசிகள் மிகுந்த வேதனைப்படுகின்றனர். அதன் வெளிப்பாடு தான் இது. இனியும் நீர் திருந்தாவிட்டால் மரணதண்டனை தான் உமக்குப் பரிசாகக்கிடைக்கும்" என்று யானை சொன்னது என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

**பா**லேந்திரன் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை கேடுதரும்", சபையோர்களே புலிக்குக் கடுங்கோபம் வந்தது. அது முருகேசரைப் பார்த்து உறுமியபடி வந்தது. முருகேசன் பயத்தால் பலமாக அலறினான். யானை தனது தும்பிக்கையால் புலியைத் தூக்கித் தனது முதுகின்மேல் வைத்துவிட்டுச் சொன்னது, "நண்பா, நாம் இன்று எச்சரிக்கவே வந்தோம். வந்தவேலை முடிந்துவிட்டது. இனிமேல் இவ்வாறு நடந்தால் மரண தண்டனைதான் கிடைக்கும் என்றும் சொல்லிவிட்டோம். எமது வனத்தில் உள்ள பெரியவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதைச் செய்வதுதான் எமது கடமை. அதை மீறிச் செயற்பட்டால்

அது விதிகளை மீறியவன் செயலாக அமையும். அதனால் பெரியவர்களின் சொற்களை மீறக்கூடாது" என்றது".

"யானை அவ்வாறு சொல்லியும் புலிக்குக் கோபத்தை அடக்கமுடியவில்லை. அது யானையின் முதுகில் இருந்து பலமாக உறுமியது. அதைக் கண்ட மான் சொன்னது, "நண்பி, சிலர் அரசருக்குத்தாம் விரும்பியவர் என்று எண்ணித் தான்தோன்றித்தனமாக நடக்க முற்படுவர். அரசர் விரும்பாத செயல்களையும் செய்வர். அரசர் நமர், பிறர் என்ற வேறுபாடு காட்டாதவர். அவருக்குப் பெற்றதாகும் அவலையாக வீதியில் நிற்கும் ஒரு தாயும் ஒன்றுதான் என்பதை நீ உணரவில்லையா…? எந்த ஒரு தாய்க்கும் துன்பம் நேரவிடமாட்டார். கேசவன் என்ற வரிக்குதிரை ஒரு பசுவை வளர்த்து வந்தது. அது கன்று ஈன்றதால் கேசவன் கன்றையும், பசுவையும் வெவ்வேறு தொழுவத்தில் கட்டியிருந்தான். அன்று வழமையாகக் கேசவன் நான்கு மணிக்குப் பாலைக் கறந்துவிட்டுக் கன்றை அவிழ்த்துவிடுவான். அன்று இரவு ஏழு மணியாகியும் பால் கறக்காததால் கன்று பசியால் அலறியது".

"பசு கன்றின் பசியைப் பொறுக்க முடியாது கட்டை அறுத்துக்கொண்டு சென்று கன்றுக்குப் பாலூட்டியது. இதைக் கண்ட கேசவன் பசுவிற்கு அடித்தான். அதை மரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த பசுவின் நண்பனான கிளி பறந்து சென்று அரசருக்குக் கூறிவிட்டது. அரசர் பெருங்கோபங் கொண்டு கேசவனைக் கைது செய்து ஐம்பது கசையடி கொடுத்தவர். இதுகூட உனக்குத் தெரியாதா…? நாம் யாருக்கும் தண்டனை கொடுக்கக் கூடாது. அரசர் தான் நீ, விசாரித்துத் தண்டனை கொடுத்தல் வேண்டும்".

"எமது அரசர் வனத்தில் உள்ள அத்தனை ஜீவராசிகளையும் பாகுபாடின்றி நோக்கித்தான் நடவடிக்கை எடுப்பார். அவருக்கு நீயும், நானும், முருகேசனாரும் வேறுபட்டவர்கள் அல்ல. மூவரும் அல்ல எல்லோரும் சமமானவர்கள்" என்று யானை கூறியது என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பாலேந்திரன்.

## 13

பாலகுமாரன் பேசி முடித்ததும் மேடைக்கு வந்த கதிரேசன், "சபையோர்களே, பாலகுமாரன் மிகவும் அருமையாகப் பேசினார். இதுதான் அவரது முதலாவது மேடைப்பேச்சு. எனினும் முதலாவது பேச்சு என்று எண்ணத்தகாதவாறு மிகவும் அருமையாகவும், கருத்தாளம் மிக்கதாகவும் பேசிச் சபையைக் கவர்ந்தார். புதிய புதிய பேச்சாளர்களை அறிமுகப்படுத்த

வேண்டும் என்ற நோக்குடனேயே நாம் செயற்பட்டு வருகிறோம். நாம் அறிமுகப்படுத்தியவர்கள் ஏனையோர் பேசியவற்றைப் பேசுவதில்லை. புதுப்புதுக் கருத்துக்களைத் தேடியெடுத்துப் பேசிவருகின்றனர். இந்த விடயத்தில் நாம் பெருவெற்றியடைந்ததாக எண்ணிப் பெருமைப்படுகிறோம். அடுத்துச் செல்வி கனகாம்பிகை செல்வராசா என்ற மயிலார் குறிப்பு அறிதல் என்ற அதிகாரம் பற்றிப் பேசுவார். அவர் முல்லைவனப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடந்த வருடம் சேர்ந்துள்ளார். அவர் இன்னும் பல பட்டங்களைப் பெற்றுத் தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கூறித் தனது தலைமையுரையை நிறைவு செய்தார்.

**செ**ல்வி கனகாம்பிகை மேடைக்கு வந்து சபையோரை வணங்கினார். பின்பு சபையோர்களே, பெரிய ஒரு மகாநாட்டில் பெருந்தொகையான சபையோர் கூடியுள்ள இடத்தில் எனக்குப் பேச வாய்ப்புத் தந்த இம் மகாநாட்டுக் குழுவினர்களுக்கு முதலில் நன்றிகூறிக் கொள்கிறேன். தலைவர் உற்சாகமானவர். அவரை நான் சிறுவயது முதல் அறிவேன். சில மகாநாடுகளின் போது அவரின் மடியில் இருந்து தான் பேச்சைக் கேட்பேன். அவர் தந்த ஊக்கம் தான் இன்று என்னைப் பேசவைத்தது. அடுத்துத் தமிழறிஞரின் நட்பு என்னைப் பேசத்தூண்டியதோடு அவரைப்போல் பேசவேண்டும் என்ற ஆசையையும் தூண்டியது. அவருக்கும் நன்றி கூறிக்கொண்டு எனது பேச்சை ஆரம்பிக்கிறேன்.

**“ச**பையோர்களே, இன்று எனக்குப் பேசத்தந்த விடயம் குறிப்பு அறிதல் என்பதாகும். வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சகலவிதமான தகவல்களையும் கூறிவிட்டார். ஒருவரது மனநிலையையும் அவரது செயற்பாட்டையும் அவருடைய கண்களும் முகமும் காட்டும். இவை இரண்டும் தான் உயிர்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. ஒருவரது வீட்டுக்குச் செல்கிறோம் அங்கு அவரை வரவேற்கும் முறையைவைத்துத் தான் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று தீர்மானிக்கிறோம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இதையே வள்ளுவன் ஒரு அத்தியாயமாக்கியுள்ளான்”.

**க**னகாம்பிகை முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், “கூறாமை நோக்கிக் குறிப்பு அறிவான் எஞ்ஞான்றும் மாறா நீர் வையக்கு அணி” ஒருவர் வாயைத் திறந்து எதையும் சொல்லாதிருக்கும்போது அவனது முகத்தைப் பார்த்து அவன் என்ன நினைவோடு வந்திருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவன், உலகத்திற்கு உயர்ந்த ஆபரணத்தைப் போன்றவன் ஆவான். கனகவனம் என்ற வனத்தின் அரசன் கனகசிங்கன் என்ற சிங்கம். அவனது முதலமைச்சர் சுந்தரவதனன் என்ற வரிக்குதிரை. கனகசிங்கனின் இரகசிய ஆலோசகன் மகேசன் என்ற நாய். மகேசனுக்கு ஐந்து

நாய்கள் உதவியாளர்களாகப் பணியாற்றினர். மதன், கோகிலன், மாறன், லிங்கன், மணியன் என்ற ஐவரும் அதிபுத்திசாலிகள். மகேசன் ஒப்படைத்த வேலைகளைத் திட்டமிட்டு, நல்லமுறையில் முடித்துவிடுவர்.

“**அ**ன்று இரவு கனக வனத்தின் எல்லைக் காவல்படை வீரர் இருவரைப் பிடித்து மகேசனிடம் ஒப்படைத்தனர், “தலைவரே, இவர்கள் இருவரும் வழிப்போக்கர்கள் போல இங்குவந்து நமது வனத்தை நோட்டமிடுகிறார்கள் என நான் சந்தேகப்படுகிறேன். அதனால் தான் அரசரின் ஆணைப்படி தங்களிடம் ஒப்படைக்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுங்கள்” என்று கூறினர்.

“**ம**கேசன் அவர்கள் இருவரையும் அழைத்து விசாரித்தான். அவர்களுள் ஒருவன் பெயர் மாதவன் என்ற நரி. அடுத்தவனது பெயர் சுந்தரன் என்ற பூனை. மாதவனின் கண்களில் குரூரம் தென்பட்டது. பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு முகமெங்கும் பரவிச் சிவந்திருந்தது. சுந்தரன் அடிக்கடி கண்களை மூடினான். எனினும் அவற்றில் ஒரு கொடூரத்தன்மை இருந்தது. கேள்விகள் கேட்கும்போது உணர்ச்சிவசப்பட்டான். அவர்கள் இருவரையும் தனது கழுகுக்கண்களால் பார்வையிட்டு அவர்களது எண்ணங்களை மகேசன் அறிந்து கொண்டபின் காவல்படைவீரனை அழைத்துச் சொன்னான், “இவர்களைப் பார்த்தால் பண்டாரிகள், பரதேசிகள் போலத் தெரிகிறது. கைது செய்தபின் விசாரித்து ஒரு முடிவுக்கு வந்தபின்புதான் என்னிடம் ஒப்படைத்தல் வேண்டும். இனிமேல் கனவமாக இருங்கள். இவர்களை விடுதலை செய்யுங்கள்” என்றவாறு இருவரது முகங்களையும் பார்த்தான் அவற்றில் ஒரு கொடூரத்தன்மை இருந்தது”.

“**அ**வர்கள் சென்றபின் மகேசன் தனது உதவியாளர்கள் ஐவரையும் அழைத்துச் சொன்னான், “இவர்கள் மீது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இவர்கள் ஏதோ ஒரு தீயநோக்கத்துடன் தான் இங்கு வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக ஒரு சிலர் எமது வனத்தில் இருந்து உதவுகிறார்கள். நீங்கள் மாறுவேடம் பூண்டு இவர்களைக் கண்காணியுங்கள்” என்றான்.

“**ஐ**வரும் மகேசனிடம் விடைபெற்றுச் சென்றனர். மூன்று நாட்கள் கழிய மாறன் என்பவன் வந்து சொன்னான், “தலைவரே, அவர்கள் இருவரும் முல்லைவனத்து ஒற்றர்கள். அவர்களுக்குத் துணையாக இங்கே இருந்து உதவுவது புலவர் சின்னையாச் செட்டியார் என்ற நரி. சின்னையாச் செட்டியார் முல்லை வனத்தோடு சேர்ந்து வர்த்தகம் செய்பவர்”.

**“ம**றுநாள் மூவரும் கைது செய்யப்பட்டனர். கனகசிங்கன் மகேசனையும் அவனது உதவியாளர்கள் ஐவரையும் அழைத்துச் சொன்னான், “நீங்கள் வீராதி வீரர்கள். ஒருவர் வாய்திறந்து கூறாத போதும் அவரது மனநிலையை அவர்களது கண்கள் மூலமும், முகத்தின் மூலமும் கண்டுபிடித்து விடுவீர்கள். நீங்கள் உலகத்திற்கு உயர்ந்த ஆபரணம் போன்றவர்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தும் உங்களது வீட்டிற்கு வந்துசேரும்” என்று கூறிக் கனகாம்பிகை தனது உரைய நிறைவு செய்தாள்.

**க**னகாம்பிகை இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், “ஐயப்படா அது அகத்து உணர்வானைத் தெய்வத்தோடு ஒப்பக்கொளல்” சபையோர்களே, ஒருவரது மனதில் ஆயிரக்கணக்கான உணர்வுகள் இருக்கும். ஒருவரது மனதில் உள்ளவற்றை அவன் சிறிதும் சந்தேகப்படாத வகையில் அறியவேண்டும். சந்தேகப்பட்டவனை கதைகளால் மகிழ்வடையச் செய்து அவரின் மனதில் உள்ளவற்றை மறைக்காமல் அவரைக் கொண்டே சொல்லவைக்கும் திறமைசாலியைத் தெய்வத்தோடு வள்ளுவர் ஒப்பிடுகிறார். மகேசன் திறமைசாலி, அதிபுத்திசாலி, நேரத்திற்கேற்றபடி மிகவும் விருப்புடனும், மகிழ்வுடனும் பேசித் தன்னோடு பேசுபவர்களைத் தன்னிலையை மறக்கச் செய்வதில் வல்லவன்”.

**“ம**கேசன் வைர வியாபாரி போல வேடமிட்டுத் தனது உதவியாளர்களான மதனையும், மாறனையும் அழைத்துக் கொண்டு சின்னையாச் செட்டியாரின் வீட்டுக்குச் சென்றான். உயர்ந்தரகப் பட்டுவேட்டி சட்டை உடல் முழுவதும் பெறுமதி மிக்க ஆபரணங்கள் அணிந்து அவன் சின்னையாச் செட்டியாரிடம் சென்று அவரை வணங்கி, “செட்டியாரே, நான் முல்லை வனத்தைச் சேர்ந்த இராமையாச் செட்டியாரின் உற்ற நண்பன். எனது பெயர் சம்மந்தன் செட்டியார். இராமையாச் செட்டியார் உங்களைப்பற்றி முழுமையாக எனக்குச் சொல்லி உங்களோடு வியாபாரத் தொடர்பை ஏற்படுத்தும்படி சொன்னவர். எமது வர்த்தகத்திற்கு அடையாளமாக இந்தப் பெறுமதிமிக்க வைர அட்டியலை உங்களுக்குப் பரிசளிக்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறி எழுந்து நின்று அவரை வணங்கினான்”.

**“சி**ன்னையாச் செட்டியார் தன்நிலையை மறந்துபோனார். பின் மகேசன் தான் கொண்டுவந்த ஒரு போத்தலை நீட்டி, “இது பனம் பாணியில் இருந்து எமது வனத்தில் மட்டும் உற்பத்தியாகும் பானம்...” என்று மகேசன் கூறச் சின்னையாச் செட்டியார் சொன்னார், “நான் முல்லை வனத்திற்குச் சென்றால் இதை நண்பர்கள் தருவார்கள். மிகவும் அற்புதமான பானம். எனக்கு மிகவும் பிடிக்கும்” என்று கூறியவாறு ஒரு பாத்திரத்தை எடுத்து அதில் அதை ஊற்றி

மகேசனுக்கு நீட்டினார், “ஐயா, இதைக் குடித்துவிட்டுத் தான் உண்ண வேண்டும். ஒருபோதும் உண்டுவிட்டுக் குடிக்கலாகாது” என்றபோது சின்னையாச் செட்டியார் சொன்னார், “உண்மைதான் அங்கே அதைச் செய்வார்கள்” என்றவாறு குடித்தார். மகேசன் அதில் சிறிது மதுபானமும் கலந்தமையால் சின்னையாச் செட்டியார் தன்நிலையை மறந்து அனைத்தையும் கூறிவிட்டார்”.

“**அ**தை மகேசன் கூறியபோது கனகசிங்கன் சொன்னான், “இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வள்ளுவன் கூறியது உண்மை என்று புரிந்து கொண்டு வருகிறேன். ஒருவன் தனது மனதில் உள்ளவற்றை அவன் சிறிதும் சந்தேகப்படாதவாறு அறிந்து கொள்ளக் கூடியவனைத் தெய்வத்திற்குச் சமமானவன் என்று கூறுவர். நீ அப்படியானவன்” என்று கனகசிங்கன் மகேசனைக் கட்டித்தழுவினான்” என்று கூறிக் கனகாம்பிகை தனது உரைய நிறைவு செய்தாள்.

**க**னகாம்பிகை மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், “குறிப்பிற் குறிப்பு உணர்வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்”, “சபையோர்களே, ஒருவனது கண்களையும், முகத்தையும் உற்றுநோக்கி அவன் என்ன நினைக்கிறான் என்று அறிந்து கொள்ளத்தக்கவனை நாட்டில் உள்ள உயர்ந்த விலை மதிப்பற்ற பொருளைக் கொடுத்து அவனைத் தனது துணையாக்கிக் கொள்ளல் வேண்டும். மனதின் வாசல் கண்கள், மனதின் வெளிப்பாடு முகம், இரண்டும் ஒரு சிறு தாக்கம் ஏற்பட்டாலும் உடனே மாறுபாடு அடையும். மகிழ்வான நிகழ்வாயினும் சரி, வேதனையான நிகழ்வாயினும் சரி மனம் உடனே முகத்தில் காட்டும். அதை மறைக்க எச்சக்தியாலும் முடியாது. மகிழ்வான நிகழ்வானால் முகம் மலரக் கண்கள் கசியும். வேதனையான நிகழ்வாயின் முகம் சிவக்கும் அல்லது கறுக்கும். கண்கள் ஊற்றுப்போல் ஊறும்” இந்த இரு நிகழ்வுகளையும் அறிவிற் சிறந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்”.

“**க**னகசிங்கன் சொன்னான், “மகேசா, நீ திறமைமிக்க ஊழியன். ஒருவரது கண்களிலும், முகத்திலும் தோன்றும் உணர்ச்சிகளைக் கொண்டு அடுத்து என்ன நடைபெறும் என்று கூறிவிடுவாய். பிருந்தாவனத்தின் இளவரசன். மகேந்திரவர்மன் என்ற சிங்கம். அவனும் நானும் குருகுலத்தில் ஒன்றாகக் கற்றோம். நல்ல நண்பர்களானோம். செண்பகவனத்து இளவரசன் செங்கோடன் என்ற சிங்கமும் எம்முடன் குருகுலத்தில் கற்றுவந்தது. செண்பகவன அரசன் தனது ஐம்பதாவது பிறந்த தினத்தை வெகுவிமர்சையாகக் கொண்டாடினான். அது வளமான பெரியவனம். என்னையும் மகேந்திரவர்மனையும் தனது தந்தையின் பிறந்த தினத்திற்கு அழைத்திருந்தான்”.

"**இ**ருவரும் செண்பகவனத்திற்குச் சென்று சிலநாட்கள் தங்கியிருந்தோம். ஒருநாள் நானும் மகேந்திரவர்மனும் பூஞ்சோலையில் இருந்தபோது செண்பகவன இளவரசியான கயல்விழி தனது தோழியர்களுடன் பூஞ்சோலைக்கு வந்தாள். அவள் நல்ல அழகி. மகேந்திரவர்மன் அவனின் அழகில் மயங்கி, அவளை விரும்பினான். மகேந்திரவர்மன் நல்லவனல்ல. அதனால் செங்கோடன் அவனை வெறுத்துவிட்டான். கயல்விழி தனது தோழியிடம் தான் என்னை விரும்புவதாகக் கூறிச் சம்மதம் கேட்டுவரச் சொன்னாள். நான் சம்மதித்தேன். காலப்போக்கில் மகேந்திரவர்மன் கயல்விழி என்னைக் காதலிப்பதை அறிந்து எனக்கு மறைமுகமாகத் தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தான்".

"**ஒ**ருநாள் மகேந்திரவர்மனும் நானும் கதைத்துக் கொண்டிருக்கும் போது நீ வந்து அவனை அர்த்தத்துடன் பார்த்தாய். அவன் சென்றபின், "இளவரசே, இவன் மிகவும் பொல்லாதவன். அவனது கண்கள் உங்களைப் பழிவாங்கும் நோக்குடன் பார்வையிடுகின்றன. முகம் கோபத்தால் சிவந்திருக்கிறது. அதில் பழிவாங்கும் எண்ணம் வியாபித்திருக்கிறது. பற்களைக் கடிக்கிறான். வெறுப்போடு உங்களைப் பார்க்கிறான். நீங்கள் பார்க்கும் போது வலிந்து சிரிப்பை வரவழைக்கிறான். அவனுக்கு உங்கள் மீது அளவுக்கதிகமான சினம் இருக்கிறது. வஞ்சனையான சிந்தனைகளை அவன் வெளிப்படுத்தத் தயங்குகிறான். அவதானமாக இருங்கள்" என்றான்".

"**அ**தைக் கேட்டு நான் சிரித்தேன். குருகுலத்தில் கடந்த பத்து வருடங்களாகப் பிரியாது பழகிவருகிறோம். எனக்கு அவனைவிடச் சிறந்த நண்பன் வேறுயாரும் இல்லை. நீ எனது நாட்டவன் என்பதால் எதையும் சொல்லலாமா…? அவன் மிகமிக நல்லவன்" என்று சொன்னேன்.

"**இ**ளவரசே நான் எனது கடமையைச் சரிவரச் செய்பவன். அதனால் தான் தாங்கள் கோபித்தாலும் பரவாயில்லை என்று உங்களைக் காப்பாற்றுவதற்காகச் சொன்னேன். அவதானமாக இருந்து அவனது உள்நோக்கை அறியுங்கள். நான் இரண்டு வாரத்தில் உண்மையைக் கண்டுபிடித்துச் சொல்கிறேன்" என்றாய். நான்கு நாட்கள் கழிய நானே உன்னைத் தேடிவந்து, "மகேசா, நீ சொன்னது முற்றிலும் சரி. அவன் கயல்விழியை விரும்புகிறான். ஆனால் அவளுக்கு விருப்பமில்லை. அதனால் அவள் அவனை எச்சரிக்க அவன் என்னைத் தான் கொலை செய்துவிட்டும் உன்னை அடைவேன்" என்று சபதமிட்டிருக்கிறான். அதைக் கயல்விழி தோழியர் மூலம் சொல்லி அனுப்பினாள். அன்றுதான் நான் உன்னை முழுமையாகப் புரிந்து கொண்டேன். அதனால் தான் உனக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் அள்ளித் தருகிறேன். நீ திறமையானவன். ஒருவரின் கண்களையும், முகத்தையும் பார்த்து அவர் என்ன நினைக்கிறார்

என்பதை உடனேயே கண்டுபிடித்து விடுவாய்” என்று உணர்ச்சிவசப்பட்டுக் கனகசிங்கன் கூறினான் என்று கூறிக் கனகாம்பிகை தனது உரைய நிறைவு செய்தாள்.

**க**னகாம்பிகை நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை உறுப்போர் அனையரால் வேறு” சபையோர்களே கண்ணால் காணக்கூடிய ஒருபொருளைக் கண்டு அதன் இயல்புகள் பற்றிச் சிறுகுழந்தையும் சொல்லிவிடும். ஆனால் ஒருபோதும் காணமுடியாத மனதில் இருப்பவற்றைக் கண்டுபிடித்துச் சரியாகச் சொல்வது இயலாத காரியம். அதற்குத் தெய்வத்தின் அருள்வேண்டும்”.

**“எ**னது தந்தை சொன்னவை யாவும் எனது மனதில் இருக்கிறது. அவர் சொன்னார், “கனகசிங்கா, எக்காரணம் கொண்டும் மகேசனது மனம் வருந்தும்படி எதையும் சொல்லாதே. அவன் எமக்குக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதுவன். அவன் ஒருவரது முகத்தைப் பார்த்துவிட்டு அவன் என்ன நினைக்கிறான் என்று சரியாகக் கூறுவான். ஆரம்பத்தில் இவன் சொல்வது உண்மைதானா என்று எனக்குச் சந்தேகமிருந்தது. என்னுடன் மதுரவனத்து இளவரசனான இளந்திரையன் குருகுலத்தில் கற்று வந்தான். அவனுக்கு நான் உன்னைப் பற்றி விரிவாகக் கூறி அரண்மனைக்கு அழைத்து வந்து இளந்திரையனைக் காட்டி அவன் கவிபாடுவதில் வல்ல புலவன் என்று அறிமுகம் செய்துவைத்தேன்”.

**“அ**வன் சில நிமிடங்கள் உனது முகத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னான், “அரசே, இவன் பரம்பரைப் புலவன் அல்ல. இவனது கண்கள் வீரம் மிக்கவையாக இருக்கின்றன. முகமும், உதடுகளும் உறுதியாகக் கல்லுப்போல இருக்கிறது. கண்களில் ஓர் ஆவேசம் தென்படுகிறது. இவன் உங்களுடன் கற்கும் ஒரு நாட்டின் இளவரசன் போலத் தெரிகிறது” என்றதும் நான் அதிர்ச்சியால் உறைந்துபோனேன். மகனே ஒருவனது மனதில் உள்ளவற்றை அப்படியே அறிந்து கொள்ளக்கூடியவன் அறிவிற்சிறந்த மேதையாவான். உறுப்புக்களால் மற்றவர்களோடு ஒன்றுபட்டிருந்தாலும் அறிவில் அவன் மேம்பட்டவன்” என்று சொன்னவர். அது உண்மை என்று கூறிக் கனகாம்பிகை தனது உரைய நிறைவு செய்தாள்.

**க**னகாம்பிகை ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினான், “குறிப்பின் குறிப்பு உணரா ஆயின் உறுப்பினுள் என்ன பயத்தவோ கண்” சபையோர்களே, கனகசிங்கன் தான் அணிந்திருந்த வைரமணிகளால் ஆன

மாலையைக் கழற்றி அவனது கழுத்தில் போட்டுவிட்டுக் கேட்டான், "மகேசா, கண்களையும், முகத்தையும் பார்த்து நீ எப்படி அவர்களின் மனதில் உள்ளவற்றை அறிந்து கொள்கிறாய். பலருக்குக் கண்களால் காணும் பொருட்களுக்கே விளக்கம் கூறமுடிவதில்லை. ஒருவரால் தனது மனத்தையே சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் நீ அவர்களின் மனதில் உள்ளவற்றை எவ்வாறு அறிந்து சொல்கிறாய்? மயாஜாலம் செய்கிறாயா?" என்று சிரித்தபடி கேட்டான் கனகசிங்கன்".

**"ம**ன்னா, வசியம் செய்யவோ, மந்திரம் செபிக்கவோ எனக்குத் தெரியாது. ஒருவரது முகத்தில் நவரசங்கள் ஒன்பதும் இருக்கும். அதில் சில எந்நேரமும் அவனுடன் கூட இருக்கும். அத்துடன் இயல்பான நிலையை அதாவது மனம் கண்ணாடி போன்றது. கண்ணாடி எதிரில் உள்ள பொருட்களைத் தெளிவாகக் காட்டும். கண்ணாடி மீது அழுக்குப் படித்தாலும் அதையும் தெளிவாகக் காட்டும். மனமும் அத்தகையது. இயல்பான நிலையை மனதிற்கு மறைக்கத் தெரியாது. இயல்பான குணத்தையும் மனம் மறைக்க மாட்டாது. புலவன் என்றால் அவனது முகம் அறிவால் ஒளிரும். தலை தாளம் போடும். கண்கள் மலர்ந்திருக்கும். அது ஓர் அரசனானால் முகத்தில் வீரம், கம்பீரம் என்பன தெளிவாகத் தெரியும். முகம் இரும்புபோல கடினமானதாகவும், சிவந்தும் இருக்கும். ஒருவனது செயலைப் பொறுத்தே மனத்தின் செயற்பாடாகும். ஒருவரது கண்கள், முகம் ஆகியவற்றைப் பார்த்து அவன் என்ன எண்ணுகிறான் என்று அறிந்து கொள்ள முடியாதவனுக்குக் கண்கள் எதற்கு? செவி கேட்பதற்கு, மூக்கு வாசனையை உணர்வதற்கு, நாக்கு சுவை பார்ப்பதற்கு, கைகள் தொழில்கள் செய்வதற்கு. அதுபோலக் கண்கள் தான் காணும் காட்சிகளையும், அதிலுள்ள உணர்வுகளையும் உணர்வதற்கு இதை உணராத கண்கள் குருட்டுக் கண்கள் மன்னா…" என்று கூறிக் கனகாம்பிகை தனது உரைய நிறைவு செய்தாள்.

**க**னகாம்பிகை ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், "அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" சபையோர்களே, மகேசன் கனகசிங்கனுக்குச் சொன்னான், "மன்னா, மனம் தான் மனதில் எழும் உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அதை உடல் கட்டுப்படுத்தமாட்டாது. மனம் எதைச் செய்தாலும் திருப்திப்படாதது. அடங்காதது. தனக்கு அருகில் இருக்கும் பொருட்களை எவ்விதமான வேறுபாடுமின்றிக் கண்ணாடி காட்டும். அதுபோல மனதில் எழும் உணர்வுகளை முகம் உடனே காட்டும். இது தவிர்க்க முடியாத செயலாகும். நாம் மனதில் எழும் உணர்ச்சிகளை எப்படி முகம் காட்டுகிறது என்று ஒரு சிறு குழந்தை மூலம் அறியலாம். சிறு குழந்தைக்கு மறைக்கத் தெரியாது. அது ஒவ்வொரு செயலையும் விளக்கமாகக் காட்டும். மகிழ்ச்சி உண்டானால் சிரிக்கும். தவறு ஏற்பட்டால் கோபிக்கும். கோபம் வந்தால் அழும்.

அப்போது அதன் முகத்தை உற்றுநோக்கினால் அம் முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டுகொள்ளலாம்".

"**பெ**ரியவர்கள் அதை மறைக்க முயல்வர். ஆனால் மனம் மறைக்கவிடாது தொழிற்பட்டு உணர்வுகளை வெளிப்படுத்தும். இதை உற்றுநோக்குவதன் மூலம் கண்டு கொள்ளலாம். மனம் தான் எல்லாப் பாவங்களுக்கும் மூலகாரணியாகும். அதை மனம் மறைக்க முற்பட்டாலும் முடியாது உணர்வுகளை வெளிப்படுத்தும். அந்த உணர்வுகளைத் தொடர்ந்து கூர்ந்து அவதானிப்பதன் மூலம் மனதில் உள்ளவற்றை அறிந்து கொள்ளலாம். மன்னா, தங்களின் பேர்த்தியார் நெடுங்காலம் நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். சிவன்கோலில் கொடியேறித் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று தீர்த்தம். மன்னர் வரவில்லை. நான் அவரைத்தேடி அந்தப்புரத்திற்குச் சென்றபோது மன்னரின் நிலையைப் பார்த்தவுடன் அவரது பேர்த்தியார் இறந்துவிட்டார் என மூடிவுகட்டி மன்னா, பிறப்பு எவ்வாறு இயல்பானதோ அவ்வாறே இறப்பும் இயல்பானது என்றேன்".

"**ம**ன்னர் விம்மி விம்மி அழுதார். பின் உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டார். மன்னா எனக்கு யாரும் சொல்லவில்லை தாங்கள்தான் சொன்னீர்கள். அதாவது தங்களது முகமும், கண்களும் உங்களை அறியாது அத்துயரமான செய்தியைக் கூறிவிட்டன" என்றேன். மன்னர் எதுவும் பேசவில்லை" என்று கூறிக் கனகாம்பிகை தனது உரையை நிறைவு செய்தாள்.

**க**னகாம்பினை ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத்தொடங்கினாள், "முகத்தின் முதுக் குறைந்தது உண்டோ? உவப்பினும் காயினும் தான் முந்துறும்" சபையோர்களே, மனதில் இருக்கும் எண்ணங்களை மறைக்காது கூறும் இயல்பு முகத்திற்குமட்டுமே உண்டு. ஒருவர் மனம் மகிழ்ந்து பேசினாலே அல்லது வேதனையுடன் பேசினாலோ அல்லது பெறுப்புடன் பேசினாலோ அதைப் பேசுபவரின் முகம் உடனே காட்டிக் கொடுத்துவிடும்"

**க**னகவனத்தின் சோதிடரான சிவராமன் என்ற மான் அன்று அதிகாலையில் கனகசிங்கனை அவசரமாகச் சந்திக்க வேண்டும் என்று முதலமைச்சரிடம் சொன்னதால் கனகசிங்கன் அதிகாலையிலேயே எழுந்து சோதிடரை வரவேற்கத் தயாராக இருந்தான். சோதிடர் வந்து கனகசிங்கனை வணங்கிவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்து சொன்னார், "மன்னா, இளவரசிக்குக் கல்யான வயது வந்தும் அதை அறியாதவர் போல இருக்கிறீர்கள். இந்தவருடம் திருமணத்தை

முடிக்காவிட்டால் இரண்டு வருடங்கள் திருமணப்பேச்சே எடுக்கக்கூடாது. இளவரசியைத் திருமணம் செய்யப் பல இளவரசர்கள் போட்டிபோடுகின்றனர். அவ்வாறிருக்கத் திருமணத்தைத் தாமதிக்க வேண்டிய காரணம் என்ன…?" கனகசிங்கன் எதுவும் பேசாததால் சோதிடர் ஆச்சரியப்பட்டவாறு சொன்னார், "சோலைமலைவன இளவரசன் லிங்கேஸ்வரன் தங்களுக்குப் பொருத்தமான மணவாளனாக இருப்பான். அது பெரிய வளம் மிகுந்த நாடு. முப்படைகளும் பலமுள்ளவை. இளவரசர் வீராதிவீரன்".

**"சோ**திடர் லிங்கேஸ்வரனின் வீரதீரச் செயல்களைக் கூறிக்கொண்டு கனகசிங்கனின் முகத்தை அவதானித்தார் அது மலரவில்லை. விரும்பாதவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பதுபோல இருந்தது. அத்துடன் கனகசிங்கன் ஏதோ யோசித்துக் கொண்டிருப்பது போலச் சோதிடருக்குத் தோன்றியது. அவனது முகமாற்றத்தில் இருந்து அவன் லிங்கேஸ்வரனை விரும்பவில்லை என்று தெரிந்தது. அதனால் அவர் சிறிது நேரம் யோசித்தார். இப்போது கனகசிங்கன் இரத்தினவன அரசனான விக்கிரம பாண்டியனுடன் நல்லுறவு வைத்துள்ளான் என்று நினைத்தவாறு, "மன்னா, லிங்கேஸ்வரனை விட இரத்தினவன இளவரசன் சுந்தரபாண்டியன் வீரன். அவன் இளவரசிக்குப் பொருத்தமான மணவாளனாக இருப்பான் என நினைக்கிறேன்" என்றார். அதைச் சொல்லும் போது கனகசிங்கனின் முகம் மலர்ந்தது, புன்னகை அரும்பியது. சோதிடர் மன்னன் அவனை விரும்புகிறான் என்று முடிவு செய்தார். சில தினங்களின் பின் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. சபையோர்களே, ஒருவரது விருப்பு வெறுப்புக்களை அவரது முகம் காட்டிவிடும். அதன்பின் வார்த்தைகள் பயனற்றவை. அதனால் அறிஞர்கள் முகத்திற்கு இணையாக அறிவுள்ளது எதுவும் இல்லை என்று கூறிக் கனகாம்பிகை தனது உரைய நிறைவு செய்தாள்.

**க**னகாம்பிகை எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "முகம் நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின்" கனகசிங்கன் சோதிரைக் கேட்டான், "சோதிடரே, சோலை மலை அரசன் உம்மிடம் எனது மகளின் திருமணத்தைப் பற்றிப் பேசினானா..? தாங்கள் ஒருவரின் உள்ளத்தின் குறிப்பை வைத்து மனதுள் என்னென்ன திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று புரிந்துகொள்ளும் இறைசக்தி தங்களிடம் உள்ளது. அவன் ஏதாவது ஒரு உளக்குறிப்புடன் தான் வந்து பேசியிருப்பான். அப்படி அவன் பேசும் போது அவன் என்ன நினைத்து அதைப்பேசுகிறான் என்பதை அவனது முகக் குறிப்பை வைத்துக் கண்டிருப்பீர்கள். அப்படியான திறமை உள்ளவர்கள் எதிரியின் முகத்தை நோக்கினால் அவனது எதிர்காலத்திட்டம் என்ன என்பதைப் புரிந்திருப்பீர்கள். இந்திரவனம் எனது பகைநாடு, மிக்க வளமுடையநாடு, அங்கு தானிய விழைச்சலுக்குக் குறைவில்லை. இந்திரவன அரசன் சோலை மலை வனத்திற்கு இலவசமாகத்

தானியங்களைக் கொடுக்கிறான். அதைப் பெற்று அவனோடு உறவாடும் அவன் எப்படி தனது மகனுக்கு எனது மகளைப் பெண் கேட்கலாம். இதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாக நான் எண்ணுகிறேன்".

**"சோ**திடர் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார், "மன்னா, இத் திருமணத்தை வைத்து ஏதோ ஒரு கெட்ட செயலில் ஈடுபட இந்திரவன அரசன் நினைக்கிறான். ஏனென்றால் நாம் திருமணம் பற்றிப் பேசும்போது சோலை மலை அரசனும் கூட இருந்தான். அவனது முகம் சிவந்து இறுகி இருந்தது. ஏதோ ஒரு கெட்ட எண்ணத்துடன் தான் இத் திருமணத்தை ஏற்பாட்டைச் செய்துள்ளனர். அதனால் கவனமாக இருங்கள் மன்னா" என்றார் சோதிடர்.

**க**னகசிங்கன் அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தான். பின் இரு நாடுகளையும் எனது வீரர்கள் ஒரு சில மணித்தியாலங்களில் கைப்பற்றிவிடுவர். அதை நான் விரும்பவில்லை" என்றான். சோதிடர் அவனது முகத்தைப் பார்த்தான் அது சினத்தால் சிவந்திருந்தது" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் கனகாம்பிகை.

**க**னகாம்பிகை ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் கண்ணின் வகைமை உணர்வார்ப்பெறின்" சபையோர்களே கண் பல்வேறு விதமாகப் பார்த்து அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளும் தன்மை வாய்ந்தது. அவ்வாறு அறிந்துகொள்ள வல்லவர்களின் துணையிருந்தால், எதிரிகளின் பகைமை உணர்வுகளையும், நண்பர்களின் நட்பின் அர்த்தங்களையும் கண்களைக் கொண்டே தெரிந்து கொள்ள முடியும்.

**"சோ**திடரே, நீர் சோதிடத்தில் மட்டுமல்ல ஒருவரின் கண்களைப் பார்த்தே அவரின் மனதில் என்னென்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்றும், என்னென்ன தீய குணங்கள் இருந்து எவ்வாறெல்லாம் நண்பர்களையும், பகைவர்களையும் பழிவாங்க நினைக்கின்றன என்றும் சொல்வதில் வல்லவர். அதனால் உமக்கு என்னென்ன உதவிகள் தேவையோ அத்தனையையும் செய்து தருகிறேன். உமது பரம்பரையினர் தான் எமது வம்சத்தின் சோதிடர்கள். அவர்கள் ஒருபோதும் தவறாக நடந்ததில்லை. இரத்தினபுர வன அரசர் எமது பரம்பரை விரோதிகள். அவன் என்னைச் சூழ்ச்சியால் வெல்ல நினைக்கிறான். அதை அனுமதிக்க முடியாது. நீர் எனக்கு உதவ வேண்டும் என்றபோது சோதிடர் சொன்னார், "மன்னரே எமது பரம்பரையினர் தங்களின் அரண்மனையில் தான் காலம் காலமாகச் சோதிடம் பார்த்து வருகின்றனர். அதனால் உங்களது

எழுற்சியிலும், வீழ்ச்சியிலும் எனக்குப் பங்கிருக்கிறது. அதனால் கட்டாயம் உதவுவேன்" என்றார் சோதிடர்.

"**ஒ**ருவரின் கண்பார்வையின் வேறுபாடுகளைக் கொண்டு அவற்றின் அர்த்தங்கள் என்னவென்று உங்களது பரம்பரையே அறிந்து சொல்லும் தன்மை வாய்ந்தது. நீர் உமது முன்னோரைவிட வல்லவர். அதனால் சகலவற்றையும் அறிந்து உடனுக்குடன் சொல்லும்" என்று கனகசிங்கன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் கனகாம்பிகை.

**க**னகாம்பிகை பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், "நுண்ணியம் என்பார் அளக்கும் கோல்காணுங்கால் கண் அல்லது இல்லை பிற" சபையோர்களே, பொருட்களை நுட்பமாக அளப்பதற்குப் பல்வேறுவிதமான கருவிகள் உள்ளன. அவை சரியாக அளந்து சொல்லும். ஆனால் மிகவும் புத்திசாலித்தனமான மனதை நுட்பமாக அளக்கவல்ல கருவி கண்களாகும். கண்கள் தான் ஒருவரது கண்களிலும், முகத்திலும் உள்ள அன்பான வக்கிரமான எண்ணங்களை சரியாக அளந்து சொல்லும் கண்களைத் தவிர மனங்களை அளக்க வேறு கருவிகள் உலகில் இல்லை".

"**சோ**திடரே, எமது குடும்ப விடயங்கள் யாவும் தெரிந்தவர் நீங்கள். எனது மகனின் சாதக ஓலையைப் பரிசீலிக்க வந்த தாங்கள் அந்தப்புரத்தில் எனது மனைவியோடு கூடியிருந்த எனது தங்கையின் கண்களைப் பார்த்துவிட்டு ஓர் ஆபத்தான விடயத்தைச் சொன்னீர்கள். அது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அந்தப்புரத்திற்கு வந்த நீங்கள் என்னைச் சந்தித்து, "மன்னா ஓர் இரகசியமான விடயம் பற்றித் தனிமையில் பேச வேண்டும்" என்றீர்கள்".

"**ந**ந்தவனத்திற்கு இருவரும் சென்றபோது, "மன்னா, உங்களின் தங்கையின் பார்வைகள் பல அர்த்தங்களை உடையனவாக இருக்கின்றன. அவர் யாரையோ விரும்புகிறாள். அவன் ஒரு சாதாரணமான குடிமகன் போலத் தெரிகிறது. கண்களில் அச்சமும், பயமும், நடுக்கமும் தென்படுகின்றன. நான் இங்கு வரும்போது ஒரு புதியவனைக் கண்டேன். அவன் புலவரைப்போல வேடமிட்டிருக்கிறான். அவன் புலவனல்ல. அவளது கண்களில் அறிவு, புலமை, காவியநயம் என்பன காணப்படவில்லை. அவனது கண்களும் காமவசப்பட்டிருப்பதைக் கண்டேன். அக் கண்களை இதற்குமுன் நான் பார்த்திருக்கிறேன். உடனடியாக ஞாபகம் வரவில்லை. சிறிது அவகாசம் தாருங்கள் சொல்கிறேன்" என்றார் சோதிடர்.

**அ**வன் செண்பக வனத்துப் புலவரின் மகன் மணிமாறன். அங்கு ஏதோ முரண்பாடு ஏற்பட்டமையால் தகப்பனுடன் கோபித்துக் கொண்டு இங்கு வந்து தங்கியிருக்கிறான். எமது அவைப் புலவரின் சகோதிரியின் மகன் என்பதால் அவனை இங்கு தங்கவைத்துள்ளேன்" என்றான் கனகசிங்கன்.

"**ம**ன்னா, ஏதோ ஒரு பெரிய சதி நடக்கிறது. அவன் உங்களது அவைப் புலவரின் சகோதரியின் மகன் அல்ல. அவன் குதிரைப்படைத் தளபதியின் மூத்த மகன். செண்பக வன ஒற்றன். அத்துடன் மாவீரன் உடனடியாகக் கைது செய்து விசாரணையை மேற்கொள்ளுங்கள்" என்று நீங்கள் கூறியதால் அவனைக் கைது செய்து விசாரித்த போது பல மோசமான தகவல்களை அறிந்து கொண்டேன். செண்பக வன இளவரசனான செங்கோடனுக்கு என்மீது கடும்பகை உள்ளது. குருகுலத்தில் கற்கும் போது நண்பனைப் போல நினைத்துப் பல தீமைகளைச் செய்தவன். அதனால் தான் அவன் என்னைக் கொல்லச் சதி செய்தான். அதனால் நானும் எனது தங்கையும் பெரும் ஆபத்தில் இருந்து தப்பினோம்" கலங்கினான் கனகசிங்கம்.

"**ஒ**ருவரது பார்வைகள் பலவிதமானவை. அப்பார்வைகளை மிகமிக நுட்பமாக அறிந்து செயற்பட வேண்டும். பயப்படாதீர்கள் மன்னா உங்களது எதிரிகள் யார் யார் என்று எனக்குத் தெரியும். நான் கட்டாயம் உங்களுக்கு உதவி செய்வேன் என்று சோதிடர் கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் கனகாம்பிகை.

## 14

**க**னகாம்பிகை உரையாற்றி முடித்ததும் மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து, "சபையோர்களே, அடுத்துத் தமிழறிஞர் அவை அறிதல் பற்றியும், அவை அஞ்சாமை பற்றியும் பேசுவார். அவர் பல அவைகளைக் கண்டவர். அவைகளில் ஏற்படும் சிக்கல்கள், பிரச்சினைகளுக்குக் காரணம் அவையில் பேச அஞ்சுதலும், அவையை அறியாததும் தான். அவையை அறிதல் என்பது சபையில் கூடியிருப்போரது தன்மைகளை அறிந்து கொள்ளலாகும். அவையில் பாமரர்கள் முதல் நன்றாகக் கற்றவர்கள் வரை கூடியிருப்பர். ஒருவர் ஒரு விடயத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் நல்லோர் பேசும் அவைக்கு வருதல் வேண்டும். பேசுபவர்கள் அறிவாளிகளாக இருப்பர். அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கூறும் பல நூல்களைத் தேடித்திரிந்து எடுத்து கற்றுத் தேவைக்கேற்றவாறு பேசுவர். ஒருவரால் அறிவுக்குதவும் எல்லா நூல்களையும் பெற முடியாது. பெற்றாலும் சில நூல்களை விளங்கிக் கொள்ள முடியாது. அறிவாளிகள் தேவையான நூல்களைக் கற்று அவைக்கேற்ற முறையில்

பேசுவதால் அவர்கள் பெற்ற அறிவைக் கேட்போரும் பெறுவர். அதனால் தான் இவ் இரு அதிகாரங்களைப் பற்றியும் பேசும்படி தமிழறிஞரைக் கேட்டோம். அவரும் சம்மதித்தார். இப்போது அவரைப் பேச வருமாறு அழைக்கிறேன்" என்று கூறி அமர்ந்தார்.

**ச**பையோர் பெரிதாகக் கரகோசம் செய்தனர். தமிழறிஞர் கரங்கூப்பிச் சபையோரை வணங்கிய பின்பும் சபையோர் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர், "சபையோர்களே, நான் பல மேடைகளில் பேசிய போதும் ஒவ்வொரு மேடையிலும் வித்தியாசமான அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். பேச்சாளர்கள் தாம் விரும்பியவற்றை விரும்பியவாறு பேச முடியாது. சபையின் தன்மையை அறிந்து பேச வேண்டும். சபையில் பல்வேறுபட்ட அறிவினை உடையோர் வீற்றிருப்பர். அவர்கள் அனைவரையும் கவரும் வண்ணம் பேசுபவர்கள் தான் சொற்களின் வகை தொகைகளை உணர்ந்த அறிஞர்களாவர். எப்படியும் பேசலாம் என்று நினைப்பது தவறு. தான் நன்கு அறிந்த விடயமானாலும் ஆசிரியர்களைப் போலத் தினமும் கற்று அவையில் நிறைந்திருப்பவர்களின் தன்மையை உணர்ந்து அவர்கள் ஆர்வத்துடன் கேட்குமாறு பேசுபவர்கள் தான் உண்மையான பேச்சாளராவர்".

**தி**ருக்குறள் சொல்கின்ற கருத்துக்கள் அனைத்தும் திருமந்திரத்தில் உள்ளன. திருமந்திரம் அந்தணர்களின் ஒழுக்கத்தைப் பற்றிப் பத்துச் செய்யுள்களில் கூறுகிறது. அந்தணர்கள் பிறப்பை அறுக்க உதவும் குருமார். அவர்கள் ஆறு தொழில்களைச் செய்தல் வேண்டும். அதாவது ஓதுதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், ஈதல், ஈவித்தல் என்பனவாகும். அவர்கள் கடவுளை வழிபட்டு முத்தியடைவதற்கான வழிவகைகளைச் சொல்வர். அவர்கள் சிவகுருவாக எழுந்தருளி அருள்பாலிக்கும் சிவபெருமானை நினைத்து அவரின் திருவருளை ஏற்று திருவைந்தெழுத்தின் அர்த்தத்தை உணர்த்துவர். திருவடி உணர்வும் நற்றவமும், செந்நெறிப்படி வாழ்வதாலும் சிவவடிவமாகவே அவர்கள் இருப்பர். ஐம்பொறிகளை அடக்கி, உலக ஆசைகளை நீக்கி, இவ் வடிவம் பெற்று சிவமாகவே வாழ்வர். அதனால் பற்றுக்கள் எவையும் அவர்களது மனதில் இராது என்று திருமந்திரம் கூறுகிறது".

**தி**ருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஒரு பாடலில் நான்கு வரிகள். மூவாயிரம் பாடல்களிலும் பன்னீராயிரம் வரிகள் உண்டு. திருமூலர் திருமந்திரத்தில் முதல் இரு அடிகளிலும் சிவனது பெருமைகளைக் கூறுகிறார். அதன்படி பார்த்தால் ஆறாயிரம் அடிகளில் திருமூலர் சிவனது பெருமைகளைக் கூறுகிறார். மிகுதி ஆறாயிரம் அடிகளில் உலகத்தின் தன்மைகள் பற்றிக் கூறுகிறார்.

**தி**ருமந்திரத்திற்குப் பின் எழுதப்பட்ட நூல்கள் யாவும் திருமூலர் கூறியவற்றையே கூறுகின்றன. அதுபற்றிப் பின்பு ஆராய்வோம். இன்று வள்ளுவன் கூறிய அவை அறிதல், அவை அஞ்சாமை பற்றி ஆராய்வோம். ஒரு சிறந்த பேச்சாளர் சபையில் அமர்ந்திருப்போரின் அறிவை முதலில் அறிந்து கொள்ளல் வேண்டும். சபையில் எழுத்தறிவில்லாதவர்களும் தமது அறிவை மேம்படுத்துவதற்காக வந்திருப்பர். அறிஞர்களும் வந்திருப்பர். மாணவர்களும் வந்திருப்பர். முதியவர்களும் வந்திருப்பர். இவர்கள் அனைவரையும் கவரக்கூடிய வகையில் தான் பேச்சாளர் பேசவேண்டும்".

**அ**ப்போது ராகுலன் தனது நண்பனுக்குச் சொன்னான், "உண்மை தான். சென்றவாரம் தனக்குத்தானே செஞ்சொல்வேந்தா என்று பட்டம் பெயரிட்டுக் கொண்ட தில்லைநடராசா சனசமூக நிலைய ஐம்பதாவது ஆண்டு விழாவில் பேசியபோது சிறுவர்கள் கற்களை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தனர். முதியவர்கள் எழுந்து சென்று கொண்டிருந்தனர். இதற்குக் காரணம் தில்லைநடராசா சபையில் உள்ளவர்களின் தன்மையை அறியாதது தான். தமிழறிஞர் பேசு முன் சபையை நோட்டமிடுவர். ஒவ்வொருவரையும் அவர்களது முகத்தைப் பார்த்தே அவர்களது அறிவை உணர்ந்து, அங்கிருப்போரைக் கவரும் வகையில் பேசுவார். முக்கியமாக அவர் சிறுவர்களையும், இளைஞர்களையும் கருத்திற் கொண்டே பேசுவர். அதனால் சபை மிகமிக அமைதியான இருக்கும்" என்றான்.

**த**மிழறிஞர் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், "அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக; சொல்லின் தொகை அறிந்து தூய்மையவர்" "சபையோர்களே, சபையில் பேசுபவன் சபையோரின் மனநிலையை அறிந்தே பேச வேண்டும். அறியாமற் பேசினால் சபை குழம்பும்" என்றவர் இரண்டாவது குறளை இனிமையாகப் பாடினார். "இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக; சொல்லின் நடைதெரிந்த நன்மையவர்" "சபையோர்களே, இன்று ஏராளமான மாணவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் வருங்காலத்தில் நல்ல பேச்சாளர்களாக வரவேண்டும். அதற்காகத்தான் நான் மேடைகள் தோறும் பேசும்போது மாணவர்களைக் கவரும் வகையில் பேசி வருகிறேன்".

**"பே**சுவது கடினமானதல்ல அது சிலருக்கு உரியதும் அல்ல. நல்ல பேச்சாளர்களின் பேச்சுக்களைக் கேளுங்கள். நிறைய வாசியுங்கள். வாசித்தவற்றில் முக்கியமானவைற்றைக் குறிப்பெடுங்கள். மனப்பாடம் செய்யுங்கள். அத்துடன் என்னால் பேசமுடியும் என்று நினையுங்கள். தாய்மொழியை அறியாதவர்கள் யாருமில்லை. அதனால் தாய்மொழியைப் பேசுவோர் மேடையிலும்

பேசலாம், "அதற்குத் துணிவு வேண்டும். துணிவுள்ளவன் தான் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும்".

**"ஆ**ரூரன் என்ற யானைக்கு மேடையேறிப் பேச விருப்பம். ஆனால் அதை வெளியே சொல்ல வெட்கம். அது காட்டுக்குச் சென்று மரங்கள் மத்தியில் பேசும். இப்படிப் பேசிவரும் போது ஒருநாள் சிறந்த பேச்சாளரான வசுமதி என்ற கிளி, ஆரூரனின் பேச்சைத் தற்செயலாகக் கேட்டது. ஆரூரன் மிகவும் அருமையான கருத்துக்களைத் திட்டமிட்டுப் பேசிக் கொண்டிருந்தான். அதைக் கேட்ட வசுமதி ஆரூரனின் அருகே சென்று, "நண்பா, மிகவும் நன்றாகப் பேசுகிறாய். எமது பாடசாலை மாணவர்களுக்குத் தினமும் நற்சிந்தனைகளைச் சொல் பின்பு மேடையில் பேசலாம்" என்றது. அதைக் கேட்ட ஆரூரன் பல அறிவுதரும் நூல்களைக் கற்றுவிட்டு வந்து வசுமதிக்குப் பேசிக்காட்டிவிட்டு, "ஏதாவது திருத்தமிருந்தால் சொல் என்றது.

**"மி**கவும் நன்றாகப் பேசுகிறாய். பேசும்போது சபையோர் உனது பேச்சை ஆர்வத்துடன் கேட்கிறார்களா என்று அவதானித்துப் பார்த்துவிட்டுப் பேசு" என்று சொல்லிவிட்டும் சென்றது வசுமதி. சபையோர்களே வசுமதி சொன்னது உண்மையானது. பேச்சாளர்கள் சபையோர் தனது பேச்சை விருப்புடன் கேட்கிறார்களா என்று அடிக்கடி அவதானித்த பின்பே பேசுதல் வேண்டும். என்றார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "இடைதெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக; சொல்லின் நடை தெரிந்து நன்மையவர்". சபையோரைக் கவரக்கூடியவாறு பேசும் வல்லமை உடையவர்கள், சபையோர் எவ்வாறு தனது பேச்சைக்கேட்டு ரசிக்கிறார்கள் என்று இடையிடையே ஆராய்ந்து பேசவேண்டும். சபையோர்க்குப் பேச்சுப் பிடிக்காவிட்டால் அல்லது விளங்காவிட்டால் அருகில் இருப்பவர்களிடம் விளக்கம் கேட்பர். பேச்சை விமர்சிப்பர். அதனால் சபை குளம்பும். இதைப் பேச்சாளர்கள் முக்கியமானதாகக் கொள்ளல் வேண்டும். சிலர் எழுந்தும் சென்றுவிடுவார்கள்.

**தி**ரவிய வனத்தில் இமயமலையில் இருந்து வந்த சுவாமியார் ஒருவர் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். இடையிடையே தேவார திருவாசகங்களையும் பாடினார். அவரது குரல் வளம் சரியில்லை. அதனால் தேவார திருவாசகங்களை இசையுடன் பாடமுடியவில்லை. சபையோர் சுவாமியார் என்று மதிப்புக் கொடுத்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சிறுவர்களும், மாணவர்களும் தமக்குள்க் கதைத்து விளையாட ஆரம்பித்தனர். இவற்றைக் கவனிக்காது

சுவாமியார் பேசிக்கொண்டிருந்தார். கதிரேசன் வந்து அவர்களைப் பார்த்தார். அவர் வருவதைக் கண்டதும் சபை அமைதியானது. கதிரேசன் எங்கும் செல்லாது அங்கேயே அமர்ந்தமையால் யாரும் பேசவில்லை. ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர். அதைச் சுவாமியார் கவனியாது பேசிக்கொண்டிருந்தார். பேச்சாளர்கள் பேசும்போது சபையை அவதானித்தே பேசுதல் வேண்டும். சபை குளம்பினால் பேசுவதை நிறுத்த வேண்டும் என்று கதிரேசன் நினைத்தார்.

**த**மிழறிஞர் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் வல்லதூ உம் இல்", "சபையோர்களே, சபையில் கூடியுள்ளவர்களின் தன்மையை அறிந்து பேசினால் தான் சபை அமைதியாக இருக்கும். ஆர்வத்துடன் பேசுவதைக் கேட்கும். சபையின் தன்மையை அறியாது பேசினால் சபையோர் கேட்கமாட்டார்கள். சபையின் தன்மையை அறியாது பேசுவோர் எப்படித் தனது கருத்துச் சபையோருக்கு விளங்கும் படி கூறத்தெரியாதவர்களாவர். இவர்களுக்கு எதைச் சொன்னாலும் விளங்காது" சொல்வதால் அவர்கள் பயன் பெறவும்மாட்டார்கள்.

**ஆ**ரூரன் வசுமதியிடம் வந்து சொன்னது, "வசுமதி, நீ பெரும் பேச்சாளி. பலவருடங்காளக் பேசி வருகிறாய். உனது பேச்சைச் சகலரும் விரும்பிக் கேட்கின்றனர். அப்படி என்னால் பேசமுடியவில்லை. அந்த நுட்பத்தை எனக்குச் சொல்லித்தா" என்று கைகூப்பி வணங்கியது.

"**ஆ**ரூரா, நானும் ஆரம்பத்தில் தடுமாறினேன். பிறந்த ஒரு குழந்தை பேச ஆரம்பிக்கும் போது அரைகுறையாகத்தான் பேசும். நடக்க ஆரம்பிக்கும்போது தடுமாறி விழும் இதைப் போன்றது தான் பேச்சும். ஆரம்பத்தில் தடுமாற்றம் அவசரம், தவறான சொற்பிரயோகம் என்பன வரும். அதைக் கண்டு அஞ்சக்கூடாது. காலப்போக்கில் யாவும் சரிப்பட்டுவிடும். பேச்சாளர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது தான் சபையில் பேசும் போது சபையில் உள்ளவர்களின் மனநிலையையே அவர்கள் ஏற்கவில்லை என்று எண்ண வேண்டும். அப்படிப்பட்ட பேச்சாளர் கற்றுணர்ந்தவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டார்கள் அவர்களுக்குச் சொல்லக் கூடியது எதுவும் இல்லை" என்றது வசுமதி. என்று கூறிய தமிழறிஞர் தனது உரையை நிறுத்தினான்.

**சி**றிது நேரம் ஓய்வெடுத்த தமிழறிஞர் மீண்டும் பேசத்தொடங்கினார். அவர் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "ஒளியார் முன் ஒள்ளியர்; ஆதல் வெளியார் முன் வான்சுதை வண்ணம் கொளல்",

“சபையோர்களே, அறிவிற் சிறந்தவர்கள் இருக்கும் சபையில் பேசும்போது மிகமிக் கவனமாகப் பேசவேண்டும். அறிவில்லாதவர்கள் வீற்றிருக்கும் சபையில் பேசவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் தாமும் அறிவில்லாதவர் என்ற நினைப்போடு பேசவேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால் வெண்சுண்ணாம்பு போலப் பேசுதல் வேண்டும்”.

“**ச**பையோர்களே, ஆரூரன் வசுமதியைக் கேட்டான், “வசுமதி, நீ பெரிய நாடறிந்த பேச்சாளி. சபையில் எத்தனை வகையான சபைகள் இருக்கின்றன”.

“**ஆ**ரூரா, நல்லதொரு கேள்வி கேட்டாய். கற்றோர் சபை என்று ஒன்று உண்டு. கற்றவர்களும், ஏனையோரும் கூடியிருக்கும் சபையும் உண்டு. கற்காதவர்களும் சபைகளை வைத்திருப்பர். கற்காதவர்களின் சபையில் பேச நேர்ந்தால் பேசுவர் தான் பெரும் அறிஞன். அதற்கேற்றபடி பேசவேண்டும் என்று நினைக்காது, அவர்களின் தன்மைக்கேற்ப பேசவேண்டும்”.

“**ஆ**று மாதங்களுக்கு முன் சுந்தரவனத்தில் உள்ள நரிகளின் தலைவனான ஆறுமுகன் என்னிடம் வந்து தனது வனத்தில் வாழும் முதியவர்களுக்கு அறிவுரைகூறும் வகையில் பேசுமாறு என்னை அழைத்தான். பேச்சாளர்கள் எப்பொழுதும் ஒழுக்கக் கருத்துக்களையே பேசுவார். குடிக்கக் கூடாது என்று பேசிவிட்டுக் குடித்தால் யாரும் மதிக்கமாட்டார்கள். அவர் பேசுவதைக் கேட்கவும்மாட்டார்கள்”.

**ஆ**றுமுகனின் விருப்பத்தை ஏற்றுச் சுந்தரவனத்திற்குச் சென்றேன். ஏராளமானோர் கூடியிருந்தனர். அவர்களது வனத்தில் பாடசாலைகள் இல்லை. அதனால் அவர்களுக்கு விளங்கும் வகையில் பேசவேண்டும் என நினைத்தேன். சபையோர்களே, உங்களுக்கு ஔவையார் என்ற பாட்டியைத் தெரியுமா…?” என்று கேட்டபோது பலர் தமக்குத் தெரியும் என்றனர். அவர் ஆத்திசூடி கொன்றைவேந்தன் என்ற அற நூல்களை இயற்றினார். அதில் முதலாவது பாடல், “அறம் செய்ய விரும்பு” என்பதாகும். இதன் அர்த்தம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவவேண்டும் என்று நினை. அப்படி நினைத்தால் தான் உதவவேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவாகும். மனம்தான் எல்லாச் செயல்களுக்கும் காரணியாகும். மனம் விரும்பிவிட்டால் அதை உயிர்களைக் கொண்டு செய்வித்துவிடும். அது தீதாக இருந்தாலும் செய்யாமல் விட மனம் விடாது. அதனால் தான் அறம்செய் என்று சொல்லாது ஔவையார் ‘அறம் செய்ய விரும்பு’ என்று சொன்னார்”.

‘**எ**மது காட்டில் உள்ள உச்சில் குளம் மிகவும் பெரியது. ஒருபோதும் வற்றாது. குளத்தைச் சுற்றி ஏராளமான வயல்கள் இருந்தன. குளத்தின் நாலாபக்கமும் செழிப்பான வயல்கள் இருக்கின்றன. குளத்தைச் சுற்றியுள்ள காடுகளில் பெய்யும் மழை வாய்க்கால்கள் ஊடாகக் குளத்திற்கு வரும். வயல் வரம்புகளில் புற்றெடுத்து ஏராளமாள எலிகள் குடும்பமாக வாழ்ந்து வந்தன. நாவலன் என்ற எலி வரம்புகளை விட்டுவிட்டுக் குளத்தின் கரையில் புற்றெடுத்து குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது.

**அ**ம்முறை பெருமழை பெற்றதால் வயலில் உள்ள வரம்புகளுக்கு மேலாக வெள்ளம் வந்துவிட்டது. புற்றுக்குள் இருந்த எலிகள் தாம் சேகரித்துவைத்த உணவுப் பொருட்களை விட்டு விட்டு வெளியேறிக் குளக்கட்டில் இருந்தன. லட்சுமி என்ற எலி எட்டுக் குட்டிகளை ஈன்றிருந்தது. வெளியே சென்ற லட்சுமியின் கணவனை வெள்ளத்துடன் வந்த பாம்பு ஒன்றுபிடித்து விழுங்கிவிட்டது. அதனால் லட்சுமியும் எட்டுக் குட்டிகளும் பசியால் துடிதுடித்தன. புற்றுகளுக்குள் வெள்ளம் சென்றதாலும், வயலில் நீர் நிறைந்து நின்றதாலும் எலிகளால் உணவு தேட முடியவில்லை. நாவலன் ஏராளமான தானியங்களைக் குளக்கட்டில் புற்றமைத்துச் சேமித்து வைத்ததால் லட்சுமிக்கும் பிள்ளைகளுக்கும் உணவளிக்க விரும்பினான். அதை நாவலனின் மனைவி விரும்பவில்லை.

“**ல**ட்சுமி திமிர் பிடித்தவள். வாய்க்காரி, யாரையும் மதிப்பதில்லை. என்னுடன் அடிக்கடி முரண்பட்டுச் சண்டைபிடிப்பாள். அதனால் அவளுக்கு உதவவேண்டாம்” என்று நாவலரின் மனைவி பிடிவாதமாகச் சொன்னாள்.

**எ**னது அருமை மனைவியே உயிர்களுக்கு அத்தியாவசியமானது உணவு, இரக்கம். இரக்கம் மதிப்பைத் தரும். கௌரவத்தைத் தரும். புகழைத் தரும். இன்னும் பலவற்றையும் தரும். அதனால் பெரியவர்கள் இரக்கத்தைப் பெறுமதிமிக்க ஆபரணம் என்றனர். லட்சுமியை விட்டு விட்டு அவளது பிள்ளைகளை நினை. தகப்பனை இழந்ததோடு, தாய் பிரசவித்திருப்பதால் உணவின்றித் துன்பப்படுகின்றன. இந்த நிலை வருமென்று அவள் எதிர்பார்த்தாளா…? இந்த நிலை நாளைக்கு எமக்கும் வரலாம்” என்று நாவலன் சொன்னபோது அவளது மனைவி சொன்னாள், “தேவையானவற்றைக் கொடுங்கள்” என்று. என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "நன்று என்று வற்றுள்ளும் நன்றே முதுவருள் முத்துகிளவாச் செறிவு", "சபையோர்களே, கற்றவர்கள் கூடியிருக்கும் சபையில் பேச விரும்புபவர் தான் முந்திக் கொண்டு பேசாது மௌனமாக கேட்டுக் கிரகித்த பின் பேசுவது என்பது தான் விரும்புகின்ற நன்மைகள் அனைத்தையும் தரும். மதிப்பைத் தரும். கௌரவத்தைத் தரும். புகழைத் தரும்".

"**ஆ**ரூரன் வசுமதியைக் கேட்டான். அக்கா நீங்கள் பேச்சில் மட்டுமல்ல வாழ்வின் சகல அம்சங்களையும் உணர்ந்தவர். ஒரு நல்ல பேச்சாளர் இன்னும் என்னென்ன நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்".

**வ**சுமதி சொன்னாள், "ஒருவர் எச்செயலைச் செய்யும் போதும் தான் முந்திச் செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூடாது. ஒரு சபையில் பல்வேறுபட்ட அறிஞர் இருப்பர். சபையில் ஒரு பெரியவர் எதையாவது சொன்னால், அதை நன்கு ஆராய்ந்து, சபையில் உள்ள கற்ற பெரியவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அறிந்த பின்பே பேசுதல் வேண்டும். அப்போதுதான் சபையினர் அதைக் கேட்டுத் தமது அபிப்பிராயத்தைச் சொல்வர். ஒருமுறை எமது வனத்தில் திருக்குறள் மகாநாடு நடைபெற்றது. பலவனங்களில் இருந்து பல்வேறுபட்ட அறிஞர்கள் அம் மகாநாட்டிற்கு வந்திருந்தனர். திருக்குறள் உலகில் நடைபெறும் செயல்களை முன்பே கூறும் அரிய நூல் என்று ஒரு பேரறிஞர் பேசிக் கொண்டிருந்தார். எமது வனத்தில் வசிக்கும் வேந்தனார் என்ற நரி எமது பல்கலைகழகத்தில் மூன்றாவது கலாநிதிப் பட்டம் பெறுவதற்காகப் பதிவு செய்து கற்றுக் கொண்டிருக்கிறது".

**ம**காநாடுகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று தேவையில்லாத கேள்விகளைக் கேட்கும். எமது வனத்தில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் ஓர் அறிஞர் பேசிக்கொண்டிருக்கும் போது வேந்தனார் எழுந்து சொன்னார்" திருக்குறள் நம்பமுடியாத விடயங்கள் பலவற்றைக் கூறியுள்ளது உதாரணமாக விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின் ஐந்தாவது குறள், "வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்றொரு குறள் உள்ளது. இதன் கருத்து விருந்தினரை மகிழ்வுடன் வரவேற்று உணவளித்த பின் எஞ்சிய உணவை உண்டு வாழ்பவர்களின் வயலில் விதை விதைக்கத் தேவையில்லை. அவ் வயல்தானே விளையும் என்று வள்ளுவர் கூறுகிறார். இது நடைமுறைச் சாத்தியமா…? பலமாகச் சிரித்துவிட்டுச் சொன்னார், "இப்படிப் பல குறள்கள் உண்டு. இப்படியான நூலைச் சிறந்த நூல் என்று எப்படிக் கூறலாம்".

**வே**ந்தனார் கூறியதை அமைதியாக இருந்து கேட்ட அந்தப் பேச்சாளர் சொன்னார், "குறள் பொய்யான தகவல்கள் எதையும் கூறவில்லை. அதன் உட்கருத்தை உள்ளபடி புரிந்து கொள்ள முடியாதவர்கள் தான் குறளைப் பற்றித் தவறாக நினைக்கிறார்கள். குறளில் எந்தத் தவறும் இல்லை".

"**வி**த்திடாத நிலத்தில் விளைவு இராது என்று யார் சொன்னது. எமது வனத்தில் தர்மரத்தினம் என்ற யானை வாழ்கிறது. அது பெரும் தனவந்தன். ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்கிறது. தனது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைக் கோவிலுக்கும் மிகுதியில் ஒரு பங்கைப் பாடசாலைக்கும், மிகுதியில் ஒரு பங்கை ஏழைகளுக்கும் கொடுக்கிறது. ஒருமுறை பெரும் பஞ்சம் வந்துவிட்டது. தர்மரத்தினம் காட்டுவாசிகள் அனைவருக்கும் உதவி செய்தார். அவரிடமிருந்த பொருட்கள் யாவும் முடிவடைந்துவிட்டன. விதைநெல் மாத்திரம் இருந்தது. அதையும் பாடசாலை மாணவர்களுக்கும் அன்னதான மடத்திற்கும் கொடுத்து வந்தார்".

"**வி**தைப்புக் காலம் வந்தது. தனது ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் உழுது பண்படுத்தி வைத்திருந்தார். ஆனால் ஆயிரம் ஏக்கருக்கும் விதைக்கப் போதியளவு விதைநெல் இருக்கவில்லை. அவரிடம் இருந்த விதைநெல் ஐந்நூறு ஏக்கருக்குக் கூடப் போதாது. அவர் ஐந்நூறு ஏக்கர் வயல் நிலத்திற்குத்தான் விதைக்க முதலில் எண்ணினார். பின்பு மனம்மாறி ஆயிரம் ஏக்கருக்கும் நெல்லை விதைத்தார். ஐந்தடிக்கு ஒரு நெல்லே முளைத்தது. பயிர்கள் முன்பைவிடச் செழிப்பாக வளர்ந்தன. அறுவடை செய்தபோது முன்பைவிட மூன்று மடங்கு விளைச்சல் அதிகமாக இருந்தது. அந்த விளைச்சல் வித்திடாத நிலத்தில் இருந்து கிடைத்தது. தருமவானான அவர் தொடர்ந்து தர்மம் செய்ய வேண்டும் என்று கடவுள் நினைத்ததால்தான் வித்திடாத நிலமும் விளைச்சலைக் கொடுத்தது. இப்போது சொல்லுங்கள் வித்திடாத நிலம் விளையுமா…? விளையாதா…?" என்று கூறிப் பேச்சாளர் தனது உரையை நிறைவு செய்தார். கரகோசம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

**த**மிழறிஞர் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "ஆற்றின் நிலைதளர்ந்து அற்றே வியன்புலம் என்று உணர்வார் முன்னர் இழுக்கு", "சபையோர்களே, ஒரு நூலைப் பற்றியோ அல்லது சபையினர் விரும்பும் ஒரு விடயத்தைப் பற்றியோ பேசுவதாயின் அதைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளல் வேண்டும். முன்பு அவற்றைப் பற்றி அறிந்திருந்தாலும் பேசுமுன் அவ்விடயத்தைப் பற்றிக் கற்க வேண்டும்.

சான்றோர் கூடியிருக்கும் சபையில் தறவாகப் பேசுவதென்பது ஒழுக்கத்தை மீறுவதற்றுச் சமமானது.

“**ஆ**ரூரன் வசுமதியைக் கேட்டான், “அக்கா, நீங்கள் சபையோர் விரும்பும் பெரிய பேச்சாளர். நான் பேச்சாளராக வர விரும்பகிறேன். அதனால் தங்கள் பேச்சில் உள்ள நுட்பங்களை எனக்கும் சொல்லித்தாருங்கள். நான் தங்களை எனது மேலான குருவாகவே எண்ணுகிறேன்” என்று வணங்கினான்.

“**சொ**ல்வன்மை உள்ளவர்கள் வசீகரமாகப் பேசினால் மக்கள் ஏற்பார்கள் என்று நினைக்கிறார்கள். அது பிழையான எண்ணமாகும். ஒரு விடயத்தைப் பற்றித் தவறாகப் பேசினால், பேசுபவர் ஒழுக்கமில்லாதவராகிவிடுவர். வள்ளுவர் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் ஐந்தாவது குறளில் இவ்வாறு சொல்கிறார், “எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” ஒரு பொருளின் தோற்றத்தைக் கண்டு மயங்கலாகாது. அப்பொருளின் உண்மையான தன்மைகளை அறிவதே அறிவாகும்” நந்தவனம் என்ற காட்டின் அரசனான கஜமுகன் என்ற சிங்கம் திருக்குறளின்மீது மிகுந்த பக்தி கொண்டது. அது ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இரவு ஏழுமணிக்குத் திருக்குறளை மாணவர்களுக்கு ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கும். அப்போது வகுப்பில் தானும் வந்திருந்து கேட்கும்.

**ஆ**சிரியர் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் உள்ள ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், “தெய்வம் தொழா அள் கொழுறன் தொழுது எழுவான் பெய்யெனப் பெய்யும் மழை” மாணவர்களே, தெய்வவங்கள் எதையும் வணங்காமல் கணவனைத் தெய்வமாக எண்ணி வணங்கும் பெண், பெய் என்று சொன்னவுடன் மழை பெய்யும். இவ்வாறு உரையாசிரியர் எழதியது பெண்களை அவமானப்படுத்துவதாகும். ஒழுக்கமான கணவன் மீது பற்றுள்ள பெண், பெய் என்றால் மழை பெய்யாது அப்போ குறள் பிழையா…?” என்று கேட்டு நிறுத்திய பேச்சாளர் சிறிது நேரத்தின் பின் சொன்னார், மாணவர்களே கணவன் மீது மாசில்லாத அன்பைப் பொழியும் பெண் பெய் என்று சொல்லும் போது பெய்யும் மழைக்கு ஒப்பானவர். இது எனது உரை” கஜமுகன் கைதட்டினான். உண்மையான உரை இது தான்” என்றான்.

**இ**க் குறளுக்குச் சிலர் மேடையில் தவறான உரை கூறினால் சபையோரில் சிலர் விசிலடிப்பர். அளவுக்கதிகமாகக் கரகோஷம் செய்வர். இது பேச்சாளருக்கு அவமானத்தைக்

கொடுக்கும். மேடைகளில் இவ்வாறு பேசக்கூடாது என்று சபையோர் கூசாமற் சொல்வர். அதனால் மேடையில் பேசும்போது தனது கருத்தாகத் தவறான செய்திகளைக் கூறக்கூடாது" என்றாள் வசுமதி.

**த**மிழறிஞர் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "கற்று அறிந்தார் கல்வி விளங்கும் காமஅறச், சொல் தெளிதல் வல்லார் அகத்து" சபையோர்களே, சொற்களின் பொருளைக் குற்றமில்லாது நன்கு கற்றுத்தெளிந்தவர்கள் சபையில் கற்றறிந்த ஒருவர் பேசும்போது அவரின் புலமையைத் தெளிவாக அறிந்து கொள்வர்".

**ஆ**ரூரன் வசுமதியைக் கேட்டான், "ஒருவர் சபையில் பேசும்போது அவரது புலமையை அறிந்து கொள்ளலாம் என்று இவ்வளவு நாளும் நான் அறியவில்லை. அதைப்பற்றி விபரமாகச் சொல்லுங்கள்" என்றான்.

**"சா**தாரமான ஒருவர் பேசும் பேச்சில் இருந்து கற்றவர்கள் அவரைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் தெரிந்து கொள்வர். மேடையில் பேசும்போது கற்றவர்கள் மிகவும் அவதானமாக இருப்பார்கள். பேசுபவரின் புலமையை வெளிப்படுத்தும். வள்ளுவர் குறிப்பு அறிதல் என்னும் அதிகாரத்தில் ஒருவரின் முகமாறுதல்களைக் கொண்டே அவர் என்ன நினைக்கிறார் என்று அவர் அறியாமலே அறிந்து கொள்வர். ஒருவரது கண்கள், முகம் ஆகியவற்றைப் பார்த்ததும் அவனின் எண்ணங்களை முழுமையாக அறிந்து கொள்ளக்கூடியவர்கள் சபையில் பேசுபவரின் சொற்களைக் கொண்டே அவரின் அறிவையும், சொல்லாற்றலையும், புலமையையும் அறிந்து கொள்வர்".

**"ஒ**ருவரது புலமைக்குக் காரணமாவது அவரது மனம் ஒரு செயலின் வலிமை என்பது அச்செயலைச் செய்பவனது மனவலிமையே ஆகும். பேச முன்பு பேச வேண்டிய விடயத்தை முழுமையாக அறிந்து கொள்ளல் வேண்டும். எனக்கு அவை யாவும் தெரியும். அதனால் எந்த மேடையிலும் எப்படியும் பேசுவேன் என்று நினைப்பது அறியாமையின் உச்சக்கட்டமாகும். எச்செயலுக்கும் ஒரு முன்னாயித்தம் தேவை. சாப்பிடுவதானாலும், சுத்தமான இடத்தில் அமரவேண்டும், மூடிவைத்து உணவையே உண்ண வேண்டும். கையையும், உணவு உண்ணும் பாத்திரத்தையும் கழுவவேண்டும். கடவுளை நினைத்துக் கொண்டு மகிழ்வுடன் உண்ண வேண்டும்" இவ்வாறு பெரியவர்கள் கூறியுள்ளனர்.

“**பெ**ரியவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொன்னதை தான் இன்றைய விஞ்ஞானிகள் சொல்கின்றனர். திருமந்திரம் வாழ்வியல் முழுவதையும் மெய்யிலாகச் சொல்கிறது. ஊதாரணமாகச் சொல்வதானால் உடலில் பத்து இடங்களில் காற்றுள்ளது. அது அசுத்தமடைவதால் தான் பாரிய நோய்கள் உண்டாகின்றன. அதுபோல உயிர்களின் தவறான நடத்தையால் தான் அங்க குறைவான பிள்ளைகள் பிறக்கின்றன. இவ்வாறு பேசுவதற்கு இலட்சக்கணக்கான புதுப்புதுச் செய்திகள் எமது பழந்தமிழ் இலக்கியங்களில் உண்டு”.

“**அ**வற்றையெல்லாம் படி முக்கியமானவற்றை குறிப்பெடு. ஒரு மேடையில் பேசியதை அதே மேடையில் எக்காரணம் கொண்டோம் பேசாதே. பதினெட்டுப் புராணங்கள் உண்டு. அதுபோல் பதினெட்டு உப புராணங்களும் உண்டு. அதனால் ஒரு புராணத்தை நீ விரும்பியிருந்தால் கூட அதை நீ எல்லா மேடைகளிலும் பேசலாகாது. நீ திறமையாக பேசக்கூடியவன் என்று நினை. நினைவுகள் தான் பின்பு செயலாகின்றன. ஒரு செயலின் வலிமை என்பது செயலைச் செய்பவனின் மனவலிமையைப் பொறுத்தது. திரும்பத் திரும்பக் கற்பதால் கற்றவை மனதில் வலிமையாகப் பதியும். அதனால் பேசும்போது பேச்சுச் சபையோரைக் கவரக்கூடியதாக அமையும். பேசி முடித்ததும் பேச்சிற்கான அங்கீகாரம் கிடைக்கும். சபையோர் மகிழ்ச்சியிலாரவாரம் செய்தால் உனது பேச்சை சபையினர் ஏற்றுள்ளார்கள் என்று கருத முடியும். அமைதியாக எழுந்து சென்றால் உனது பேச்சை சபையோர் விரும்பவில்லை என்று நினைத்தல் வேண்டும். எனவே பேசும்போது கருத்தளாம் மிக்கதாகவும், இலகுவாகச் சபையினர் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் பேசுதல் வேண்டும்”.

“**அ**ண்மையில் நான் ஒரு விழாவுக்கு சென்று இருந்தேன் ‘செஞ்சொற்பாவலர்’ என்று தனக்குத் தானே பெயரிட்டுக் கொண்ட ஒருவர் பேசினார். பெரியபுராணம் பற்றியே அவர் பேசினார். சம்பந்தரது வரலாற்றை முழுமையாகப் பேசிக் கொண்டிருந்தபோது பெரியவர்கள் ஒவ்வொருவராக எழுந்து சென்றனர். பிள்ளைகள் எமது சமய ஆசிரியர் சொல்லித் தந்தவர் என்று கூறி விளையாடினர். இவற்றைக் கவனிக்காத செஞ்சொல்வேந்தர் பேசிக்கொண்டேயிருந்தார். அதனால் பேசுவது யாவும் முன்பு பெரியவர்களால் கூறப்பட்டு விட்டது. அதனால் பேசுபவர்கள் சபையோர் அறிந்த விடயங்களைப் பற்றி பேசும்போது அவதானமாக இருத்தல் வேண்டும்” என்று வசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “உணர்வது உடையார் முன் சொல்லல் வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்து அற்று”, “சபையோர்களே, எல்லாவற்றையும் கற்றமையால் தாமே அறிந்து கொள்ளும் திறமை உடையவர்முன் நன்கு கற்றவர்கள் பேசுவது தானே வளரும் பயிருக்கு நீர்

பாய்ச்சுவதைப் போன்றதாகும். ஆரூரன் நன்கு கற்றவன். பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் தனது குருவின் மூலம் கற்றுத் தெரிந்தவன். எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வம்மிக்கவன் அவன் வசுமதியிடம் கேட்டான், “அக்கா, மேடையில் பேசுபவர்கள் இவ்வளவையும் அறிந்திருக்க வேண்டுமா…? இன்னும் ஏதாவது அறிய வேண்டுமா”.

“ஆரூரா பேசுவதென்பது இலகுவான காரியமல்ல நிறையக் கற்க வேண்டும். தான் கற்றதைச் சிறுபிள்ளைகள் கூட விளங்கி பின்பற்றுமாறு பேச வேண்டும். அத்துடன் தாமே அறிந்து கொள்ளும் திறமை உள்ளவர்களின் சபையில் கற்றவர்கள் பேசுவது தானாக வளரும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது போன்றது. சில பயிர்களுக்கு ஆரம்ப காலத்தில் நீர் ஊற்றுவர். அவை ஓரளவு வளர்ந்த பின் நீரூர் ஊற்றுவதில்லை. ஊற்றினால் அவை செழித்து வளரும். நான் கற்றவர்களின் சபையில் தான் பேச விரும்புவேன். நான் பேச ஆரம்பித்த காலத்தில் தடுமாறுவேன். அவதிப்படுவேன், உடல் நடுங்கும், தடுமாறியபடி பேசியபின் அதைக் கேட்டுக் கொண்டிருந்த பெரியவரான கதிரேசன் எனக்கு அருகில் வந்து எனது பேச்சை மதிப்பிடுவார். குறைநிறைகளை சொல்லி அவற்றை எவ்வாறு திருத்த வேண்டும் என்றும் கூறுவார். அவரைப்போல கற்றோரின் சபையில் பலர் இருப்பார்கள். அவர்களிற் சிலர் என்னிடம் வந்து நான் பேசியவற்றில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்டுவர். அதன் பின் நான் அழகாகப் பேச ஆரம்பித்தேன். இப்போதும் நான் பேசிய பின் சபையில் உள்ள பெரியவர்களிடம் எனது பேச்சைப் பற்றி உரையாடுவேன். அது தானாகவே வளரும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதைப் போன்றது. தானாக வளரும் பயிருக்கு நீர் பாய்ச்சினால் அது செழித்து வளரும் அதுபோல பேச்சாளர்கள் பேசுவதை மதிப்பீடு செய்வது பேச்சாளரின் புலமை அதிகரிக்கும் என்பதை மனதில் இருத்து என்றாள் வசுமதி” என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் ஒன்பதாவது குரலை இனிமையாக பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “புல் அவையுள் பொய்ச் சார்ந்தும் சொல்லற்க; நல்லவையுள் நன்கு செலச்சொல்லுவார்” “சபையோர்களே, நன்கு கற்று புலமையுள்ள பேச்சாளர்கள் கற்காதவர்களின் சபையில் மறந்தும் கூட பேசலாகாது” இவ்வாறு கூறிய தமிழறிஞர் தொடர்ந்து சொன்னார், “ஆருடன் சிறந்த பேச்சாளராக வரவேண்டும் என்ற அவா உடையவன். அதனால் அவன் எந்த ஒரு பேச்சாளரைச் சந்திக்க நேர்ந்தாலும் மேடைப்பேச்சு பற்றி விரிவாக கேட்டுத் தெரிந்து கொள்வான். அவன் வசுமதியைக் கேட்டான், “அக்கா, நீங்கள் தான் எனது குரு. அதனால் உங்களை வணங்குகிறேன்” என்று கூறியவாறு அவளது காலை தொட்டு வணங்கினான். பின், “அக்கா பேசுவதில் வல்லவரான நீங்கள் பேசும் வழிமுறைகளை சொல்லித்தந்தீர்கள். இன்னும் தாங்கள் சொல்லாதவை ஏதும் இருக்கா.

“மகனே, பேச்சு என்பது அற்புதமான ஒரு கலை. அதைப் பற்றி முழுமையாக யாரும் அறிந்திரார். கற்றறிந்த அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் நல்ல கருத்துக்களை வசீகரமாகக் கூறவல்லவர்கள் அறிவில்லாதவர்கள் கூடியிருக்கும் சபையில் மறந்தும் கூட பேசலாகாது”.

“அறிவில்லாதவர்கள் நல்ல நூல்களைப் படித்திருக்கமாட்டார்கள். படித்திருந்தாலும் அந்த நூல்கள் கூறும் கருத்துக்களை மாறுபாடாகவே ஏற்றுக்கொள்வர். தமக்கு இழிவு ஏற்படக்கூடாது என்று நினைத்து சபையில் அவதானமாகப் பேசுவார்கள். தான் தெளிவாக அறிந்து கொள்ளாத விடையங்களைப் பற்றி மறந்துங்கூடப் பேசமாட்டார்கள். அத்துடன் தமக்கு இழிவு ஏற்படக்கூடாது என்று எச்சரிக்கையோடு வாழும் அறிஞர்கள் தாம் தெளிவாக அறியாத விடயங்களைப் பேசமாட்டார்கள். அறிவிலிகளோடு சேரவும் மாட்டார்கள்.

“எனது நண்பன் முதியவர்களுக்கு ஒரு வகுப்பு எடுக்குமாறு கேட்டான். அவர்கள் பாடசாலை பக்கம் சென்றதில்லை. பேச ஆரம்பித்ததும் பல கேள்விகளை கேட்டார்கள். திருக்குறளை பற்றி தான் அவன் பேசச் சொன்னவன். அவர்கள் திருவள்ளுவர் சமணன். அவரை சைவர்கள் மதிக்கக்கூடாது என்றனர். அவர்கள் எதைச் சொன்னாலும் ஏற்கமாட்டார்கள் என்று புரிந்து கொண்ட நான் பேசுவதை நிறுத்தி விட்டேன். அது அவர்களுக்கு பிடிக்கவில்லை. உவையைப் பெரிய பேச்சாளர் என்று மதித்துக் கூட்டியந்திருக்கிறார்கள். வள்ளுவர் சமணர் என்று கூடத் தெரியாதவர்களின் பேச்சு எப்படி இருக்கும் என்று கேலி செய்து சிரித்தனர். அதனால் அறிஞர்கள் அறிவில்லாதவர்களின் சபையில் பேசக்கூடாது” என்று வசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் பத்தாவது குறளை மிகவும் இனிமையாக பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானார், “அங்கணத்துள் உக்க அமிழ்து அற்றால் தம் கணத்தார் அல்லார் முன் கோட்டி கொளல்”, “சபையோர்களே, அறிவிற் சிறந்தவர்கள் இல்லாத சபையில் ஒரு தலைப்பில் பேசுவது அழுக்கான இடத்தில் கொட்டிய அமிழ்திற்கு ஒப்பானது. அழுக்கான இடத்தில் கொட்டிய அமிழ்து உண்ணத்தகாதது. அதுபோல் அறிவிற் சிறந்தவர்கள் இல்லாத சபையில் கருத்தாளம் மிக்க பேச்சால் எந்தப் பயனும் ஏற்படாது. துன்பங்கள் தான் வரும்”.

“ஆரூரன் வசுமதியை கேட்டான், “அக்கா அறிவுள்ளவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் அவர்கள் இருக்கும் சபையில் அறிஞர்கள் பேசினால், அவர்கள் அறிவாளிகளாக மாறலாம் தானே”.

“**இ**ல்லை ஆரூரா அறியாதவர்கள் தாம் நினைப்பது தான் சரியானது என்று நினைப்பர். அறிவாளிகளை அவர்கள் ஒருபோதும் மதிக்கமாட்டார்கள். சாதாரணமாக ஒருவருடன் பேசுவதானாலும் கூட அவரது பண்புகளை நன்கு அறியாது பேசக்கூடாது. அறிவாளிகளானால் அவர்கள் தன்னுடன் பேசுவர். ஏதாவது பிழையாகப் பேசினால் அன்பாக எடுத்து சொல்லி புரிய வைப்பார். அறிவில்லாதவர்கள் முரண்பட்டு சண்டை செய்வர். அதனால் தான் அறிவில்லாதவர்கள் இருக்கும் சபையில் மௌனமாக இருப்பவன் அறிவாளி என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அது உண்மை”.

**நா**ன் சில மாதங்களுக்கு முன் குபேரவனத்தில் வாழும் எனது நண்பனின் வேண்டுகோளுக்காக அங்கு சென்று பேச ஒப்புக்கொண்டேன். அதனால் அது சம்பந்தமான பல நூல்களை எடுத்து வாசித்து குறிப்பெடுத்தேன். அங்கு சென்று பேச ஆரம்பித்த பின்பு தான் அங்குள்ளவர்கள் கல்வி அறிவில்லாதவர்கள் என்று தெரிந்து கொண்டேன். எனது பேச்சை அவர்கள் கேட்கவில்லை. சிலர் குடித்துவிட்டு வந்து தனது நிலையை மறந்து பெரிதாக சிரித்துக் கதைத்தனர். சிறுவர்கள் மண்ணை அள்ளி வீசி விளையாடினர். அங்குள்ள வியாபார நிலையத்தில் இருந்த ஒலிபெருக்கி பாடிக்கொண்டிருந்தது. நான் கஷ்டப்பட்டு தேடிய விடையங்கள் மனதில் எப்போதும் இருக்கும். ஆனால் அன்று பேசியது தூய்மையான இடத்தில் கொட்டிய அமிழ்து போல ஆகிவிட்டது” என்று வசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

## 15

**த**மிழறிஞர் அவை அஞ்சாமை என்ற அத்தியாயத்தின் முதலாவது குரளை மிகவும் இனிமையாக பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், “வகை அறிந்து வல்லவை வாய் சோரார் சொல்லின் தொகை அறிந்த தூய்மை யவர்”, “சபையோர்களே, சொற்களின் தொகுதியை அதாவது ஒரு செயலுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. கருத்துக்கள் உண்டு. இரண்டையும் முழுமையாக அறிந்து வைத்திருக்கும் மேலான அறிவுடையவர்கள் சபையில் கூடியிருப்பது வல்லமையை அறிந்து கொள்வர். அவ்வாறு அறிந்து கொண்ட அறிஞர்கள் சபையோர் மத்தியில் பேசும்போது வாய்தவறி கூடப் பிழையாகப் பேசமாட்டார்கள்”.

“**ஆ**ரூரன் வசுமதியைக் கேட்டான், “முன்பு தமிழறிஞர் அவையை அறிந்து கொள்ளும் முறைகள் பற்றி பேசினார். இப்போது அவை அஞ்சாமை பற்றி பேசப் போகிறார். அவை அஞ்சாமை என்றால் என்ன என்று விளக்கமாகக் கூறுங்கள்” என்றான்.

“**ஆ**ரூரா ஒரு பேச்சாளர் சபையில் பேசுவதானால் பயப்படக்கூடாது. பெரிய பெரிய அறிஞர்கள் கூடியிருக்கிறார்கள். நான் பெரிதாக படிக்கவில்லை. நான் பேசினால் அறிஞர்கள் என்னை கேலி செய்வார்கள் என்ற நினைவு வரக்கூடாது. அந்த நினைவு உறுதியான மனதைக் கலைத்து விடும். துணிந்தவர்களை பலவீனப்படுத்தும். அதனால் மனம் பாதிக்கப்படும் எல்லா செயல்களுக்கும் காரணியாக அமைவது மனம். அது எப்பொழுதும் இரும்பு போல திடமாக இருத்தல் வேண்டும். பல்வேறு வகையான அறிவு தரும் நூல்களை நன்கு கற்று திடமான மனதுடன் நன்கு சிந்தித்து துணிவுடன் மேடையில் ஏறினால் தளர்வுக்கு இடமேற்படாது. மனம் தயாராக இருந்தால் எச்செயலும் அரிய செயலல்ல”.

“**த**னக்கு அவமானம் ஏற்படக்கூடாது என்று எச்சரிக்கையுடன் ஒரு செயலை செய்பவர்கள் எதற்கும் தயாரான நிலையில் இருப்பார்கள். அதனால் அவர்களது புகழ் ஓங்கும். என்னுடன் கூட படித்தவள் சௌமியா. நான் மேடை ஏறி பேசுவதால் மாணவர்களும், ஆசிரியர்களும் என்னை உற்சாகப்படுத்துவர். மாணவர்களுக்கு வசுமதியைப்போலப் பேசபழகுங்கள் என்று ஏனைய மாணவர்களை உற்சாகப்படுத்துவர்”.

“**எ**ன்னுடன் கூட படித்த கவிதாவுக்கு என்னைப் போலப் பேசவேண்டும் என்ற ஆசை மனதில் எழுந்தது. அதனால் அவள் பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் பேசலானாள். அவள் பேசும் போது அவள் அவசரப்படுவாள், பயத்தால் நடுங்குவாள், தடுமாறுவாள். எனது நல்ல நண்பி அவள். அதனால் அவளுக்கு பேச வேண்டிய முறைகள் பற்றி எடுத்து சொன்னேன். கற்றவர்களுடன் ஒத்துப்போகாமல், தனது வலிமையும் அறிந்து கொள்ளாமல் தான் நினைத்துவாறு பேசுபவர்கள் தடுமாறுவார்கள். பயப்படுவார்கள். அதனால் அவர்களால் சபையோரின் அறிவுத்திறனை அறியமாட்டார்கள். முதலில் சபையோரின் அறிவை உணர வேண்டும். அதற்காகப் பல அறிவு தரும் நூல்களைக் கற்க வேண்டும். கற்றவை மறக்காது பொருத்தமான இடங்களில் கூறுதல் வேண்டும். பயத்தை அகற்றி என்னால் முடியும் என்ற நம்பிக்கையை மனதில் உண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்கும் தூய்மையான அறிவு உள்ளவர்கள் சபையில் வாய் தவறி கூட பிழையாகப் பேச மாட்டார்கள். முதலில் நீ பயத்தை நீக்கு. நம்பிக்கையை உண்டாக்கு என்றேன்” என்று இப்போது அவள் மிகச் சிறப்பாக பேசி வருகிறாள்” என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார் முன் கற்ற செலச்சொல்லுவார்”, “சபையர்களே, பல்வேறு விதமான நூல்களில் இருந்து தான் கற்றவற்றை சபையில் உள்ளவர்களின் மனதில் பதியுமாறு, அதாவது சபையோர் புரிந்துகொள்ளுமாறு பேச

வல்லவர்கள், கற்றவர் அனைவரையும் விட கற்றவர்களாகச் சபையோரால் மதிக்கப்படுவர். அப்போது ஆரூரன் வசுமதியைக் கேட்டான், "அக்கா தான் கற்றதைச் சபையினர் புரிந்து கொள்ளும்படி பேசும் பேச்சாளர்கள் மட்டும்தான் கற்றவர்களா…?"

**இ**ல்லை அப்படி வள்ளுவர் கூறவில்லை. தாம் கற்றவற்றைச் சபையில் உள்ளவர்களின் மனதில் பதியுமாறு கூற வல்லவர்கள் கற்றவர்கள் அனைவரையும் விட கற்றவராவர். எனது நண்பரான சோதிலிங்கத்தை உனக்கு தெரியும். தமிழ் ஆசிரியர். பல்வேறு விதமான அறிவு தரும் நூல்களை கற்றவர். அத்துடன் அவர் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதுபவர். அனேகமாக அவரது கட்டுரைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் தான் வரும் அன்று பத்திரிகைக்கு தட்டுப்பாடு ஏற்படும்.

"**தா**ன் கற்றவற்றை நல்ல முறையில் எழுதுவாரே தவிர பேச மாட்டார். அவரது கற்பித்தல் மாணவர்களுக்கு விளங்குவதில்லை என்று பெற்றோர் குறை சொல்வார். கற்றவர்கள் தாம் கற்றவற்றை மற்றவர்களுக்கு எடுத்து கூறுதல் வேண்டும். எல்லோராலும் கற்க முடியாது. சபைகளில் அறிஞர்கள் பேசுவதை கேட்டு அதன்படி ஒழுக்கமாக வாழ வேண்டும் பேச்சாளர்கள் கற்க வேண்டிய நூல்கள் அனைத்தையும் குற்றமில்லாமல் கற்க வேண்டும். அதன் பின் தாம் கற்ற அரிய கருத்துக்களை சபையில் உள்ளவர்களின் மனதில் பதியுமாறு எடுத்துக் கூறுதல் வேண்டும். அப்படியானவர்கள் தான் கற்றவர்களை விட கற்றவர்" என்று வசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் மூன்றாவது குறளை மிகவும் இனிமையாக பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "பகை அகத்துச் சாவார் எளியர்; அரியர் அவை அகத்து அஞ்சா தவர்", "சபையோர்களே, தம்மை எதிர்க்கும் அரசர்களது வீரம்மிக்க போர்வீரர்கள் போர் செய்யும் போர்க்களத்திற்கு அஞ்சாது துணிவுடன் சென்று போரிட்டு வீர மரணமடைய விரும்புபவர்கள் பலர். ஆனால் கற்றவர்கள் நிறைந்த சபைக்கு சென்று அஞ்சாமல் பேசக்கூடியவர்கள் சிலரே.

**அ**ப்பொழுது ஆருரன் கேட்டான், "அக்கா போர்க்களத்திற்கு சென்று போராடி மரணமடைய துணிந்தவர் ஏன் கற்றோர் இருக்கும் சபைக்கு செல்ல பயப்படுகிறார். பேசுவது அவ்வளவு கஷ்டமானதா.

"**க**ஷ்டமானதல்ல, பிரச்சனைகளுக்குரியது. போர் அடிக்கடி ஏற்படமாட்டாது. பல வருடங்களுக்கு ஒரு முறை தான் போர் உண்டாகும். போரில் போர் வீரர்கள் அனைவரும்

இறப்பதில்லை. ஒருமுறை பாண்டிய நாட்டு புலவர் ஒருவர் போர் வீரர்கள் சிலரை சந்தித்தார். அவர்கள் உற்சாகமாகவும், மகிழ்வாகவும் காணப்பட்டனர். நீங்கள் எல்லோரும் உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர்கள். போர் வந்தால் உயிரே போய்விடும். அதனால் கல்லுங்கள் என்னுடன் வந்து கல்லுங்கள். பெரிய பெரிய அறிஞர்களோடு பழகலாம். அவர்களின் பழக்கம் உங்களை பேரறிஞராக்கும். கற்றோர் மதிப்பர், பேரும் புகழும் வந்து சேரும்.

“**அ**ப்போது போர் வீரன் ஒருவன் சொன்னான், “புலவரே கற்பது இலகுவான செயல் அல்ல. பல்வேறு வகையான நூல்களை கற்க வேண்டும். அவை புரியாத தமிழில் இருக்கும். ஆசிரியர் கற்பிப்பது பலருக்கு விளங்காது. கற்கும் காலத்தில் வேதனம் தரப்பட மாட்டாது. போர்வீரர் என்றால் மதிப்பு அதிகம். மக்கள் போற்றி புகழ்வர். போரில் வெற்றி அடைந்தால் கிடைக்கும் மதிப்பு, மரியாதை, கௌரவம் எவ்வளவு தெரியுமா? மன்னர் நாட்டு மக்களை வெற்றி விழாவாக கொண்டாட சொல்வார். போர்வீரர்களுக்கு பரிசுகள் கொடுப்பார்கள்.

“**ஒ**ரு சபையில் பேசினால் நான்கு அறிஞர்கள் கேட்பார்கள். கற்றவர்களுக்கு பேச்சில் அச்சமிராது. கல்லாதவர்கள் பேசும் சபைபக்கம் வரமாட்டார்கள். கற்றவர்கள் சபையில் தமக்குள் வாதிட்டு மகிழ்வரே தவிர அதனால் பயனேதும் வராது என்றவன். பொதுவாகப் பொருளைத்தான் அனைவரும் விரும்புவர். போர் வீரரை தவிர ஏனையோர் மரணமடைவது இல்லையா. விதிப்படி யாவும் நடக்கும். அதனால் கற்பதை விட போர் செய்வதையே நான் விரும்புகிறேன் என்றவன். அந்தக் காலத்தில் கற்றவர்களை விட போர் வீரனுக்கு தான் மதிப்பு. அதனால் போர் செய்வதையே வீரர்கள் விரும்புபவர்” என்று வசுமதி ஆருரனுக்கு கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் நான்காவது குறளை பாடிபட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “கற்றார் முன் கற்ற செலச் சொல்லித் தாம் கற்ற மிக்காருள் மிக்க கொளல்”, “சபையோர்களே, கற்றவர்கள் தாம் சொல்லும் கருத்தை கேட்பவரின் மனதில் பதியுமாறு கூறுதல் வேண்டும். தம்மை விடக் கற்றவர்களுடன் பேசும்போது அவரிடமிருந்து நல்லவற்றை அறிந்து கொள்ள வேண்டும். அப்போது ஆரூரன் வசுமதியை கேட்டான், “அக்கா சென்ற வாரம் கோவிலில் ஒருவர் பேசும்போது பிள்ளைகள் அதில் கவனம் செலுத்தாது விளையாடிக் கொண்டிருந்தனர். முதல் நாள் ஒருவர் பேசும்போது பிள்ளைகள் அவதானமாக கேட்டுக் கொண்டிருந்தனர் இது எப்படி சாத்தியமானது.

**ஆ**ரூரா, அறிவு தரும் நூல்கள் பலவற்றை படித்திருந்தாலும் சபையில் பேசும்போது மிகவும் அவதானமாக பேசுதல் வேண்டும். பேச்சாளர் பேசும் போது சபையினரை கவரக்கூடியதாக பேச

வேண்டும். அன்று பேச்சைக் கேட்காதவர்கள் அருமையான பேச்சைக் கேட்காமல் விட்டுவிட்டோமே என்று நினைக்கக் கூடியவாறு பேச வேண்டும். பேசியதை திரும்பவும் பேசக்கூடாது". பேசுவதை எல்லோரும் புரிந்து கொள்ளும்படி பேச வேண்டும். சென்ற வாரம் கோவிலில் பேசியவர் பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு நாயன்மாரைப்பற்றி பேசினார். பிள்ளைகள் அதை தெரிந்து கொண்டமையால் பேச்சில் கவனம் செலுத்தாது விளையாடினர்.

**நா**யன்மார்கள் அறுபத்து மூன்றுபேர். அதில் சில நாயன்மார்களைப் பற்றி பாடப் புத்தகத்தில் விரிவாக எழுதியுள்ளனர். முதல் நாள் பேசியவர் யாரும் அறியாத ஒரு நாயன்மாரைப் பற்றி பேசினார். அதனால் பிள்ளைகள் அமைதியாக இருந்து கேட்டனர். பழையன கழிதழும் புதியன புகுதலும் தான் வாழ்க்கை. பேசுபவர் சபையோரின் மனதில் தான் பேசும் கருத்துக்களைப் பதியுமாறு கவர்ச்சிகரமாக பேச வேண்டும். தன்னை விட அதிகம் கற்றவர் பேசும் போது அவர் சொல்லும் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும்" என்று வசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், "ஆற்றின் அளவு அறிந்து கற்க; அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு", "சபையோர்களே, ஒரு சபையில் பலதரப்பட்ட அறிவுடையவர்கள் இருப்பர். அவர்களில் சிலர் பேச்சாளரின் அறிவை வெளிப்படுத்தும் வகையில் கேள்விகளை கேட்பர். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு தெளிவான பதிலை கூறும் அளவிற்கு பேச்சாளர் கற்றவராக இருத்தல் வேண்டும். அதற்காக பேச்சாளர் அறிவு தரும் நூல்கள் அனைத்தையும் தெளிவாக கற்றறிதல் வேண்டும்.

**அ**ப்போது ஆருடன் வசுமதியை கேட்டான், "அக்கா அறிவு தரும் நூல்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. அனைத்தையும் கற்க முடியுமா…? கற்றாலும் அவை நினைவில் வருமா.

**"வ**சுமதி சொன்னாள் ஆரூரா அறநீதி கருத்துக்கள் சில தான். அவற்றுள் ஆராய்ந்தால் ஒரு அறநீதி கருத்தைத் தன்வாழ்வில் கடைப்பிடிப்பவன் எல்லா நீதி கருத்துக்களையும் பின்பற்றுவான். உதாரணமாக சொல்லப்போனால் பொய் சொல்லக்கூடாது என்று நினைப்பவன் களவெடுக்க மாட்டான். புறம் சொல்ல மாட்டான்.

**அ**றநீதி நூல்கள் யாவும் அறநீதி கருத்துகளை வேறுபாடாகச் சொல்லவில்லை. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய ஔவையாரின் நூல்கள் கூறும் கருத்துக்களை தான் திருமந்திரம் கூறுகிறது. திருமந்திரம் சொன்னவற்றை தான் திருக்குறளும் ஏனைய அறநீதி நூல்களும்

கூறுகின்றன. அதனால் ஒரு நூலில் உள்ள அறநீதிக் கருத்துக்களை தெளிவாகக் கற்றால் சபையில் யார் எந்தக் கேள்வியை கேட்டாலும் தயங்காமல் பதில் கூற முடியும். ஒரு முறை நான் ஒரு சபையில் உரையாற்றும்போது ஒருவர் எழுந்து கேட்டார், “அம்மா, நீங்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் பேசுகிறீர்கள். திருமந்திரத்தின் கருத்துக்களை தான் திருக்குறளும் கூறுகிறது என்பதை விளக்கமாக கூறுகிறீர்கள். திருக்குறள் சமண நூல், திருமந்திரம் சிவனின் பெருமைகளை கூறும் சைவ சித்தாந்த நூல் இரண்டும் எவ்வாறு ஒன்றுபடும்”.

“**தி**ருக்குறளைச் சமண நூல் என்று சொல்லுவோர் அதற்கான ஆதாரங்களை கூறுதல் வேண்டும். குடிகாரர்கள் ஒன்று சேருமிடத்தில் அவர்கள் தமக்குள் பலவற்றை கூறி வாதிடுவர். வெறி முறிந்ததும் கதைத்தது என்ன என்று அவர்களுக்கு தெரியாது. அப்படியான ஒன்று தான் இதுவும். குறள் சைவசமய நூல் என்று நான் பல மேடைகளில் பேசியுள்ளேன். இன்று பேச வந்த விடயம் வேறு என்று கூறினேன். பல்வேறுபட்ட கேள்விகளை சபையோர் கேட்பார்கள். அதற்கு சரியான விடையளிக்க வேண்டுமானால் சிறந்த நூல்கள் அனைத்தையும் படித்தல் வேண்டும்” என்று வசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “வாளோடு என்வன் கண்ணார் அல்லார்க்கு நூலொடு என் நுண்அவை அஞ்சுபவர்க்கு?”, “சபையோர்களே, வீரமில்லாத ஒருவனுக்கு வாள் எதற்கு. வாளை வைத்திருந்தால் முழுமையாக பயிற்சி பெற்று போர்க்களத்திற்கு சென்று பகைவர்களோடு போரிட்டு அவர்களை வெல்ல வேண்டும். அப்படியல்லாதவர்கள் வாளைக் கையில் எடுத்தலாகாது. அதுபோல கற்றவர்கள் கூடியுள்ள சபையில் பேச முடியாது தத்தளிப்பவர் நிறைய நூல்களை கற்றதால் எந்த பயனும் வராது” கல்வியின் நோக்கம் தான் அறிவைப் பெறுவதல்ல தன்னைச் சார்ந்தவர்கள் அனைவரும் கல்வியைப் பெறச் செய்தலே.

“**ஆ**ரூரின் வசுமதியை கேட்டான், “அக்கா, ஒருவர் பல்வேறு வகையான நூல்களை கற்பதனால் அவரது மதிப்பு உயரும், புகழ் ஏற்படும், வருமானம் அதிகரிக்கும். இதுதானே வாழ்க்கையின் நோக்கம்”.

“**வா**ழ்க்கையின் முக்கியமான நோக்கம் தானும் கற்று அக் கல்வி அறிவின் மூலம் சமூகத்தவரைக் கற்பிப்பதாகும். அவ்வாறு கற்பிக்கும் ஆசிரியருக்கு ஒரு மாணவர் பரம்பரை உருவாகும். அம் மாணவர்கள் தமக்குக் கல்வி கற்பித்த ஆசானை வாழ்நாளில் மறக்கமாட்டார்கள்.

“**எ**னக்குத் தெரிந்த ஒருவர் நூல்களை தேடித் தேடிக் கற்பார். ஆனால் யாராவது அந்நூல்களில் உள்ள விடயங்களைப் பற்றிக் கேட்டால் தடுமாறுவார். அவரது உடல் நடுங்கும். நான் பல முறை அவருக்கு அனைவரும் அஞ்சக்கூடாது என்று சொன்னேன். அவர் சொல்வார் ஒரு அவைக்குச் செல்லும் வரை எனக்குத் துணிவு இருக்கும். மேடையில் எறியதும் உடல் நடுங்கும். அதனால் பேசமுடியாத நிலை ஏற்படும். என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை, நான் என்ன செய்வது. நான் அவருக்குச் சொன்னேன், “ஐயா, வீரமில்லாதவன் வாளை கையில் எடுக்கக் கூடாது. அது போல பேசத் தெரியாதவன் அறிவு தரும் நூல்களைப் படிக்க கூடாது. எனது நண்பர் வாகனம் வாங்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. விலை உயர்ந்த வாகனம் ஒன்றை வாங்கிவிட்டார். ஆனால் அதை இயக்கத் தெரியாது. எங்காவது செல்ல வேண்டுமாயின் வாகனத்திற்கு சாரதியை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

ஒரு நாள் அவரது மகனுக்கு நோய் வந்துவிட்டது. மகனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல சாரதி தேடினார். பல மணி நேரம் தேடியும் சாரதியாக அகப்படவில்லை. அதனால் வாடகைக்கு ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்து மகனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். வீரமில்லாதவனுக்கு வாள் தேவையில்லை. பேச முடியாதவன் பல்வேறு வகையான நூல்களை கற்றாலும் பயனில்லை. ஒரு பொருளை உபயோகப்படுத்தத் தெரியாதவன் அப்பொருளை வாங்கக்கூடாது” என்று வசுமதி ஆரூரனுக்கு கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், “பகை அகத்தப் பேடிகை ஒள்வான் அவையடுத்து அஞ்சும் அவன் கற்ற நூல்” “சபையோர்களே, தான் கற்ற உயர்ந்த கருத்துக்களை கூறும் நூல்களின் கருத்தைச் சபையோருக்குப் புரியும்படி சொல்லி முடியாதவன் பேடியின் கையில் உள்ள வாளுக்குச் சமனாவான். அப்போது ஆரூரன் வசுமதியை கேட்டான், “அக்கா சபையினருக்கு அஞ்சும் தன்மையை உடையவன் ஏன் உயர்ந்த நூல்களைப் படிக்கிறான்.

“**ஆ**ரூரா, சிலருக்கு மற்றவர்கள் நன்றாக வாழ்வது பிடிக்காது. தனக்கு எதிரியானவன் எதை செய்கிறானோ அதை அவனைவிட சிறப்பாக செய்து பெயரும், புகழும் பெற வேண்டும் என்று சிலர் நினைப்பார். எதையும் நினைக்கலாம். ஆனால் நினைப்பவை நல்லவையாக இருந்து பலருக்கும் பயன்பட வேண்டும்”.

“**ரா**குலன் என்ற மயில் நன்றாக பாடும். தாளத்திற்கு ஏற்றவாறு தோகை விரித்து ஆடும். பல்வேறு வகையான நூல்களைப் படித்து சபையில் நன்றாகப் பேசும். அதன் பேச்சை கேட்ட

பலர் ஒன்று கூடுவார். மாறன் என்ற நரிக்கு ராகுலனைப் பிடிக்காது. ராகுலனைப் போல தானும் சபைகளில் ஆடிப்பாடி பேச வேண்டும் என்று நினைத்து பல நூல்களைக் கற்றது.

“**ச**பைகளில் பேச விரும்பியது. கதிரேசன் எல்லோரையும் ஊக்குவிப்பவர். அவர் மாறனின் ஆசையை உணர்ந்து கற்றவர்களின் சபையில் பேசுமாறு அழைத்தார். மாறன் பல அறிவு தரும் நூல்களை ஆசிரியர் உதவியுடன் கற்ற ஆசிரியர் மாறன் நல்ல அறிவாளி. எதிர்காலத்தில் நல்லதொரு பேச்சாளனாக வருவான் என்று பல அறிஞர்களுக்கு கூறியிருந்தமையால் மாறனின் பேச்சைக் கேட்க பல அறிஞர்கள் சபையில் கூடி இருந்தனர்”.

**அ**வைக்கு வந்த மாறன் அவையில் இருக்கும் அறிஞர்களைப் பார்த்தான் பெரும் பெரும் அறிவாளிகள் அங்கிருந்தனர். நூல்கள் கூறும் கருத்துக்களை மாறுபாடாக கூறினால் சபையில் வைத்து கண்டிக்கும் இயல்பை உடைய சுந்தரன் என்ற யானை சபையில் இருந்தது. சுந்தரனாரை கண்டதும் மாறனின் உடல் நடுங்க ஆரம்பித்தது. அதனால் சபையில் என்ன பேசுவது என்று தெரியாது தடுமாறினான். சபையோர் அதை எதிர்பார்க்கவில்லை. மாறன் தம்மோடு கதைக்கும் போது நல்ல கருத்துக்களை சொல்பவன் சபையில் ஏன் தடுமாறினானென்றால் சபையில் உள்ள அறிஞர்களுக்கு அவன் பயப்பட்டான். அதனால் சபையில் தான் கற்றதை பேசமுடியாதவன் பேடியின் கையில் உள்ள கூர்மையான வாளைப் போன்றவன். அவனால் பேச முடியவில்லை” என்று வாசுமதி கூறினாள் என்று கூறி தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “பல்லவை கற்றும் பயம் இலரே நல் அவையுள் நன்கு செலச் சொலாதார்”, “சபையோர்களே, அறிஞர்கள் கூடியுள்ள அவையில் அவர்கள் மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் எடுத்துக் கூறமுடியாதவர்கள் அறிவு தரும் நூல்கள் பலவற்றை கற்றிருந்தாலும் அதனால் எந்த பயனையும் அடையமாட்டார்கள். அப்போது ஆரூரன் கேட்டான், “அக்கா நல்ல பேச்சாளர் அடையும் பயன்கள் எவை?”.

“**ஒ**ரு நல்ல பேச்சாளர் சமூகத்தின் நன்மதிப்பைப் பெறுகிறார். அவரது பேச்சு முக்கியமாக மாணவர்களைக் கவர்ந்தால் அவரைப் போல ஒரு பாக்கியசாலியை காண்பது அரிது. அவரை மாணவர்கள் விரும்புவார்கள், பெற்றோர்கள் விரும்புவார்கள், சமூகத்தவர்கள் விரும்புவார்கள். அதனால் அவர் பெயரோடும், புகழோடும் இன்பமாக வாழ்வார். சிவபாலன் என்ற மான் அருமையான பேச்சாளர். ஒருமுறை ஒரு பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு கல்வி பணிப்பாளர் பிரதமர் விருந்தினராக வந்தார். அவ்விழாவில் சிறப்பு நிகழ்வாக “மாணவர்களை மகிழ்விப்போம்”

என்ற தலைப்பில் சிவபாலன் பேசினார். மாணவர்கள் அமைதியாக இருந்து அவரது பேச்சைக் கேட்டனர்.

**க**ல்விப்பணிப்பாளருக்குச் சிவபாலனின் பேச்சு நன்றாக படித்துவிட்டது. அதன் பின்னர் அவர் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் வைப்பதானால் சிவபாலனின் தலைமையிலையே வைப்பார். ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் அவரது பேச்சை விரும்பி கேட்டனர். சிறு குழந்தைகளுக்கு கூட விளங்கும் வகையில் மிகவும் எளிமையாகவும் பேசுவார். அதனால் அவரை கல்விபணிப்பாளர் முதன்மை ஆசிரியராக பதவி உயர்த்தினார்.

**“அ**வரது மகளுக்குத் திருமணம் பேசியபோது பல முக்கிய பிரமுகர்கள் தமது மகன்மாரை அவருக்கு மாப்பிள்ளையாகக் கொடுக்க முன்வந்தனர். அறிஞர்கள் சபையில் அவர்களைக் கவரும் படி பேசுபவனை எல்லோரும் விரும்புவர். சிறப்பாகச் சொல்ல முடியாதவன் பல நூல்களைக் கற்றாலும் எந்தப் பயனையும் அடையமாட்டான். இதற்கு மாறன் நல்ல உதாரணமாவான்” என்று வசுமதி கூறினாள் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் ஒன்பதாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், “கல்லாதவரின் கடை என்ப; கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவர்”, “சபையோர்களே, நல்ல கருத்தாளம்மிக்க நூல்கள் பலவற்றை தெளிவாகக் கற்றிருந்தாலும் அவற்றை அறிஞர்களிடையே பேச அஞ்சுபவன் படிக்காதவனை விட கீழானவன்”.

**“ஆ**ரூரன் வசுமதியைக் கேட்டான், “அக்கா சகல நூல்களை கற்றும் தான் கற்றதைச் சபையில் பேச அஞ்சுபவன் படிக்காதவனை விட கீழானவனா. அவனுக்கு பேசத் தெரியாதேதவிர மேலான நூல்களை கூறுபவை அனைத்தையும் தெரிந்தவன் தானே. அவனை எப்படி கீழானவன் என்று சொல்ல முடியும்.

**“ஆ**ரூரா, மரங்களைப் பார். தம் காய்ப்பதைத் தாம் பயன்படுத்துகின்றனவா? அதுபோலத்தான் கற்றவர்களும் இருத்தல் வேண்டும். அறிஞர்கள் தாம் எழுதிய நூல்களை தமக்காக எழுதுவதில்லை. பிறரின் நன்மைக்காகவே எழுதினர். கற்றவர்கள் மற்றவர்களின் மேம்பாட்டிற்காக வாழ வேண்டும். தனவந்தன் பணத்தை ஏழை, எளியவர்களுக்கு கொடுத்தல் வேண்டும். பொருள் உள்ளவன் அதை பகிர்ந்து கொடுத்தல் வேண்டும். கற்றவர்கள் மற்றவர்களின் மேம்பாட்டிற்காக

தாம் கற்றவற்றைப் பிறருக்கு நல்ல முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும்" அப்படிச் செய்யாதவர்கள் படிக்காதவர்களை விட கீழானவர்கள் தான்".

"**மா**றன் ஒரு கற்ற தனவந்தனை காண்பதற்காக சென்றான். அதே நேரம் ஒரு கூலி வேலை செய்பவனும் அந்த தனவந்தனை காண சென்றான். தனவந்தன் கூலி வேலை செய்பவனை அழைத்து என்ன வேண்டும் என்று கேட்டார் அவன், "ஐயா, எனது மகனுக்கு பாட புத்தகங்கள் வாங்க வேண்டும் பணம் தாருங்கள். அம்மா விறகு கொத்தச் சொன்னவா. நாளை வந்து கொத்தி தருகிறேன். அந்த கூலியில் நான் வாங்கிய பணத்தை கழியங்கள் என்றான். 'என்ன புத்தகம் வாங்கப் போகிறாய்?' என்று தனவந்தர் கேட்டபோது 'பாலபாடமும், பாலபோதினியும் என்றான். "இரண்டும் என்னிடம் உள்ளன அதை எடுத்துக் கொடு" என்று தனது உதவியாளருக்கு சொன்னார். அப்போது உதவியாளன் சொன்னான், "ஐயா, மாறன் என்ற பெரியவர் வந்திருக்கிறார்".

"**அ**வரை இருக்கச் சொல். அவர் கதைக்க தொடங்கினால் விடமாட்டார். தேவையில்லாதவற்றையெல்லாம் கதைப்பார்" என்று ஒருவர் உயர்ந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்திருந்தாலும் அவர் அந்நூல்கள் கூறும் கருத்துக்களை விளக்கமாக சொல்லாவிட்டால் அவர் கற்காதவரை விடக் கேவலமானவர். கற்காத கூலி வேலை செய்பவனைத் தாமதிக்க வைத்தால் அவனது கூலிப்பணத்தில் குறைபாடு ஏற்படும். அதனால் தான் அவனை அவர் தாமதியாது அனுப்பினார் என்று வசுமதி சொன்னாள்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், "உளர் எனினும் இல்லாரோடு ஒப்பர் களன் அஞ்சிக் கற்ற செயல் சொல்லாதார்", "ஒருவன் தான் தெளிவாக கற்றுப் புரிந்து கொண்ட நல்ல வார்த்தைகளை பிறர் விளங்கிக் கொள்ளும் வண்ணம் தெளிவாகக் கூற முடியாதவர் உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவருக்கு ஒப்பானவர் ஆவர்.

"**அ**க்கா, நல்ல நூல்களைக் கற்றுத்தேர்ந்த அறிஞர்கள் ஒருவர் உயிரோடு இருக்கும்போது அவர் செத்தவருக்கு சமனாவார் என்று சொல்லலாமா?".

"**இ**யங்காதிருப்பவர்கள் இறந்தவர்களுக்குச் சமமானவராவர். கை, கால் இயங்காவிட்டால் அவர்களால் செயற்பட முடியாது. அது அவர்களின் குறையாகாது. அவர்கள் வயதானவராகவோ, நோய்வாய்ப்பட்டவராகவோ அல்லது பிறப்பில் இருந்தே அப்படியானவர்களோ தெரியாது. உறுப்புக்கள் இயங்காவிட்டாலும் மனம் இயங்க வேண்டும். நன்கு கற்று, கற்றதை எடுத்துச்

சொல்ல இயலாதவர்கள் செத்தவர்கள் தான். ஏனென்றால் அவரது மனம் இயங்கவில்லை. மனம் தான் ஒரு உயிரின் இயக்கத்திற்குக் காரணியாக அமைவது. கற்றாலும் கற்றதை அடுத்தவர்களுக்குப் புரியும் படி எடுத்துச் சொல்ல முடியாதவர்களும் இயக்கமற்றவர்தான். மனம் ஒரு காலம் கூட இயங்காதிருக்கலாகாது. அதை இயங்காவிட்டால் உடல் செயலிழந்து விடும். மனத்துணிவுள்ளவர்கள் எப்போதும் இயல்பாக செயல்பட்டு கொண்டிருப்பார். அதனால் சமூகம் முன்னேறும். மரங்கள் எவ்வளவு பயனைத் தருகின்றன. அவை அசையாதிருந்து பெரும் உதவிகள் செய்கின்றன. உயிர்களும் இயக்க முடியாத நிலை ஏற்பட்டாலும் இயங்க வேண்டும். கற்றதை மற்றவர்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும்.

**“பூ**ங்காவனத்தில் ஈஸ்வரன் என்ற ஒரு மான் இருந்தது. அதை கற்க வேண்டிய நூல்களையெல்லாம் கற்றுப் பெரும் கல்விமானானது. அது கூட்டங்களில் பேசும். அது கூட்டங்களில் பேசுவதை பலர் ஒளிப்பதிவு செய்வார். ஓய்வு நேரங்களில் ஈஸ்வரன் தனது பேச்சை பதிவு செய்து வைப்பார். அது இறந்து பல காலமாகிவிட்டது. ஒளிப்பதிவுகளை இப்போதும் பலரும் கேட்கிறார்கள். அது எழுதிவைத்தவற்றை வாசிக்கின்றனர். அதனால் அது இன்றும் வாழ்கிறது. தான் கேட்டதை வெளிப்படுத்த முடியாதவர் வாழும்போது இறந்தவராகி விடுவார். என்று வசுமதி கூறினாள் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் பேசி முடிந்ததும் மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்தார். சபையோர்களே தமிழறிஞரின் அருமையான பேச்சை கேட்டீர்கள். அடுத்து நாடு என்ற அதிகாரத்தை பற்றி தமிழறிஞரின் மாணவரான சுந்தரமூர்த்தி என்ற கரடியார் பேசுவார். அவர் பட்டதாரி ஆசிரியர். நீதி நூல்கள் அனைத்தையும் கற்றவர். இளம் புயல் என்ற நாமம் பெற்றவர். அவரை பேச வருமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**சு**ந்தரமூர்த்தி மேடைக்கு வந்து கைகூப்பி சபையோரை வணங்கினார். அவர் ஒரு நல்ல ஆசிரியர். கற்க வேண்டிய நூல்களை எல்லாம் கற்றவர். அத்துடன் அறநூல்களில் உள்ள நல்ல கருத்துக்களை மேடையில் சொல்பவர், பத்திரிகைகளில் எழுதுபவர், “சபையோர்களே, இன்று நான் வள்ளுவன் சொன்ன நாட்டைப் பற்றி விரிவாக சொல்லப்போகிறேன். எனது குரு தமிழறிஞர். அவரோடு கலந்துரையாடாது நான் எந்த மேடையிலும் பேசியதில்லை. காலையில் அவரது வீட்டுக்குச் சென்று ஆசி பெறும்போது அவர் கூறினார், “மகனே, இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருக்குறளுக்கு உரையை மட்டும் அறிஞர்கள் கூறி வருகின்றனர். உரை குறள் சொல்லும் கருத்தில் நூறில் ஒரு பகுதியைக் கூட விளக்கமாட்டாது. குறளை சிறுவர்கள் புரிந்து கொள்ளத் தக்க வகையில் பேசு. நாம் குறள்களுக்குக் கதை சொல்லும் மரபை உருவாக்கியுள்ளோம். ஒரு

குறளுக்கு ஆயிரக்கணக்கான கதைகளைச் சொல்லலாம். அதனால் முடிந்தளவு கதைகளைக் கூறு" என்றவர் அதனால் கதைகள் மூலம் பேசலாம் என்று வந்திருக்கிறேன்.

**சு**ந்தரமூர்த்தி முதலாவது குறளை இனிமையாக பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானார், "தள்ளா விளையுளும் தாக்காரும் தாழ்வும் இலாச் செல்வரும் சேர்வது நாடு", "சபையோர்களே, ஒரு சிறந்த நாட்டிற்கு குறைவில்லாத உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் தான் முக்கியமானவர்கள். அடுத்ததாகத் தகுதி வாய்ந்த அறிஞர்கள்றோம தேவையென்றும், அதற்கடுத்ததாக குறைவில்லாத செல்வத்தை உடைய செல்வந்தர்களும் தேவை என்று வள்ளுவர் கூறுகிறார்".

"**நா**ன் விவசாய ஆசிரியர் அல்ல. ஓர் ஆசிரியர் கற்று எல்லாவற்றையும் கற்பிக்கக்கூடிய திறமையை பெறவேண்டும். நான் மாணவர்களுக்கு விடுமுறை விடும் தினங்களில் அவர்களை எனது விவசாய நிலத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு விவசாயம் செய்யும் முறைகளைப் பற்றி கற்பிப்பேன். விவசாயம் செய்ய நிலம் தேவையில்லை. சாடிகள் வாங்கி அதில் பயிர்களை நடலாம் என்று கூறி அதற்கான விளக்கங்களை சொல்லிக் கொடுத்தேன்".

"**எ**ல்லா மாணவர்களும் சாடிகளில் மரக்கறிச் செடிகளை நட்டு, நன்கு பராமரித்தனர். இப்போது எனது மாணவர்களின் வீடுகளிலும், அவர்களது இனத்தவர்கள் வீடுகளிலும் மரக்கறிகள் வாங்குவதில்லை. விளை பொருட்களின் உற்பத்தி அதிகரித்ததால் மக்களின் ஆரோக்கியமும் அதிகரிக்கும்".

"**எ**மது நாட்டில் விவசாயிகள் அனைவரும் பெரும் செல்வந்தர்களாக இருக்கின்றனர். அதற்கு காரணம் அவர்கள் விவசாய உற்பத்தியை அதிகரித்தமையே. அவர்கள் செல்வந்தர்களாக இருப்பதால் பயிர்களுக்கு தேவையான பாசளை, கிருமி நாசினி என்பவற்றை உடனுக்குடன் வாங்கி பயன்படுத்துகின்றனர். தேவையான விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கின்றனர்".

"**இ**ரவில் அவர்கள் கற்கின்றனர். அறிஞர்களிடம் சென்று நல்ல அறிவைத் தரும் நூல்களை கற்கின்றனர். கற்றவற்றை சபையில் விளக்கமாக பேசுகின்றனர். அதனால் கூடச் சபையில் மிக மிக அவதானமாகவே பேசுகின்றனர். குபேர வனத்தில் வாழ்ந்த நாராயணன் என்ற குதிரை பெரு நிலப்பரப்பில் விவசாயம் செய்தது வந்தது. அது தனது விளை நிலத்தைப் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு விதமான பயிர்களை செய்து அந்த முறை நெல்விளைச்சல் அதிகமாக இருந்ததால் அது கோதுமையை பயிரிட்டது. எல்லோரும் நெல்லை விளைவித்தமையால் நெல்லின் கொள்வனவு விலை வழக்கத்தை விடக் குறைந்தது. ஆனால்

கோதுமையின் விலை அதிகரித்தது. அதனால் நாராயணன் பெருந்தனவந்தனானான். வுவிவசாயிகள் அவன் அறிவு தரும் பல நூல்களை கற்றமையால்தான் அவனால் அவ்வாறு யோசிக்கமுடிந்தது. அதனால் சபையோர்களே ஒரு நாடு செல்வந்த நாடாக வேண்டுமானால் விவசாயிகள் நன்றாக கற்க வேண்டும்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தான் சுந்தரமூர்த்தி.

**சு**ந்தரமூர்த்தி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், "பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்டான் ஆற்ற விளைவது நாடு" "சபையோர்களே, ஒரு வளமான நாடு மிகுந்த செல்வளமுள்ளதாகவும் அயல்நாட்டு மக்களால் விரும்பப்படக்கூடியதாகவும், பெரும் துன்பங்கள் வந்தாலும் அதை எதிர்த்து நின்று வளங்களைக் குன்றாத நிலையில் வைத்திருக்கக் கூடியதாகவும் இருக்கும்.

"**தி**ரவிய வனம் அப்படியானது. போதிய அளவு விளைபொருட்களை உண்டு. உயிர்களுக்கு முக்கியமானது உணவு. இங்கு உணவுக்கு ஒருபோதும் தட்டுப்பாடேற்பட்டதில்லை. எமது வனதின் தலைவரான கதிரேசன் எந்த விதமான குறைகளையும் இல்லாத வனமாகத் திரவிய வனத்தை உருவாக்கியுள்ளார். அதனால் அயல்வனங்களில் வசிப்போர் தமது தேவைகளை இங்கு வந்து நிறைவேற்றிக் கொள்கின்றனர். சில வருடங்களுக்கு முன்பு மழை பொய்த்து விட்டது. மூன்று வருடங்கள் மழை பெய்யவில்லை. மக்கள் உணவுக்காக கஷ்டப்பட்டபோது அயல்வனமான மதுரவனத்தின் உதவியை கதிரேசன் நாடிய போது மதுரவனத்தினர் போதியளவு உதவிகளை செய்தனர்.

"**ஐ**ந்து வருடங்களுக்கு முன்பு எழில்மிக்க மதுரவனத்திற்கு யாரோ தீ வைத்து விட்டார்கள். அதனால் பயன் தரும் மரங்கள், விளைநிலங்கள் எரிந்து நாசமாகிவிட்டன. அதனால் கதிரேசன் அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்தார். பயன்தரு மரங்களை நடுவித்தார். இன்று மதுரவனம் மிக்க செழிப்புடையதாக விளங்குகிறது. அதனால் அவர்கள் எமது வனவாசிகள் கஷ்டப்படும்போது தேவையான உதவிகள் அனைத்தையும் செய்தனர். ஒருவருக்கு மகிழ்வுடன் தாராளமாக உதவி செய்தால் அவர் அதை திருப்பி செய்வார் என்ற தத்துவத்தை உணர்ந்தவர் கதிரேசன்" என்று கூறித் சுந்தரமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

**சு**ந்தரமூர்த்தி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லானார், "பொறை ருங்குமேல் வருங்கால் தாங்கி இறைவர்க்கு இறை ஒருங்கு நேர்வது நாடு" சிறந்த நாடுகள் தான் பிறநாடுகளில் இருந்து பல்வேறு வகையான வன் செயல்களால் பாதிக்கப்பட்டு,இடம்பெயர்ந்து வந்து குடியேறியவர்களுக்குத் தேவையான சகல

வசதிகளையும் உண்டாக்கிக் கொடுத்து, நாட்டை ஆளும் அரசனுக்கு வேண்டியளவு பொருட்களையும், வரிப்பணத்தையும் குறைவில்லாது வழங்கும் மக்களைக் கொண்டதே சிறந்த நாடாகும்".

**"போ**ர்க்கால நில மாறுபாடு, இடப்பெயர்வுகள் ஏற்படும். ஐந்து வருடங்களுக்கு முன் மதுரவனம் தீயினால் அழிந்தமையால் அவ்வனவாசிகள் அனைவரும் திரவிய வனத்திற்கே வந்தனர். அருகில் பல வனங்கள் இருந்த போதும் யாரும் அங்கு செல்லவில்லை. கதிரேசன் அனைவரையும் அன்புடன் வரவேற்கும் குணமுடையவர். அதனால் தான் மதுரவனவாசிகள் வந்தனர். ஆரம்பத்தில் பாடசாலைகள், கோவில்கள், பொதுக்கட்டிடங்களில் தங்கவைக்கப்பட்டனர். பின்பு அவர்களுக்கென குடியிருப்புகள், பாடசாலைகள் அமைக்கப்பட்டன" வனவாசிகளும் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கான உதவிகள் அனைத்தையும் செய்தனர். அதனால் பலர் திரும்பி மதுரவனத்திற்கு செல்லாது திரவிய வனத்தில் தங்கிவிட்டனர்".

**"வ**சந்தா என்ற பன்றி எட்டுக்குட்டிகளை ஈன்றது. இடப்பெயர்வின்போது வசந்தாவின் மூத்த மகனும் அவனது கணவனும் இறந்தமையால் வசந்தா பெருந்தும்பட்டாள். ரதி என்ற மான் வசந்தாபடும் துன்பங்களைக் கண்டு மனம்வருந்தி அவர்களை அழைத்து வந்து உணவு கொடுத்தது. அதைப் பார்த்து ஏனைய வனவாசிகளும் மாறி மாறி உணவு கொடுத்தன. அதனால் மகிழ்ந்த வசந்தா தனது பிள்ளைகளுடன் திரவிய் வனத்தில் தாங்கிவிட்டாள். கதிரேசன் வசந்தாவுக்கு தேவையான உதவிகளை செய்தார். வனவாசிகள் இடம் பெயர்ந்து வந்தவர்களை நல்ல முறையில் கவனித்ததோடு, கதிரேசனுக்கு கொடுக்க வேண்டிய வரிப்பணத்தை காலம் தாழ்தாது கொடுத்தனர். வருடம் முழுவதும் விதைகளை விதைக்கும் பணக்காரர்கள் பலர் அங்கிருந்தமையால் உணவு பொருட்களுக்கு பஞ்சம் ஏற்படவில்லை" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சுந்தரமூர்த்தி.

**சு**ந்தரமூர்த்தி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்ல தொடங்கினார், "உறுபசியும் ஓரப் பிணியுடம் செறு பகையும் சேராது இயல்வது நாடு", "சபையோர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று ஔவையார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறியுள்ளார். பசி மிக கொடியது. அதனால் தீராத நோய்கள் பலவரும். அழிவினை உண்டாக்குவது பகை. இந்த மூன்றும் இல்லாதிருக்கும் வனம் தான் மிக சிறந்த வனமாகும். திரவிய வனத்தில் இம் மூன்றும் இல்லை. அன்று கதிரேசன் தனது சகாக்களுடன் அன்னதானமடத்திற்குச் சென்றார் அப்போது பிற்பகல் இரண்டு மணி".

**“ஒ**ரு கிடாரம் நிறைய சோறு இருந்தது. பல்வேறு வகையான கறிகள் பல கிடாரங்களில் இருந்தன. அதைக் கண்ட கதிரேசன் கேட்டார், “ஏன் அளவுக்கு அதிகமாக சமைத்தீர்கள். உணவை வீணாக்கக்கூடாது” அதற்கு மடத்துக்கு பொறுப்பான பூபாலன் என்ற குதிரை சொன்னது, “ஐயா, பத்து கொத்து அரிசி போட்டு சமைத்தோம். சாப்பிட யாரும் வரவில்லை. வனவாசிகளுக்கு இங்கு சமைக்கும் உணவு சுவை இல்லாததால் தமது தாய் அல்லது மனைவி சமைக்கும் உணவுதான் சுவையானது என்கின்றனர்.

**“அ**ப்படியா” சொல்கின்றனர். இன்று சாப்பிட்டுப்பார்ப்போம் உணவை பரிமாறுங்கள். என்று கூறிவிட்டு சாப்பிட அமரந்தார். பூபாலன் மிக்க மகிழ்வுடன் தலைவாழை இலை போட்டு கதிரேசன் உடன் வந்த நால்வரும் உணவு உண்பதற்காக அமர்ந்தனர். கதிரேசன் சோற்றைப் பிசைந்து உண்டு விட்டுச் சொன்னார், “அருமையான சாப்பாடு. இதை சுவை இல்லை என்று சொல்லி சாப்பிடுகிறார்கள் இல்லையா…?”.

**அ**தைக் கேட்ட பூபாலன் சொன்னான், “வீட்டில் இரண்டு மூன்று பேருக்கு சமைக்கும் போது சுவையாக இருக்கும் என்று எண்ணுகின்றனர். இதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். அதற்கான சுவைமிக்க உணவைத் தினமும் உண்பதால் எமது வனவாசிகளுக்கு எந்த நோய்களும் இல்லை. வைத்தியசாலைகளில் வைத்தியர்களும் அவர்களது உதவியாளர்களும் போனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்று சிரித்தான் பூபாலன்.

‘‘ஐயா, நீங்கள் எல்லா வனத்துத் தலைவர்களுடனும் அன்பாகப் பழகி வேண்டி உதவிகளை செய்வது வருகிறீர்கள். நந்தவனத்தில் கடந்த சில தினங்களாகவே பெருமழை பெய்கிறது. நீங்கள் அவர்களுக்கு தேவையான உணவு வகைகளையும், அத்தியாவசிய பொருட்களையும் அனுப்பியுள்ளீர்கள். அதுபோல அயல் வனங்களில் ஏதாவது சிறு அசம்பாவிதம் நடந்தாலும் அதை விசாரித்து தேவையான உதவிகளை செய்வீர்கள். அதனால் உங்களை யாரும் பகைப்பதில்லை. எமது வனத்தில் கொடிய பசி இல்லை, தீராத நோயாளிகள் இல்லை, உங்களுக்கு பகைவர்கள் இல்லை, நீங்கள் தனிக்காட்டு ராஜா என்றது பூபாலனின் உதவியாளரான கங்காதரன் என்ற மான்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சுந்தரமூர்த்தி.

**சு**ந்தரமூர்த்தி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார். “பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு”, “சபையோர்களே, ஒரு நாட்டில் அரசுக்கு எதிராகச் சில குழுக்கள் இயங்கும். ஒரு நாட்டில் பல்வேறுபட்ட இனங்கள் வாழும். ஆட்சியாளர்கள்

நல்லவற்றை செய்தாலும் தமது நன்மைக்காகக் குழுக்களை அமைத்து போராடுவர். திரவிய வனத்தில் நரிகளும், ஓநாய்களும் தலைவரான கதிரேசனைப் பிடிக்காததால் மதியழகன் என்ற நரியின் தலைமையில் விடுதலை நரிகள் என்ற குழுவை அமைத்து வனத்தில் சில வளமான இடங்களை அளித்தனர். பன்றிகளையும், மான்களையும் தாக்கினர்".

**க**திரேசன் ஒற்றர்களை அனுப்பி செய்திகளை சேகரித்தார். அயல் வனமான மதுரவனத்து அரசன் மணிமாறன் என்ற புலியே திரவிய வனக் குழுக்களுக்கு உதவி செய்கிறது என்பதை அறிந்து கொண்டார். அன்றிரவு திரவியவனவாசிகள் ஒன்று திரண்டு சென்று மதுரவனத்தின் முக்கிய இடங்களில் மறைந்திருந்தனர். அன்று இரவு திரவியவனத்தில் இருந்து மதுரவனத்திற்குச் சென்ற அனைவரையும் அவர்கள் கைது செய்து மறைத்து வைத்திருந்தனர்.

**"ம**துரவனத்திற்கு சென்ற சுமார் ஐம்பது பேரைக் காணாமையால் அவர்களது குடும்பத்தினர் அவர்களை தேடி அலைந்தனர். பதின்நான்கு நாட்களுக்குப் பிறகு ஐம்பது பேரும் திரவிய வனத்திற்கு வந்த போதும் அவர்கள் தாம் எங்கே சென்றோம் என்பதை கூறவில்லை. சரவணன் என்ற குரங்கின் தலைமையில் இயங்கிய பல காட்டுவாசிகள் அவர்களைக் கட்டிவைத்தனர். உணவு பத்து நாட்களாகக் கொடுக்கப்படவில்லை. இனி இப்படியான செயல்களில் ஈடுபட்டால் மரணதண்டனை வழங்கப்படும் என எச்சரித்தமையால் குழுவாக இயங்கியவர்கள் பயந்துவிட்டனர். அதன் பின்னர் குழுக்கள் தோன்றவில்லை".

**க**திரேசன் அண்ணனின் மகனான உருத்திரன் என்ற யானை தனக்குத்தான் திரவிய வனத்தின் அரசுரிமை உள்ளது என்று சிலரைத் தன்பக்கம் சேர்த்துக் கொண்டு வந்து போராடியது. வனவாசிகள் ஒன்று திரண்டு உருத்திரனைக் கைது செய்து கதிரேசனிடம் ஒப்படைத்தனர். கதிரேசன் உருத்திரனைச் சிறையில் அடைத்தார். உருத்திரனுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தார். அதன் பின் அப்பிரச்சினை அடங்கிவிட்டது. மதுரவனத்து அரசனின் கையாட்கள் அடிக்கடி திரவிய வனத்துள்ப் புகுந்து கொள்ளையடித்தனர். படைவீரர்கள் விக்கிரமன் என்ற புலியின் தலைமையில் மதுரவனத்தில்ப் புகுந்து அந்தநாட்டு அரசனைச் சிறைபிடித்தனர். இப்போது வேறு மதுரவனம் திரவிய வனத்துடன் இணைக்கப்பட்டது" என்று கூறிச் சுந்தரமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

**சு**ந்தரமூர்த்தி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானார், "கேடு அறியாக் கெட்ட இடத்தும் வளம் குன்றா நாடு என்ப நாட்டின் தலை", "சபையோர்களே, பகைவர்கள் எந்த வகையிலும் கெடுக்க முடியாததாகவும், துன்பங்கள், துயரங்கள் வந்த போதும் வளங் குறையாததாக இருப்பதே சிறந்த நாடாகும்.

சபையோர்களே திரவிய வனத்திற்கும் குறைவில்லை. கற்ற பலம் மிக்க விவசாயிகள் அங்கு வசிப்பதால் இரண்டு வருடங்களுக்குப் போதுமான சகல உணவு வகைகளும் கையிருப்பில் இருக்கும். பகையான அரசர்களைக் கொண்ட வனங்களாக இருந்தாலும் அங்குள்ள வனம் வாசிகள் படும்துன்பத்தை கண்டு கதிரேசன் இரங்குவார். அந்த வனவாசிகளைத் திரவிய வனத்திற்கு அழைத்து வந்து சகல உதவிகளையும் செய்வார். அதனால் அரசர்கள் எதிர்த்தாலும் வனவாசிகள் கதிரேசன் மீது மட்டற்ற அன்பும், மதிப்பும் வைத்திருக்கின்றனர். மதுரவனத்து அரசன் தனது போர்வீரர்களை அனுப்பித் திரவிய வனவாசிகளின் வீடுகளைக் கொள்ளையிடும்படி பணிப்பான். ஆனால் அவர்கள் மதுரவன அரசனுக்கு பயந்து தமது குடும்பங்களுடன் சென்று திரவிய வனத்தில் குடியேறிவிடுவர்".

"**அ**தனால் மதுரவனத்து அரசனாலோ அல்லது வேறெந்த வனத்து அரசனாலோ திரவியவனத்திற்குக் கேடு ஏற்படாது. அந்த நாட்டு அரசர்கள் திரவிய வனத்திற்கு எதிராகச் சதி செய்தால் மக்களே காட்டிக் கொடுத்து விடுவார்கள். அதனால் திரவிய வனத்தை எந்த வன அரசராலும் தடுக்க முடியாது.

"**ஒ**ரு முறை பெரு மழை தொடர்ந்து பத்து நாட்களாக இடி மின்னலுடன் பெய்தது. அதனால் மின் இணைப்புக்கள் யாவும் துண்டிக்கப்பட்டு விட்டன. வீதிகளில் மரங்கள் பாறி விழுந்தன. அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மழையின் தாக்கத்தால் காயப்பட்டோரையும், பாதிக்கப்பட்டுரையும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாது. வன வாசிகள் பெரும்துன்பட்டனர். போதியளவு உணவும், மருந்துப் பொருட்களும் அங்கு இருந்தமையால் வனவாசிகள் பாதிக்கப்படவில்லை. ஒரு வசதியான வனத்தில் கேடு நேர்ந்தாலும், அக்கேட்டை அங்குள்ள வளங்களால் நிவர்த்தி செய்து விடுவார்கள்" என்று கூறி சுந்தரமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

**சு**ந்தரமூர்த்தி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லானானர், "இருபுனலும் வாய்த்த மலையும் வருபுனலும் வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு", "சபையோர்களே, ஊற்று நீரும் மழை நீரும் ஒரு வனத்திற்கு அத்தியாவசியமானது. நீரில்லாவிட்டால் உயிர்கள் வாழமாட்டா. ஊற்று நீர் என்றால் கிணற்று நீரைக்குறிக்கும். அத்துடன் மழை நீரும், இயற்கையின் அரணான மலைகளும், அம் மலைகளில் இருந்து பாய்ந்து வரும் ஆற்று நீரும், வலிமையான கோட்டைகளும் ஒரு நாட்டிற்கு அதாவது ஒரு வனத்திற்கு முக்கியமான உறுப்புகளாகும்".

**ஊ**ற்றுநீர் உவரில்லாத நீராக இருந்தால் அது வரப்பிரசாதமாகும். அது இறைவனின் கொடையுமாகும். மாதமும் மாரி பொழிதல் வேண்டும். மழை பெய்தால் தான் ஊற்று நீர் ஊறும். அதைவிட மலைகளில் இருந்து பாய்ந்து வரும் ஆற்று நீர் உவர்ப்பில்லாதது. இம்மூன்று நீரையும் பெற்ற நாடு (வனம்) மிக மிகச் சிறந்த வனமாகும். திரவிய வனத்தில் ஐந்து மலைகள் உள்ளன. ஐந்து மலைகளிலும் இருந்து பாய்ந்து வரும் நீரை குளங்களில் தேக்கி திரவிய வனத்தினர் வருடம் முழுவதும் நெல்லை விதைக்கின்றனர். அதனால் அங்கு ஒருபோதும் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதில்லை".

**"சு**ந்தரவனத்தில் இருந்து திரவிய வனத்தில் தனது நண்பனான நகுலன் என்ற எருமையின் வீட்டில் குடியேறிய சுந்தரன் என்ற பன்றி சொன்னது, "உண்மையில் சொர்க்கபுரி திரவியவனம் தான். எமது வனமான மதுரவனத்தில் சில காலங்களில் ஒரு வருடத்திற்கு மழை பெய்யாது. அப்போது நீருக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்படும். நீருக்காக நாம் நாலைந்து மைல் நடந்து செல்வோம். இங்கு அப்படியல்ல ஏராளமான கிணறுகள் உண்டு, மலைகளில் இருந்து ஆறுகள் பாய்கின்றன, மாதமும் மாறி பெய்கின்றது. அதனால் எந்த பொருளுக்கும் இங்கு தட்டுப்பாடு இல்லை தாராளமாக கிடைக்கின்றது. இயற்கையாகவே மலைகள் அரணாக அமைந்து வனத்தை பாதுகாக்கின்றன. அருமையான பலமிக்க கோட்டை உள்ளது. எதிரிகளால் அதற்குள் நுளையவே முடியாது" என்று சுந்தரன் சொன்னபோது நகுலன் மிகவும் மகிழ்ந்தான்" என்று கூறிச் சுந்தரமூர்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

**சு**ந்தரமூர்த்தி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "பிணி இன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் அணி என்ப நாட்டிற்கு இவ் ஐந்து", "சபையோர்களே, ஒரு நாட்டின் மக்கள் சிறந்த ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், செல்வந்தர்களாகவும், விளைபொருட்களை விளைவிப்பவர்களாகவும், நல்ல பாதுகாப்பு உள்ளவர்களாகவும், எப்போதும் இன்பமாக வாழ்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்தும் இருந்தால் அந்த நாடு மிகுந்த சிறப்புடைய நாடாகத் (வனமாக) திகழும்.

**"தி**ரவிய வனத்தில் வாழும் பெரும் விவசாயியான கேசவன் என்ற மான் அதிகாலையில் தனது வயல்களைப் பார்வையிட சென்று பிற்பகல் இரண்டு மணிக்கு திரும்பி வந்தது".

**அ**தன் மனைவியான கோசலையும், மூத்த மகளான துர்காவும் கேசவனிடம் சென்றன, துர்கா சொன்னாள், "அப்பா, அதிகாலையில் வயலுக்கு சென்று இரண்டு மணிக்கு வருகிறீர்கள். காலை உணவையும் உண்ணவில்லை, இப்போது சாப்பிட கேட்டால் சிறிது பொறுத்து சாப்பிடுகிறேன்

என்கிறீர்கள். உடம்பை கவனியாது சாப்பிடாமல் விட்டால் நோய்கள் வந்துவிடும் வாருங்கள் சாப்பிட”.

“**தோ**ப்புக்குச் சென்றால் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமா? என்னை கண்டதும் அங்கு வேலை செய்வோர் பழங்களை கொண்டு வந்து தந்தனர். பலாப்பழமும், மாம்பழமும், மாதுளம் பழமும் சாப்பிட்டேன். அதனால் பசிக்கவில்லை உங்களுக்கும் கொண்டு வந்துள்ளேன் என்றதும் துர்கா துள்ளிக்குதித்து பெரும் மகிழ்வுடன் தகப்பனார் கொண்டு வந்த பையை எடுத்தாள் அதற்குள் மாம்பழமும், பலாப்பழத்துண்டும், மாதுளம் பழங்களும் இருந்தன.

**து**ர்கா எமது தலைவர் மிக மிக நல்லவர் வனத்தை பூங்காவனமாக மாற்றி உள்ளார். எதற்கும் அஞ்சத் தேவையில்லை. வனவாசிகள் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்கின்றனர். போதிய அளவு உணவு இருக்கின்றது. எமக்கு என்ன குறை. எமது தேவைக்கு அதிகமான விலை பொருட்கள் விளைகின்றன. அவற்றை அயல் வனங்களுக்கு விற்பனை செய்கின்றோம். இனாமாகக் கொடுக்கின்றோம். எமக்கு என்னம்மா குறை” என்று கேசவன் கேட்டான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சுந்தரமூர்த்தி.

**சு**ந்தரமூர்த்தி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானார், “நாடு என்ப நாடா வளத்தன; நாடு அல்ல நாடவளம் தரும் நாடு”, “சபையோர்களே, பெருமுயற்சி செய்து சிரமப்பட்டு தொழில்களை செய்து நாளாந்தக் கடமைகளை செய்து வாழ்வது சிறந்த நாடல்ல. சிரமப்படாது சாதாரணமாக முயற்சி செய்து பெருவாழ்வு வாழ்வதே உலகில் சிறந்த வளம் உள்ள நாடாகும் (வனமாகும்).

**கே**சவன் தொடர்ந்து சொன்னான், “எமது வனமாகிய மதுரவனம் சிறந்த வனமல்ல. ஒவ்வொருவரும் கடுமையாக உழைத்தால்தான் அன்றன்று சாப்பிடமுடியும். மழையை நம்பியவனம். மழை பெய்தால் வயல்களில் நெல் விதைக்க முடியாது. ஆனி, ஆடி மாதங்களில் மழை வேண்டிக் கோவில்களில் பூஜை செய்வோம். மழை பெய்யாவிட்டால் விதைக்க முடியாது. ஆனால் திரவிய வனத்தில் ஆறுகள் பாய்கின்றன. குளங்கள் எப்போதும் நிரம்பியிருக்கும். மழை தவறாது பெய்வதால் நீர்ப்பாய்ச்சலும் தேவையில்லை. ஆனால் எமது வனத்தில் எல்லாவற்றிக்கும் காத்திருத்தல் வேண்டும். அத்துடன் மழை குறைவாக இருப்பதால் விளைச்சலும் குறைவு. அதனால் எமது வனவாசிகள் திரவிய வனத்திற்கு வந்து தங்கியிருந்து தொழிலைச் செய்கின்றனர். இதனால் எமக்கு வருமானம் அதிகமாக கிடைக்கிறது. எமக்குத் தேவைகள் ஏற்படும் போது கடுமையாக முயற்சித்ததால் தான் எமது தேவைகளின் நான்கில் ஒரு பகுதியாவது நிறைவேறும்”.

“**தி**ரவிய வனம் செல்வந்த வனம். மழை வருடம் முழுவதும் பெய்கிறது. அதனால் குளங்கள் நிரம்பியுள்ளன. வருடம் முழுவதும் பயிர் செய்யலாம். எதையும் எதிர்பார்க்கத் தேவையில்லை. எல்லாவற்றையும் இயற்கையாக கொடுக்கிறது. நாம் விதைத்துவிட்டு மழை வராவிட்டால் இயந்திரங்கள் மூலம் தினமும் நீர் பாய்ச்சுவோம். இங்கு அப்படியில்லை. மழை பெய்யாவிட்டால் குளத்தில் இருந்து நீர் பாய்ச்சலாம். மரஞ் செடி கொடிகளெல்லாம் காய்க்கின்றன. அவற்றை உண்பதற்கு யாருமில்லை. இவ் வனவாசிகள் சிரமப்படாது தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்” என்று கேசவன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சுந்தரமூர்த்தி.

**சு**ந்தரமூர்த்தி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே வேந்து அமைவு இல்லாத நாடு” “சபையோர்களே, ஒரு நாட்டிற்கு நல்ல அரசனின் ஆட்சி அமையாவிட்டால் அந்நாட்டில் சகல செல்வங்களும் குவிந்திருந்தாலும் அவற்றால் எந்த பயனும் ஏற்படமாட்டாது.

“**ச**பையோர்களே, கேசவன் தொடர்ந்து சொன்னான், “நாட்டை ஆளும் அரசனின் ஆட்சி நல்லாட்சியாக அமையாவிட்டால் அந்த வனம் எந்த வகையிலும் முன்னேற முடியாது. எல்லா வளங்களையும் உடைய வனமாக இருந்தாலும் அவற்றால் அவ் வனவாசிகள் பயனடையமாட்டார்கள். மதுரவனம் வளம் மிக்கது. ஆறுகள் இல்லையே தவிர ஏராளமான குளங்கள் உண்டு. மழை தப்பாது பெய்வதால் மிக்க வருமானமுடைய வளமாகத் திகழ்ந்தது. தற்போதைய அரசரின் தந்தையின் ஆட்சிக்காலம் பொற்காலம். வனவாசிகள் இன்பமாக வாழ்ந்தனர். மாதமும் மாரி பொழியும். கோவில்களில் சிறப்பாக ஆராதனைகள் இடம்பெறும் வனவாசிகள் எல்லை இல்லா இன்பங்களை அனுபவித்தனர்”.

“**அ**ரசர் முதுமை காரணமாக இறக்க அவரது புதல்வன் மார்த்தாண்டன் அரசனானான். அவன் தீய நண்பர்களோடு சேர்ந்து இன்பமாக வாழ்ந்தானேதவிர நாட்டைப் பற்றிச் சிந்திக்கவில்லை. கிராம தலைவர்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி வனவாசிகளிடம் வரியை அதிகமாக வசூலித்தனர். வனத்தில் பயங்கரவாதக் குழுக்கள் உருவாகி வனவாசிகளின் பொருட்களை கொள்ளையிட்டனர். வனவாசிகள் வாழ முடியாது இடம் பெயர்ந்து அயல் வனங்களுக்குச் சென்றனர். நிம்மதியில்லாத அவல வாழ்க்கை அவ்வேளைகளில் நாம் திரவிய வனத்திற்கு வந்து வயலிலும், வீடுகளிலும் வேலை செய்து வாழ்ந்து வருகிறோம்”.

“**ஒ**ரு குடும்பத்தின் தலைவன் நல்ல முறையில் வாழாவிட்டால் அக்குடும்பம் படிப்படியாக அழிந்து இறுதியில் முழுமையாக அழிந்துவிடும். நாடும் அப்படித்தான் என்று கேசவன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் சுந்தரமூர்த்தி”.

**சு**ந்தரமூர்த்தி பேசி முடித்ததும் மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து சபையோர்களே, ஒரு சிறந்த நாடு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று வள்ளுவன் கூறியதைச் சுந்தரமூர்த்தி நல்ல தமிழில் உங்களுக்கு எடுத்துரைத்தார். அவருக்கு நன்றி கூறிக்கொண்டு அடுத்த அதிகாரமான அரண் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியதை சகோதரி காயத்திரி உங்களுக்கு விவரமாக கூறுவார். அவர் ஒரு ஆசிரியர், கலாநிதி பட்டம் பெற்றவர், இனிமையாக பாடிப் ஆடி சபையோர்க்குத் தனது கருத்துக்களை கூறுபவர். அவரை பேச வருமாறு அன்புடன் அழைக்கிறேன்” என்றதும் சபையோர் கரகோசம் செய்தனர். காயத்திரி என்ற புறா அமைதியாக மேடைக்குப் பறந்து வந்து தனது அழகான சேட்டைகளை அடித்து சபையோருக்கு வணக்கம் கூறியது.

“**ச**பையோர்களே, வணக்கம் நான் தமிழறிஞரின் மாணவி. திருக்குறளை அவர் பல்வேறு இலக்கிய பிரிவுகளில் மக்களுக்கு கொடுத்து வருகிறார். இரண்டாயிரம் வருடங்களாக உரை சொல்லப்பட்டு வந்த குறளுக்குப் பல்லாயிரக்கணக்கான கதைகளைக் கூறிக் கொண்டிருக்கிறார். இப்போதும் பல வருடங்களாக குறள்களுக்கு உரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து வயதுக் குழந்தை கூட குறளைச் சொல்லி அதற்கான உரையையும் சொல்கிறது. இதை ஏன் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இன்று தொலைக்காட்சிகள் யாவும் வர்த்தக நோக்கத்திற்காகவே செயல்படுகின்றன. அவை குறளுக்கு உரை கூறுவதை விடுத்துத் தமிழறிஞரைப் பின்பற்றி புதுப்புது இலக்கிய வடிவங்களை உருவாக்க வேண்டும் அதற்காகத் தமிழறிஞரின் உதவிய நாடலாம்”.

**யா**ரும் நாடமாட்டார்கள். அதற்கு காரணம் தம்மை விட உயர்ந்த கருத்துக்களை வேறு எவராலும் கூற முடியாது என்ற எண்ணம். தமிழறிஞர் இன்ற புதிதாக ஒன்றை எழுதினால் அது மறுகணம் உலகெங்கும் சென்றுவிடும். அதற்கான அத்தனை நுட்பங்களையும் தெரிந்து வைத்திருக்கிறார். நான் எனது சகோதரியின் திருமணத்திற்காக அமெரிக்காவுக்கு சென்ற போது அங்குள்ள தமிழர்கள் தமிழறிஞரைப் பற்றிக் கதைத்தனர். அந்த அளவுக்கு புகழ் பெற்ற ஒருவரின் மாணவி நான் என்று அவர்களுக்கு கூறிப் பெருமைப்பட்டேன்.

**அ**டுத்து எனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரமான அரண் என்பது பற்றி வள்ளுவர் என்ன சொல்கிறார் என்பதை சொல்கிறேன். என்று கூறிவிட்டு முதலாவது குறளை காயத்திரி

இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ''ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் பொருள்'', ''சபையோர்களே, அரண் என்பது நாட்டைப் பாதுகாப்பதற்கான சுவரென்று சொல்லலாம். பிறநாடுகள் மீது படையெடுப்பின் போதும், பகைவர்கள் படையெடுத்து வந்து தாக்கும் போதும் போர்வீரர்கள் பதுங்கிப் பாதுகாப்பாக இருந்து பகைவர்களைத் தாக்கி அழிப்பதற்கும் அரண் பயன்படுகிறது''.

**''பி**ருந்தாவனம் என்ற வனத்தின் அரசன் மார்த்தாண்டன் என்ற புலி. மார்த்தாண்டன் அரணின் அத்தியாவசியத்தை நன்குணர்ந்தவன். அதனால் அனைத்து அரண்களையும் மிகவும் பாதுகாப்புடன் அமைத்திருக்கிறார். தனது நாட்டின் இளைஞர்கள் அனைவருக்கும் அவன் காலையில் போர் பயிற்சி அளிப்பான். அரண்களை தினமும் தானே நேரில் சென்று பார்த்து அவற்றிலுள்ள குறைகளை நீக்குவான்''.

**''சு**ந்தரவனம் மிகவும் பெரியது அதன் அரசனான உருத்திரசிம்மன் என்ற சிங்கம் அரண் விடயத்தில் அதிக கவனம் செலுத்தாது. போர் வீரர்களுக்குப் போதிய பயிற்சியையும், வேதனமும் கொடுக்காததால் எந்த அரசையும் இலகுவில் வெல்லலாம் என்ற எண்ணத்தைக் கொண்டவன். பிருந்தாவனம் செழிப்பான வனம். அங்கு குறைவில்லாத விளைபொருட்களை உருவாகும் கமகாரர்கள் அதிகம். மார்த்தாண்டன் மக்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்துள்ளான். தோப்புக்கள், சோலைகள், வயல் நிலங்கள் அங்கு அதிகமுண்டு. வனவாசிகள் அவற்றின் நல்ல முறையில் பயன்படுத்திச் செல்வவர்களாக வாழ்ந்து வந்தனர்.

**பி**ருந்தாவனம் செல்வந்த வனமாக இருப்பதால் அதை கைப்பற்றுவதற்காக உருத்திரசிம்மன் பிரிந்தவனத்தின் மீது திடீரென்று படையெடுத்துச் சென்றான். பிருந்தாவனத்தின் அரசனான மார்த்தாண்டன் போரை விரும்பாத போதும் போருக்கு தயாரான நிலையிலேயே முப்படைகளையும் வைத்திருப்பான். இதை புரிந்து கொள்ளாத உருத்திரசிம்மன் பிருந்தாவனத்தின் எல்லைக்குள் சென்றபோதே பெருந்தாக்குதலை மார்த்தாண்டனின் வீரர்கள் செய்தனர்''.

**''து**ப்பாக்கி குண்டுகள் மழை போல பொழிந்தன. பிருந்தாவன வீரர்கள் நிலத்திற்குக் கீழும், மரங்களின் மீதும் பெரும் அரண்களை அமைத்து அவற்றின் மேலிருந்தும் தாக்கினர். அவர்களது அரண்கள் பலமிக்கனவாகவும், எதிரிகளால் கண்டுபிடிக்க முடியாதெனவாகவும் இருந்தன. சுந்தரவன வீரர்கள் தமது அரண்களுக்குள் நுழைந்தபோதும் அவ் அரண்கள் பாதுகாப்பின்மையால் போர் வீரர்கள் செய்வதறியாது தவித்தனர். தளபதிகள் அவர்களை பின்வாங்குமாறு அறிவிக்க போர்வீரர்கள் பிறமுதுகு காட்டியபடி ஓடினர். ஓடியவீரர்களைப்

பிருந்தாவன வீரர்கள் கைது செய்தனர். அரண்களைப் பாதுகாப்புமிக்கதாகவும், பலம் பொருந்தியனவாகவும் அமைத்தால் தோல்வி ஏற்படாது என்று கூறிக் காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும். விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும் உடையது அரண்", "சபையோர்களே, இக்குறளில் அரண் எப்படியான இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். மணியைப் போல தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர்மையான நிழலைத்தை தருகின்ற காடும் உள்ள இடமே அரண் அமைக்கத்தக்க இடமாகும். அரண்களை அமைத்து ஏராளமான போர் வீரர்கள் அதற்குள் தங்கி இருப்பர். அவர்கள் குடிக்கவும், குளிக்கவும் சுத்தமான நீர் வேண்டும். நீ அருந்தாமல் உயிர்களால் சில நாட்களுக்குத்தான் வாழமுடியும். அசுத்த நீரை அருந்தினால் கொடிய நோய்கள் உண்டாகிவிடும். அதனால் சுத்தமான நீர் கிடைக்கக்கூடிய இடங்களிலே அரண்களை வேண்டும். அத்துடன் வெட்ட வெளியான இடத்தில் அரண்களை அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால்தான் தூரத்தில் வரும் பகைவர்களை இலகுவாகத் தாக்கி அழிக்கமுடியும். வளமான நாட்டில் (வனத்தில்) குளிர்மையான நிழலைத்தரும் காடுகள் உள்ளன. காடுகளில் அடர்த்தியாக மரங்கள் நிற்பதால் அரண்கள் பகைவர்களுக்குத் தெரியவராது. அத்துடன் பலமான மலைகளும் இருந்தால் அங்கு அமைக்கப்படும் அரண்கள் மிக்க பலமுடையனவாக இருக்கும்".

**"உ**ருத்ததிரசிம்மனின் படைவீரர்கள் அங்குள்ள ஆற்றைக் கடந்து சமவெளியூடாக நடந்து வந்தனர். தளபதிகள் குதிரைமீது வந்தனர். சமவெளியான அப்பிரதேசத்தில் ஆங்காங்கே பெரும் பற்றைகள் இருந்தன. உருத்திரசிம்மனின் தரைப்படைத் தளபதி தொலைநோக்குக் கருவியை எடுத்துப் பார்த்தான். கிட்டத்தட்ட ஒரு மைல் தூரம் வரை அது சமவெளியாக இருந்தது. அதற்கப்பால் காடு போல மரங்கள் அடர்த்தியாக நின்றன. தரைப்படைத் தளபதி குதிரை மீது முன்னே செல்ல அவனின் பின் படைவீரர்கள் ஆயுதங்களுடன் சென்றனர். சமவெளியைக் கடந்து காட்டுப்பகுதியை நோக்கி உருத்திரசிம்மனின் படை வீரர்கள் சென்றபோது பின்புறத்தில் இருந்து பிருந்தாவனப் படைகள் தாக்க தொடங்கினர்.

**"எ**திர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போன உருத்திரசிம்மனின் படை வீரர்கள் முன்னால் செல்ல அங்கிருந்தும் பிருந்தாவனப் போர் வீரர்கள் தாக்க தொடங்கினர். உருத்திரசிம்மனின் படைவீரர்களால் போரிட முடியவில்லை. அதனால் சரணடைந்தனர்".

**“பி**ருந்தாவனத்தின் தரைப் படைத்தளபதியான விதுரன் என்ற புலி ஆற்றங்கரையோரமாக உள்ள வெளிப்பபகுதியில் அரண் அமைந்திருந்தது உருத்திரசிம்மனின் படைவீரர்களுக்குத் தெரியவில்லை. சமவெளியை அடுத்துப் பெரும் கட்டுப் பகுதி இருந்தது. அந்த காட்டுக்குள் மூவாயிரம் அடி உயரமான மலை இருந்தது. மலையில் இருந்தும், காட்டுப்பகுதியில் இருந்தும் தாக்குதலைப் பிருந்தாவனப் படைகள் நடத்தியமையால் உருத்திரசிம்மனின் வீரர்கள் சரணடைந்தனர்” என்று கூறிக் காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு அரண் என்று உரைக்கும் நூல்”, “சபையோர்களே, ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியமானது அரண்” போதியளவு உயரமானதாகவும், போர் வீரர் வசதியாகச் சென்று வரக்கூடிய அகலமுடையதாகவும், உறுதியானதாகவும், பகைவர்களால் தாக்கி அழிக்க முடியாததாகவும் இருத்தல் வேண்டும்.

**“பி**ருந்தாவனத்தின் அரசனான மார்த்தாண்டன் முப்படைத் தளபதிகளுடனும், முதலமைச்சருடனும், விசேட ஆலோசகர்களுடனும் வாரத்தில் ஒருநாள் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள அரண்களைப் பார்வையிடுவான். அவன் போர் செய்வதை விரும்புவதில்லை. இருந்தபோதும் எவ்வேளையிலும் போர் செய்ய ஆயத்தமாக இருப்பான். அவன் பாதுகாப்பான அரண்களை எவ்வாறு அமைப்பது என்று தெரிந்து வைத்துள்ளான். அதனால் அவன் மாதமொருமுறை அரண்களின் அமைப்புகளை மாற்றியமைப்பான்.

**“அ**ன்று அதிகாலை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்ட அரணைப் பார்வையிடுவதற்காகத் தனது பரிவாரங்களும் மார்த்தாண்டன் வந்தான். தளபதிகள் அவனை வணங்கி வரவேற்றனர். முதல் பார்த்ததைவிட அது சிறிது மாற்றப்பட்டிருந்தது. தரைப்படைத் தளபதியை அழைத்து, “தளபதியாரே, அரணில் மாற்றம் செய்துள்ளீர். உயரம் சற்றுக் கூடியிருக்கிறது. அகலத்தைக் குறைத்துள்ளீர். உறுதியாக அமைந்துள்ளது. உயரத்தை ஏன் கூட்டினீர். அகலத்தை ஏன் குறைத்தீர்”.

**“த**ங்களின் அனுமதியில்லாது நாம் நினைத்தலாகாது செய்வோமா. அரணை அழகுபடுத்தினோம். வாசலில் அழகான திரைச்சேலை கட்டப்பட்டுள்ளது. அதனால் தான் அவ்வாறு தெரிகிறது” என்றவாறு திரைச்சேலையை நீக்கினான். மன்னன் சிரித்தான். ஆரண் முழுவதும் அழகுபடுத்தப்பட்டிருந்தது. அங்கிருந்து நறுமணம் வீசியது. மன்னன் திருப்தியுடன் சென்றான்” என்று கூறிக் காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், “சிறு காப்பின் பேரிடத்து ஆதி உறுபகை ஊக்கம் அழிப்பது அரண்” “சபையோர்களே, ஓர் உயிருக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அதுபோல அரசனுக்கு அரண் மிகவும் அவசியமானது. பாதுகாக்க வேண்டிய வாயில் சிறிதாகவும், ஏனைய இடங்கள் மிகப்பெரியனவாயும், எதிர்த்து வரும் பகைவர்களின் எழுற்சியைத் தடுக்கக் கூடியதாகவும் உள்ளதே அரணாகும்.

**“மா**ர்த்தாண்டன் அரண்களின் அமைப்பை வருடத்திற்கு ஒருமுறை மாற்றுவான். முன்பு அமைத்த அரணை நீக்கி அவற்றில் பழுதடைந்தவற்றை நீக்கி, புதியவற்றை சேர்ப்பான். ஒவ்வொரு செயலுக்கும் விரிவான விளக்கம் கொடுப்பான். அப்படிக் கொடுக்கும்போது அவற்றைத் தனது தாத்தா சொல்லித் தந்தார் என்று சொல்வான்”.

**“த**ளபதியாரே, நம் முன்னோர் எதைச் செய்தாலும் அதற்கொரு முக்கியமான காரணம் இருக்கும்”.

**“தா**த்தாவின் காலத்தில் காக்க வேண்டிய வாயிலைப் பெரிதாக அமைத்து விட்டனர். அக்காலத்தில் அசோகவனத்தின் அரசானான மணிமாறன் என்ற சிங்கம் தனது போர் வீரர்களுடன் எமது அரணுக்குள் நுளைந்துவிட்டனர். அதன் வாயில் பெரிதாக இருந்தமையால் பல போர் வீரர்கள் ஆயுதங்களுடன் உள்ளே வந்து விட்டனர். சிறிய வாயிலாக இருந்திருந்தால் ஒரே நேரத்தில் பலர் உள்ளே நுளைய முடியாது. தாத்தாவின் வீரர்கள் கடுமையாகப் போராடியே அவர்களை துரத்தினர். அகலமான வாயில் போரின்போது தோல்வியையே பெற்றுத்தரும். பகைவரின் எழுற்சியையும் கெடுத்துவிடும்” என்றான் என்று கூறிக் காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், “கொளற்கு அரிதாய்க் கொண்ட கூழ்த்து ஆகி அகத்தார் நிலைக்கு எளிதாம் நீது அரண்”, “சபையோர்களே, பகைவர்களாற் கைப்பற்ற முடியாதளவிற்குப் பலம் வாய்தனவாக அரண்கள் அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் கையிருப்பில் பல்வேறு விதமான உணவுப் பொருட்களைக் கொண்டதாகவும், உள்ளே இருக்கும் போர் வீரர்கள் எந்தவிதமான குறைகளோ, அச்சமோ இன்றி நெடுநாட்கள் நிலைத்து வாழ்வதற்கு ஏற்றதாக அமைத்திருப்பதே சிறந்த அரணாகும்”.

**“த**ளபதியாரே, எனது தாத்தா போர் செய்வதில் அனுப்பவும்மிக்கவர். நான் அவருடன் விளையாட சென்றால் சிறிது நேரம் விளையாடிவிட்டு, அதன் பின்பு போரின் நுட்பங்களை விவரிப்பார். அதில் எனக்கு பெரிதாக நாட்டம் இல்லாவிட்டாலும் அவர் கூற வேண்டியவற்றைக் கதைபோல மிகவும் சுவையாக கூறுவார்”.

**“மா**ர்த்தாண்டா, நீ ஆட்சி செய்யும் போது பலமான அரண்களை அமைத்தால் மட்டும் போதாது. அரணுக்குள் தங்கியிருக்கும் போர்வீரர்கள் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் சிலவேளைகளில் ஒருவருடம் நீடிக்கலாம். பகைவர்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவார்கள். அத்துடன் தரைமார்க்கமாக அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர். அரணுள்த் தங்கியுள்ள வீரர்களுக்குத் தேவையான பொருட்களை அரணுள்ச் சேமித்து வைக்க வேண்டும். அரணுக்கு அண்மையில் உணவுப் பொருட்களைச் சேமித்து வைத்து பாதுகாக்கவும் வேண்டும்” போர்வீரர்களுக்கு உணவும், நீரும் மிக மிக அத்தியாவசியமானது.

**“பே**ரா, அரணுக்கும், அரண்மனைக்கும் உணவுக் களஞ்சியத்திற்கும் இடையே ஒன்றுக்கும் மேற்பட்ட பாதைகள் இருத்தல் வேண்டும். ஒருமுறை நாகவனத்தை அரசனான குலோத்துங்கனோடு எமது தரைப்படை தளபதி தொடர்பு கொண்டு எமது முக்கியமான போக்குவரத்து பாதைகள் குறித்துச் சொல்லி ஏராளமான பொன்னைப் பெற்றுவிட்டான். தளபதியின் நடமாட்டத்தை உற்று நோக்கிய ஒற்றர்கள் எனக்குத் தகவல் தந்தனர். நான் தளபதியை கைது செய்து கடுமையான தண்டனை கொடுத்து, அவன் கூறியவற்றை அறிந்து, உணவுப்பொருட்கள் கொண்டு செல்லும் பாதையை மாற்றினேன். அதனால் பாதைகள் பல இருத்தல் வேண்டும்” என்று தாத்தா சொன்னதாகக் கூறி காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “எல்லா பொருளும் உடைத்தாய் இடத்து உதவும் நல் ஆள் உடையது அரண்”, “சபையர்களே அரண் என்பது என்னவென்றால் உள்ளே இருந்து நாட்டை காப்பாற்றப் போராடும் அனைவருக்கும் வேண்டிய பொருட்கள் அனைத்தையும் கொடுப்பதோடு போரிடும் போது பகைவரை வெல்லக்கூடிய வீரம் மிக்க போர் வீரர்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதாகும்”.

**“மா**ர்த்தாண்டா, அரணுக்குள் ஒருபோதும் உணவு பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடாது. பழுதடையாத நல்ல தானியங்களை அளவுக்குகதிகமாகச் சேர்த்து

வைத்திருத்தல் வேண்டும். நல்ல திறமையான பயிற்சி பெற்ற வீரர்கள் பலரை அரணுக்குள் வைத்திருத்தல் வேண்டும். போர் நடைபெறும் போர்க்களங்களுக்கு திறமையான வீரர்களை அரண்களில் இருந்து அனுப்புதல் வேண்டும். போர் நடைபெறும் போது போர் வீரர்களுக்கு உற்சாகம் அளிப்பதோடு, அவர்கள் விரும்பி உண்ணக்கூடிய உணவு வகைகளையே போதிய அளவு கொடுத்தல் வேண்டும்".

"**நா**கவனத்தை அரசன் எம்முடன் காரணமின்றிப் பகை கொண்டான். நான் தூதுவர்களை அனுப்பி உண்மையான நிலையை விளக்கியபோதும் அவன் அடங்கவில்லை".

"**அ**வன் எம் வனத்தின் மீது போர் தொடுத்தான். நம் ஒற்றர்கள் மூலம் அவர்களது உணவுக் களஞ்சியங்கள் எங்கெங்கே இருக்கின்றன என அறிந்து அவற்றைக் கைப்பற்றினோம். போர ஆரம்பிக்கும் போதே நிறுத்தப்பட்டது. எமது வீரர்களும், தளபதிகளும் நாகவனத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர். எனக்கு விருப்பமில்லை அவர்களது வற்புறுத்தலால் நாகவனத்தைக் கைப்பற்றினோம். அடங்காதவர்களை அடக்க வேண்டுமானால் உணவைக் குறைத்தல் வேண்டும்" என்று தனது பேரனுக்கு மார்த்தாண்டன் கூறினான் என்று கூறிக் காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும் பற்றற்கு அரியது அரண்", "சபையோர்களே, பகைவர்களின் படை முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாமல் போர் செய்தாலும், அல்லது உள்ளிருப்போரைக் கொண்டு வஞ்சனையாக போர் புரிந்தாலும், அவர்களால் வெல்ல முடியாதவையாக அரண்கள் அமைக்கப்பட வேண்டும். சபையோர்களே போரில் பல வியூகங்களை அமைத்து அரசர்கள் போரிடுவர். சில அரசர்கள் பகையரசர்களின் படை வீரரை முற்றுகையிட்டுப் போராடுவர். சில அரசர்கள் முற்றுகையிடாது போராடுவர். சில அரசர்கள் வஞ்சனையான முறையில் போராடுவர். எப்படி போராடினாலும் அரண்கள் எதிரிகளால் தாக்கப்படாதவாறு மிகப் பாதுகாப்பானவையாக அமைத்தால் பகைவர்களால் வெல்ல முடியாது".

"**அ**ரணை முறைப்படி பாதுகாப்பாக அமைத்தால் எதிரிகளால் அதைத் தாக்கி அழிக்க முடியாது. தளபதியாரே எனது பேரனார் ஏனைய விடயங்களைவிட அரணை அமைப்பதிலேயே அதன் கலை அமைப்பதிலேயே அதிக கவனம் எடுப்பார் அறன்களை பாதுகாப்பானவையாக அதிக கவனமெடுப்பார். ஆரண்களைப் பாதுகாப்பானவையாக அமைத்தால், அந்த அரண்களே வெற்றியைத் தேடித்தரும். நான் அரண்களின் முக்கிய பகுதிகளில் பொறிகள் வைப்பேன். அந்த இடத்தில் யாரும் சென்று வரக்கூடியதாக இருக்கும். அரணுக்குள் என்ன நடைபெறுகிறது என்று

அதனூடாக பகைவரின் படை வீரர்கள் பார்க்க வந்து மரணத்தைத் தழுவுவர். இவ்வாறு ஒரு முறை தான் செய்யலாம். அதன் பின்பு செயலை மாற்ற வேண்டும்".

"**ப**கைவன் எமது பலவீனம் எந்த இடத்தில் இருக்கிறது என்று பார்த்து அந்த இடத்தைத்தான் தங்குவான். அதனால் சில இடங்களைப் பலவீனமாக அமைப்பது போலப் பலமாக அமைக்க வேண்டும். அவ்விடத்தை எதிரிதாக்கும் போது எமது வீரர் காத்திருந்து தாக்குவர். பகைவர்களும் எம்மைப் போல் யோசித்து பல வழிகளை உருவாக்கிப் போராடுவார். அதனால் அரண்களைப் பாதுகாப்பாக அமைத்தால் எதிரிகளால் அவ்வரண்களைத் தாக்கி அழிக்க முடியாது. அதனால் போரில் வெற்றியை பெற விரும்பும் அரசர்கள் அரண்களைப் பாதுகாப்பாக அமைத்தல் வேண்டும்" என்று கூறிக் காயத்திரி தனது உரையை நிறைவு செய்தாள்.

**கா**யத்திரி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "முற்று ஆற்றி முற்றி யவரையும் பற்று ஆற்றிப் பற்றியார் வெல்வது அரண்", "சபையோர்களே, அரணுக்கு வெளியே இருந்து முற்றுகையிட்டுத் தாக்கும் பகைவரை உள்ளே இருந்து பலமாகத் தாக்கி வெற்றிகொள்ள வைப்பதே அரணாகும். படை வீரர்களுக்கு பலவகையாலும் அரண் உதவி செய்யும்".

**மா**ர்த்தாண்டன் தளபதிக்கு சொன்னான், "எனது பேரனார் என்னை தனது பேரனாக கருதாது இந்த வனத்தின் அரசனாகவே கருதி போர் நுட்பங்களையும், அரசரின் முக்கியத்துவத்தையும் கூறுவார். எனக்கு ஆரம்பத்தில் அதைக் கேட்க விருப்பமில்லை. நாளடைவில் நானாகவே அரணைப்பற்றியும், போர்நுட்பங்கள் பற்றியும் கேட்பேன். அது அவருக்கு மிகுந்த மகிழ்வைக் கொடுக்கும். அதனால் அவர் மகிழ்வுடன் புதுப்புது வியூகங்கள் பற்றி விரிவாகச் சொல்லுவார். அவர் ஒருநாள்ச் சொன்னார், "குபேரவன்தின் அரசன் என்னுடன் நட்புக் கொள்வது போல வந்து உறவாடி எமது வனத்தின் பாதுகாப்புப் பற்றி அறிந்து கொள்வான்".

"**அ**தை ஒற்றர்கள் எனக்கு உடனுக்குடன் சொல்வார்கள். நான் தளபதிகளுக்கு குபேரவன அரசனான விக்ரமனுக்குப் பொய்யான தகவல்களைக் கூறும்படி சொன்னேன். தரைப்படைத் தளபதி அரண்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்று கேட்டபோது, அவன் சொன்னான், "அரசே, எமது அரசர் அரண்களின் முக்கியத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. அவரது தந்தையின் காலத்தில் அமைக்கப்பட்ட பழைய அரண்களைத் திருத்தி வைத்திருக்கிறார். சொன்னாலும் அவருக்குப் புரியாது. பகைவர்கள் படையெடுத்தால் எமது வனத்தை இலகுவாகக் கைப்பற்றலாம்" என்று கூறிவிட்டு அதை வந்து எனக்குச் சொன்னான்".

“**அ**தை நம்பிய குபேரவனத்து அரசன் திடீரென்று எமது வனத்து அரண்களை முற்றுகையிட்டுத் தாக்க தொடங்கினான். எமது வீரர்கள் உள்ளே பாதுகாப்பாக இருந்து பெருந்தாக்குதலை நடத்தினர். ஒவ்வொரு அரணுக்கும் அவ்வரணில் இருந்து வெளியே செல்ல அலகமான பாதைகள் உண்டு. அரணுள் இருந்து கடுமையான தாக்குதலை நடத்தியவேளை அரணில் அமைக்கப்பட்ட பாதையூடாக வெளியேறிய வீரர்கள் குபேரவனப் படைவீரரைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர். அப்போரில் குபேரவன அரசன் கொல்லப்பட்டான்” என்று எனது பேரனார் கூறியவர் என்று மார்த்தாண்டன் தளபதிக்குக் கூறினான்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரி.

**கா**யத்திரி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லத் தொடங்கினாள், “முனை முகத்து மாற்ற லர் சாய வினை முகத்து வீறுஎய்தி மாண்டது அரண்”, “சபையோர்களே, போர் முனையில் பகைவர்களை போரிடும் போது அவர்களை அழிக்கும் வண்ணம் அரணில் இருக்கும் போர்வீரர்கள் போர் புரிவதற்கு ஏற்றதாக அமைந்திருப்பதே அரணாகும். போர் வீரர்கள் பகைவர்களை வெல்வதற்கு சகல வழிகளிலும் உதவி செய்வது அரண். பாதுகாப்பான அரணில்லாத அரசன் நாட்டை பகைவரின் எதிர்ப்பு இல்லாமலே இழந்து விடுவான். அரசனையும் காத்து நாட்டையும் காக்கும் பெருமைக்குரியது அரண்.

**அ**ரணின் பாதுகாப்புப்பற்றி விரிவாக ஆராய்ந்த மார்த்தாண்டன் தளபதிக்கு சொன்னான், “உமக்கு நான் எதையும் சொல்ல தேவையில்லை. எனது தந்தையின் காலத்தில் இருந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறீர்கள். நான் இன்று அரணின் பாதுகாப்புப்பற்றி போர் வீரர்களுடன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். நான் ஏதாவது சொல்லாமற் சென்றால் உமது மனம் வேதனைப்படும்”.

“**எ**னது தாத்தா அரசனாக இருந்த போது சேது வனத்தினர் எதிர்பாராதவாறு போர் தொடுத்தனர். எவ்வேளையிலும் பகைவர்கள் தாக்கலாம் என்ற நினைவோடு இருந்த தாத்தா அரணுள் இருந்த வீரர்களைத் தாக்க வேண்டாம் என்று சொன்னார். படையினருக்கு ஆச்சரியம். எனினும் மன்னனின் உத்தரவில்லாமல் எதையும் செயலாகாது என்று போர் வீரர்கள் நினைத்தனர். தளபதிகள் அரசர் ஏதோ ஒரு திட்டத்துடன் தான் அவ்வாறு கூறியிருக்கிறார் என்று நினைத்தனர்”.

“**த**ம்மை எதிர்த்துத் தாக்குதலைச் செய்யாதது சேது வனத்தின் அரசனுக்கு வியப்பாக இருந்தது. சேது வனத்தைக் கைப்பற்ற வந்துவிட்டுப் போரிடாமல் திரும்புவது அவமானம் என நினைத்து சேது வனப்படைவீரர்கள் மூர்க்கத்தனமாக தாக்கினர். எமது வீரர்கள் மிகுந்த

பாதுகாப்புடன் அரணுள் இருந்தனர். நான்காவது நாள் மிகவும் உக்கிரமாகத் தாக்கும்படி தாத்தா உத்தரவிட்டார். போர்முனையில் போராடும் பகைவர்களைப் பாதுகாப்பான அரணினுள் இருந்து தாக்கினால் அவர்களை இலகுவாக அழித்து விடலாம் என்ற நோக்குடன் தாத்தா செய்யப்பட்டார். சேதுவனப் படைவீரர் பலர் கொல்லப்பட்டனர். மிகுதிப் பேர் தப்பி ஓடினர். அரண்கள் தான் போரில் வெற்றியை தேடி கொடுப்பது. பாதுகாப்பான அரண்களை அளிக்க முடியாது. அப்படியான அரண் போர் நடைபெறும் போது வீரர்கள் பாதுகாப்பை உறுதி செய்வதோடு பகைவரை வெல்லவும் வழி வகுக்கும்" என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரி.

**கா**யத்திரி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், எ"னை மாட்சித்து ஆகியக் கண்ணும் வினை மாட்சி இல்லார் கண் இல்லாது அரண்", "சபையோர்களே, அரண் மிகவும் பாதுகாப்பானதாகவும், வலிமை உடையதாகவும் இருந்தாலும் உள்ளே தங்கி இருந்து போர் செய்யும் வீரர்கள் பலவீனர்களாகவும், செயலில் திறமை இல்லாதவர்களாகவும், பற்றும் பாசமும் உள்ளவர்களாகவும் இருந்தால் அந்தப் பாதுகாப்பான பலம்மிக்க அரணால் எந்த பயனும் ஏற்படாது".

"**மா**ர்தாண்டன் தளபதிக்குச் சொன்னான், "தளபதியாரே, அரணின் பயன்பற்றியும், பாதுகாப்புப் பற்றியும் நான் இதுவரை சொன்னேன். அரண் பாதுகாப்பானதாகவும், பலமுள்ளதாகவும் அமைந்தால் போதாது. அரணுள் இருந்து போராடும் வீரர்கள் அஞ்சாநெஞ்சராகவும், பலம் உள்ளவராகவும், பயமில்லாதவர்களாகவும் இருந்தால் தான் அரணால் பயனுண்டாகும். அதனால் பலமில்லாத பலவீனர்களைப் படையில் சேர்க்கலாகாது. அவர்கள் தாமும் பயந்து ஏனைய வீரர்களையும் பலவீனப்படுத்துவர்".

"**தா**த்தா, இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சிகொடுக்கும் போது மாறுவேடத்தில் சென்று வீரர்களுடன் பேசுவார். அப்படிப் பேசும்போது பலவீனர்கள் தமது நிலையைத் தம்மையறியாமலே எடுத்துக் கூறிவிடுவர். ஒருநாள் மாலை வேளையில் போர்ப்பயிற்சி முடித்து இளைஞர்கள் ஓய்வாக இருந்து பேசுமிடத்திற்குச் சென்றபோது ஒருவன் சொன்னான், "அரசரின் கட்டளைக்காகப் பயந்து போர்ப்பயிற்சி பெறாவிட்டால் அரசின் சலுகைகள் கிடைக்காது. எனது தந்தை நோயாளி. அவரால் குடும்பத்தைப் பராமரிக்க முடியாது. அரசர் பேராசையால் பிறநாடுகளைக் கைப்பற்றுகிறார். ஆனால் அதனால் பாதிக்கப்படுவதும், இறப்பதும் சாதாரண மக்கள்" இவ்வாறு அவன் விரத்தியாகக் கதைத்ததைக் கேட்டு மறுநாள் பயிற்சியின் போது அவன்மீது குறைகண்டு அவனை விலக்கி விட்டார்".

**“எ**ந்த ஒரு செயலையும் அர்ப்பணிப்புடனும் தன்நலம் கருதாமலும் செய்தல் வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்களை விலக்கிவிட்டு உற்சாகத்துடன் செயலில் ஈடுபடுபவர்களுக்குச் சன்மானங்களும், பரிசுகளும் வழங்கிக் கௌரவித்தல் வேண்டும். என்று மார்த்தாண்டன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரி.

## 18

**கா**யத்திரி உரையாற்றி முடிந்ததும் மேடைக்கு வந்த கதிரேசன், “சபையோர்களே, காயத்திரி மிகவும் அருமையாகப் பேசினாள். தமிழறிஞரின் மாணவர்கள் தமிழறிஞரைப் போலப் பல்வேறுபட்ட கதைகளைக் குறளுக்குக் கூறினார்கள். இரண்டாயிரம் வருடங்களாக உரையைத் தவிர வேறு இலக்கிய வடிவங்களைக் கண்டிராத குறள், தமிழறிஞரின் காலத்தில் பல்வேறு கருத்தாளம்மிக்க இலக்கிய வடிவங்களை காண்கின்றது. இன்றும் உரைதான் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது. காலையிலே ஊடகங்கள் யாவும் குறளின் உரையை மாறிமாறிச் சொல்கின்றன. இதைக் கேட்பாரில்லை. திருக்குறள் வீடுகள் எல்லாவற்றிலும் உள்ள பொது நூல். இதற்கு உரை தேவையானால் புத்தகங்களில் படிக்கலாம். அதற்கு வித்தியாசமான உருவம் கொடுக்க வேண்டும் என்ற நினைப்பில் தமிழறிஞர் பல்வேறுபட்ட இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்திய போதும் இங்குள்ளோர் திரும்பத்திரும்ப உரையையே சொல்கின்றனர். உரையில் சிறு மாற்றங்கூட இவர்களால் செய்ய முடியவில்லை. இந்த நிலை தான் தொடர்ந்து நீடிக்கும் என்பதை நினைக்க கவலையாக உள்ளது. தமிழறிஞரின் மாணவர்கள் இந்நிலையை மாற்ற வேண்டும் அடுத்துப் ‘பொருள் செயல் வகை’ என்ற அதிகாரத்தை பற்றிக் கலாநிதி இன்பவதனி அவர்கள் பேசுவார்கள். அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். ஆசிரியையான அவரது பேச்சை நீங்கள் அடிக்கடி கேட்டுள்ளீர்கள். அவரைப் பேச வருமாறு அன்புடன் அழைக்கின்றேன்” என்று கூறிவிட்டு அமர்ந்தார் கதிரேசன்.

**“இ**ன்பவதனி மேடைக்கு வந்ததும் தும்பிக்கையை அசைத்து சபையோர்ருக்கு வணக்கம் தெரிவித்தாள். சபையோர் மிக்க மகிழ்வுடன் கரகோஷம் செய்தனர். இன்பவதனி தலையைத் தாழ்த்திச் சபைக்கு வணக்கம் செலுத்தி விட்டுப் பேச ஆரம்பித்தார், “முதலில் என்னைப் படைத்த இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். எனது குருவான தமிழறிஞரின் பாதங்களைப் பணிந்து மகாநாட்டின் தலைவரான கதிரேசனை வணங்கி எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

**“பொ**ருள் செயல்வகை என்ற அதிகாரத்தில் செல்வமுள்ளவனுக்கு மற்றவர்கள் கொடுக்கும் மதிப்பு மரியாதைகள் பற்றி வள்ளுவர் விரிவாக கூறுகிறார். பொருள் தான் ஒருவரது தகுதியைத் தீர்மானிக்கிறது. முதலாவது குறள் ஒரு பொருளாக மதிக்கத்தகாதவரையும் மதிப்பும்,

பெருமையும், தகுதியும் மிக்கவராக உருவாக்குவது பொருள். எவ்வளவு பொருள் வைத்திருந்தாரோ அதற்கேற்ப மதிப்பும், மரியாதையும், கௌரவமும் அவருக்கு கிடைக்கும். வேறு எந்த பொருட்களாலும் மதிப்பும், மரியாதையும், கௌரவமும் உண்டாகாது.

**இ**ன்பவதனி முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “பொருள் அல்லவரைப் பொருள் ஆகச் செய்யும் பொருள் அல்லது இல்லைப் பொருள்”, “சபையோர்களே, எந்தத்தகுதியும் இல்லாத ஒருவரிடம் நிறையப் பொருள் இருந்தால் அவர் ஏனைய சகல தகுதிகளையும் அடைந்தவராக கருதப்படுவார். மாறன் என்ற நரி பரம ஏழை. சோம்பேறி மனைவி கஷ்டப்பட்டு கொடுக்கும் உணவை உண்டு விட்டு சோம்பேறியாய் இருப்பான். மனைவியான ராணி தனது கணவனின் போக்கால் மிகவும் வருந்தி கஷ்டப்பட்டு தோட்ட வேலைகள், வீட்டு வேலைகள் செய்து பிள்ளைகளை வளர்த்து வந்தது. சில நாட்கள் ராணிக்கு உணவு கிடைக்காது. மாறனை வனவாசிகள் யாரும் மதிப்பதில்லை. மாறன் வனவாசிகளின் வீடுகளில் அவர்கள் இல்லாத வேலைகளில் சென்று திருடுவான்.

**இ**தனால் இனத்தவர்கள் தமது வீட்டில் நடைபெறும் மங்கல வைபவங்களுக்குக் கூட மாறனின் குடும்பத்தினருக்குச் சொல்வதில்லை. இதைப்பற்றி மாறன் சிறிதும் கவலைப்படுவதில்லை. ஒருநாள் காட்டு பிள்ளையார் கோவிலில் தேர் திருவிழா அன்று அதிர்ஷ்டலாபச் சீட்டுகளை விற்பனை செய்பவன் வந்து சீட்டுக்களை விற்பனை செய்து கொண்டிருந்தான். மாறன் அவனிடம் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டை வாங்கினான். அச்சீட்டுக்கு முதல் பரிசாக இருபத்தைந்துலட்சம் ரூபாய் கிடைத்தது.”

“**மா**றன் அப்பனத்தில் ஒரு தென்னம்தோப்பையும், நெல் வயலையும் வாங்கினான். தென்னந்தோப்பில் அவனுக்கு பெரும் வருமானம் கிடைத்தது. அந்த வருமானத்தில் அவன் ஒரு வியாபார நிலையத்தை ஆரம்பித்தான். அவற்றிலிருந்து நிறைய வருமானம் வந்தது. அதனால் அவன் பாடசாலைகளுக்கும், கோவில்களுக்கும், வறிய மக்களுக்கும் உதவிகள் செய்தான்”.

“**இ**ப்போது மாறன் வனத்தில் பெரும் செல்வாக்குடையவனானான். அவன் இல்லாமல் அவ்வனத்தில் எந்த விழாவும் நடைபெறமாட்டாது. ஒரு நாள் மாறன் அவ்வனத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தான். அவனின் அருகில் சென்று அவனை கட்டித் தழுவி பிரமுகர்கள் மகிழ்வுடன் கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது வரகுணன் என்ற நரி தனது மனைவிக்கு சொன்னது, “பணம், பிச்சைக்காரனையும் கடவுளாக்கும். ஒருவரும் மதிக்காத மாறனுக்கு அதிர்ஷ்டலாப சீட்டு மூலம் பணம் வந்த பின் அவன் எமது வனத்தில் உள்ள அனைவரையும் விட மதிக்கப்படுகிறான். போற்றப்படுகிறான். புகழப்படுகிறான்.

எல்லாம் பணம் செய்யும் வேலை. ஒரு பொருளாக மதிக்கத்தகாதவனை பணம் மிக்க மதிப்புள்ளவனாக்கி விட்டது. இதை செய்ய பணத்தால் மட்டுமே முடியும்" என்று கூறி தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செல்வர் சிறப்பு", "சபையோர்களே, எல்லா நன்மைகளும் உடையவர்களாக இருந்தாலும் பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வார்கள். எந்தவிதமான நற்செயல்களைச் செய்தவராக இருந்தாலும் பொருள் உடையவர்களை எல்லோரும் போற்றுவர். இதுதான் உலகத்தவர்களின் இயல்பாகும். இதை யாராலும் மாற்ற முடியாது".

"**அ**ன்று கடம்பவனத்தில் இலக்கியவிழா நடைபெற்றது. அந்த வனத்தின் தலைவர் அருளானந்தன் என்ற சிங்கத்தின் தலைமையில் விழா நடைபெற்றது. கடம்பவனம் மிகவும் வசதியான செல்வந்த வனம். அங்கு பெரும்பான்மையான வர்த்தகர்கள் வாழ்கின்றார்கள். வர்த்தக சங்கத்தின் தலைவரான கஜமுகன் என்ற யானை பிரதம பேச்சாளராக கலந்து கொண்டது. பெரும் வர்த்தகரான கனகசிங்கம் என்ற புலி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டது. இலக்கிய வல்லுனர்கள் பலரை விழா குழு அழைத்திருந்தது. விசேடமான உயர்தர இருக்கைகள், மேடை அமைக்கப்பட்டு பெரும் பெரும் வர்த்தகர்கள் அதில் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கடுத்தபடியாக இலக்கியவாதிகளும், பிரமுகர்களுக்கும் இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன.

"**பெ**ரும் வர்த்தகரான கருணாகரன் என்ற நரி விழாவுக்கு வந்தபோது சபையோர் அனைவரும் எழுந்து நின்றனர். மங்கள இசை முழங்கியது. பாடசாலை மாணவிகள் நடனமாடி அவரை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர். அவர்தான் அந்த விழாவின் ஏற்பாட்டாளர். அடுத்து பெரும் கல்வியாளரும், பல நூல்களை எழுதியவருமான பண்டிதர் முருகையா என்ற யானை வந்தது. அப்போது சபையோர் எழுந்திருக்கவில்லை. எந்த விதமான வரவேற்பும் இல்லை. மூர்த்தி என்ற யானை அவரை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தது".

"**அ**டுத்துப் பெரும் வர்த்தகரான சுந்தரலிங்கம் வந்தார். அப்போது வெடிகள் வெடித்தன. வானத்தை நோக்கி வாணங்கள் தீயைக் கக்கியபடி சென்றன. மகளிர் நடனம் ஆடினர். இன்னிசை குழு இனிமையாக இசையை வழங்கியது".

**“மூ**ர்த்தி மிகுந்த சங்கடத்துடனும், வேதனையுடனும் முருகையாவைப் பார்த்தது. முருகையா சொன்னது, “கவலைப்படாதை மூர்த்தி. இதுதான் எங்கும் நடைபெறுகிறது. எல்லா தகுதிகளையும் உடையவராக இருந்தாலும், அவரிடம் செல்வம் இல்லையானால் யாரும் மதிக்க மாட்டார்கள். பெற்றோர் உட்பட எந்த நன்மையும் இல்லாதவராக இருந்தாலும் செல்வம் இருந்தால் அவர் அனைவராலும் போற்றப்படுவார். இதுதான் காலாகாலமாக நடைபெறுகிறது” என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “பொருள் என்றும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும் எண்ணிய தேய்த்துச் சென்று”, “சபையோர்களே, பொருள் எதையும் செய்யும், செய்விக்கும். அது ஓர் அணையா விளக்காகும். பொருள் எண்ணிய எல்லா இடங்களுக்கும் சென்று எண்ணியவாறு ஏற்படும் குறைகள் எல்லாவற்றையும் நீக்கும் வல்லமை கொண்டது”.

**“க**ருணாகரன் என்ற நரி பெரும் வர்த்தகன். அவனிடம் பத்து வியாபார நிலையங்கள் உள்ளன. பட்டணங்கள் எல்லாவற்றிலும் அவனது வர்த்தக நிறுவனங்கள் இருக்கின்றன. ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் அந்நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். குபேரவனத்தில் ஓர் ஆடை தொழிற்சாலையை தொடங்க கருணாகரன் விரும்பினான். குபேரவனம் மிகவும் பெரியது. ஆனால் பொருளாதார பலம் குறைந்தது. அங்கு பலர் தொழில் இல்லாதிருந்தனர். நண்பனான உருத்திரன் என்ற நரி குபேரவனத்தில் வசித்து வந்தது. அதன் ஆலோசனைப்படி கருணாகரன் அவ்வனத்தின் தலைவரான சுந்தரலிங்கம் என்ற சிங்கத்தை சந்தித்து பேசி ஆடை தொழிற்சாலையை நிறுவினான்”.

**“ஆ**டைத் தொழிற்சாலையில் அவனுக்கு அதிக வருமானம் கிடைத்தது. அதனால் சுந்தரலிங்கம் கருணாகரன் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தது. அந்த நம்பிக்கையை பயன்படுத்தி கருணாகரன் மேலும் இரு ஆடைத் தொழிற்சாலைகளையும், ஒரு வர்த்தக நிலையத்தையும் ஆரம்பித்தான். சபையோர்களே, அணையாத விளக்கு எப்போதும் பிரகாசிக்கும். அதுபோல பணமும் எல்லா வகையிலும் உதவி செய்யும். தனவந்தன்தான் தான் விரும்பியபடி உலகத்தில் உள்ள எந்த இடத்திலும் தொழில் செய்யலாம். அதன் மூலம் மகிழ்வாக வாழலாம்” என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானாள், “அறன் ஈனும் இன்பரும் ஈனும் திறன் அறிந்து தீதின்றி வந்த பொருள்”, “சபையோர்களே, வாடிக்கையாளரை துன்பப்படுத்தாது, அறவழியில் தேடிய செல்வம்

அறத்தை வளர்க்கும். இன்பங்களைக் கொடுக்கும். தீய வழிகளில் தேடிய செல்வம் தேடியவனிடம் உள்ள செல்வத்தையும் அளித்து விடும். அதனால் ஒவ்வொருவரும் தர்மமான முறையில் பொருளை சம்பாதிக்க வேண்டும்".

**"க**ருணாகரன் கடவுள் பக்திமிக்கவன், ஒழுக்கமானவன், பிறர் துன்பப்படுவதை கண்டு அவர்களுக்கான உதவிகளை செய்பவன், தொழிலாளர்களின் நன்மதிப்பையும் பெற்றவன். அவன் ஒருபோதும் நிறைகுறைத்து விற்கமாட்டான். கலப்படம் செய்யமாட்டான். கூடிய இலாபத்தை எதிர்பார்க்கமாட்டான். அதனால் அவனிடமே காட்டுவாசிகள் தேவையான பொருட்களை வாங்கி வந்தனர்".

**"கு**பேரவனத்தின் தலைவரான சுந்தரலிங்கத்தின் சகோதரனான பராமலிங்கம் என்பவன் பொருளின் மீது ஆசை கொண்டு குபேரவன வாசிகளை துன்புறுத்தி பொருட்களையும் பெற்று வந்தான். அவன் தலைவரின் சகோதரன் என்பதால் வனவாசிகள் அவனுக்கு பயந்து அவன் கேட்பவற்றை கஷ்டப்பட்டு கொடுத்துவந்தந்தனர். அவன் கருணாகரனிடம் வந்து தனக்கு பொருள் தந்த உதவுமாறு கேட்டான். கருணாகரன் மறத்ததால் "நான் யார் தெரியுமா? இக்காட்டின் தலைவரின் தம்பி. நீ நான் கேட்டவற்றை தராவிட்டால் உனது வியாபார நிலையங்களை அழிக்கவும் தயக்க மாட்டோம்" என்று பயமுறுத்தி விட்டு சென்றான்".

**அ**தை கருணாகரன் தனது நண்பனான உருத்திரனிடம் சொன்னான், "நண்பா, அவன் தீயவன். அவன் வனவாசிகளைப் பயமுறுத்தி கப்பம் கேட்டு வாங்குகிறான். வனவாசிகள் பயத்தால் கொடுக்கின்றனர். என்ன செய்வது அரசருக்கும் சொல்ல முடியாது. என்ற போது கருணாகரன் சொன்னான், "நண்பா, பயந்து பயந்து வாழ்வது துன்பமானது. துணியுடன் செயல்பட வேண்டும். நான் தலைவரை சந்திக்க விரும்புகிறேன். நீயும் என்னுடன் கூடவா" என்றான்.

**இ**ருவரும் சுந்தரலிங்கத்தின் இருப்பிடத்திற்கு சென்றபோது, சுந்தரலிங்கம் மிக்க மகிழ்வுடன் அவர்களை வரவேற்று ஆசனத்தில் இருத்திவிட்டு, ''நீங்கள் வந்த காரணத்தை கூறுங்கள்'' என்றார்.

**"ஐ**யா, என்னைப் பற்றி தங்களுக்கு தெரியும். நான் செல்வந்தன். செல்வத்தை சேர்க்கும் வழிகளை அறிந்து அறவழியில் எனது தொழிலைச் செய்து வருகிறேன். எனக்கு இலாபம் மிக மிகக் குறைவு. வனவாசிகளின் நன்மை கருதியே நான் தொழில் செய்கிறேன். போதிய செல்வம் என்னிடம் இருக்கிறது. தொழில் செய்ய வேண்டிய அவசியம் எனக்கில்லை. அப்போது சுந்தரலிங்கம் குறுக்கிட்டுச் சொன்னார், "உங்களைப் பற்றி எனக்கு தெரியும். தெரிந்தவற்றை நான்

திரும்பவும் கேட்க விரும்பவில்லை. எனது தம்பி உம்மைப் பயமுறுத்தியமையால் தானே வந்தீர்" என்றவாறு தனது உதவியாளரைப் பார்த்தார் அவன் உள்ளே சென்று அவரது சகோதரனையும், வேறு சிலரையும் விலங்கிட்டு கொண்டு வந்தான்".

"**சு**ந்தரலிங்கம் தொடர்ந்து சொன்னார், "அறவழியில் செல்வத்தை தேடியவனின் சொத்தை கவர நினைத்தால் அறமே அவனுக்குத் தண்டனையைக் கொடுக்கும் என்று கூறினார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினாள், "அருளொடும் அன்பொடும் வராப்பொருள் ஆக்கம் புல்லார் புரள விடல்", "சபையோர்களே, அருளோடும், அன்போடும் செல்வத்தை சேர்க்கவேண்டும். நல்ல வழியில் வராத செல்வத்தைப் பயன்படுத்தக்கூடாது. அது தீமையானது. கேடடையே தரும் என்று நினைத்தல் வேண்டும்".

"**வ**ரும் வழியில் உருத்திரன் சொன்னான், "நண்பா, நீ ஏன் தலைவனைக் காண செல்கிறாய் என்று முன்பே எனக்குத் தெரிந்திருந்தால் உன்னை நான் அங்கு செல்ல விட்டிருக்கமாட்டேன். தலைவர் தனது தம்பியின் மீது அளவுகதிகமான பாசத்தை வைத்திருப்பதால் தான் அவன் செய்யும் கொடிய செயல்களைக் அவர் கண்டிக்காததால் வனவாசிகள் அவரது சகோதரனுக்கு எதிராகப் புகாரளிக்க விரும்புவதில்லை. அவனைப் பற்றித் தரக்குறைவாகப் பேசும் போது நான் பயந்து விட்டேன் நல்ல வேளை தீதாக எதுவும் நடக்கவில்லை".

"**ந**ண்பா செல்வத்தை எவ்வாறு தேட வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அருளும், அன்பும் கலந்த உறவால்தான் பொருள் தேட வேண்டும். தலைவரின் தம்பி வனவாசிகளை வெருட்டி, பயமுறுத்திப் பெருந்தொகையான செல்வத்தைச் சேர்த்துள்ளான். இதனால் பல வனவாசிகள் அன்றன்று உணவை உண்ணாமல் இவனுக்குப் பொருளை கொடுக்கின்றனர். அறக்கடவுள் நீதியில்லாத செயற்பாடுகளை ஏற்பதில்லை. அவனை வணங்கி விட்டு தான் துணிவுடன் வந்தேன். பல காலமாகத் தம்பியாரின் செயலைக் கண்டு கொள்ளாத தலைவர் அன்று கண்டு கொண்டமைக்கு அறக்கடவுளே காரணமாக இருந்திருப்பார்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "உறு பொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்", "சபையோர்களே, இறையாகத்தானே வந்த பொருட்களும்,

வரியாக வந்த பொருட்களும், பகைவரை வென்று கைப்பற்றிய பொருட்களும் அரசர்க்குரியதாகும். அரசனுக்கு ஏற்படும் செலவுகளுக்கு அவன் இதிலிருந்து செல்வத்தை எடுத்தல் வேண்டும்".

**உ**ருத்திரன் சொன்னான், "அரசர்களுக்கு இறையாகவும், வரியாகவும், பகைவரை வென்று கைப்பற்றப்பட்ட பொருட்களும் சொந்தமானவை. எமது தலைவரான சுந்தரலிங்கம் தனது சகோதரன் மக்களை பயமுறுத்திப் பொருட்களைப் பறிப்பதைத் தெரியாதுபோலிருக்கக் காரணம், அவன் பயமுறுத்தி பறிக்கும் பொருளின் ஒரு பகுதியை கொடுப்பதனால் தான் என்று வனவாசிகள் பலர் பேசுவதை நான் கேட்டிருக்கின்றேன்".

"**மெ**ல்லப் பேசு யாராவது கேட்டால் ஆபத்து" என்று கருணாகரன் சொன்னான்.

"**நா**னே கதைக்கிறேன். வனத்தில் எப்பகுதிக்குச் சென்றாலும் வனவாசிகள் இதைத்தானே சொல்கின்றனர். இதை அவர்கள் அறியாமலா இருக்கிறார்கள். இறையாகத்தானே வந்த பொருளும், வரியாக வரும் பொருளும், பகைவரை வெல்லுவதால் கைப்பற்றப்படும் பொருளும் தான் அரசருக்கு சொந்தமானவை. ஏனையவை எல்லாம் பயமுறுத்திப் பெறுவது என்று உருத்திரன் கூறினான் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்".

**இ**ன்பவதனி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானாள், "அருள் என்னும் அன்பு ஈங்குழவி, பொருள் என்னும் செல்வச் செலிவியால் உண்டு", "சபையோர்களே, அன்பு தான் அருளாக மாறுகிறது. ஓர் உயிரின் மீது அன்பு கொள்ளக் கொள்ள அது அருளாக மாறும். அருள் என்பது கொடுத்தலாகும். அன்பு காரணமாக எதையெதைக் கொடுக்க முடியுமோ, அது அருளாகிறது. அருளை வள்ளுவர் அற்புதமான குழந்தை என்கிறார். குழந்தை வளரும் அதுபோல அருளும் வளரும். இந்த அருளை வளர்ப்பது செல்வம். செல்வம் வளர வளர அருளும் வளரும். அதாவது செல்வம் என்று சொல்லப்படும் பொருள்வந்து சேர அருள் என்ற குழந்தை வளரும்".

"**ஆ**டைகளின் விலை அதிகரித்தமையால் கருணாகரனுக்கு மூன்று மடங்கு இலாபம் கிடைத்தது. அதனால் மிகவும் மகிழ்ந்திருந்த கருணாகரனுக்கு உருத்திரன் சொன்னான், "நண்பா, நாம் எதிர்பார்த்ததை விட இலாபம் மூன்று மடங்கு வந்துள்ளது. அதனால் இன்னுமொரு ஆடைத் தொழிற்சாலையை அமைப்போம். அமைத்தால் பெரும் பணம் சம்பாதிக்கலாம்".

"**க**ருணாகரன் எதுவும் சொல்லாமல் சிறிது நேரம் உருத்திரனைப் பார்த்தான். பின்பு "நண்பா, அருள் வளர்வது செல்வத்தால். எனக்கு இப்போது நான் எதிர்பார்த்ததை விட அதிகமான பணம்

இலாபமாகக் கிடைத்துள்ளது. செல்வம் இரண்டு நிலையை உண்டாகும். ஒன்று அளவுக்கதிகமான திமிரை உண்டாக்கி தான் தான் சகலகலாவல்லவன் என்ற நிலையை உருவாக்கும். அடுத்தது அருளை மனதில் உருவாக்கி ஏழை, எளியவர்களுக்கு உதவச் செய்யும். செல்வத்தால் எதையும் செய்யலாம் என்று கர்வம் கொள்ளாது, செல்வத்தால் நல்லவற்றைச் செய்யவேண்டும். என்று நினைப்பவர்களிடம் செல்வம் பெருகும். அன்பால்தான் அருள் உண்டாகிறது. அந்த அருளை வளர்ப்பது செல்வம். எனவே அருளான விடயங்களையே செய்ய விரும்புகிறேன்" என்று கருணாகரன் உறுதியாகச் சொன்னான் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத்தொடங்கினாள், "குன்று ஏறியானைப்போர் கண்டு அற்றால் தன்கைத்து ஒன்று, உண்டாகச் செய்வான் வினை", "சபையோர்களே, செல்வமுள்ளவன் தான் நினைத்தவற்றைத் தான் நினைத்த நேரம் செய்து முடிப்பான். மிகுந்த செல்வமுடையவன் மலையின் மேலே ஏறி நின்று மலையடிவாரத்தில் நடக்கும் யானைப் போரை பார்ப்பான். செல்வம் எதையும் செய்யும், செய்விக்கும் தகுதியை உடையது".

"**ஒ**ருநாள் திரவிய வனத்திற்கு இமயமலையில் தவம் செய்த ஒரு ஞானி வந்தார். அவர் ஒருவனின் எதிர்காலத்தைக் கணிப்பதில் வல்லவர். அவரை வரவேற்க திரவியவனம் விழாக் கோலம் பூண்டது. ஒவ்வொருவரும் தமது வீட்டு வாசலில் பூரண கும்பம் வைத்து, வாழைமரம், தோரணம் கட்டிக் குதூகலமாக இருந்தனர். உருத்திரன் அன்று கருணாகரனைச் சந்திக்க வரவில்லை. சுவாமியார் பக்தனான ஒருவனின் வீட்டுக்கு வந்து தங்கி அங்கேயே உணவும் உண்பார். என்பதால் ஒவ்வொருவரும் விதம்விதமான அறுசுவை உணவு வகைகளைச் சமைத்து விட்டுச் சுவாமியாரை எதிர்பார்த்திருந்தனர்".

"**க**ருணாகரன், தனது வழமையான வேலைகளை முடித்துவிட்டுத் தனது வியாபாரத் தலத்திற்குச் சென்று விட்டான். அவனது மனைவி சுமாமியார் தனது வீட்டுக்கு வந்தால் அவரை நல்ல முறையில் உபசரிக்க வேண்டுமென நினைத்து அதற்கான செயற்பாடுகளைச் செய்திருந்தாள்".

"**சு**வாமியாரும், அடியார்களும் கருணாகரனின் வீட்டுக்கு வந்து மதிய உணவை உண்டு விட்டு இமயமலைக்குச் சென்றனர். உருத்திரன் சொன்னான், "நீ பெரும் தனவந்தன். செல்வத்தை நல்ல முறையில் பயன்படுத்துவதால் தான் சுவாமியாரும், சீடர்களும் உனது வீட்டுக்கு வந்தனர். நீ உன்னிடமிருக்கும் செல்வத்தால் விரும்பியவற்றையெல்லாம் செய்கிறாய். உன்னை

வெல்லயாருமில்லை. என்று உருத்திரன் சொன்னான் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினாள், "செய்க பொருளைச் செறுநர் செருக்கு அறுக்கும், எ∴கு அதனிற் கூரியது இல்", "சபையோர்களே, ஒருவன் தனது பகைவர்களை அடக்க விரும்பினால், அவன் பொருளைச் சம்பாதிக்க வேண்டும். செல்வம் தான் பகையை வெல்லும். கூர்மையான ஆயுதமாகும்.

"**ச**பையோர்களே, ஒருவன் முதலில் செய்ய வேண்டியது தனக்குத் தேவையான செல்வத்தைத் தேடுவதே. செல்வம் சேரச் சேரப் பகை அழியும். சுற்றம் சேரும். புகழ் ஓங்கும். மாறன் என்ற நரிக்கு அதிஷ்டலாபச்சீட்டு மூலம் பணம் சேர்வதற்கு முன்பு பரம ஏழையாக இருந்தது. அப்போது நாதன் என்ற நரி மாறனுடன் தேவையில்லாத சண்டைக்குப் போகும். மாறனைத் தாக்கும். மாறன் பயத்தால் எதுவும் சொல்லமாட்டான். அதை யாருக்கும் சொல்லவும்மாட்டான். பணக்காரன் சொல்வதை தான் எல்லோரும் நம்புவார்கள் என்று அவனுக்கு தெரியும். நாதன் தகுதியானவன் உறுதியானவன் என்றாலும் மற்றவர்களின் பொருட்களின் மீது ஆசையுள்ளவன்".

"**ஒ**ருநாள் அவன் சுந்தரன் என்ற புலி வளர்த்த கோழிக்குஞ்சுகளைப் பிடித்துத் தின்றுவிட்டு, அதனைப் பிடித்துத் தின்றது மாறன் என்று கூற மாறனை கைது செய்து விசாரித்துத் தண்டப்பணமும் அறவிட்டனர். இப்போது மாறன் நாதனை விடப் பணக்காரன். அதனால் நாதன் மாறன் தனது பணபலத்தால் தன்னை தண்டித்து விடுவான் என்று பயந்தான்".

"**அ**வன் மாறனிடம் வந்து வணங்கி தான் செய்த செயல்களை மன்னிக்குமாறு கேட்டான். இரக்க சுபாவமுள்ள மாறன் அவனை மன்னித்து நண்பனாக ஏற்றுக் கொண்டான். சபையோர்களே ஒருவனது பகையை அடக்குவது செல்வம். அதனால் செல்வத்தைத் தேடுங்கள்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு", "சபையோர்களே, அளவுக்கு அதிகமான செல்வத்தைத் தேடியவர்களுக்கு ஏனையவை யாவும் மிகவும் எளிதாக கைக்கூடும். அறமும், இன்பமும் அவர் வசமாகும். மாறன் உருத்திரனுடன் காட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு வந்த போது கோவிற் குருக்கள் மாறனுக்கு

அருகில் வந்து சொன்னார், “ஐயா, கோவிற் கும்பாபிஷேகத்தை இரண்டு வருடங்களுக்கு முன் செய்திருக்க வேண்டும். கோவில் தலைவருக்கு பலமுறை கூறியும் அதை கவனிக்கிறாரில்லை. நாம் நேற்று இரவு ஒன்று கூடி அவரைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு உங்களை தேர்வு செய்துள்ளோம்” என்றபோது வனவாசிகள் பலர் அங்கு வந்து மாறனைத் தலைவர் பதவியை ஏற்றுமாறு வற்புறுத்தினர். வேறு வழியின்றி மாறன் தலைவர் பதவியை ஏற்றான்”.

“**த**லைவரான பின் காட்டுவாசிகள் அவனைக் கண்டால் தோள் மீதிருந்த அங்கவஷ்திரத்தைக் கையில் எடுத்துவிட்டு இரு கரங்களையும் கூப்பி வணங்கினர். பொது இடங்களிலும், தத்தமது வீடுகளிலும் நடைபெறும் வைபவங்களுக்கு மாறனை விருந்தினராக அழைத்துக் கௌரவித்தனர். அதனால் மாறன் மிகவும் மகிழ்ந்தான். செல்வம் வந்து சேர்ந்ததால் அச்செல்வம் அறத்தையும் இன்பத்தையும் கொண்டு வந்து சேர்க்கும்” என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி உரையாற்றி முடிந்ததும் மேடைக்கு வந்த மகாநாட்டின் தலைவரான கதிரேசன் “சபையோர்களே, பொருள் செயல்வகை என்ற அதிகாரத்தைப் பற்றி கலாநிதி இன்பவதனி அவர்கள் மிகவும பிரமாதமாகப் பேசினார். அடுத்து படைமாட்சி என்ற அதிகாரத்தைப் பற்றி தமிழறிஞர் உரையாற்றுவார். அவரைப் பற்றிய தகவல்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும். அதனால் நேரத்தை வீணாக்காது அவரை பேச வருமாறு அழைக்கிறேன். என்று கூறிவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்தார் கதிரேசன்”.

**த**மிழறிஞர் பேச வந்த போது சபையோர்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். கரகோசம் விண்ணைப் பிளந்தது. தமிழறிஞர் சபையோர்க்கு கைகூப்பி வணக்கத்தைத் தெரிவித்தார். பின்பு, “சபையோர்களே, இன்று பேசவிருந்த குபேரவனப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சிற்றம்பலத்தின் இரத்த உறவினர் திடீரென்று காலமானதால் அவரால் வர முடியவில்லை. அதனால் நான் பேச வந்துள்ளேன்”.

“**ப**டைமாட்சி என்றால் படைகளின் தாக்கம் என்று கூறலாம். படைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் கூறிவிட்டார். அது எக்காலத்திற்கும் பொருந்தும் என்றவர், முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், “உறுப்பு அமைந்து ஊறு அஞ்சாவெல் படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை”, “சபையோர்களே, ஒரு படைக்கு வேண்டிய உறுப்புகள் அனைத்தும் அமைந்தயாய், எதிரிகளின் பகை என்ற துன்பத்திற்கு அஞ்சாது

துணிந்து போரிட்டு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும்படையே அரசர்களுடைய செல்வங்கள் எல்லா சிறப்பானதாகும்".

**சு**ந்தரவனத்து அரசனான இரட்னசிங்கன் என்ற சிங்கம் தனது அமைச்சர்களை அழைத்துச் சொன்னான், "அமைச்சர்களே, நாகவனத்தின் அரசனான விஜயசிங்கன் என்ற சிங்கம் எமது வனத்துள் தனது வீரர்களை அனுப்பி வனவாசிகளுக்குத் தொல்லைகள் பலவும் செய்து வருகிறது. எனக்குப் போர் செய்ய விருப்பமில்லை. பேசித் தீர்மானிக்க முடியாத விடயங்கள் எதுவும் இல்லை என்று நினைப்பவன் நான். ஆனால் விஜயசிங்கனின் செயல்கள் கட்டுக்கடங்காதெனவாகிவிட்டன. எமது தூதுவர்கள் சென்று பேசியும் பயனிலை. தமக்குப் பயந்து தான் நாம் தன்னுடன் பேச விரும்புவதாக அவன் நினைக்கிறான். இனி வேறு வழியில்லை. போர் தொடுக்கலாமென நினைக்கிறேன். உங்களது ஆலோசனைகளைச் சொல்லுங்கள்".

**த**ரைப்படத் தளபதியான மணிமாறன் என்ற புலி எழுந்து சொன்னது, "மன்னா, விஜயசிங்கனுடன் பேசிப்பயனில்லை. நாகவனத்தின் போர் வீரர்கள் இரவில் மாறுவேடமிட்டு வந்து எமது வீடுகளில் திருடுகிறார்கள். உள்ளே நுளைந்து வனவாசிகளைத் தாக்குகின்றனர். அரசர்கள் அயல் நாட்டவர்களைப் போருக்கு அழைக்கும் ஏற்பாடுகள் தான் இவை. எமது படை வீரமான படை. எந்தச் சந்தர்பபத்திலும் பின்வாங்க மாட்டார்கள். படைக்கு வேண்டிய உறுப்புக்கள் அனைத்தும் அமைந்துள்ளன. பகைவர்களுக்கு அஞ்சாத தன்மையும் இருக்கிறது. திறமையான ஒற்றர்கள் அவ்வப்போது முக்கியமான செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பகைவர்கள் எம்மீது படையெடுக்க அஞ்சுவர். அப்படியிருக்க நாகவனத்து அரசரனின் செயல்கள் போருக்கு எம்மை அழைக்கின்றன. உடனே போர் தொடுக்க வேண்டும்" என்றான்.

**ம**ந்திரிசபை நாகவனத்தின் மீது போர் தொடுப்பது என்று முடிவு செய்தது. போருக்கான ஆயத்தங்களை முப்படைத் தளபதிகளும் ஆரம்பித்தனர்" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

**த**மிழறிஞர் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத தொல் படைக்கு அல்லால் அரிது", "போரில் எதிர்பாராத தாக்குதல்களினால் படைகளின் வல்லமை குன்றினால் பகைக்கு அஞ்சாத நெஞ்சுறுதி கொண்ட மூலப்படை பகைவரைத் தாக்கி அழிக்கும். முப்படை நெஞ்சுறுத்தி கொண்டது. எச்சந்தர்ப்பத்திலும் பின்வாங்காது போர் உக்கிரமாக நடைபெறும் போது சில சமயம் வீரமான படைவீரர்கள் தாக்கப்பட்டு பின்வாங்க நேர்ந்தால் அந்நாட்டின் மூலப்பை வீறுருடன் புறப்பட்டுச் சென்று பகைவரை அடக்கும்".

**த**ரைப்படைத் தளபதியான மணிமாறன் இரவு நேரம் இரட்சிணசிங்கனை சந்தித்து சொன்னான், "அரசே, நாம் எதிர்பார்த்ததை விடப் போர் கடுமையாக நடைபெறுகிறது. நாகவனத்துப் படைகள் பலவீனமானவை. அவர்களுக்கு யாரோ உதவி செய்கின்றனர். அதனால் தான் அவை உக்கிரமாகத் தாக்குகின்றனர். சேதுவனத்து அரசனான மார்த்தாண்டன் என்ற புலிதான் அவர்களுக்குதவி செய்கிறது. சேதுவனத்தின் படை வீரர்கள் நாகவனத்து வீரர்களின் ஆடைகளை அணிந்து போரிடுகின்றனர். அதனால் மூலைப்படையைத் தயார் நிலையில் வைத்திருக்கிறேன். காலையில் போர் நிலைமையைப் பொறுத்து மூலப்படையை போரிட வைக்கலாம்".

**"அ**தைத்தான் நானும் யோசித்தேன். காலையில் முப்படையைப் போரிட வைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்யும். மறுநாள்க் காலை முப்படைப் போரிடத் தொடங்கி சில மணி நேரத்துள் நாகவனத்துப் படைகள் பிறமுதுகு காட்டி ஓடித்தப்பினர்" என்று கூறித் தமிழறிஞர் உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல தொடங்கினார், "ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை நாகம் உயிர்ப்பகெடும்", "சபையோர்களே, எலிகள் பெரிய அளவில் கூடி நின்று கடல் போல ஒலித்தாலும் பாம்புக்கு ஒன்றும் ஆகாது. ஆனால் பாம்பு மூச்சுவிட்டால் எலிகள் அழிந்து விடும்".

**ம**றுநாள் இரட்ணசிங்கன் போரில் வெற்றி பெற்றமையைப் பாராட்டிப் போர் வீரர்களையும், தளபதிகளையும் பிரதான மண்டபத்திற்கு அழைத்திருந்தான். இரட்சிணசிங்கன் மண்டபத்திற்கு வரப் பேரிக்கைகள் முழங்கின, இசைக் கருவிகள் மங்கல இசையை எழுப்பின. மக்கள் மகிழ்ச்சி மிகுதியால் ஆரவாரம் செய்தனர். ஆரவாரம் அடங்க சில நிமிடங்கள் சென்றன. படைவீரர்களும், மந்திரி பிரதானிகளும் அமைதியான பின்பு இரட்ணசிங்கன் எல்லோரையும் கைகூப்பி வணங்கினான், "வீரர்களே, உங்களைப் போன்ற வீரர்கள் எங்கும் இல்லை. நீங்கள் ஒவ்வொருவரும் நாகபாம்புக்கள். உங்களை எதிர்ப்பவர்கள் எலிகள். ஆயிரம் எலிகள் கூடி கடல் போல ஒலித்தாலும் அவ்வெலிகளால் பயன் எதுவும் ஏற்படாது. நாகம் சீறினால் ஆயிரம் எலிகள் வந்தாலும் பயத்தால் நடுநடுங்கி ஓடிவிடும். அதுதான் நடைபெற்றது. இனிமேல் எந்த வனமும் எம்முடன் போர்தொடுக்க அஞ்சும். அந்தளவிற்கு நாகவனத்துப் படைவீரர்களைத் தாக்கி அழித்துள்ளீர்கள். உங்கள் எல்லோருக்கும் வெற்றிக்கான சன்மானம் கிடைக்கும்" என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத் தொடங்கினார், "அழிவு இன்று அறை போகாது ஆகி வழிவந்த வன்கண்

அதுவே படை", "சபையோர்களே, சிறந்த பலமும், வீரமும் பொருந்திய படையைப் பகைவர்களால் அழிக்க முடியாது. அது பகைவர்களது சூழ்ச்சிகளுக்குப் பலியாகாது தொடர்ந்து போர் செய்து வெற்றியைப் பெற்றுத் தரும்".

**நா**கவனத்தின் அரசனான விஜயசிங்கன் தரைப்படைத் தளபதிக்குச் சொன்னான், "தளபதியாரே, போர் செய்து சுந்தரவனத்தைக் கைப்பற்றலாமென்று முப்படைத் தளபதிகளும் உறுதியாகச் சொன்னமையால் தான் போரைத் தொடுத்தோம். நீங்கள் சொன்னவாறு சுந்தரவனத்துப் படைகள் பலவீனர்கள் அல்ல. பெரும்வீரர்கள். நாம் பல சூழ்ச்சிகள் செய்தோம். மிகவும் பலம் வாய்ந்த வீரர்களைக் கொண்ட நந்தவனத்து அரசனின் உதவி கிடைக்கும் என்று சொன்னோம். அவன் படையுடன் வந்து உதவினான் என்றும் சொன்னோம். சுந்தரவனத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றப்பட்டுவிட்டது என்றும் அறிவித்தோம். மகா புத்திசாலி எமது சூழ்ச்சிகளையெல்லாம் முறயடித்து விட்டான். போரில் பகைவர்களால் அழிக்க முடியாததாகவும், பகைவர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து அரசனுக்கு வெற்றியை தேடிக் கொடுப்பதுதான் சிறந்த படைவீரர்களின் பணியாகும். இவை இரண்டும் எமது படையினரிடம் இல்லை" என்று துக்கப்பட்டான் விஜயசிங்கன் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், "கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றல் அதுவே படை", "சபையோர்களே, யமனே கடுஞ்சினங் கொண்டு தனது படையுடன் தாக்க வந்தாலும் அவனை எதிர்த்து வீரத்துடன் போராடி வெல்வதே சிறந்த படையாகும். போருக்கு அரசனும், படைகளும் தயாராகின்றனவென்றால் அவர்கள் சாகத்துணிந்தவர்களாவர். அவர்கள் பகைவர்களைக் கொல்லும் யமனாகவே கருதுவர்".

**இ**ரத்தினசிங்கன் படைத்தளபதிகளையும், போர் வீரர்களையும் அழைத்துச் சொன்னான், "நீங்கள் எல்லோரும் மிகச் மிக சிறந்த வீரர்கள். தாய் நாட்டுக்காகப் போராட முன்வரும் ஒவ்வொரு வீரனும் எமனையும் கொல்லும் தைரியத்தை உடையவன் என்று எனக்கு தெரியும். பல வருடங்களுக்கு முன்பு உருத்திரவனம் என்ற பெரியவனத்தின் அரசனான சிவசேனன் என்ற புலி எம்முடன் காரணமின்றி அடிக்கடி தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தது. அதைப் பொறுக்க முடியாத முப்படைத் தளபதிகளும் உருத்திரபுரத்தைக் கைப்பற்ற வேண்டும். இல்லாவிட்டால் சிவசேனன் எமது மக்களை நிம்மதியாக இருக்கவிடமாட்டான்" என்றனர்.

**"அ**தைத்தவிர வேறு வழியில்லை. ஆனால் அது பெரிய வனம். எம்மை விட மூன்று பங்கு படைபலம் கூடியது. அதனால் தயங்கினேன். அதைக் கவனித்த குதிரைப் படைத் தளபதியான

வீரவர்மன் சொன்னான், "அரசே, பயத்தால் வாழ்நாள் முழுவதும் பயந்து பயந்து தான் வாழ வேண்டும். பெரிய நாடு பெரும்படை என்று நாம் அஞ்சக்கூடாது. புத்திசாலித்தனமாகப் பகைவர்கள் எதிர்பாராதவாறு தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். யமனே சினங்கொண்டு தனது படையுடன் தாக்க வந்தாலும் அவனை எதிர்கொண்டு தாக்கி அழிப்பதே சிறந்த படையாகும். எமது படை மிகச் மிக சிறந்த படை. எந்த எதிரியையும் தாக்க வல்ல படை. அதனால் அஞ்சாது போரிடுவோம்" என்றான்.

**"அ**தனால் துணிந்து போர் தொடுத்தோம். மிகவும் கடுமையான போர் அது. எமது போர் வீரர்கள் பெருஞ்சினங் கொண்டு போராடினர். அவர்களின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத பகைவர் பல சூட்சிகளைச் செய்வார். அவற்றையெல்லாம் முறியடிக்கும் பலம் எமது படையினரிடம் உண்டு" என்று பெருமையாக இரத்தினசிங்கம் கூறினான்" என்று கூறித் தமிழறிஞர் தனது உரையைப் பூர்த்தி செய்தார்.

**த**மிழறிஞர் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "மறம் மானம் மாண்டவழிச் செலவு தேற்றம் என நான்கே ஏமம் படைக்கு", "சபையோர்களே, சிறந்த படைக்கு நான்கு விதமான பண்புகள் உள்ளன. வீரம் மிகுந்தவர்களாக இருத்தல் வேண்டும். பெருமையான செயல்களைச் செய்தல் வேண்டும். மானமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசரின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருத்தல் வேண்டும். இந்நான்கு பண்புகளும் உள்ள படையினரே மிகச்சிறந்த படையினராவர்".

**இ**ரத்தினசிங்கன் அமைச்சர்களுக்கும், படைவீரர்களுக்கும் சொன்னான், "மிக மிகச் சிறந்த அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வழிநடத்தலில் முப்படைத் தளபதிகள் இருக்கின்றனர். முப்படைத் தளபதிகள் வழிநடத்தலில் போர் வீரர்கள் இருக்கின்றார்கள். இவர்களை யாராலும் வெல்ல முடியாது. பலவனங்கள் எம்மீது படையெடுத்து வந்தபோது அதை முறியடித்துப் பகைவரைக் கைப்பற்றிய பெருமை எமது படையினருக்கு உண்டு. எமது எதிரியான மதுரவனத்து அரசன் சுந்தரசிங்கன் என்ற புலி பெருமெடுப்பில் அயல் வன அரசர்கள் இருவரின் உதவியோடு படையெடுத்து வந்தபோது எமது வீரர்கள் வீரத்துடன் போராடி இரு அரசர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். அந்தச் சம்பவம் அடிக்கடி எனது மனதில் தோன்றி என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கும். அப்படியான பெருமைக்குரிய செயல்களைச் செய்யும் எமது வீரரை எப்போதும் நான் நினைத்திருக்கின்றேன். அவர்களை விடச் சிறந்த வீரர்கள் யாருமில்லை" அவர்களின் பெருமையான செயல்களைப் பாராட்டிப் பரிசளித்துள்ளேன். அப்பரிசுகள் அவர்களது பெருமைகளுக்குரிய செயல்களுக்கு ஈடாகாது" என்று மகிழ்ந்தான் இரத்தினசிங்கன்.

**த**மிழறிஞர் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “தார் தாங்கிச் செல்வது தானை தலைவந்த போர்தாங்கும் தம்மை அறிந்து”, “சபையோர்களே, கடுஞ் சினங்கொண்டு தம்மை எதிர்நோக்கி வரும் பகைவரின் படையைத் தடுத்து நிறுத்தும் வகையில் பகைவரின் முண்ணனிப்படையாகிய தூசிப் படையை தாக்கி அழித்துவிட்டு முன்னேறிச் செல்லும் பலம் உடையதே சிறந்த படையாகும்.

**இ**ரத்தினசிங்கன் முப்படைத் தளபதிகளையும், அமைச்சர்களையும் அழைத்துச் சொன்னான், “தற்பொழுது நகுலவனத்து அரசனான நாகவிஜயன் என்ற நாகம் அயல் வனங்களை அச்சுறுத்தி வருகிறது. அதற்கு வனங்கள் முழுவதையும் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை உள்ளது. அவர்கள் வீரர்கள் தான். பாம்பு என்றால் படைகள் அஞ்சுவது இயல்பு. அருகில் உள்ள நகுல வனத்து அரசனான செங்கோடன் என்ற கீரி என்னுடன் குருகுலத்தில் ஒன்றாகப் படித்தவன். அவன் படிக்கும்போதே நாகவிஜயனைக் கொல்ல வேண்டும் என்று கூறுவான். அவன் இப்பொழுது எமக்கு உதவுவதாக அறிவித்துள்ளான். அதனால் எப்பொழுதும் போருக்குத் தயாராக இருத்தல் வேண்டும்” தரைப் படைத்தளபதி சொன்னான், “அரசே ஆவேசத்துடன் எதிர்நோக்கி வரும் பகைவர்களின் முன்னணிப் படையாகிய தூசிப்படையை அஞ்சாது வீரத்துடன் போராடித் தாக்கி அவர்களை பின்னடைவு செய்யவைத்தால் போரின் முக்கால்வாசிப் பகுதி முடிவுக்கு வந்துவிடும். நாகவனத்தினர் எம்மீது படையெடுத்தபோது அவர்களின் முன்னணிப்படையான தூசிப்படையை முற்றாக அழித்தோம். அதனால் அவர்கள் தப்பியோடிவிட்டனர். எமது தூசிப் படைவீரர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். யமனைக் கூட எதிர்க்கும் வல்லமை உள்ளவர்கள். பயப்படாதீர்கள் துணிவோடு இருங்கள்..” என்றபோது இரத்தினசிங்கன் சொன்னான், “எனது வீரர் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. அவர்கள் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார்கள். அங்கங்களை இழந்தாலும் உயிர்போகும் வரை தன்னால் முடிந்தவரை போராடுவர்” என்று கூறி இரத்தினசிங்கன் கூறினான் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “அடல் தகையும் ஆற்றலும் இல்எனினும் தாகை படைத்தகையால் பாடு பெறும்”, “சபையோர்களே, ஒரு படையினருக்கு போர் செய்யும் வீரமும், பகைவரைத் தடுக்கும் ஆற்றலும் இல்லாதிருந்தாலும், அவர்களின் படை அணிவகுப்புச் சிறப்பாக இருந்தால் அதனால் அப்படை பெருமையை அடையும்”.

**இ**ரத்தினசிங்கன் தளபதிகளுக்குச் சொன்னான், “ஒரு சிறந்த படைக்குப் பல சிறப்புகள் உண்டு. பகைவனை எதிர்த்து அடக்குதல் பகைவரின் முன்னணிப் படையை அழித்தல், பகைவர்களின் சூழ்ச்சிகளை அழித்தல் எனப் போரில் பல வகையான தன்மைகள் உண்டு. அது

போலப் போர் செய்ய ஆற்றலும், பகைவர்களை அழிக்கும் பலமும் படையினர்க்கு இல்லாதிருந்தாலும், அப்படை வீரர்களின் அணிவகுப்பால் அப்படையே பெருமை கொள்ளும்".

"**த**ளபதியாரே, கனக வனம் மிகச் சிறியது. தற்பாதுகாப்புக்காக மட்டும் பல வீரர்களைக் கொண்டது. சாரதா வனம் மிகப்பெரியது. பெரும்படைகளைக் கொண்டது. சாரதா வனத்து அரசன் சிங்கராஜன் என்ற சிங்கம் வீரம் மிகுந்தது. கனக வனத்துப் படையினர் போர் செய்யும் வீரமும், பகைவரை தாக்கும் ஆற்றலும் இல்லாதவர்கள். அதனால் அவர்கள் தமது படை வீரர்களைக் கொண்டு சிறந்த அணிவகுப்பை நடத்துவார்கள். கனகவன அரசனின் வீரர்கள் சாகச விளையாட்டுகளிலும் ஈடுபடுவர். மிகவும் அழகான அணிவகுப்பையும் நடத்துவர். சிங்கராஜன் அழகு பிரியன். அவன் சாரதா வனத்து அரசனுடன் தொடர்பு கொண்டு அவர்களின் படை வீரரை அழைத்து அவர்களது அணிவகுப்பை ரசிப்பான். அவர்களது நாட்டு அணிவகுப்பிலும் பார்க்க சாரதா வன அணிவகுப்பு அவனுக்கு பிடிக்கும்".

"**அ**ணிவகுப்பின்போது சாரதா வன பெண்கள் அழகான உடைகளை அணிந்து விதவிதமாக நடனமாடுவர். பின்னால் வரும் படைவீரர் தாளத்திற்கு ஏற்ற வகையில் தமது உடல்களை அசைப்பர். அதைப் பார்த்துச் சிங்கராஜன் பெருமகிழ்வடைவான். அதனால் சாரதா வனத்தைக் கைப்பற்றவோ, அதற்குத் தீங்கு செய்யவோ யாரும் விரும்பமாட்டார்கள். போர் செய்யக்கூடிய வீரமும், பகைவரை தாக்கும் ஆற்றலும் இல்லாவிட்டாலும் படைகளின் அணிவகுப்பால் அப்படை பெருமை கொள்ளும்" என்று இரத்தினசிங்கன் கூறினான்" என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

**த**மிழறிஞர் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், "சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல் ஆயின் வெல்லும் படை", "சபையோர்களே, போர் செய்தால் வீரர்கள் பலர் இறப்பார், காயப்படுவர். அதனால் வீரர்களின் தொகை குறைவடையும். அரசனின் செயல்களால் வெறுப்பும், போர்க்கருவிகளுக்குப் பற்றாக்குறையும் இல்லாதிருந்தால் அப்படை வெல்லும். இரத்தினசிங்கன் தளபதிகளுக்குச் சொன்னான், "நான் போரை விரும்புவதில்லை. போரினால் வீரர்கள் பலர் இறப்பர், பலர் அங்கவீனமாவர். இதனால் குடும்பத்தவர்களுக்குப் பெரும் துன்பமுண்டாகும். அவர்களைப் பராமரிப்பதே மிகவும் சிரமமானது. அரசன் மற்றவர்களது எண்ணங்களைப் புரிந்து கொள்ளாது தானும் தனக்கு வேண்டியவர்களினதும் விருப்பத்தையும் பூர்த்தி செய்யாமலும், போர்க் கருவிகளுக்கும், உணவுக்கும், உடைக்கும் பற்றாக்குறை இல்லாமலும் இருந்தால் எந்த படையும் பகைவரை வெற்றி கொள்ளும்".

“இவற்றை சில அரசர்கள் புரிந்து கொள்வதில்லை. அரசன் எல்லாவற்றையும் கவனிக்க முடியாது. அதற்குத் தகுதியானவர்களை நியமித்து விட்டு அவர்களின் செயல்களைக் கண்காணிக்க வேண்டும். இதை எமது தாத்தா அடிக்கடி கூறுவார்” என்று கூறி இரத்தினசிங்கன் கூறினான் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், “நிலைமக்கள் சால உடைத்து எனினும் தானை தலை மக்கள் இல்வழி இல்”, “சபையோர்களே, வீரமிக்க வீரர்களைக் கொண்டிருப்பதாலும் போர் முனையில் நடைபெறும் ஏற்ற இறக்கங்களை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் படையை நகர்த்திச் செல்ல திறமை மிக்க படைத்தலைவன் இல்லாவிட்டால் அப்படையால் பகைவர்களை வெல்ல முடியாது”.

“எனது தாத்தா போர்த் தந்திரங்கள் அனைத்தையும் அறிந்தவர். நான் அவருடன் விளையாடச் சென்றால் அவர் என்னுடன் விளையாடிவிட்டுச் சொல்வார், “பேரா, பலம் பொருந்திய வீரர்கள் பலர் இருந்தாலும், அவர்களின் பலத்தை ஒன்று திரட்டிப் போராடும் வல்லமை படைக்கு தலைமை தாங்கும் தலைவனுக்குத் தான் உண்டு. அவன் களநிலைமையைப் பொறுத்துத் திட்டங்களை மாற்றுவான். அப்படி மாற்றும் தன்மையும் உரிமையும் படைத்தலைவனுக்குத் தான் உண்டு”.

எனது தாத்தா வேதவனத்தோடு போர் தொடுத்த போது, வேத வனப்படைகள் ஒன்று திரண்டு எமது தூசிப்படையைக் கொடூரமாகத் தாக்கின. தாத்தாவால் எதையும் யோசிக்க முடியவில்லை. அப்போது எமது தரைப் படைத் தலைவனாக இருந்த வேலவன் தூசிப் படை வீரர்களை இரண்டாக வகுத்து ஒரு பகுதினரைப் பகைவரைப் பின்னால் சென்று தாக்குமாறு பணிந்தான். அதன்படி பின்னால் சென்று தாக்கியதை எதிர்பாராத வேதவனப் படையினர் சிதறி ஓடினர். அதனால் போரில் தாத்தா வென்றார். அவர் சொல்வார் போர்க்களத்தில் படைத்தலைவன் எடுக்கம் முடிவை அரசர் ஏற்க வேண்டும்” என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

## 20

தமிழறிஞர் உரையாற்றி முடிந்ததும் மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து சொன்னார், “சபையோர்களே, தமிழறிஞர் அருமையாகப் பேசினார். அவருக்கு நன்றி கூறுகிறேன். அடுத்து படைச்செருக்கு என்ற அதிகாரத்தைப் பற்றி இன்பவதனி உரையாற்றுவார்” என்று கூறிவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்தார். இன்பவதனி மேடைக்கு வந்து கரங்குவித்து வணங்கினாள், “சபையோர்களே, இரண்டாவது முறையாக என்னைப் பேச அழைத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து எனது பேச்சைச் சபையோர் விரும்பியுள்ளமை தெரிகிறது. அதற்காகச் சபையோருக்கும். எமது வனத்து இலக்கியக் குழுவினருக்கும் வணக்கத்தைத் தெரிவித்து எனது பேச்சை ஆரம்பிக்கிறேன்".

**"நா**ன் பேசவுள்ள அதிகாரம் படைச்செருக்கு என்பதாகும். வீரமும், பலமும் பொருந்திய நாட்டில் வசிக்கும் எல்லோருக்கும் படைச்செருக்க இருக்கும். தனது அரசனும் படைகளும் தான் பெரும் வீரர்கள் என்ற நினைப்பு இருக்கும். அதனால் மக்கள் தமது அரசனைப் பற்றியும் வீரர்களைப் பற்றியும் பெருமையாகப் பேசுவர்.

**வீ**ரபுரவனம் மிகவும் பெரியது. அதன் அரசனான சுந்தரவர்மன் என்ற சிங்கம் பெரும் பலமுள்ள வீரன். அவனது பெயரைக் கேட்டாலே உலகில் உள்ள வனத்து அரசர்களெல்லாம் நடுநடுங்குவர். சுந்தரவர்மன் மிகவும் நல்லவன், ஒழுக்கமானவன், பிறருக்கு உதவிகள் செய்பவன். அவனை எதிர்த்த எந்த வனத்து அரசர்க்கும் துணிவிராது. அப்படிப்பட்ட அரசனைப் பற்றித் தனது இனத்தவர்களுக்கு மாறன் என்ற மான் கூறுவதைக் கேளுங்கள்".

**இ**ன்பவதனி முதலாவது குறளைப் பாடிவிட்டு, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத் தொடங்கினாள், "என்ஜமுன் நில்லன் மின் தெவ்விர்; பஜர்என்ப முன் நின்று கல் நின்றவரி" மாதவன் வீரமுள்ள போர் வீரன். ஏதிரிகளைத் தாக்கி அழிப்பதில் அவனுக்கு நிகர் அவன் தான். அவன் தனது நண்பர்களுக்கும், இனத்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஓய்வு நேரங்களில் அரசரும், தானும், படை வீரர்களும் போர்க்களத்தில் நிகழ்த்திய சாகசங்களைச் சொல்வான். அன்று அவர்களிடம் அகப்பட்ட மருதவன வீரர்கள் பலருக்குச் சொன்னான், "பகைவர்களே, தெரியாத்தனமாகவோ அல்லது ஆணவத்தின் காரணமாகவோ எமது அரசரை எதிர்க்க உங்களது அரசன் விரும்பிப் படையெடுத்து வந்தால். நீங்களெல்லாம் வீரர்கள் என்று நீங்களும், உங்கள் அரசரும் தான் நினைக்க வேண்டும். சுந்தரவர்மன் என்ற பெயரைக் கேட்டாலே அரசர்களும், படைவீரர்களும் நடுநடுங்குவர். அப்படியிருக்க நீங்கள் படையெடுத்து வந்துள்ளீர்கள். உங்களது அயல் வனமான சிவபுரிவன வீரர்கள் அவர்களது அரசனின் நெருக்கடியைத் தாங்க முடியாது எம்மீது படையெடுத்து வந்தனர். வழியில் பெருந்தொகையான வீரர்கள் ஓடிச் சென்று விட்டனர். படைகளை இழந்த சிவபுரிவன அரசன் எம்மிடம் சரணடைந்தான். இது தெரிந்தும் சிலவன அரசர்கள் எம்மீது போர் தொடுக்கின்றார்கள் போர் தொடுத்துத் தமது நாடுகளில் இப்போது நடுகற்களாகி நிற்கின்றனர்" என்று பலமாகச் சிரித்தான் மாறன் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "கான முயலை எய்த அம்பினில் யனை பிழைத்த வேல் ஏந்தல் இனிது", "சபையோர்களே, காட்டில் ஓடும் முயலைக் குறி தவறாது எய்வதை விட வெட்ட வெளியில் நிற்கும் யானை மீது எறிந்து குறிதவறிய வேலினை ஏந்தலே சிறந்தது. சுந்தரவீரன் முயல் போன்ற சிறு பிராணிகளைக் கொல்ல விரும்பமாட்டான். அவன் தனக்குப் பெயரும், புகழும் வருவதற்கான வழிவகைகளையே செய்வான். முயலை விட்டுவிட்டுப் பலம் பொருந்திய யானையைக் குறியாக கொள்வான்".

**மா**றன், "சொன்னான் ஒருமுறை மதுரவனம் என்ற சிறிய வனத்து அரசனான மணிபல்லவன் என்ற குரங்கு தனது வீரர்களுடன் வந்து எமது வனவாசிகளின் வீடுகளில் கொள்ளை அடித்தது. எமது அரசர் அவர்களைக் கொள்ளையடிக்க விட்டுவிட்டார் மதுரவனை வீரர்களுக்கு உற்சாகமளித்துக் கொள்ளையிட வைப்பது சேதுவன அரசனது வேலை என ஒற்றர்கள் மூலம் அறிந்து, சேதுவனத்தின் மீது போர் தொடுத்து சேதுவனத்தையும், மதுரவனத்தையும் கைப்பற்றினார். இப்போது மதுரவன அரசன் பாதாளச் சிறையில் இருக்கிறார். மதுரவன வாசிகள் முன்பு அனுபவிக்காத இன்பங்களையெல்லாம் அனுபவிக்கின்றனர். தமது அரசன் தனது ஆட்சிக்காலத்தில் தமக்குப் பல தீமைகளை செய்ததாகவும், தமது செல்வங்களைக் கவர்ந்ததாகவும் நமது அரசரிடம் கூறி அவற்றைப் பெற்றுத் தருமாறு கேட்கின்றனர் சிறிய நாடு படையெடுத்ததால் அதைத் தூண்டிய நாட்டைத் தான் கைப்பற்ற வேண்டும். ஒரு முயலைக் குறிபார்த்து எய்வதை விட யானையைக் குறிபார்த்து எய்வதே சிறப்பு" என்று இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக் கால் ஊர்ஆண்மை மற்று அதன் எ∴கு", "சபையோர்களே, பகைவரை எதிர்த்து அவர்களது வீரத்தை அழிக்கும் வீரத்தைப் பேராண்மை என்று சொல்வார்கள். அந்தப் பகைவர்களுக்கு ஒரு துன்பம் வந்தபோது அவர்களுக்கு உதவி செய்வதை ஆண்மையினை கூர்மை என்று சொல்வார்கள்".

**மா**றன் சொன்னான், "ஒருமுறை சேதுவனத்து அரசன் ஐந்து வனத்து அரசர்களைச் சேர்த்துப் படையெடுத்தான். எல்லோரும் அஞ்சினர். ஆனால் எமது அரசர் அஞ்சவில்லை. அவர் ஐந்து அல்ல ஐம்புது அரசர்கள் சேர்ந்து வந்தாலும் எமது வீரரை வெல்ல முடியாது. அத்துடன் எமது நாட்டு மக்களுக்கும் நாம் போர் செய்வது விருப்பம். அவர்கள் போர்க்களத்துக்கு அண்மையில் கூடியிருந்து போர் வீரர்களுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் வெகுசிறப்பாகச்

செய்வர். எமது ஒவ்வொரு குடிமகனும் போர்வீரன் தான். பெண்களும் போரின் போது தேவையான உதவிகளைச் செய்வர். அதனால் அஞ்ச வேண்டாம் என்று வீரர்களுக்கு அரசர் சொல்வார்".

**போ**ர் முடிந்த பின்பு சேதுவன அரசனோடு சேர்ந்து எமக்கெதிராகப் படையெடுத்து வந்த மங்கல வன அரசனான சேதுமான் என்ற புலி எமது அரசனிடம் வந்து, "அரசே, அமைச்சர்களின் தூண்டுதலால் நான் சேதுவனத்து அரசனுடன் சேர்ந்து வந்து தங்களது படையைத்தாக்கினேன். அது பெரும் தோல்வியில் முடிந்தது. இப்போது சேதுவன அரசன் எமது நாட்டைத் தன்னுடைய நாட்டுடன் சேர்க்க நினைக்கிறான். அதனைத் தடுத்து நிறுத்தும் வீரம் தங்களிடம் தான் உள்ளது. தயவு செய்து எம்மைக் காப்பாற்றுங்கள் என்று மன்னனின் கால்களில் வீழ்ந்தான். அதைக் கேள்விப்பட்ட சேதுவன அரசன் தனது எண்ணத்தை மாற்றி மங்கலவன அரசனுடன் நட்புப் பூண்டான். அப்படியான பேராண்மையும், கூர்மையையும் உடையவன் எமது அரசன்" என்று மாறன் கூறினான் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், "கைவேல்களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியாநகும்", "சபையோர்களே, மாவீரன் தனது கையில் இருந்த வேலை ஒரு யானையின் மேல் எறிந்து கொன்றுவிட்டான். தன்னைத் தாக்க ஓடிவரும் பகைவனின் இன்னொரு யானையைத் தாக்கித் தனது மார்பில் புதைத்திருக்கும் எதிரியின் வேலைக்கண்டு மகிழ்ந்து அதை எடுத்து இன்னொரு யானையைத் தாக்கி கொல்வான்".

"**மா**றன் சொன்னான், "எமது வீரர்கள் எதற்கும் அஞ்மாட்டார்கள். எமது அரசனைப் போல வீரமுள்ளவர்கள் ஐந்து வனத்து அரசர்கள் ஒன்றாகச் சேர்ந்து வந்து எம்மைத் தாக்கிய போது யானை படையைச் சேர்ந்த வீரர்கள் தமது உயிரை மதியாது போராடினர். உதயணன் என்ற வீரன்தான் யானைப்படைக்குத் தளபதி. அவன் மாவீரன். அவனது படை வருகிறதென்றால் சகல வன வீரர்களும் தம்மைக் காத்துக் கொள்ளப் போராடுவர்.

"**ஐ**ந்து வனத்து வீரர்களும் ஒன்றாகச் சேர்ந்து படையெடுத்து வந்தபோது அரசர் தளபதிகளையும், போர் வீரர்களையும் அழைத்து சொன்னார், "வீரர்களே, உங்கள் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. வீரன் ஒருவன் தன்னை ஐம்பது வீரர்கள் தாக்கினாலும் அஞ்சமாட்டான், தப்பியோடமாட்டான். அவர்களை எப்படி அழிக்கலாம் என்றுதான் எண்ணுவான். எனக்குத் தாத்தா தான் குரு. ஒரு முறை தாத்தா எதிர்பாராத வகையில் அயல் வனங்கள் மூன்று ஒன்று சேர்ந்து வந்து தாக்கின. அவரது யானைப் படை வீரன் எதிரிகளைத் துரத்தித் துரத்தித் தாக்கிய போது பகைவரான ஓர் அரசன் அவனை நோக்கி வேலை வீசினான். அவ்வேல் அவனது மார்பைத்

தாக்கியது. உடனே அவன் தனது கையில் இருந்த வேலால் தன்னைத் தாக்க வந்த யானை மீது எறிந்து விட்டு தனது மார்பைத் தாக்கிய வேலைப் பிடுங்கி அதை எறிந்தவன் மீது வீசி அவனைக் கொன்றவன். அப்படியான வீரர்களின் வாரிசுகள் தான் எமது வீரர்கள். அவர்கள் தமது மூதாதையரைப் போலச் செயல்படுவார்கள்" என்று மாறன் கூறியதாகக் கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத் தொடங்கினாள், "விழித்தகண் வேல் கொண்டு எறிய அழித்து இமைப்பின் ஓட்டு அன்றோவன்க ணவர்க்கு", "சபையோர்களே, பகைவர்களைச் சினத்தோடு நோக்கும் கண்கள் பகைவர் மீது வேலை வீசும் போது இமைக்குமானால் வேல் திசை மாறிப்போகும். அதனால் வேலை வீசிய வீரனுக்குத் தோல்வியுண்டாகும். மாறன் சொன்னான், "ஐந்து வன அரசர்களும் ஒன்று சேர்ந்து எம்முடன் போர் தொடுத்தபோது போர்க்களத்தில் காற்று வீசியது. மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. புழுதி அவ்விடத்தில் பறந்தது. எமது வீரர்கள் கண்களை திறக்க முடியாது அவதிப்பட்டனர். வீரர்கள் வீசிய வேல்களும் அம்பும் திக்குத்திசை தெரியாமல் சென்றன. அதனால் போர் செய்யும் போது இயற்கையும் ஒத்துழைக்க வேண்டும் என்று மாறன் கூறினான் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், விழுப்புண்படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன்நாளை எடுத்து", "சபையோர்களே, மாவீரன் தனது கடந்த காலத்தை மகிழ்வுடன் எண்ணிப் பார்த்தால். தான் பகைவரை எதிர்த்துப் போரிட்ட போது பகைவரின் ஆயுதங்கள் தாக்கி தான் காயப்பட்டதை எண்ணி எண்ணி மகிழ்வான். அப்படி எண்ணும் போது தான் போரின்போது காயப்படாத நாட்களை நினைத்து வேதனைப்படுவான். அவை பயனற்ற நாட்கள் என்று எண்ணி வேதனைப்படுவான்".

**"ச**பையோர்களே, போர்வீரர்கள் போர் செய்வதையே விரும்புவார்கள். போர் செய்யும் போது காயம் ஏற்படாவிட்டால் அவர்கள் துக்கப்படுவார்கள். ஏனென்றால் காயம் பட்டால் நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் அவற்றைக் காட்டிப் பெருமைப்படுவர். காயங்கள் இல்லாத உடல் பேடியின் உடல் என்று அன்று மக்களாற் கணிக்கப்பட்டது".

**மா**றன் சொன்னான், "ஐந்து வனத்து வீரர்களும் ஒன்று சேர்ந்து எம்மை எதிர்த்த போது யாவரும் அறிஞ்சினர். அதற்குக் காரணங்களும் இருந்தன. ஐந்து வனங்களில் இருந்தும் பெருந்தொகையான வீரர்கள் வந்திருந்தனர். அவர்களது அணிவகுப்பைப் பார்த்து மக்கள் பிரமித்தனர். அதனால் அவர்களைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தனர். பெற்றோர்கள் தமது

பிள்ளைகளை அழைத்து, “எம் அருமை மக்காள் வாழ்வில் இயற்கையின் சீற்றத்தால் தோல்வி ஏற்படுவது அவமானமல்ல. போரில் தோற்பது பெரும் அவமானம். அவமானத்துடன் வீடுகளுக்கு வராதீர்கள்” என்று சொல்லி அனுப்பினர்.

**அ**தனால் வீறு கொண்ட எமது வீரர்கள் தமது உயிரை மதிக்காது போராடினர். அப்போர் மிகவும் கடுமையாக நடைபெற்றதால் பலவீரகளுக்குக் காயங்கள் ஏற்பட்டன. ஒரு தாய் தனது மகனின் உடலில் ஏற்பட்ட பல காயங்களைப் பார்த்து விம்மி விம்மி அழுதாள். அதைக் கண்ட அவளது மகன் வேதனையுடன் சொன்னான், “அம்மா, இவையாவும் வீரத்தழும்புகள். போரில் காயமேற்படாவிட்டால் போராடுபவன் கோளை என்று என்பார்கள். நான் வீரத்துடன் போராடியதால் தான் பெருங்காயங்கள் ஏற்பட்டன. அதற்காக துக்கப்பட்டு அழாமல் மகிழ்வுடன் சிரி. சுந்தரவன வீரன் காயம் படாத நாட்களைப் பயனற்ற நாட்களாகவே எண்ணுவான்” என்று மாறன் கூறியவன் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் இன்பவதனி.

**இ**ன்பவதனி ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ‘‘சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார் கழல் யாப்புக் காரிகை நீர்த்து”, “சபையோர்களே, புகழ் ஒன்று தான் ஓர் உயிருடன் நிலைத்து நிற்பது. அது அவ்வுயிர்குள் குறைந்து ஆயிரம் வருடங்கள் கழிந்தாலும் நிலைத்து நின்று புகழைத் தரும். அப்படியான புகழை விரும்பித் தன்னுயிரை இழக்க விரும்பும் போர்வீரன் தான் வீரன் என்பதை வெளிக்காட்டவே தனது காலில் வீரக்கழலை அணிகிறான். வீரக்கழலை அணிந்த ஒரு போர் வீரன் வீதியால் சென்றால் அவனை காணும் மக்கள் மகிழ்வுடன் வணங்குவர். வீரக்கழலை அணிவது போரில் தன்னுயிரை இழக்கத் தயார் என்ற எண்ணம் மனதில் வந்த பின்பேயாகும்”.

**மாற**ன் சொன்னா, “ஐந்து வனங்களின் படைகளும் அணிவகுத்து வந்த போது நான் வீரக் கழலைக் காலில் அணிந்தது என்னுயிரை கொடுத்தும் நாட்டைக் காப்பேன் என்றதனால்தான். என்னைப்போல பல்லாயிரம் வீரர்கள் வீரக்கழலை அணிந்துள்ளனர். அதனால் எமது மன்னர் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார்” என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லலானாள், உறின் உயிர் அஞ்சா மறவர் இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்”, “சபையோர்களே, போர் வந்த வேளைகளில் தனது உயிரைப் பொருட்படுத்தாது நாட்டின் நன்மைக்காகப் போராடும் ஒருவீரன் ஒருவேளை அரசரின் சினத்திற்கு ஆளானாலும் ஒருபோதும் தனது மனதை மாற்றி அரசனுக்கு விரோதமாக நடக்கமாட்டான். நாட்டுப்பற்று மிகுந்த வீரன் போர்

வந்தபோது தனது குடும்பத்தினரைப் பற்றியோ அல்லது தன்னைப் பற்றியோ நினைக்க மாட்டான். அவனது நினைவுகள் பகைவனைத் தாக்கி அழித்து வெற்றி வாகை சூட வேண்டும் என்றே இருக்கும். அரசன் நாட்டு மக்களுக்குத் தத்தை. அதனால் அவனது கண்டிப்புக்களை நாட்டு மக்கள் குறையாகக் கொள்ளார்"

"**மா**றன் சொன்னான், "ஐந்து வன வீரர்களும் ஒன்றாகச் சேர்ந்து போரிட்டபோது எமது அரசர் உட்பட நூற்றுக்குமேற்பட்ட வீரர்கள் பகைவர்களின் சக்கரவியூகத்துக்குள் அகப்பட்டுவிட்டனர். ஐந்து வனப் படைகளும் கடுமையாகத் தாக்கியபோது வேல்மாறன் என்ற வீரன் தனது வேலை எடுத்து வியூகத்தை அமைத்த தலைமைத் தளபதி மீது வீசினான். அவன் அந்த இடத்தில் துடி துடித்து இறந்து போனான். அதனால் வியூகம் அமைத்து நின்ற வீரர்கள் குளம்பினர். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது வீரர்கள் பகைவர்களை அழித்தனர்".

"**வே**ல்மாறனின் அடுத்த வீட்டில் பண்டிதர் சோமநாதர் என்ற முதியவர் தனது குடும்பத்தினருடன் வாழ்கிறார். அவர் வளர்க்கு நாய் மிகவும் கொடியது. யாராவது அனுமதியின்றி உள்ளே சென்றால் அவரை அது கடித்துக் குதறிவிடும். அதனால் ஊரவர்கள் உள்ளே செல்லாது சோமநாதரை அழைத்து அவருடன் செல்வார்கள்".

"**வே**ல்மாறன் திருமணம் செய்து பத்து வருடங்காலமாகப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் அவன் காட்டு விநாயகர் கோவிலில் பத்து நாட்கள் உண்ணாமல் தவமிருந்தான். அதனால் அவனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்குப் பகீரதன் எனப் பெயரிட்டு மிகவும் செல்லமாக வளர்த்து வந்தான். அன்று பகீரதன் பந்தை அடித்து விளையாடிய போது பந்து சோமநாதரின் வீட்டுக்குள் விழுந்து விட்டது".

"**ப**கீரதன் சோமநாதரின் வீட்டுப் படலையடிக்குச் சென்று அவரை அழைத்தபோது பாய்ந்து வந்த சோமநாதரின் நாய் பகீரதனைக் கடித்து விட்டது. அதனால் மிக்க கோபம் கொண்ட வேல்மாறன் சோமநாதருக்கு அடித்துவிட்டான்".

"**சோ**மநாதர் அதை அரசனிடம் முறையிட அரசன் வேல்மாறனை அழைத்துச் சொன்னார், "நீ ஒரு மாவீரன். பல போர்களில் எமக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளாய். அதற்காக நீ செய்த குற்றத்தை மன்னிக்க முடியாது. சோமநாதர் வயோதிபர். உனது பேரனாருக்குச் சமனானவர். நாய் வீட்டைப் பாதுகாப்பது. உனது மகன் சென்றபோது அது கடித்துவிட்டது. அதற்காக நீ வயோதிபரைத் தண்டித்தது பெரும் தவறு. அதனால் அவரிடம் மன்னிப்புக் கேள். உனக்குப் பத்து நாட்கள் சிறைத் தண்டனையும் ஐந்துபவுண் தங்கத்தையும் அபராதமாகச் செலுத்தும் படியும்

கட்டளையிடுகிறேன்” என்றான். வேல்மாறன் சோமநாதரிடம் சென்ற போது அவர் அவனைக் கைகூப்பி வணங்கினார். மாபெரும் வீரனான உனக்கு நான் தண்டனையைப் பெற்றுத் தந்து விட்டேன். எனக்கு நீ தங்கத்தைத் தர வேண்டாம். நீ அதைத் தந்ததாக நான் அரசரிடம் கூறுகிறேன்” என்றார்.

“**வே**ல்மாறன் திகைத்துப் போனான், “ஐயா, அரசர் கூறியதைப் போலத் தாங்கள் எனது பேரனாருக்குச் சமமானவர். உணர்ச்சி பெருக்கால் தங்களின் வயதை மதியாது தாக்கிவிட்டேன். அதற்காக அரசர் தந்த தண்டனை எனக்குப் போதாது. நான் பத்து நாட்களுக்கு உங்கள் வீட்டு வேலை அனைத்தையும் செய்துதருகிறேன்” என்றவன் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “இழைத்தது இகவாமைச் சாவாரை யாரோ பிழைத்தது ஒறுகிற் பவர்”, “சபையோர்களே, ஒரு சிறந்த போர் வீரன் தான் செய்த சபதப்படி சிறப்பாகப் போர் செய்யும் போதே வீரமரணம் அடைந்து விட்டால், அவன் முன்னதாகவே இறந்துவிட்டான் என யாரும் கவலைப்பட மாட்டார்கள்”.

“**ச**பையோர்களே, மரணம் இயல்பானது. அது தீர்மானிக்கப்பட்டபடி, தீர்மானிக்கப்பட்ட நேரம் நடைபெறும் என்பதை உணர்ந்தவர்கள் ஒரு போர் வீரன் நாட்டுக்காகச் சபதமெடுப்பான். அதை நிறைவேற்றி விட்டுப்போர் முடிவடையமுன் அவன் மரணமானால் அவன் மரணமடைந்து விட்டான் என்று யாரும் பழிக்கமாட்டார்கள்.

“**வே**ல்மாறனின் உயிர் நண்பன் செங்கோடன். மாவீரன். எதிரிகளை சபதமிட்டு கொல்லும் வீரன். அவன் ஐந்து வனப் படைகள் சக்கர வியூகம் அமைத்துப் போரிடும் வகையில் மிக்க கோபம் கொண்டு சொன்னான், “வேல் மாறா இன்று போரை ஆரம்பித்து மூன்று தினங்கள் கழிந்து விட்டன. பகைவர்கள் அமைத்த சக்கரவியூகத்தை உடைக்க முடியவில்லை. நான் உயிரைக் கொடுத்ததாவது உடைப்பேன்” என்று கூறி நூறு வீரர்களை அழைத்துச் சென்று வியூகத்தில் நின்று தாக்கியவர்கள் பலரைக் கொன்றான். அப்போது பகைவர்களின் வீரன் வீசிய வேல் ஒன்று தாக்கி அவன் இறந்து விட்டான்”.

“**போ**ரில் வெற்றியடைந்ததும் அரசன் செங்கோடனின் வீரத்தைப் பாராட்டி நடுகல்லை நட்டதோடு அனைவருக்கும் மதிய உணவையும் அளித்தார். ஒரு போர் வீரன் போரில் இறப்பான். அவன் போர் தொடங்கிய அன்றும் இறப்பான். இறுதி நாளிலும் இறப்பான். அந்த இறப்பை

எல்லோரும் பாராட்டுவர். அவன் கடந்த காலத்தில் போரிடும் போது செய்த செயல்களை நினைத்து மகிழ்வர்” என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.

**இ**ன்பவதனி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், “புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்து கோள் தக்கது உடைத்து”, “சபையோர்களே, தனது நாட்டு அரசன் வருந்தி அழுது கண்ணீர் சிந்துமாறு இறக்க நேர்ந்தால் அந்தச் சா பிச்சையாகக் கேட்டவது பெற்றுக்கொள்ளத்தக்க பெருமை வாய்ந்ததாகும்”.

**இ**ன்பவதனி தொடர்ந்து பேசினாள், “சபையோர்களே, ஐந்து வனங்களைச் சேர்ந்த போர்வீரர்கள் சக்கர வியூகத்தை அமைத்துப் போரிட்டபோது எமது வீரர்க்ள் தோல்வி அடையும் நிலையிலேயே இருந்தனர். எமது வனம் பெரியதானதாலும் ஐந்து வனங்களுக்கும் சமமானதல்ல. வியூகத்துள் அக்கப்பட்டதும் மன்னர் கலங்கி போனார். தோல்வி நிட்சயம் என்று தீர்மானித்தார். அப்போது செங்கோடன் வீறு கொண்டு எழுந்து போர் வீரனை பார்த்துச் சொன்னான், “போரில் தோல்வியடைவது என்பது மரணத்திற்குச் சமமானது. போர் முடியும்போதும் வெற்றிறை அடையலாம் என்று ஒவ்வொரு போர் வீரனும் மனதில் எண்ண வேண்டும். மனம் தான் எல்லாவற்றிற்கும் காரணி. தோல்வி வரும் என்று எண்ணியே தோல்வியடைந்து விட்டோம் என்று கருதல் வேண்டும். அதனால் தேவையில்லாதவற்றை எண்ணக் கூடாது” என்னுடன் துணிவு மிக்க பத்து வீரர்கள் வாருங்கள் இதில் எதிரியின் வியூகத்தை உடைப்போம் என்றான்.

**“அ**வனது சொல்லை கேட்ட நூறு வீரர்கள் அவனுடன் சென்று போரிடினர். அதனால் பகைவரின் வியூகம் உடைந்தது. அந்த போரில் செங்கோடன் வீரமரணம் அடைந்தான். என்று மன்னர் தன்னை மறந்து விம்மி விம்மி அழுதார். செங்கோடா, நீ இல்லாவிட்டால் அன்று நாம் வென்றிருக்கமாட்டோம். என்று அடிக்கடி கூறுவார். தன்னைக் காத்த அரசன் கண்ணீர் பெருகுமாறு சாக நேர்ந்தால் அந்தச்சாவை பிச்சை கேட்டாவது பெற்றுக் கொள்ள வேண்டும். அதனை பெரும் வாய்ந்தது அது என்று மாறன் அடிக்கடி கூறுவான் என்று கூறி இன்பவதனி தனது உரையை நிறைவு செய்தாள்.